From Kiḻaviyākkam to the 32nd Sūtra in Veṟṟumaimayaṅgiyal in the portion on Etymology.

This commentary is not by Kallāḍar, Sēnāvarayar or Naccinārkkiniyar, and has not yet been printed.

Beginning:

இவ்வதிகார மென்ன பெயர்த்தோவெனின், சொல்லதிகாரமென்னும் பெயர்த்து. சொல்லதிகாரமெனபது இடுகுறியோ காரணக்குறியோவெனின், காரணக்குறி; என்னை? சொல்லுணர்த்தினமையாற் பெற்(று)மென்க. அதிகாரமாவது முறைமை யென்றவாறும்.

இனிச சொலலென்ற பொருண்மை யென்னையெனின ஓசை யென்றவாறும். ஓசையைச் சொல்லெனறீராற் கடலொலியும், சங்கொலியும், விண்ணொலியுஞ் சொல்லாகாதோவெனின, இசையெனினும், அரவமெனினும், ஒலியெனினும், எழுத்திலாகிய ஓசைக்குமெழுத்தலோசைக்கும் பொதுவாம். சொல்லெனினும் கிளவியெனினும் மொழியெனினு மெழுததொடு புணர்ந்து பொருளறிவுறுக்கு மோசைமேனிற்கும். முற்கும் வீளையு மிலதையு மென்னுந் தொடக்கத்தன வோவெனின அவை யெழுத்தொடு புணராமையிற சொல்லாகா அவையும் பொருளறிவுறுககுமெனவறிக.

இனி எழுத்தொடு புணர்ந்த வோசையே சொல்லெனப் படுவதென்றறிக. அச்சொல் எழுததிஞனி வருதலான் ஆககுவதனை முன்னுணர்த்தி, ஆக்கப்படாததனைப் பின்னுணர்த்தினார். வரியெழுத்துஞ

சொல்லாம பிறவாமையின சொனமூன் வைககற்பாலீரெனின் அகர மென்றவிட்ட நான்கு சொல்லின ஒன்று மூன்று சொல்லின் என் பது யேற்றிற்கும . . . . . .

இனி அச்சொல் எனை வகையானுணர்ததற்கு மென்னின் - எட்டுவகையானுணர்த்தினை அவவெட்டுவகைப்பட்ட இலககணமு முணர்ந்தான சொலலுணர்ந்தானும அவவெட்டுவகையு மியாதோ வெனின:—இரண்டு திணை வகுத்து, அத்திணைககண் ஐந்துபால்வகுத்து, எழுவகை வழூஉ வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, ஆறுவகைபபட்ட தொகை வகுத்து, மூனறிடம வகுத்து, மூன்று காலம்வகுத்து, இரண்டிடம வகுததலான விவை.

சொலலாராயந்த வெட்டி லககணமுமாவன :—அவற்றுள, இரண்டு திணை யெனபன .—உயர்திணை, அஃறிணை. ஐந்து பால் என பன :—ஒருவன, ஒருத்தி, பலர், ஒனறு, பல. வழூஉ வழூஉவாவன :—திணை வழு, பால வழு, இட வழு, காலவழு, மரபு வழு, செபபு வழு, வினு வழு. எண் வகை வேற்றுமையாவன —எழுவாய் வேற்றுமை முதலாக விளிவேற்றுமை ஈறாகப்பட்டன. அறுவகைப்பட்ட தொகையாவன:—வேறறுமைத்தொகை, உவமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உமமைத்தொகை, அனமொழித்தொகை. மூன்றிடமெனபன :—தனமை, முன்னிலை, படர்க்கை. மூன்று காலமென்பன :—இறந்தகாலம, எதிர்காலம், நிகழ்காலம. இரண்டிடமென பன :—வ க(ட)டம, செயயுளிடம என இவவாறு சொல்லுப.

இவ்வெட்டன்புடை பெயர்ச்சியே கிளவியாககம் முதலாக எச்சவியலிறுதியாககிடந்த வொனபதோ (த்தி) னுள்ளும் ஆராயப்பட்டதெனககொள்க.

இனி, கிளவியாக்கமென்பது இடுகுறியோ! காரணக்குறியோவெனின்—, காரணக்குறி. என்ன காரணமெனிற, கிளவியென்பது சொல். ஆககமெனபது அமைத்துககோடல். சொற்களை யமைத்துககொள்ளப்படடமையிற், கிளவியாககமெனனும பெயர் பெற்றது; அரிசியாக்கிககொண்டாரெனபதுபோல. மறறு அரிசி யாககுமிடத்து, நொய்யும் முறுங்குங்களைந்து கொள்ளபபடுவதுபோல ஈங்குங்களைநதுகொளளப் படுஞ் சொல்லுமுளவோவெனின : உள. அவைவழூஇ இயின சொற்களைந்து வழுவாதன கொள்ளபபட்ட, இவ்வோததினுள ளென்பது. இன்னுமொன்று: கிளவியென்பது சொல். ஆககமென்பது (ஆமாறு உணர்த்தல்) சொற்களைப் பொருண்மேலாமாறுணர்த்தினமையாற் சொல்லாககமெனறு பெயர்பெறறது.

எனனை? ஒருவனமேலாமாறிது, ஒருத்திமேலாமாறிது, பலர்மேலாமாறிது, ஒனறனமேலாமாறிது, பலவற்றினமேலாமாறிது, வழூவாமாறிது, வழுவமையுமாறிது. பொருட்கண்மேலாமாறுணர்த்தின

மையிற் கிளவியாக்கமென்று பெயர்பெற்று, மற்றேனையோத்தினுணரும் பொருண்மேலாய நின்றவாறிலக்கண முணர்த்தினார் ஆண்டும் அவை தம்மையே ஓனபதோத்தினுலுணாததினுரென்பது.

இனி, பெயர் முதலாகிய நானகுவகைப்பட்ட சொலவிரகு இவவோத்தினுட் பொதுவிலககண முணர்த்தினார். பெயர்ச்சொல்லதிலக்கணம், வேற்றுமை யோத்தினுளளுய, வேற்றுமை மயங்கியலுள்ளும், விளிமரபினுளளும், உணர்த்தியுணர்ததிப பெயாமுகலுரியிறுக அவற்ற திலககணமும் அடைவே விரித்துணாத்தினார்சிறந்தன சொற்களை எச்சவியலானுணர்த்தினாரெனக.

இவ்வகையானெல்லா முணர்த்தினாராகலின் ஓனபதோததும வேண்டிற்றெனக.

> உயர்திணை யென்மனார் மககட் சுட்டே
> அஃறிணை யென்மனா ரவரல பிறவே
> யாயிரு திணையி னிசைககுமன சொலலே.

எ-து.—மககளென்று சுட்டப்படும பொருளை உயாதிணையென்று சொல்லுபவாசிரியர். மககளலலாத பிறபொருளை அஃறிணையென்று சொல்லுபவாசிரியர். அவவிரு திணையினையுஞ் சொல்லுஞ்சொல்லுமுயர்திணைச்சொல்லு மஃறிணைச்சொல்லுமாம. எனவே சொலலும் பொருளும் வரையறுககப்பட்டது.

உயர்திணையென்றது பிறப்பினற சிறப்பெயதுதறகு மககணிலைமை மிகக சார்வாகலான். என்மனா வெனபது எனபவென்னு முற்றுச சொற்குன்றககும வழிக்குறைததலென்பதனாற் பகரத்தைககுறைதது, விரிக்கும் வழிவிரித்தலென்பதனான் மன்னுமாருமெனபன இரண்டிடைச் சொறபெயது விரிததார். என்றாரெனபதனை என்மனாரென எதிர்காலத்தாற்சொல்லியதெனனை (யெனின்) "இறப்பேயெதிர்வேயாயிருகாலமுஞ் சிறப்பததோனறு மயங்கு மொழிககிளவி" என்பதாக வாற் கூறினார். இசைககுமெனபது. செய்யுமெனனு முற்றுச்சொல். மன்னென்ற இடைச்சொல் மனவென ஈறுதிரிந்தது மன்னென்று பாட மோதுவாருமுளர். உயர்ததிணையெனும் இறந்தகால வினைத்தொகை, உயர் திணையெனனத் தொககது, ஆசிரியரெனட்து இச்சூத்திரத்திலலையெனின எனபவென்னு முற்றுச்சொலலேபெறும ; முற்றுச்சொல் எச்சபெயர்கொண்டு முடியுமெனபதாகலான. அவவிருதிணையினையென இரண்டாவது விரித்துரைக்க. 1.

> ஆடூஉ வறிசொன் மகடூ வறிசொற
> பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
> யம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே.

எது.—ஆண் மகனையும், பெண்டாட்டியையும், அவ்விருவராத பன்மையாகிய பல்லோரையும் அறிவிககுஞ்சொல்லொடு பொருந்திய அம

மூன்று கூற்றுச்சொல்லும உயர்திணையை யறிவிக்குஞ் சொல்லாம். அவ்வேயென அறுவதன பன்மையாகக்கொள்க. 2.

* * * *

End:

(வேற்றுமை மயங்கியல், 32-ம் சூத்திரம்).

அவைதாம், தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணலு
மொப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலு
மப்பண் பினவே நுவலுங் காலை.

எ-து.—மேற்கூறப்பட்ட ஆகுபெயர்கடாம் தம்பொருளினீங்காது நின்று தம பொருளின வேறல்லாத பொருளோடு புணர்தலும் பொருத்தமல்லாத கூற்றானின்று பிறிதுபொருளையுணர்த்தலுமாகி அவ்விரண்டிலக்கணத்தையுடைய, சொல்லுமிடத்து.

கடு புளி யெனபன தத்தமபொருளவயிற்றமமொடு சிவணல. குழிப்பாடி, நிலம, கோவிலன என்பன ஒப்பில் வழியாற பிறிதுபொருள் சுட்டல. 32

வேற்றுமை மருங்கிற் போற்றல்வேண்டும.

இ-ள்.—என்னின் அவ்வாகுபெயர்கள ஐமமுதலிய அறுவகை வேற்றுமைப் பொருண்மையிடத்தும இயைபுடைமையை பாதுகாத்தறியல்வேண்டும் ஆசிரியன.

(கு-பு.)—

இவ்வுரை. கல்லாடர், இளம்பூரணா, சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவர்கள்செயத உரையன்று; இதுவரையில் அச்சிடப்பட்டதுமன்று; அபூர்த்தியானது.

No. 57. தொல்காப்பியம் உரையுடன்.

TOLGĀPPIYAM: WITH COMMENTARY.

Substance, paper. Size, $8\frac{1}{4} \times 6\frac{1}{2}$ inches. Pages, 124. Lines, 18 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old

The chapter on Syntax.

The commentary appears to be by Iḷampūraṇar.

Complete.

Beginning:

கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப.

என்பது சூத்திரம்.

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின், பொருளதிகார மென்னும் பெயர்த்து; பொருளுணர்த்தினமையாற் பெற்றபெயர். திருத்த முறையானே எழுத்துஞ் சொல்லுமுணர்த்தி இனிப்பொரு ளுணர்த்த வேண்டுதலின் அதனபிற் கூறப்பட்டது.

பொருளென்பது யாதோ வெனில் மேற்சொல்லப்பட்ட சொல்லி னுணரப்பட்டது.

அது, முதல் கருவுரிப் பொருளென மூவகைப்படும்; "முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே, நுவலுங்காலை முறைசிறந் தனவே பாடலுட் பயின்றவை நாடுங்காலை" என்றாராகலின், முதலாவது நில முங்காலமுமென விருவகைப்படும்.

End:

இது நெஞ்சிற் கூறியது. கொலைவினைப் பொலிந்த கூரகங் கூறும் புழுகின், வில்லோர் தூணி வெங்க ணெய்த. வட்பு நனை யெ(ா)ப்பவ ரும்பியயிருப் பச்சடா நன.

(கு-பு.)—

இதில் தொல்காப்பியம் பொருளதிகாரம் முதலாவது அகத்திணை யியலில் 40 சூத்திரங்கள் உள்ளன. நச்சினார்க்கினியருரை அச்சுப் பிரதியில் 33-ம் சூத்திரமாகக் காணப்பட்ட ஒரு சூத்திரம் இதில் இரண்டு சூத்திரமாக உள்ளது; (கடைப்பக்கத்திலிருந்து பதினேழாவது பக்கத்திற்காண்க) இஃது, இளம்பூரணருரையென்று தெரிகிறது.

No. 58. தொன்னூல் விளக்கம் (பொழிப்புரையுடன்).

TONNŪL VILAKKAM (WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $15\frac{7}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 347. Lines, 6-7 on a page. Character, Tamil Condition, good. Appearance, old

By Viramāmunivar this work is printed.

Complete.

பொதுப்பாயிரம்

நீர்மலி கடற்லவ் நிலன்முதன் மற்றநூஞ்
சீர்மலி யுலகெலாஞ் செய்தளித் தழிப்ப
வல்லவ னெய்முதன் மட்டுற் றேப்பெதி
ரில்லவ னுயுய ரிறையோ னொருவனைப்
பன்மை யொழியப் பணிந்தே யிராவிருட்

டன்மை யொழியத் தரணியிற் றோன்றிய
வாதவ னிகரிரு ளகற்ற வன்று
தோன்றிய மறைநூ லோதினை யாகி
யம்மெய்ப் பொருளொன் றனைவரு முணரச்
செம்மெய்ப் பொருளைத் திருமறைவழங்க
வமைதக்களத் தெழுந்த வாசையுட் டூண்டிச
சமைதக்கள யாவருந் தாங்கற்க தருகென
மேவிய தாக விப்பணி யெற்றிநூன்
மேவிய வைம்பொருள் விளக்க லுணர்ந்து
விரிவிலாத தொன்னூல் விளக்க மெனும்பெயர்த்
தெரியவா சிரிய ரருந்தமிழ்ச் சொலவிற
பிறநூன் முடிந்த பெயர்த்தொடை டடுத்தியும்
புறநூன் முடிந்த பொருத்தியுந் தாதொரு
வழிநூன் முடிந்தனன வாய்ப்பரு மெய்ம்மறை
மொழிநூ லத்தாரி முதிர்கிறட பிணையில்
விரோமை நாட்டினி றெய்திய முனியருள்
விரோத மொழிதவ மேவக
நேர்மாதவத்தின வீரமா முனியே

என்பது . . . . . . அம்மாமுனி மாணக்கருள் நூலி லெனியனேனு மனபிலுயாரதோனுரைத்தவாறு காண்க.

(தற்) சிறப்புப் பாயிரம்.

சொன்னூ னடையத் தொகைக்குணத் தொனறு
முன்னூறைந்த முதலவனைப் போற்றி
நன்னூ லாயந்தோர் நவின்ற வைம்பொருட்
டொன்னூல விளக்கமுன சொற்றத மெழுத்தே.

Beginning:

தோற்றமும் வகுப்புந் தோன்றும் விகாரமுந
சாற்றுழித் தோன்றுந் தாவெழுத் தியல்பே.

எ-ல். எழுத்தின் றோற்றமும, வகுப்பும், விகாரமுமென்றிம் மூன் றினுள், எழுத்து வகைப் ாடெல்லா மடங்கும்.

' என்னை, தோற்றமெனபுழி யெழுத்துப் பிறக்கு மிடமு முறையு மெண்ணுமெனவும், வகுப்பென்புழி, முதல் சார்பு உயிர் மெய்முத லிய கூறுபாடெனவும், விகார மெனபுழி, பதத்திலும் புணர்ப்பிலும் வருந்திரிபாகக முதலிய வேறுபாடெனவுந் தோன்றும். (3)

End:

எந்நூ னிலையினு மியைபெலா முணர்த்து
மந்நூலாதெனவஃகினு மொருநூற

காட்டிய பலநடை கடைப்பிடித் தவற்றொடு
கூட்டி மற்றவை கொள்பநல் லோரென
வெழுத்துச் சொறபொரு ளியாப்பணி யென்றிவண்
வழுத்திய வைம்பொருள் வழககஞ் சுருககி
தொன்னூ னடை யொடு சிறந்த புறநிலைப்
பன்னூ னடையிற் பழையன கழிதலும்
புதியனபுகுதலும் புலமையின மிகோர்
விதியெனவிய முறை விருமபிய வழுவின
முன்னூல் விளக்கி முத்தமிழ்த
தொன்னூல் விளககந் தானகிய வாறே.

எ-ல். பலவகை நூலினு மவவவற்றுரியன வெல்லாவற்றையு முழு துரைத்திறுவது முற்றுணர்ந்தோர்க்கும் அலா அருமை யாகையிலிங் கண் உரைத்தவை யற்றக்கோடாகக் கொண்டு உரையாதனவு முணர் வது அறிவோர் தொழிலெனககொளக அனைத்தையுந் தொன்னூலை விளக் கிய புதுநூலாக எண்டு சொலலப்பட்ட இந்நிலக்கண வழியே தொ ன்மையிற் செந்தமிழ் நூலில் வழங்கிய சிறசில ஒழிப்பினும இன்னும அந்நூலிற் புதியன சிறசில விதிப்பினுமவையெலாங் காலமவேறறுமை யாயினும் புறநிலை நூலினவழி வந்தமையாலும் வழுவெனறிகழப் படாவென நன்னூற கலவலமலான முதறறொன்னூற புலவருள ராம்பலரென்றுணர்க

Colophon :

இந்நிலக்கண தொன்னூல்விளக்கம் முற்றும்.

* * * *

ஆதிநூ லோதியவோ ராதிப் பொருள்யா
தோதினா லாய்ந்த முணர்வாரோ - மோதினார்
கற்றறிலுங் கற்பயனுண்டோ வக்கட்டு
ளெற்றறிலு மெழுகற்கடை.

1. எழுத்ததிகாரம
2. சொல்லதிகாரம
3. பொருளதிகாரம
4. யாப்பதிகாரம்
5. அணியதிகாரம

} தமிழின் ஐவிலக்கணங்கள்.

(கு-பு.)—

இந்நூல் செய்தவர் வீரமாமுனிவர்; இவர் இதாலியா தேசத்தில் காஸ்திகிலியோனே யெனனுமூரில் 1680ஆம் நவம்பர்மீ 8ல பிறந்தவர்; சதுரகராதியும் தேம்பாவணிமுதலியனவும் செய்தவர். இஃது, அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 59. தொன்னூல்விளக்கம் பொழிப்புரையுடன்.

TONNŪL VIḶAKKAM WITH MEANING.

Substance, palm-leaf. Size, 20½ × 1¼ inches. Pages, 114. Lines, 56 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

A work on grammar, rhetoric and prosody with commentary. The text is by Beschi, called Vīramāmunivar in Tamil.

Beginning:

என்பதனு விதிகளுக்குள நூலின் பெயரும், உண்டாக்கினவன் பெயரும், உண்டாக்கிய காரணவகையும, சொற்பொருளளவும், கேட்போர்க்கு இலாபமும் என விவ்வைந்து அவயவமுமுள்ள பொதுப்பாயிரமாகவந்த மாமுனி கற்றுச்சொல்லிகளிற கொஞ்சம் கற்றவனுகிய நான் அன்பிலுயர்ந்து சொன்னவழியைக் காண்க . . . .

உ. சூ. தோற்றமென்னு மிடத்தில் எழுத்துப்பிறக்கு மிடமும், ஒன்றினபின் ஒன்று வருமுறையும், எழுத்துக்கணக்கு மென்பதாகும்.

End:

௯0. சூ. என்பது சில தொகைச்சொற்கள் ஒரு (தொ) டராகநின்று மிரண்டுமுதலாக வழுகடைசியாகப் பலவகை விரிவுகொண்டு வருமென்று அறிக. உ-ம். . . . . சொல்லணியென்பது வினைத்தொகையாய்ச் சொல்லுகின்ற அணி எனவும வேற்றுமைத் தொகையா (ய்) ச் சொல்லால் வழங்கு மணியெனவும் பண்புத்தொகையாய்ச் சொலலாகிய.

(த-பு.)—

இவ்வுரை, தொன்னூல் விளக்கத்தின் சூத்திரங்களுக்குரிய எண்ணை முதலி லெழுதிப் பின் பொழிப்புரையாக எழுதப்பட்டிருக்கிறது; இந்நூற் சூத்திரம் ௩௭௯ இல ௯0 சூத்திரங்களுக்கு இந்தப்பிரதியி லுரையிருக்கிறது; இதில் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணத்தின் முற்பாகமு முள்ளன; இவ்வுரை செய்தவர், 'நீர்மலி' எனனும் இந்நூற் சிறப்புப்பாயிரம் சொன்னவரென்று ஊகித்தற்கிடமுண்டு; இந்நூல் அச்சிடப்பட்டிருக்கிறது.

No. 60. நன்னூல், விருத்தி யுரையுடன்.

NANNŪL WITH MEANING.

Substance, paper. Size, 12¼ × 8 inches. Pages, 434. Lines, 20 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete in two chapters, Orthography and Etymology.

This is a work on Tamil Grammar much studied in the Tamil country. It is by Pavaṇandi, a Jain. The commentator here is Śaṅkaranamaccivāyappulavar of Tinnevelly patronized by Marudappadēvar of Ūttumalai Zemindari.

Beginning:

சிறப்புப்பாயிரம்.

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
விலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
* * * *
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
யென்னு நாமத் திருந்தவத் தோனே.

எழுத்ததிகாரம்.

முதலாவது எழுத்தியல்.

எழுத்ததிகாரம எ—து, எழுத்தினது அதிகாரத்தையுடையதென அன்மொழித்தொகையாய்ப் படலத்திற்குக காரணக்குறியாயிற்று . . . . புணரியலின் இறுதிக்கட்சாரியைத் தோற்றங் கூறப்படுவனவும் செயகை யொன்றற்கே புரிய கருவியாகலிற் சிறப்புக்கருவி.

பூமலி யசோகின் . . . . நன் கியம்புவ னெழுத்தே.

என்-னின், கடவுள் வணக்கமும் அதிகாரமுமுணர்த்துதல் நுதலிற்று. இ-ள். பூக்கண்மலிந்த . . . . (க)

நுதலிப்புகுதலென்னுமுத்தி.

End:

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

என்-னின் இந்நூற்கோர் புறனடையுணர்-ற்று. இ-ள். முற்காலத்துள்ள இலக்கணங்களுட் சில . . . வேற்றுமையது வாகலான் என்ற வாறு இவற்றிற்கும் உதாரணம் முன்னரே வந்துழி வந்துழிக் காட்டினும் ஆங்காங்கு உணர்க.

ஐந்தாவது, உரிச்சொல்லியல் முற்றும்.

இருதிணைமூவிட . . . . வருந்திருவே.

பேராறு பானிரண்டெண் ணான்கு வினைபொதுத்தா
ளோராறு பத்தெட் டிடைதான் மூவேழின்—மேலொன்
றுரியிருபத் தொன்றாகச் சொற்சூத் திரத்தின்
விரியிருநூற் றேரைந்தா வெண்டு.

Colophon :

சொல்லதிகாரம் முற்றும்.

(கு - பு.)—

இவ்விலககண நூல்; எழுத்துச்சொற்களின் இலக்கணங்களை அறிவிப்பது; இஃது இக்காலத்தில் தமிழ்நாடெங்கும் பயிலப்பெற்று வருகிறது; இதுபவணந்தி என்னும் ஜைனமுனிவரால் செய்யப்பட்டது; இதற்குப் பலவுரைகளுள்ளன; அவற்றுள், இது விருத்தியுரை; இது திருநெல்வேலிச் சங்கரநமச்சிவாயப்புலவர் செய்தது; இவ்வுரையைச் செய்வித்தவர் ஊற்றுமலை ஜமீந்தார் மருதபபதேவர்; இந்தப்பிரதி பூர்த்தியாக இருககிறது; அச்சிடப்பட்டிருக்கிறது இந்நூலாசிரியரை இவ்வுரையாசிரியர் இந்நூற் பதவியல் 10 - வது சூத்திரவுரையிலும், சுவாமிநாத தேசிகர் தாம் செய்த இலக்கணக்கொத்தின் பாயிரம், 8-ம் சூத்திரத்திலும் புகழ்ந்து கூறியிருககிறார்கள்.

No. 61. நன்னூல், விருத்தி யுரையுடன்.

NANNŪL WITH VIRUTTIYURAI.

Substance, palm-leaf. Size, $16\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 51. Lines, 10 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

Forty seven Sūtras and their commentary on Orthography.

Same work as the above.

(கு - பு.)—

இதில் எழுதததிகாரத்தில் 46 - சூத்திரங்கள் உள்ளன. இது முன்பிரதிபோன்றது.

No. 62. நன்னூல், விருத்தி யுரையுடன்.

NANNŪL WITH VIRUTTIYURAI.

Substance, palm-leaf. Size, $15\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 174. Lines 7, on a page. Character, Tamil. Condition, good Appearance, old.

Contains only Meyyīr̤r̤uppuṇariyal.

Same work as the above.

(கு - பு.)—

இதில் மெய்யீற்றுப்புணரியல் ஒன்றுமே இருக்கிறது; 60 நெம்பர் பிரதிபோன்றது.

No. 63. நன்னூல், உரையுடன்.

NANNŪL WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 13 × 1¾ inches. Pages, 78. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

The leaves are in two different sizes.

From the 16th Sūtra of Uyirīṟṟuppuṇariyal to the 15th Sūtra of Meyyiṟṟuppuṇariyal. This is an anonymous commentary and is written in rather bad language.

Beginning:

*　　*　　*　　*

சொன்னதுகள் கொஞ்சம் ரெட்டிக்குமென்றும் விதவாதன சிறு பான்மை மிகாவெனவும் கூறினாராயிற்று, யெடுத்துச்சொல்லாதது கள் கொஞ்ச மிகமாட்டாதென்று சொன்னப்போலே யாச்சுது. அ வை வருமாறு.

அதுக்குதாரணம். நாகொற்றா! துகொற்றா! சாத்தா . . . (தே)தவாபூதா என்பன.

ஏவன் முன்வல்லின மியல்பொடு விகற்பேயென்று முறகூறி(ய) விதப்பு விதி பெறுமது. (முன்சொன்ன யெடுதச்சொல்லற விதி யைப் பொருந்தாமல் மிகுந்தன வெனவே மிகுந்ததென்று சொன் ன மாத்திரமே நாது முன் மூவினமுமிகு மென்றாராயிறறு). (இ ந்த ரெண்டுகெகுமுன்னேயும் மூணுயினமும் ரெட்டிக்குமென்று சொன் னப்போலே யாச்சுது. ஏரிகளை, குழந்தை கை, குழவி கை, பழமுதிர் சோலை மலைகிழவோனே, எனவும் கூப்புகரம், ஈட்டுதனம், நாட்டு கழ், எனவு மிருவழியும் பின்விதி வாதனமிகாவாகின.

இப்படியும் - ரெண்டுவழியிலேயும் பின்னலே யெடுத்துச் சொல் லாததுகள் மிகவில்லை. பிறவுமனன. மற்றதுகளுமிந்தப்பிரகாரம்.

End :

> தன்னென் னென்பதற்றீற்றுன வன்மையோ
> டுறழும் நீன்னீ றியல்பா முளவே.

என்னின் ; இந்தச் சூத்திரமெனனத்தைச் சொல்லவந்த தென்றால். . . . . தன்னென்றும் என் என்றும் வரப்பட்ட விகாரமாயிருக்கிற சொற்களுககு இந்தச் சூத்திரத்திலுலே சொன்னலெட்சணத்தை ஒரு பிரகார(ம்) தள்ளுகிறத்துக்கும் நின்-என்றவிகாரமாயிருக்கிற சொல்லுகளுக்குச் சொன்ன லட்சணத்தைத் தள்ளவும் வந்ததுகள்.

(கு-பு.)—

இதில், உயிரீற்றுப் புணரியலில் "மரப்பெயர்" என்னும் 16-ம் சூத்திரமுதல், மெய்யீற்றுப்புணரியலில், "தன்னென்" என்னும் 15-ம் சூத்திரம் வரையிலுள்ளன ; இவ்வுரைநடை சிறபபாகத் தோற்றவில்லை ; இன்னுருரை யென்றும் தெரியவில்லை ; இதிலுள்ள சில ஏடுகள் பழுதுபட்டுள்ளன. 71-வது ஏடு இல்லை.

No. 64. நன்னூல், உரையுடன்.

NANNŪL WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $18\frac{1}{4} \times 2$ inches. Pages, 58. Lines, 8 on a page Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

The commentator's name is not known.

Beginning :

எழுத்தே தனித்துந் துடர்ந்தும் பொருடரிலதுபதமாம் அந்தப்பதம் பகாப்பதம் பகுபதமென்று இரண்டு பகுப்பாகி நடக்கும் என்று சொல்லுகிறார்கள்.

இந்தச் சூத்திரம் என்னத்தைச் சொல்லவந்தது யென்றால், முன் சொல்லிநிறுததினப்பிரகாரமே பதத்திலுடைய லட்சணஞ் சொல்லத்தொடங்கி எழுத்தினுலே பதமாகிறதும், அது இந்தப்பிரகாரம் என்கிறத்தைச் சொல்லவந்தது.

•எழுத்துகள் தானே ஒண - ஒணுகத் - தனித்தும் இரண்டு முதலாகச் சேர்ந்தும் பிறபொருளைச் சொல்லுமாகுல் அது பதமாம்.

* * * *

இச்சூத்திரத்துக்குத் தொடர்ந்துமென்று பிறநூலுக்குக் குற்றங் காட்ட(ல்)லென்ற மதம் ... . 1.

End:

பூ ற ன எ ஒவ்வு முயிர்மெய்யுமுயிரண
பல்லாச்சார்புந் தமிழ்ப்பிறபொதுவே.
வடமொழியாக்கங் கூற . . . . .

இதுரெண்டு - பிருககிறத்திற்கு (பிராகிருதம்) ம் உரிமையானபடியினாலே யென்று சொல்லுக. ... ... 23.

இரண்டாவது பதவியல் முற்றும்.

(கு-பு.)—

இதிற பதவியலொன்றுமே இருககிறது ; இந்த வுரையாசிரியர் பெயர் விளங்கவில்லை ; இவ்வுரையில் பிழைகள் விரவியிருக்கினறன. இதினிடையே 30, 31 - இந்த 2 ஏடுகளும் இல்லை

No. 65. நன்னூல், உரையுடன்.

NANNÛL WITH COMMENTARY.

Substance, paper. Size, 15¾ × 9¾ inches. Pages, 70. Lines, 47 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is, Dēśanirṇaya 37*a*.

Etymology incomplete.

Same work as the one described under No. 63.

(கு-பு.)—

இதில், பதவியல் முதல் மெயயீற்றுப்புணரியலிற் சிலபாகமவரையுள்ள சூத்திரங்கள் இருக்கின்றன. இது 63-நெ. போன்றது.

No. 66. நன்னூல், பழையவுரையுடன்.

NANNUL WITH AN OLD COMMENTARY.

Substance, palm-leaf. Size, 17⅛ × 1⅜ inches. Pages, 320. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

Contains 68 Sûtras in Poduviyal.

This is another anonymous commentary not yet printed. Rare and old and seems to be the work of a Jain.

Beginning:

பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த
நான்முகற் றொழுது நன் கியம்புவ னெழுத்தே.

எ - து சூத்திரம். இவ்வதிகாரம் என்னுதலி எடுத்துக்கொள்ளப் பட்டதோவெனின, அதிகாரம் நுதலியதூஉம், அதிகாரத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆறுல் இவ்வதிகாரம் என்னபெயர்த்தோ வெனின், எழுத்திலக்கண முணர்த்தினமையான், எழுத்ததிகாரமெ னனும் பெயர்த்து. எழுதப்படுதலின எழுத்தெனக்கொள்க. அதி காரம் என்றது முறைமையென்றவாறு.

இவ்வதிகாரத்துள், எனைத்துவகையோத்திஞன் எழுத்திலக்கணம் உணர்த்திஞேவெனின், ஐவகை யோத்திஞன் உணர்த்திஞனெ ன்க. அவற்றுள் இம்முதலோத்து என்னுதலிற்றோவெனின், ஒத்து நுதலியதூஉம் . . . எழுத்தியலென்னும் பெயர்த்து.

End:

ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்
. . . அடிமறி.

என் - னின் அடிமறிமாற்றுப் பொருள்கோளாமாறுணர்——ற்று.

இ - ள். பொருளுககு ஏற்புடைய இடத்திலே எடுத்துக்கொண்டு வந்து கூட்டியுணர்த்தற்குப் பொருந்தும். அடியவும் . . . அடிமறிமாற்றுப் பொருள்கோளாமென்றவாறு.

உ - ம். நடுகெகுற்றுத் தறசேர்ந்தார் . . . . விடுக்கும் வினையுலந்தக்கால்.

அரி(ற)வித் தாசின் றுணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
துரிதனி.

(கு-பு)—

இந்நூல் மூலமும் வேறுசிலவுரையும் அச்சிடப்பட்டுள்ளன; இவ்வுரை, இதுவரை அச்சிற் பதிப்பியாதது; விசேடித்து எங்கும் அகப்படுவதன்று; ஆராய்தற் பாலது; ஜைனர்களுடைய உரைபோலே தோற்றுகிறது; இந்தப்பிரதியில் எழுத்ததிகாரம் முழுமைக்கும் சொல்லதிகாரத்தில் பொதுவியல் சூஅ - வது சூத்திரம்வரையுள்ள பாகத்துக்கும் உரையிருக்கின்றது. இதிலுள்ள ஏடுகள் அதிசிதிலம்.

No. 67. நன்னூல் (பழையவுரையுடன்).
NANNŪL (WITH AN OLD COMMENTARY).

Substance, paper. Size, $13\frac{1}{4} \times 8\frac{1}{2}$ inches. Pages, 406. Lines, 24 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Contains Eḻuttiyal and 68 Sūtras in Poduvial.

This is an old and rare commentary hitherto not printed. Seems to be the work of a Jaina.

This appears to be a copy made from the MS. described under the last number.

(கு-பு.)—

இதில் எழுத்தியலிலிருநது பொதுவியல் 68-ம் சூததிரடவரைககுமுள்ளபாகம் இருககிறது ; 66-நெ. இதற்கு மூலப்பிரதியென்று தோற்றுகிறது.

No. 68. நன்னூல், உரையுடன்.
NANNŪL WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{4} \times 1\frac{1}{2}$ inches. Pages, 41. Lines, 11 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 39*a*. The other work herein is, Narkavirasánambiakāpporuḷ (நாற்கவிராச நம்பியகபபொருள்விளககம்) 1*a*.

Incomplete; contains portions from the Eḻuttiyal (எழுததியல்) Vinaiyiyal (வினையியல்) and Poduviyal (பொதுவியல்).

(கு-பு.)—

இதில் எழுத்தியல் வினையியல் பொதுவியல் இவைகளிலுள்ள பாகங்கள் உள்ளன. 60 நெ. போன்றன.

No. 69. நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கம், உரையுடன்.
NĀṞKAVIRĀŚANAMBI'S AGAPPORUḶ-VIḶAKKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $14 \times 1\frac{3}{8}$ inches. Pages, 334. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

This is a work on poetics relating to love-poetry by Nāṟkavirāśanambi. For description and extracts, see pages 34 and 178 of M. Seshagiri Sastri's "Report on a Search for Sanskrit and Tamil MSS.," No. 1. The work is divided into the following chapters, 1. அகத்திணையியல்; 2. களவியல்; 3. வரைவியல்; 4. கற்பியல்; 5. ஒழிபியல்.

(கு-பு.)—

இந்நூல் உரையுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது; அது திருத்தமாக இல்லை. அன்றியும் இந்தப்பிரதி, உதாரணச்செய்யுட்கள் இன்னநூலினுள்ளனவென்பதைத் தெரிவிக்கிறது; ஆதலால் இது மிகச்சிறந்தது; இந்தப்பிரதியில் 'முத்திறப் பொருளுந தத்தந் திணையொடு, மரபின் வாராது மயங்கலுமுரிய' என்ற சூத்திரம் இறுதியாகவுள்ள பாகம் இருக்கிறது; திருத்தமாகவுமிருக்கிறது.

No. 70. நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கம், உரையுடன்.

NĀṞKAVIRĀŚANAMBI'S AKAPPORUḶ VIḶAKKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $8\frac{3}{4} \times 1\frac{1}{2}$ inches. Pages, 265. Lines, 13 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Same work as the above.

Complete.

(கு-பு.)—

இந்தப் பிரதி பூர்த்தி; முன்பிரதி போன்றது; மிகப்பழையது.

No. 71. நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கம், உரையுடன்.

NĀṞKAVIRĀŚANAMBI'S AKAPPORUḶ-VIḶAKKAM WITH COMMENTARY.

Substance, paper. Size, $13\frac{1}{4} \times 8\frac{1}{4}$ inches. Pages, 265. Lines, 24 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு - பு.)—

இந்தப் பிரதி பூர்த்தி; முன்பிரதி போன்றது.

No. 72. நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கம்.

NĀṚKAVIRĀŚANAMBI'S AGAPPORUḶ-VIḶAKKAM.

Pages, 76. Lines, 11 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 69.

The work contains only Akattiṇaiyiyal (அகத்திணையியல) and Kaḷaviyal (களவியல்).

Same work as the above

(கு - பு.)—

இந்தப்பிரதி அபூர்தி; முனபிரதி போன்றது.

No. 73. நேமிநாதம், உரையுடன்.

NĒMINĀDAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 13¼ × 8½ inches. Pages, 91. Lines, 25 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is, Vākaṭaśastra 49*a*.

Complete.

This is a work on grammar treating of Orthography and Etymology: by Guṇavīrapaṇḍita, a Jain.

The work is also called Śinnul and is referred to in Toṇḍamaṇḍalaśataka. It has been printed with a commentary.

Beginning:

பாயிரம்.

பூவின்மேல் வந்தருளும் புங்கவன்றன் பொற்பாத
நாவிளு ளுரு நவின்றேத்தி—மேவுமுடி

பெல்லா முணர வெழுத்தி னிலக்கணத்தைச்
சொல்லா லுரைப்பன் றெருத்து.

என்பது சிறப்புப்பாயிரமுண . . . ற்று.

* * * *

பாயிரமுற்றும்.

ஆவி யகரமுத லாறிரண்டா மாய்தமிடை
மேவுங் ககரமுதன் மெய்க(ளா)—மூவாறுங்
கண்ணு முறைமையாற் காட்டியமுப் பத்தொன்று
நண்ணுமுதல் வைப்பாகு நன்கு.

என் - னின் முதல் வைப்பாகிய முப்பத்தோரெழுத்து முணர்த்தும்.

அகரமுதல் . . பதினெட்டு மெயயெனப்படுமென்றவாறு.

End :

இசைநிறை நான்கு வரம்பாம் விரைசொல்
வசையிலா மூன்று வரம்பா—மசைநிலை
யாய்ந்த வொருசொ லடுக்கிரண்டாந் தாம்பிரியா
வேய்ந்திரட்டைச் சொற்க ளிடத்து.

என் - னின் ஒருசொல், அடுககிவருமிடம் இவையென்பதுணர் . ற்று.

ஒருசொல் அடுக்கிவருமிடத்து, இசைநிறை நான்கு வரம்பு அடுக்கி வரும். விரைசொல் மூன்று வரம்பளவும் அடுககிவரும். அசைநிலை இரண்டுவரம்பளவும் அடுககிவரும். உயர்த்திச் சொல்லுதலாலே, இவற்றி விழிந்துவரப்பெறும். இரட்டைச்சொல், அவ்விரட்டுதலிற் குறைத்துச் சொல்லப்படா. என்றவாறு.

அவை வருமாறு. பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகே . . . . . மொடு மொடுத்தது என இரட்டைக்கிளவி பிறவுமன்ன (12)

வினைமரபு முற்றும்.

(கு-பு.)—

இந்நூலாசிரியர் பெயர் குணவீர பண்டிதரென்பது; இந்நூலுக குச் சின்னூலென்றும் ஒரு பெயருண்டு; இவை "சின்னூ லுரைத்த குணவீரபண்டிதன் சேர்பதியும் . . . . . தொண்டைமண்டலமே" என்னும், தொண்டைமண்டல சதகத்தால் தெரிகின்றன. இந் தப்பிரதி அபூர்த்தி; 6-வது வினைமரபு முடிய இருக்கிறது. இந்நூல் முழுவதும் உரையுடன் அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 74. பன்னிருபாட்டியல்.

PANNIRUPĀṬṬIYAL.

Substance, paper. Size, $7\frac{7}{8} \times 6\frac{3}{8}$ inches. Pages, 51. Lines, 20 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 9*a* and 45*a*. The other works herein are Vikramaśōḻanulā 1*a*, Kulōttuṅgaśōḻanulā 26*a*, Nambiyulā 34*a*.

This is a treatise dealing with the 10 special features of poems and of the 96 kinds of Prabandas : by Indrakāḻiyār and other learned men. This has been printed.

Beginning :

1. சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிந்தையில் வைத்து முன்னோர் பொருணெறி
கூட்டி யுரைப்பல் பாட்டியன் மரபே.

2. எழுத்திய லோத்திய வெழுத்திய லி(ய)ம்பிற்
பிறப்பும் வருணமுஞ் சிறப்பாங் கதியு
மிருவகை யுண்டியு மூவகைப் பாலு
மொருவி ருணமுங் கன்னலும் புள்ளு
நயம்பெறு நாளு மியம்புதல் கடனே.

End :

வலங்கெழு வந்தர வான்புகக் கவிஞர்
கலங்கித் தொடுப்பது கையறு நிலையே ... 180.
வெற்றி வேந்தன் (வி)ண்ணக மடைந்தபின்
கற்றோ ருரைப்பது கையறு நிலையே ... 181.
மற்றவை வல்ல வினம் பறி தொன்றிலு
மத்தகு பாவி னடங்கின வென்ப ... 182.
கலியொடு வஞ்சியிற் கையற வுரையார் ... 183.

Colophon :

பாவினம் முற்றும்.

பன்னிருபாட்டியல் முற்றும்.

(க-பு.)—

இஃது இந்திரகாளியார் முதலான டலபுலவர்களாற் செய்யப்பட்டது; இதில் நூல்களுக்குரிய பத்துப்பொருத்தங்களின் இலக்கணமும் தொண்ணூற் றறுவகைப்பிரபந்தங்களின் இலக்கணமும் சொல்லப்

பட்டுள்ளன; இது பழைய நூல்; இப்பொழுது அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப்பிரதியில் முதலில் விக்கிரம சோழனுலாவும் பன்னிரு பாட்டியலின் நடுவிற்குலோத்துங்கசோழனுலாவும் நம்பியுலாவும் உள்ளன.

No. 75. பிரயோகவிவேகம், உரையுடன்.

PRAYŌGAVIVĒKAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 11 × 8½ inches. Pages, 115. Lines, 23 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

A grammatical work treating of Etymology; by Subrahmaṇya Dīkṣita of Alwār Tirunagiri. This has been printed.

Beginning:

முதலாவது காரகப்படலம்.

சீரார் மயேசுரன் பாணினி யாதித் திருமுனிவ
ரோரா யிரங்கண் ணுடையான் கலைமக ளோடிவரை
யாராய்ந் துணர்ந்து துதித்தடி போற்றி யருந்தமிழா
னேராய் வரும்பிர யோக விவேக நிகழ்த்துவனே

இது தற்சிறப்புக் கூறுகின்றது.

மயேசுரனாதியாக இவரை நினைத்துப் புகழ்ந்து வணங்கி அரியதமிழாற் பிரயோக விவேகமெனனும் வடமொழிச் சத்தசாத்திரத்தைக் கூறுவ னென்றவாறு.

உணர்ந்து துதித்து அடிபோற்றி யெனவே திரிகரணங்களாலும் வழிபடுதலாயிற்று இக்கடவுளரு முனிவரும் வடமொழிச் சத்தசாத்திரஞ்செய்தவராகலின் இந்நூற்கு ஏற்புடைக்கடவுளாயினரென்க. பாணினி யாதித்திரு முனிவராவார். பாணினி, காத்தியாயனர், பாஷ்யகாரர், காத்தியாயனரெனினும் வரருசியெனினுமொக்கும். பதஞ்சலியெனினும் பாஷ்யகாரரெனினுமொக்கும். மகேசுரன் பாணினிக்கு ஆசிரியன்.

'எழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையா
னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்.'

. . அது பொருளன்மையறிக.

End:

சீதள சந்த்ர முகராம பத்திர-தீட்சிதற்குப்
போதொடு சென்று புகல்வோ மவாக்குப பொழுதில்லையேல்
மேதினி யிற்றமிழ் செய்பிர யோக விவேகந்தன்னைப்
பேத மிலாத பதஞ்சலி பாற்சென்று பேசுவமே ... ...(17)

பேர்கொண்டு நின்றபிர யோக விவேகத்தைச்
சீர்கொண்ட ராமபத்ர தீட்சிதன்று - னேர்கொண்டு
கேட்டா னினிக்கண்ணுற் கேட்கும் பதஞ்சலிதான
கேட்டாலென் கேளாக்கா லென ... .(18)

உம்பர்க் குரியபிர யோக விவேகத்தை
யைம்பத் தொருகவிதை யாலுரைத்தான் - செம்பொற்சீர்
மன்னு மதிற்குருகூர் வாழ்சுப் பிரமணிய
னென்னு மொருவே தியன் ... ...(19)

Colophon:

பிரயோகவிவேகம் முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல் உரையுடன் ஆழ்வார் திருநகரியில் 150-வருடங்களுககு முன் இருந்த சுப்பிரமணிய தீக்ஷிதரால் செய்யப்பெறறது; மிகச்சிறந்த இலக்கணம்; இஃது உரையுடன அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதியில் பூர்த்தியாக இருக்கிறது.

No. 76. பிரயோகவிவேகம்.

PRAYŌGAVIVĒKAM.

Substance, palm-leaf. Size, $1\frac{1}{4} \times 13\frac{3}{8}$ inches. Pages, 9. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Very fragmentary; a very small portion in the middle of the work.

Same work as the above.

(கு-பு.)—

இஃது அபூர்த்தி; முன்பிரதி போன்றது.

No. 77. பிரயோகவிவேகம்.

PRAYŌGAVIVĒKAṂ.

Substance, palm-leaf. Size, 17 × 1¼ inches. Pages, 7. Lines, 12 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 21*a*. The other work herein is, Tiruvēngaḍavulā.

Fragmentary.

Same work as the above.

(கு-பு.)—

இஃது அபூர்த்தி; முன்பிரதி போன்றது.

No. 78. புறப்பொருள்-வெண்பாமாலை, உரையுடன்.

PUṞAPPORUḶ-VEṆBĀMĀLAI WITH COMMENTARY.

Substance, paper. Size, 10¼ × 7¾ inches. Pages, 258. Lines, 25 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

This is a work on that branch of poetics which deals with heroic poetry. Contains definitions and illustrations. It is written in the Veṇbā metre. The author of the work is Aiyanāridanār, a descendant of Chera kings. It is said to have been based on the Pannirupaḍalam, a work attributed to one of Agastya's disciples. Contains 12 chapters and 361 stanzas.

Beginning :

சிறப்புப்பாயிரம்—சூத்திரம்.

மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
றன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோ
னோங்கிய சிறப்பி னுலகமுழு தாண்ட
வாங்குவிற் றடக்கை வானவர் பெருமா
னைய னாரித னகலிடத் தவர்க்கு
மையறு புறப்பொருள் வழாவின்று விளங்க

வெண்பா மாலை யெனப்பெயர் நிறீஇப்
பண்புற மொழிந்தனன் பான்மையிற் றெரிந்தே.

என்பது பாயிரம், etc.

* * * *

வெட்சி.

வெட்சி யரவம விரிச்சி செலவு
வேயே புறத்திறை யூர்கொலை யாகோள்
பூசன் மாற்றே புகழ்சுரத் துய்த்த
றலைத்தோற் றம்மே தந்துநிறை பாதீ
டுண்டாட் டுயர்கொடை புலனறி சிறப்பே
பிள்ளை வழக்கே பெருந்துடி நிலையே
கொற்றவை நிலையொடு வெறியாட் டுளப்பட
வெட் டிரண் டேனை நான்கொடு தொகைஇ
வெட் சியும் வெட்சித் துறையு மாகும்.

என்-னின், வெட்சித்திணையுந் துறையுமாமாறுணர் . . ற்று வெட்சியென்பது இரண்டுவகைத்து. மன்னுறு தொழிலும் தன்னுறு தொழிலுமென.

* * * *

அவற்றுள் மன்னுறுதொழில் வருமாறு.

மண்டு மெரியுண் மரந்தடிந் திட்டற்குக
கொண்ட கொடுஞ்சிலையான் கோறெரியக்—கண்டே
யடையார் முனையலற வையிலைவேற் காளை
விடையாயங் கொளகென்றான் வேந்து.

என்றது—மிகக கொளுந்தி யெரியாநின்ற நெருப்பினுள்ளே மரத்தைவெட்டி யிட்டதன்மைத்தாகக கையிற்கொண்ட கோடினவில்லையுடையவன் அம்பை ஆராயககண்டு பகைவர் போர்கலங்க வியக்கத் தக்க இலைத்தொழில் வேலினையுடைய காளை! எற்றையுடைய நிரையைக்கொள்கவென்று சொன்னானரசன். யாரை? கொடுஞ் சிலையானைக் கண்டென விரித்துரைக்க. ஏகாரம் ஈற்றசை. 1

End:

பிடிவென்றி வருமாறு.

குவளை நெடுந்தடங்கட் கூரெயிற்றுச் செவ்வா
யவளொடு மாமையொப் பான - லவளொடு
பாணியுந் தூக்கு நடையும் பெயராமைப்
பேணிப் பெயர்ந்தாள் பிடி.

என்றது—செங்கழுநீர் மலரையொத்த நெடிய பெரியகண்ணினை யும் கூரிய எயிற்றினையும் சிவந்தவாயினையுமுடைய சீதேவியுடன் நிறமொத்த இவளொடு தாளமும் இசையும் செலவும் தப்பாதபடி பரி கரித்துப் பிடிபோல அசைந்து பெயர்ந்தாடுங் கூத்தையாடினுன். இனிப் பெயர்த்தாளென்று பாடமோதிப் பிடியை நடத்தினளென பாருமுளர். 19

Colophon:

ஐயனரிதனர் பாடின வெண்பாமாலை முற்றும்.

ஆக வெண்பா 363.

வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
யுட்குடை யுழிஞை நொச்சி தும்பையென்
றித்திற மேழும் புறனென மொழிப.
வாகை பாடாண் பொதுவியற் றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புற மாகும்.

(கு-பு.)—

இது, தமிழிலக்கணம் ஐந்தனுட் பொருளின் பகுதியாகிய புறப் பொருளுக்கு இலக்கணமும் இலக்கியமுமாக அமைந்துள்ளது; பன் னிருபடலத்தின் வழிநூல்; இதுவும் பன்னிரு படலங்களையுடையது; இதில் இலக்கியமாக அமைந்துள்ள வெண்பாக்கள் 361; நூலாசிரியர் ஐயனரிதனரென்பவர்; இவர் சேரகுலத்தவர்; இந்நூல் அச்சிடப்பெ ற்றுள்ளது; மிகச்சிறந்த நூல்; பூர்த்தியாகவுள்ளது

No. 79. மாறனலங்காரம், உரையுடன்.

MĀṞAN ALANKĀRAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 13 × 8 inches. Pages, 686. Lines, 23 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old

Complete.

This is a work on Tamil poetics and Rhetoric by Tirukkurukaip-perumāḷkavirāyar, pupil of Śrinivāsāchārya, giving eulogistic stanzas on Śatakōpar as illustrations.

The author is also known by the name of Śadai. The commentator is Kāri-rathnakavirāyar of Tentiruppērai.

Beginning :

உலகம் யாவையு முறுபயன் விளைப்பா
னலகில் சோதி யணிகிளர் திருவுரு
வுணர்வுயி ரெனக்கலந் துத்தமர் நித்தர்
கணமக லாதபொற் கவின்பதி நின்று
முரவுநீர் வளைத்த வொன்பானுட் டென்புலப்
பாதகண் டத்துட் பழம்பதி யெனப்புகும்
விண்டொட நிவந்த பொழிலவட வேங்கடந்
தெண்டிரை கறங்குதென் குமரியென் றியிடை
யமிழ்தினும் வான்சுவைத் தாகிய மும்மைத்
தமிழ்தெரி புலமைச் சான்றோர் மதிக்கு
முதுமொழித் தண்டி முதனூ லணியொடும்
புதுமொழிப் புலவர் புணர்த்திய வணியையுந்
தனதுநுண் ணுணர்வாற் றருபல வணியையும்
மனதுறத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும்
பொதுவியல் பொருள்சொல் லணியெச்ச வியலெனச்
சதுர்பெற விரண்டிடந் தழீஇய சார்பெனலாய்க்
காரிதந் தருள்கலைக் கடலியற் பெயர்புனைந்
தாரியர் துவன்ற வவைக்களத் துரைத்தனன்
சிற்குணச் சீநி வாசனின் னருளா
னற்பொருள் மூன்றையு நலனுற வுணர்வோன்
பெருநிலம் புகழ்திருக் குருகைப் பெருமா
ளருள்குரு கூர்வரு மனகன் செழுந்தேன்
மருக்கமழ் சீரகத் தார்வணி கன்புகழ்
திருக்குரு கைப்பெரு மாள்கவி ராய
னருட்குணத் துடன்வளர் சடையன்
பொருட்டொடர் நலம்புணர் புலமை யோனே

* * * *

Beginning :

வெண்பா.

திருப்பாவை யென்னத் திருந்தியற்பாத் தந்த
திருப்பாவை வில்லிபுத்தூர்ச் செல்வி - யருட்பார்வை
வாய்ந்ததனாற் செய்யுள் வழக்கென் றிரண்டிடத்தா
லாய்ந்துரைப்பல் செய்யு ளணி.

என்பது சூத்திரம்.

இவ்வதிகாரம் என்னுதலி யெடுத்துக்கொள்ளப்பட்டதோ வெனின், - அதிகாரநுதலியதூஉம் முன்னர்க்கூறிப் போந்த சிறப்புப்பாயிரத்தானே உணரப்படும்.

* * * *

என் - எனின்.

முன்னர்ச் செய்யுளிடனுகத் தோன்றும் அணியிலக்கண முறைப் பலென்றுர், செய்யுளுணர்ந்தே அணியுணரப்படுமாகலான், அணி பெறுஞ் செய்யுளின் பெயரு முறையுந்தொகையு முணர்த்துதல் றுத லிற்று.

இ - ள். (அது) செய்யுள் எனத்தொகையாளென்றுய் நின்ற அது, வெண்பா அகவலெனவகைவரையறை இரண்டாய், அவற்றின்மரபு மிக்ககலி வஞ்சி மருட்பா பரிபாடலென நான்கிஞேடும் விரிவரைய றை ஆறுய், செப்பல், அகவல், தள்ளல், தூங்கலென்றவோசை யுடைத் தாய் விரியொடு நிறைவாறனுள் வெண்பா முதலாய் நான்கென்று மொள்ளிய பா இனமெனப் பன்னிரண்டாய் முந்துநூல் கூறப்பட்டு நிகழ்ந்தன வென்றவாறு, etc.

End:

> உலகிடங் காலங் கலையே நியாய
> மாகம மலைவென் ருரெரு வகையுள.

என் எனின்.

இதுவும் ஒருவகை வழுவாமாறு உணர்...ற்று.

இ - ள். உலகமலைவு மிடமலைவுங் காலமலைவுங் கலைமலைவும் நியா யமலைவும் ஆகமமலைவு மென்று கூறப்படுவனவா வொருவகைமலை வும் ஆறுளவா மென்றவாறு. ஏகார மீற்றசை, etc.

* * * *

> மெய்பெறு நான்கெனத் தெரிச்செய்யுளும்
> பாகமோர் மூன்றும் பயில்குணம் பத்து
> மாகவெண்ணுனகிரட் டியபொரு ளணியு
> மடிமொழி யெழுத்தி னடுக்கினவாக
> முடிவுறவகுத்த மூவகைமடக்கு
> மூவினப்பாடன் முதலா முறைமையின்
> மேவின விருபா ஞறனமே லாறென
> விழுமிய மிறைக் கவி விரித்தபின் னெஞ்சிய
> வழுவழு வமைதியு மிவையென வகுத்து
> மொழிந்த வைம்மூன்றுடை முற்ற
> தொழிந்தவுங் கோட லொள்ளியோர் கடனே.

இச்சூத்திரம், இந்நூலுளுரைத்த இலக்கணமனைத்துந் தொகுத்து இவ்வாறுஅணியிலக்கணத்திற்கும் பிறவாறு வருவன உளவெனினும் அவற்றையுந் தழீஇக்கொள்க வெனப் புறனடையுணர்த்துகின்றது, etc.

* * * *

Colophon:

எச்சவணியியல் முற்றும்.

தருகாள மேகங் கவிராய ராயன் சடையனன்பாற்
குருகா புரேசர் புனையலங் காரங் குவலயத்தே
கருகாத செஞ்சொ லுரைவிரித் தான்கற்ப காடவிபோல்
வருகாரி ரத்ந கவிராயன் பேரை வரோதயனே

(கு - பு.)—

இது, திருக்குருகைப்பெருமாள் கவிராயரென்பவரா லியற்றப்பெற்ற ஓர் அலங்கார நூல்; இதற்கு உதாரணமான செய்யுட்கள் சடகோபாழ்வார் விஷயமானவை; அவையும் அவரால் இயற்றப்பட்டனவே; இந்நூலாசிரியருக்குச்சடையனென்றும் ஓர் இயற்பெயருண்டு; இவர் ஸ்ரீநிவாஸாசாரியர் என்னுங் குருவருள் பெற்றவர். இதற்கு உரையெழுதினவர், தென்றிருப்பேரையென்னும் ஊரிலிருந்த காரி இரத்தினகவிராய ரென்பவர். இது தமிழ்ப்பாஷையிலுள்ள அலங்கார நூல்களுள், மிகசெவ்விதாகவும் விரிவாகவும் உள்ளது; இது வரையில் அச்சிடப்படவில்லை.

No. 80. முதல் இலக்கணம்.

GRAMMATICAL PRIMER.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 26. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is, இலக்கம் 14*a*.

Orthography.

Incomplete.

Beginning:

(உயிர்)

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.
அ, இ. உ, எ, ஒ, இந்த ஐந்தும் குறில்.
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இந்த ஏழும் நெடில்.

End:

மெய்யெழுத்தென்பது மெய்போல் அசையாது
நிற்குமெழுத்து; அதாவது.

* * * *

க், ச், ட், த், ப், ற்.
ங், ஞ், ண், ந், ம், ன்.
ய், ர், ல், வ், ழ், ள்.

* * * *

எனப்பதினெட்டுமோர்.

இவற்றுள் - வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்தென மூவகையாம்.

(கு-பு.)—

இதில் எழுத்திலக்கணம் சொல்லப்பட்டிருக்கிறது.

No. 81. யாப்பருங்கலக்காரிகை, உரையுடன்.

YÂPPARUNGALAKKÂRIKAI WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $9\frac{7}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 307. Lines, 9 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 91*a*. The other works herein are, Śivadarumōttiram (சிவதருமோத்தரம்) 1*a*, Kānappērūrkāḷaināyakarpurāṇam (கானப்பேரூர்க்காளை நாயகர்புராணம்) 6*a*, Nanneri (நன்னெறி) 87*a*

Complete.

For description and extracts, see pages 34, 35 and 182 to 189 of M. Seshagiri Sastri's "Report on a Search for Sanskrit and Tamil MSS." No. 1.

(கு-பு.)—

இந்நூல் அமிர்தசாகர முனிவர் எனனும் சைனரியற்றியது; பலவகைப் பாக்களுக்கும் அவற்றினினங்களுக்கு முரிய இலக்கணங்களைத் தெரிவிப்பது; இது, குணசாகரர்செய்த சிறந்தவுரையுடன் அச்சிடப் பெற்றிருக்கிறது; அவ்வச்சுப்பிரதி திருத்தமாக இல்லை; இந்தப்பிரதியில் மூலமும்உரையும் பூர்த்தியாக இருக்கிறது.

No 82. யாப்பருங்கலக்காரிகை.

YÂPPARUṆGALKKÂRIGAI.

Substance, palm-leaf. Size, $14\frac{1}{2} \times 1$ inches. Pages, 6. Lines, 6 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 33*a*. The other works herein are: Aḷavaivāyppādu, etc. (அளவைவாய்ப்பாடு) 1*a*, Palapādaṟṟiraṭṭu (பலபாடற்றிர

ட்டு) ௨a, Aṅgayaṛkanniyammaikalivenbā (அங்கயற் கண்ணியம்மை கலிவெண்பா) 29a, Śivappirakāśaśivavīrapattirarpērilkalinedil (சிவப்பிரகாசசிவ வீரபத்திரர் பேரிற் கழநெடில்) 33a, Śivappirakāśar-ūñjal (சிவப்பிரகாசர் ஊஞ்சல்) 53a, Śiṭṭukavigalum śiṅgārappādal-galum (சீட்டுகவிகளும் சிங்காரப்பாடல்களுரு) 55a.

This is a treatise on prosody by Amiṛtasāgaramunivar, again. Guṇasāgarar made a commentary on it, and the text and the commentary have been printed. For description and extracts, see pages 34, 35 and 182 to 189 of M. Seshagiri Sastris " Report on a search for Sanskrit and Tamil MSS." No. 1.

Beginning:

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீ
ழெந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே. ... (1)

* * * *

குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்தமெய்யே
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருடடுநு
சிறுநுதற் பேரமாக் கட்செய்ய வாயைய நுண்ணிடையா
யறிஞ ருரைத்த வளபு மசைக்குறுப பாவனவே. ... (4)

End:

பொருளோ டடிமுத னிற்பது கூனது வேபொருந்தி
யிருள்சேர் விலாவஞ்சி யீற்றினு நிற்கு மினி(ய)ாழிந்த
மருடீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப் [டியே (8)
பொருள்கோள் குறிப்பிசை யொப்புங் குறிக்கொள் பொலங்கொ

எழுத்துப் பதின்மூன் றிரண்டசைசீர் முப்பதேழ்தளையைந்
திழுக்கிலடிதொடை நாற்பத்து மூனறைந்து பாவினமூன் [ருமூ
ரொழுக்கிய வண்ணங்க(ளு)ெ(ரு)ன்ப தொண்பொருள்கோளி
வழுக்கில் விகாரம் வனப்பெட்டியாப்புள் வகுத்தனவே. (9)

ஒழிபியலோத்துமுற்றும்.

ஆகக் காரிகை. 44 சரி.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; மூலம் மட்டுமேயுள்ளது; 36-ம் ஏட்டில் தொடக்கம்.

No. 83. யாப்பருங்கலக்காரிகை.

YĀPPARUṆGALAKKĀRIKAI.

Substance, palm-leaf. Size, 10¾ × 1¼ inches. Pages, 14. Lines, 7 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 177*a*. The othe rworks herein are, Sūtakavidi (சூதகவிதி) 1*a*, Aññavadaipparaṇi (அஞ்ஞவதைப்பரணி) 28*a*. Śaśivaṇṇabōdam (சசிவன்னபோதம்) 84*a*, Nellaikkumarasuvāmipēril stōttiram (நெல்லைக்குமாரசுவாமி பேரில் ஸ்தோத்திரம்) 94*a*, Nambiyāṇḍārnambitiruvandādi (நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி) 104*a*, Śuttāttuvidasittāntam (சுத்தாத்துவித சித்தாந்தம்) 121*a*, Kacciyappadēśikannēñjuviḍutūdu (கச்சியப்பதேசிகன் நெஞ்சுவிடுதூது) 136*a*, Kacciyappasuvāmigaḷtōttiram (கச்சியப்பசுவாமிகள் தோத்திரம்) 174*a*, Tāyumānavarpāḍal (தாயுமானவர் பாடல்) 184*a*, Kandarkaliveṅbā (கந்தர்கலிவெண்பா) 244*a*, Paṇaviḍutūdu (பணவிடுதூது) 250*a*, Vairākkiyadīpam with commentary (வைராக்கிய தீபம் உரையுடன்) 269*a*, Śivānandabōdam (சிவானந்தபோதம்) 361*a*, Niṭṭānubūti (நிட்டானுபூதி) 363*a*, Śivapūjaiyagaval with commentary (சிவபூஜையகவல் உரையுடன்) 377*a*, Śivapūjaiyagaval (சிவபூஜையகவல்) 387*a*, Śivānandamālai (சிவானந்தமாலை) 389*a*.

Complete.

(கு-பு.)—

இந்தப் பிரதி பூர்த்தி. முன்பிரதியைப் போன்றது.

No. 84. யாப்பருங்கலம், விருத்தியுரையுடன்.

YĀPPARUṄGALAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 13¼ × 8½ inches. Pages, 510. Lines, 52 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

(கு-பு.)—

இது, செய்யுளிலக்கணம்; இதனை இயற்றியவர், குணசாகரர் பாலுபதேசம்பெற்றவரும் கடலினது பெயரை யுடையவருமாகிய ஒரு ஜைனமுனிவர்; இந்தப்பிரதி பூர்த்தி; சிறந்தநூல்; இதுவரை அச்சிடப்படவில்லை.

No. 85. யாப்பருங்கலம், விருத்தியுரையுடன்.

YĀPPARUNGALAM WRTH COMMENTARY.

Substance, paper. Size, $11\frac{3}{8} \times 9$ inches. Pages, 102. Lines, 32 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

Described on pages 111 to 117 of M. Seshagiri Sastri's "Report on a Search for Sanskrit and Tamil MSS." No. 2.

Same work as the above.

(கு-பு.)—

இந்தப்பிரதி அபூர்த்தி; முன் பிரதிபோனறது.

No. 86. யாப்பருங்கலம்.

YĀPPĀRUṄGALAM.

Substance, palm-leaf. Size, $7\frac{1}{8} \times 1\frac{3}{4}$ inches. Pages, 8. Lines, 13 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Begins on fol. 28*a*. The other works herein are—Śidambaraccaiyuṭkōvai (சிதம்பரச் செய்யுட்கோவை) 16 *a*, Acārakkōvai (ஆசாரக்கோவை) 16*a*, Aindiṇaiyamibadu (ஐந்திணையைம்பது) 32*a*, Mudumoḻikkāñji (முதுமொழிக்காஞ்சி) 39*a*.

This is a work in 65 Sūtras on Tamil prosody.

For description and extracts, see pages 111 to 117 and 299 to 310 of M. Seshagiri Sastri's "Report on a Search for Sanskrit and Tamil MSS.," No. 2.

Beginning:

முழுதுல கிறைஞ்ச முற்றருங் குணத்தோன்
செழுமலர்ச் சேவடி செவ்விதின் வணங்கிப்

பாற்படு தென்றமிழ்ப் பரவையின் வணக்கி
யாப்பருங் கலமென யாப்புற வகுத்தோன்
தனக்குவரம் பாகிய தலத்தொடு புணர்ந்த
குணக்கடம் பெயரோன் கொள்கையின் வழா (அத்).
(துள) க் கறு கேள்வித் தகவுடர் காட்சி
யளப் ட ருங் கடற் பெய ரருந்தவத் தோனே.

வெறிகமழ் தாமரை மீமிசை யோங்கிய
வறிவனை வணங்கி யறைகுவன் யாப்பே ... ... (1)

எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா நடையது யாப்பெனப் படுமே.

* * * *

End:

மூன்றடி முதலா வேழடி காறு(ம்)வந்
தீற்றடி சிலசில சீர்தவ திற்பினும்
வேறொரு வி விரவினும் வெண்டுறை யாகும் ... .. (63)

நான்கடி யானு நடைபெற் றடிதொறுந்
தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம் .. ... (64)

அகவ லிசையன வகவல் மற்றவையே ... ... (65)

ஏ ஓ ஐயா வெனவென் றிறுமே ... ... (66)

(கு-பு.)—

இஃது அபூர்த்தி ; புன்பிரதி போன்றது ; மூலமட்டுமுள்ளது.

No. 87. லத்தீன் போதகத்தமிழிலக்கணம்.

LATIN PŌDAKA TAMIḺILAKKAṆAM.

Substance, paper. Size, 12¾ × 7¾ inches. Pages, 235. Lines, 36 on a page. Character, Tamil and Latin. Condition, good. Appearance, old.

Complete.

Tamil grammar written in Latin. Contains 39 lessons.

(கு-பு.)—

இதில் தமிழ் இலக்கணம் லத்தீன்பாஷையிற் சுருக்கமாக எழுதப பட்டுள்ளது. 39 - பாடங்களுள்ளன.

No. 88. லத்தீன் போதகத் தமிழிலக்கணச் சுருக்கம்.

LATIN PÔDAKA TAMIḶILAKKAṆACCURUKKAṂ.

Substance, paper. Size, 10½ × 8 inches. Pages, 75. Lines, 22 on a page. Character, Tamil and Latin. Condition, good. Appearance, old.

Complete

A short grammar of the Tamil language in Latin.

(கு-பு.)—

இதுவும் லத்தீன் பாஷையில் தமிழிலக்கணம் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

No. 89. வச்சணந்திமாலை, உரையுடன்.

VACCAṆANDIMĀLAI WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 10¾ × 1¼ inches. Pages, 78. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

This work is also called Veṇbāpāṭṭiyal as it is written in stanzas of Veṇbā metre. It treats of the 10 kinds of adaptation and of the 96 kinds of poems and was composed by Guṇavīrapaṇḍita, a Jain resident of Kaḷandai and the author of the work Nēminādam described under No. 73. The name of the commentator is not given.

Beginning:

மதிகொண்ட முக்குடைக்கீழ் வாமன் மலர்த்தா
டுதிகொண்டு நாளுந் தொழுது—நுதிகொண்ட
பல்கதிர்வே லுண்கண்ணாய் பாட்டியலைக் கட்டுரைப்பன்
சொல்லுலகின் மீதே தொகுத்து. (எ-து.)

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் . . . .

* * * *

இ(ந்நூ)ல் செய்தார் யாரோவெனின் கற்றவர் புகழுங் களந்தைப் பெரும்பதிக் குற்றமில்வாய்மைக் குணவீரபண்டிதனென்பது.

* * * *

End:

நன்குணர்ந்தோ ராய்ந்த தமிழ்நூலி னன்னெறியை [ணர்ந்த
முன்கொணர்ந்து பாட்டியனூன் முற்றுணர்ந்து—பின்கொ
நல்லார்முன் னல்லாய் நலமார் கவியுரைக்க
வல்லார தன்றே மதி.

Colophon:

வெண்பா—100.

இயல் மூன்றும் பாட்டியலுரை யெழுதிமுடிந்தது
பண்பாக் கவிஞர் வியந்தேத்தப் பாட்டியலை
வெண்பாவந் தாதி விளம்பினான்—மண்பாவுங்
கோடாத கீர்த்திக் குணவீர பண்டிதனும்
பீடார் களந்தைப் பிரான்.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், பன்னிரு பாட்டியல்போன்றது. இதனை இயற்றியவர் களந்தையென்னும் ஊரிலிருந்த குணவீரபண்டிதரென்னும் சைனப் புலவர். நேமிநாதத்தை இயற்றியவரும் இவரே. இந்நூலின் உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலில், பாட்டுடைத்தலைவன் பெயருக்கும் அவன் விஷயமான நூலின் முதற் செய்யுளின் முதற்சீருக்கும் உரியமங்கல முதலிய தசவிதப்பொருத்த விலக்கணமும் 96-வகைப் பிரபந்த விலக்கணமும் கூறப்பட்டுள்ளன இஃது அச்சிடப்பட்டிருக்கிறது; இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாக இருக்கிறது.

No. 90. வச்சணந்திமாலை, உரையுடன்.

VACCAṆANDIMĀLAI WITH COMMENTARY

Substance, paper. Size, $13\frac{1}{8} \times 8\frac{2}{3}$ inches. Pages, 49. Lines, 23 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 65*a*. The other works herein are, Iniyavaināṟpadu 1*a*, Kaḷavaḻināṟpadu 9*a*, Aindiṇaiyaimbadu 15*a*, Tirikaṭukam 23*a*, Toṇḍaimaṇḍalaśataka 45*a*.

Complete.

Same work as the above.

This is a copy of the MS. described under the last number.

(கு-பு.)—

இது, முன்பிரதிபோன்றது; பூர்த்தி.

No. 91. வீரசோழியம், உரையுடன்.

VĪRAŚŌḺIYAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 13¼ × 8½ inches. Pages, 290. Lines, 27 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

This is described on page 30 of M. Seshagiri Sastri's "Report on a Search for Sanskrit and Tamil MSS.," No. 1.

A work on Tamil grammar by Buddhamitra, chieftain of Ponpaṟṟiyūr and a contemporary of Virasōḻa or Kulōttunga 1064-1113. The commentator is Perundēvanār.

Beginning :

எழுத்துச்சொன் னற்பொருள் யாப்பலங் கார மெனுமிதனை
விழுத்தறி வார்வீர சோழிய மென்ன விளம்புதற்குப்
பழத்துடன் பால்சக் கரைதேனெய் பாளிதம் பல்கரும்பு
வழுத்திய வைங்கர வாரண மேவந்து வாழ்வியுமே.

மிக்கவன் போதியின் மேதக் கிருந்தவன மெய்த்தவத்தாற்
றொக்கவன்யார்க்குந் (தொ)டரவொண் ணுதவன் றுயனெனத்
தககவன பாதந் தலையிற் புனைந்து தமிழுரைககப்
புக்கவன் பைம்பொழிற் **பொன்பற்றி மன்புத்த மித்திரனே.**

. . . . காப்புப்பாயிரம் முற்றும்.

அறிந்த வெழுத்தின்முன் பன்னிரண் டாவிக ளானகம்முன்

செறிந்தன மெல்லினஞ் செப்பா விருமூன்றும் வல்லினமே.

இதன் பொழிப்பு. அறியப்பட்ட எழுத்துமுறைமையின்கண், மு ன்பு அடையப் பன்னிரண்டெழுத்தும், ஆவி யென்னப்படும். . . . . . ஒழிந்த க, ச, ட, த, ப, ற வென்னும் ஆறும், வல்லின மெனப்படும். என்றவாறு.

End:

முதலது வொன்றாய் மூர்த்திகண் மூவராய்

* * * *

மான்மறி யேந்தினை வாழ்கநின் கழலே.

என்றது இக்கவிவரிதாலும் இலக்கமாக நாலுவரியிட்டுப் பார்த்தால் நாலுமுகத்திலும் நாலுகோணத்திலும் நடுநாலிலும் மற்றும் வரியடைவிலும் எங்குமடுக்க நாலிலக்கங்கூட்டிப்பார்த்தாலும் பத்துலக்கமே தப்பாமல்வருகையால், இது தச விசித்திரக்காவென்னும் அலங்காரமாயிற்று.

காரமுங் காமுங் காணுஞ் சிவணி
நேரத் தோன்று மெழுத்தின் சாரிலை(ய) 40.

அலங்காரமுற்றும். சித்திவிநாயகன் துணை.
ஆகப்பஞ்சவதிகாரமுள் படக்கவி 198.

(கு-பு.)—

இந்நூல், தமிழிற்குரிய எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் ஐந்திலக்கணங்களையும் தெரிவிப்பது; பொன்பற்றியூர் அரசாகிய புத்தமித்திரராற் செய்யப்பெற்றது; இவரதுகாலம் வீரசோழருடைய காலம். இந்நூலின் உரையாசிரியர் பெருந்தேவனார்; இவர் பாரதம்பாடிய பெருந்தேவனாரல்லர். இந்தப்பிரதி பூர்த்தியாக இருக்கிறது; இந்நூல் உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது; அச்சிட்ட பிரதியில் உதாரணங்கள் காணப்படாத சில விடங்களுக்கும் இதில் உதாரணங்கள்காணப்படுகின்றன; ஆதலால், இது சிறந்தபிரதி.

No. 92. வீரசோழியம், உரையுடன்.

VĪRAŚŌḶIYAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $13\frac{1}{4} \times 1\frac{3}{8}$ inches. Pages, 422. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

- Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது; பூர்த்தி.

No. 93. வீரசோழியவுரையின் உதாரணச்செய்யுள் அகராதி.

VĪRAṢŌḶIYAVURAIYIN UDĀRAṆA CCEYYUḶ AGARĀDI.

Substance, paper. Size, $13\frac{1}{8} \times 8\frac{1}{4}$ inches. Pages, 20. Lines, 32 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

Begins on fol. 61*a*. The other work herein is, Kallādam with a commentary.

This gives an alphabetical list of the beginnings of stanzas quoted as illustration in the commentary on Viraṣōḻiyam.

Beginning:

1	அகரமுதலவெழுத்	...	...	176	திருக்குறள்
2	அகலநின்றடியிணை	...	...	166	
3	அகலல்குற்	...	...	273	
19	அருளிலார்க்	...	...	162	திருக்குறள்.
20	அலைகடலெழுந்	...	...	287	

* ... * ... *

79	இன்று கொலன்று	...	...	203	நாலடி.
80	இன்றைய நாவா	.	..	275	
81	இன்னுயிர்காத்	...	...	234	
82	ஈக்கிறங்கு	...	...	200	
83	உடன்பட்டார்	..	..	235	

End:

705	வெறிக்கமழ்தாரான்	...	...	214
706	வேறு பொருள்	...	...	235
707	வேறு ரைப்பது	...	..	220
708	வேறொரு மாதர்	...	..	246
709	வேனில் வேயிற்	...	...	244
710	வைகலும் வைகல்	...	...	281
711	வையம் புரக்கு	...	...	226
712	வோதமாத்வா?	...	...	276

(த-பு)—

இது, ஒரு நூலன்று.

CLASS II.—1. LITERATURE.

பிரசித்தகாவ்யம்.

No. 94. அரிச்சந்திரபுராணம்.
ARICCANDIRAPURĀNAM.

Substance, palm-leaf. Size, 13 × 1¼ inches. Pages, 326. Lines, 6-7 on a page. Character, Tamil. Condition, good. Appearance, very old.

It is stated in the (சிறப்புப்பாயிரம்) Śirappuppāyiram that the author of the work is (வீரகவிராயர்) Vīrakavirāyar of Nallūr and that it is written after the model of the Sanskrit (அரிச்சந்திரோபாக்கியானம்) Ariccandirōpākkiyānam.

Complete.

Beginning:

அரிச்சந்தி ரன்கதையை யவனியுள்ளோர்
கேட்கவரு ளாக வன்பால்
விரிச்சந்த மாககதையை விளம்புதற்கு
விண்ணுலகாய் விரிந்து நின்ற
வெரிச்சந்தத் திருமேனி யிறைவரிடப்
பாகமிருந் திமையாள் பெற்ற
கரிச்சந்த மாமுகத்துக் கற்பகத்தை
யெந்நாளுங் கருத்துள் வைப்பாம்.

* * * *

சீர்கொண்ட செழுங்கமலத் திசைமுகனு
நெடுமாலுஞ் சிவனு மென்னப்
பேர்கொண்ட மூவுருவு மீருருவு மோருருவாப்
பிறங்குந் தொல்லை
நீர்கொண்ட வண்டத்துந் தாபரத்துஞ்
சங்கமத்து நிறைந்து நின்றான்
றார்கொண்ட தாளிணைக டமைக்கொண்ட
வன்பினொடுந் தலைமேற் கொள்வாம்.

* * * *

தட்பாற் கடல (த்த) முதங்கெழு மித்த மைத்து
நட்பாற் புகுந்தா லெனவந்துயர் வேலை நண்ணி
யுட்பாற் புனலுண் டெழுந்தோங்கிய காள கூடம்
விட்பாற் புகுந்தா லெனமேக மெழுந்த தன்றே.

End:

கடிமீ துயர்தா ரவருந் தவருங்
காசித் திருநா டனுமே கியபின்
முடிமீ தொளியோங் கிடவெண் குடையு
முத்தின் குடையுங் கொடியும் மிடையப்
படிமீ தினின்மன் னவர்வந் துதொழப்
பலபா வலர்பா ணர்புகழ்ந் துபரிந்
தடிமீ துவணங் கவயோத் தியர்கோ
னரியா சனமீ திலிருந் தனனே.

மன்னர் வாழ்ந்திட மாமறை வாழ்ந்திட
செந்நெல் மன்(னுக) செந்தமி ழோங்குக
வன்ன தான வரிச்சந் திரன்கதை
சொன்னோர் கேட்டவர் வாழ்வு சுரக்கவே.

ஈசுரஞுப கார்த்திகைமீ 29உ வெள்ளிக்கிழமை இப்படிப்பட்ட சுபதினத்தில் எழுதி நிறைந்தது. சுபமஸ்து . . . குமாரதேவேநமா

(கு - பு.)—

இது, நல்லூர் வீரகவிராயராற் பாடப்பெற்றது; இவ்விஷயம் இந் நூலின் 11-வது பாடலாலுந் தெரிகிறது; நல்ல நடையுள்ளது. பாலகாண்ட முதல உத்தரகாண்ட மிறுதியாகவுள்ள 11 காண்டங்களையுடையது; இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாயிருக்கிறது; இதன் முதலிலுள்ள பாடல்கள் சில, அச்சுப்பிரதியிற் காணப்படவில்லை.

No. 95. அரிச்சந்திரபுராணம்.
ARICCANDIRAPURĀṆAM.

Substance, palm-leaf. Size, $14\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 305. Lines, 6-7 on a page. Character, Tamil. Condition, very much injured. **Appearance, very old.**

Same work as the above.

Complete.

(கு-பு.)—

இது, முன் பிரதிபோன்றது; பூர்த்தி; மிகச்சிதைந்திருக்கிறது.

No. 96. அரிச்சந்திரபுராணம்.
ARICCANDIRAPURĀṆAM.

Pages, 16. Lines, 10 on a page.

Begins on fol. 24*a* of the MS. described under No. 2.

Contains only the first 61 stanzas.

Incomplete.

Same work as the above.

(கு - பு.)—

இது முன்பிரதியைப்போன்றது ; இந்தப்பிரதியில் கடவுள் வணக்கத்தில் "புகலரிய" என்று முதலையுடைய பாடல்தொடங்கி நாடு வளத்தில் 61 பாடல் வரையிலுள்ள பாகம் இருக்கிறது.

No. 97. அரிச்சந்திரபுராணம்.
ARICCANDIRAPURĀṆAM.

Substance, palm-leaf. Size, $9\frac{3}{4}$-$\frac{1}{8}$ × $1\frac{1}{4}$-$\frac{1}{4}$ inches. Pages, 62. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

This work contains (மயானகாண்டம்) Mayānakāṇḍam 1, and 29 stanzas of (மீட்சிக்காண்டம்) Mīkṣikkāṇḍam 2; and on fol. 63*a* another work is found which covers 70 pages.

As the beginning and end are wanting, the name of the work cannot be made out with certainty.

The above-mentioned Kāṇḍams give a description of Ariccandira's watching over the burial ground, and three gods appearing before him, his wife and his son, and pronouncing benedictions on them.

Same work as the above.

Beginning:

(கு - பு.)—

இது, முன்பிரதிபோன்றது ; இதில் மயானகாண்டமுதலாக மீட்சிக்காண்டத்தில் 29 - வது பாடல் வரையுள்ள பாகம் இருக்கிறது ; இதி

லுள்ள ஏடுகள் மிகச் சிதிலமாயும் ஒடிந்துமுள்ளன. ஏடு 31 க்குப்பின் ஓரந்தாதி தொடங்குகிறது.

No. 98. உதயணகுமாரகாவியம். UDAYANAKUMĀRAKĀVIYAM.

Substance, paper. Size, 13¼ × 8½ inches. Pages, 71. Lines, 25 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 127*a*. The other works herein are, (நளவெண்பா) Naḷaveṇbā 1*a*, (திணைமாலை நூற்றைம்பது) Tiṇaimālai Nūrraimbadu) 198*a*, (பந்தனந்தாதி) Pandanandādi 163*a*.

This is a poem treating of the story of Udayana, king of the Vatsa country. For particulars of the story and extracts, see pages 39 and 211 of M. Seshagiri Sastri's "Report on a Search for Sanskrit and Tamil MSS. for the year 1896–97."

This is a Jaina work.

Complete, except that it wants some stanzas in the beginning and in the middle.

(கு - பு.)—

இது, ஜைனகாவ்யம்; உதயனன் சரிதத்தைக கூறுவது; இந்தப் பிரதியில் முதலிற சிலபாடல்களும், மகதகாண்ட இறுதியிலும் வத்தவகாண்ட முதலிலுமுள்ள சிலபாடல்களும் இல்லை.

No. 99. உதயணகுமாரகாவியம். UDAYANAKUMĀRAKĀVIYAM (TEXT).

Substance, palm-leaf. Size, 17½ × 1½ inches. Pages, 69. Lines, 7 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Two leaves in the beginning and two leaves at the end of Magadakāṇḍa are lost; see page 39 of the 1896–97 Report.

Same work as the above.

(கு-பு.)—

இது, முன்பிரதிக்கு மூலப்பிரதி; இதில் முதலிலிரண்டேடும் 18-வது ஏடும் இல்லை; சில ஏடுகள் சிதைந்தும் ஒடிந்துமுள்ளன.

No. 100. சிலப்பதிகாரம். உரையுடன்.
SILAPPADIKĀRAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 10 × 7½ inches. Pages, 665. Lines, 27 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

This is one of the five great classics of Tamil literature.

By Ilangóvadigal, an ascetic belonging to the family of the ancient Cēra kings and a contemporary of (சீத்தலைச்சாத்தனார்) Śittalaiccāttanār belonging to the age of (கடைச்சங்கம்) Kadaic-caṅgam. The commentary is by (அடியார்க்குநல்லார்) Adiyārkku-nallār.

Incomplete

Beginning:

குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்குக
* * * *

உரைசா லடிக ளருள மதுரைக
கூல வாணிகன் சாத்தன கேட்டனன
இது. பால்வரை தெரிந்த பதிகத்தின் மரபென.

குணவாயில் . . வாழ்வீரீங்கென—இவ்வியலிசை நாடகப்பொருட்டொடர் நிலைச்செய்யுள் அடிகள் செயகின்றகாலதது இயற்றமிழ்நூல் தொல்காப்பிய மாதலானும் . . . சிலப பதிகாரத்துப்பதிக விரித்துரை ஒருவகையான் முடிந்தது. . . .

புகார்க்காண்டம்.

மங்கலவாழ்த்துப்பாடல.

சிந்தியல்வெண்பா.

திஙகளைப் போறறுதுந் திங்களைப் போறறுதுங்
கொங்கலாதார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ
வங்க ணுலகளித்த லான்.

இதனபொருள்:—திஙகளைப்போறறுவேம திங்களைப்போற்றுவேம்; அஃது எற்றுக்கு எனின, தாதுமலர்தல் செயத மாலையையுடைய குளிர்ச்சியையுடைய சென்னியுடைய வெண்குடைபோன்று பொதுவற இவ்வுலகினிற்கு அளிசெய்தலான் என்க.

இது பண்பும் பயனுங்கூடின உவமம. கொங்கு - தாது. அம்-அழகு. கண்-இடம். போற்றுதும், பன்மைத்தன்மை; 'அம்மாம்' என்னும் சூத்திரத்துக் கடதற ஆன்முடிந்தது.

இது நடை மிகுத்தேத்திய குடைநிழன்மரபு. (1)

End:

என்றூ ளெழுந்தா ளிடருற்ற தீககஞ
நின்றூ ணினைந்தா ணெடுங்கயற்கண் ணீர்சோர
நின்றூ ணினைந்தா ணெடுங்கயற்கண் ணீர்துடையாச
சென்றூ ளரசன் செழுங்கடை வாயின்முன.

எ - து, இங்ஙனஞ் சொன்னவள் ஆண்டுப் போகறகு எழுநதவள், தான் ஊரிற் கண்ணுற்ற தீககஞைவ நினறுநினைந்தாள். நினைந்தவள், தான் செல்லும்வழி காண்டறகாக நெடிய கயல்போலுங்கண்கள் சொரியும்புனலைத் துடைக்க, அரசனுடைய வளவியகோயில் வாயிலிடத்தே சென்றூளெனக.

என்றூளென்னும் எழுவாயககு, செனறூளென்பதனைப் . . பெருந்தேவி செய்த செயதி கூறுகின்றூர். இஃது. அயன் மயஙகிசைக் கொச்சகககலிபபா. பத்தொனபதாவது ஊர்சூழ்வரி வி(ரு)ததியுரை ஒரு வகையால் முடிந்தது.

கட்டளைக்கலித்துறை.

ஒருந தமிழொரு மூனறு முலகின் புறவகுத்துச்
சேரன ஞெருத்த சிலபபதி காரத்திற சேர்ந்தபொரு
ளாருந தெரிய வுரைததானன னூலடி யாாககுநலலான
காருந் தருவு மனையா னிரம்பையர் காவலனே

(கு-பு.)—

இந்நூல், ஐநது காப்பியங்களுள் ரெண்டாவது; இககதைககு நாயக நாயகிகள், கோவலனும் கண்ணகியும்; நூலாசிரியர், சேரகுலத்திற் பிறந்து துறந்த இளங்கோவடிகள்; இது மிகச் சிறந்தநூல்; மூன்று காண்டங்களையுடையது; அவற்றுள், இந்தப்பிரதியில் முதற்காண்டமுழுமையும இரண்டாங்காண்டததில் முககாறபாகமும் அடியார்க்கு நலலாருரையுடன காணப்படுகினறன; இவ்வுரை நூல் முழுமைக்கும் இல்லை. "அரும்பதவுரை" என ஒருரை நூல்முழுமைககுமுண்டு. இந்நூல் மூனறுகாண்டங்களும் மேற்படி உரைகளுடன் பதிப்பிககபபெற்றுள்ளன. இநநூல் இரண்டு சம்புடமாயிருக்கிறது.

No. 101. சிலப்பதிகாரம், உரையுடன்.

ŚILAPPADIKĀRAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 18 × 1½ inches. Pages, 314. Lines, 9 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது, முன்பிரதியைப்போன்றது ; இதில் மனையறம் படுத்த காதை யின் பின்பாக முதல் ஊர்சூழ வரி இறுதியாகவுள்ள காதைகள் இருக்கின்றன.

No. 102. சீவகசிந்தாமணி, உரையுடன்.

JĪVAKACINTĀMAṆI WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 13¾ × 7¼ inches. Pages, 1818. Lines, 9-8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Consists of 3 Vols., the first containing Ilambakās 1 to 4, the second 5-9 and the third 10-13.

Text by Tiruttakkadēvar.

Commentary by Naccinārkiniyar.

Complete.

This relates the story of a Jaina king named Jīvaka. This is also one of the five great classics of Tamil literature.

Beginning :

மூவா முதலா வுலக(ம்)மொரு மூன்று மேத்தத
தாவாத வின்பந் தலையாயது தன்னி னெயதி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவ னவனசேவடி சேர்து மன்றே.

எ-து:—இத்தொடர் நிலைச்செய்புள் தேவர் செய்கின்ற காலத்திற்கு நூல், அகத்தியமும் தொல்காப்பியமும் ஆதலானும் . . ஏகாரம் ஈற்றசை.

தேவர்களுககு ஆதியாகிய தேவனாவான், கெடாத இன்பந் தனக கொப்பற்றதனை அந்தமும் ஆதியும் இல்லாத மூன்றுலகும் எத்தத் தன்னாற் பெறுகையினாலே தன்னை விட்டு நீங்காத குணங்களையுடைய னாகிய ஒண்ணிதிச் செல்வனென்பர் சாதுக்கள். ஆதலின், யாமும், இவ்விலக்கியம் இனிது முடித்தற்பொருட்டு அவன திருவடிகளை வணங்குவேம். என்றானென்க . . . முன்னே வைத்தார் (1)

End:

செய்வினை யென்னு முன்னீர்த் திரையிடை
முளைத்த தேஙகொண்
மைவினை மறுவி லாத மதியென்னுந்
திங்கண் மாதோ
மொயவினை யிரு(ள்க)ண் போழு முக்குடை
(மூர்த்தி பாதங்
கைவினை செ)ய்த சொற்பூக கைதொழு
தேத்(தி) [னு](னே)னே.

எ-து:—(செயவினை)-முன்செயத நல்வினை. மைவினை மறு - தீவினை யாகிய மறு. மொயவினை இருள்-செறிந்த இருவினையாகிய . . கைவினைசெயத செயயுளாகிய பூவை, யான் கைககொண்டு, மூர்ததிபா தத்தே தூவி, தொழுது, எததினே(னெ)னறு, தேவர் குருககளை நோக் கிக் கூறினரெனக (3)

இதன கருத்து . .

முளைத்து புத்தியென்கின . லை கை செயயப்பட்ட செயயுளெ னனும் பூககளை அருகபரமேஸ்வர னுடைய ஸ்ரீபாதஙகளிலே அர்ச்சி த்து நமஸ்கரிதேதென (எ-று).

ஓமபடை முறறும.
முததியிலம்பகம் முறறும்.
ஆகச் செய்யுள் 3138.

பகையாற்றென்னும் கவியும். . . . . கந்தியார் கூறறு. இத னுள் மூவாயிரத்து முந்நூற்றொருபத்தைநது எனறதேனும், இககா லத்து வழங்குகின்றன, மூவாயிரத்தொரு நூறறு நாறபத்தொனபதெ ன்றுணர்க; அல்லன வழங்குமேனு முணர்க.

ஆசிரியன் பாரததுவாசி நச்சினார்க கினியான் சிந்தாமணிக்கு எழு தின வுரை.

நமோஸ்து.

(௩-ப.)—

இது சிறந்த காவியங்கள் ஐந்தனுள முதலாவது; நூலாசிரியர், சம ணமுனிவராகிய திருத்தக்கதேவர்; விஷயம், ஜைனமதத்தினனாகிய சீவகனெனனும் அரசன சரித்திரம; இந்நூலுக்குரைசெய்தவர் மது ரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்; இந்நூலும் உரையும் சிறந்தன; பதிப்பிக்கப்பெற்றுள்ளன; இந்தப் பிரதி பூர்த்தி.

No 103. சீவகசிந்தாமணி, உரையுடன்.

JĪVAKACINTĀMAṆI WITH COMMENTARY.

Substance, paper. Size, 10 × 7½ inches. Pages, 787. Lines, 24 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old

Consists of 3 Vols. The first contains 2nd and 3rd Ilambakas, the second, 4th to the 8th and the third 9th to the 13th.

Same work as the above.

(கு-பு.)—

இது, முனபிரதிபோனறது; 3 சமபுடமாயிருககினறது; 2-வது இலமபகம் முதல் 13-வது இலமபகத்தில் "கண்ணிகொண்டெறிய" என்னும முதலையுடைய பாடல்வரையிலுள்ள பகுதிகள் இருககினறன.

No 104. சீவகசிந்தாமணி, உரையுடன்.

JĪVAKACINTĀMAṆI WITH COMMENTARY

Substance, palm-leaf. Size, 14 × 1¼ inches. Pages, 14 Lines, 9-10 on a page Character, Tamil. Condition, injured. Appearance, old.

This contains only the first 38 stanzas in Nāmakaḻilambakam (நாமகளிலமபகம) from the 205th to 242nd stanza

Same work as the above.

(கு-பு.)—

இது முனபிரதிபோனறது; இதில நாமகளிலமபகத்தின முதலிலுளள 38 பாடலகள்மட்டுமே இருககின்றன

No 105. சீவகசிந்தாமணி.

JĪVAKACINTĀMAṆI.

Substance, palm-leaf. Size, 19¼ × 1½ inches Pages, 406. Lines, 8-10 on a page Character, Tamil Condition. Fair. Appearance, old.

Same as the text of the above work, but contains the following additional stanzas in the beginning and a colophon at the end.

Text complete.

Beginning:

திங்கண்மும்மாரி பெய்க திருவறம் வளர்க செங்கோ
னன்கினி தரச ஞள்க நாடெலாம் விளைக மற்று
மெங்குள வறத்தி னோரு மினிதூழி வாழ்க வெங்கள்
புங்கவன் பயந்த மெய்ந்நூல் புகழொடு பொலிக மிக்கே.

For the end, see under No 102.

Colophon:

ஓம்படை முற்றும்.

அருகபரமன் றுணை.

13-வது முத்தியிலம்பம் முற்றிற்று.

ஆ சிந்தாமணி யிலம்பம் 13-க்கு கூடிய செய்யுள் 3146
ஸ்ரீஜிநஸர்வஜ்ஞாதி பஞ்சபரமேஷ்டிநே நம:|

ஸ்வஸ்தி ஸ்ரீப்லவநாம ஸம்வத்ஸரம் கார்த்திக பஹுள தசமீ ஸ்ரீ ஸோமவாரம் ஜ்யேஷ்டநக்ஷத்ரம் ஸௌபாக்யநாமயோகம் பவகரணம் இந்தச்சுபதினத்தில், ஸ்ரீஜிந தர்மவ்ரதஸமேதராகிய திருத்தக்கதேவ முனிகள் அருளிச்செய்த சிந்தாமணி, புதுக்காம நல்லூர் பார்ச்வநாதயன் எழுதி நிறைந்தது; ஸம்பூர்ணம்.

ஸ்ரீவீதராகாய நம:.

தேவாக்ஷி துணை.

(கு-பு).—

இது முன்பிரதியைப்போன்றது; இந்தப் பிரதியில் மூலமட்டும் பூர்த்தியாகவுள்ளது; இதன் முதலிற் காணப்படும் "திங்கண்மும்மாரி பெய்க" என்னு முதலையுடைய கவி யொன்றும் முன் பிரதியில்

No. 106. சீவகசிந்தாமணி.

JĪVAKACINTĀMANI

Substance, palm-leaf. Size, 17½ × 1½ inches. Pages, 119. Lines, 9 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Contains the first three Ilambakas.

Same work as the above.

(ஆ-பு.)—

இது முன்பிரதிபோன்றது ; இதில். முதலிலிருந்து காந்தருவதத்தையாரிலம்பகம வரையிலுள்ள பகுதிகள் உள்ளன ; மூலம் மட்டும்.

No. 107. சூளாமணி.

CŪḶĀMAṆI.

Substance, palm-leaf. Size, 11 × 8¾ inches. Pages, 532. Lines, 16 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Consists of 2 Vols. The first containing 6 chapters, and the second the next 3 chapters.

This is a Jaina work by Tōlāmoḻittēvar.

It deals with the lives of 2 royal princes named Tivittan and Vijayan.

Beginning :

வென்றான வினையின றொகையாகி விரிந்து தனக
ணொன்றாயப பரந்த வுணர்வினொழி யாது முற்றுஞ்
சென்றான றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிகீழப பணிந்தார்வினை நீங்கி நின்றார்

பாயிரம.

1. அங்கண் ணுலகிற கணிவான்சுட ராகி நின்றான்
வெங்கண் வினைபோற றிருவைச்சரண் சென்ற மேனாட்
பைங்கண் மதாவைப் பகுவாயரி யேறு போழ்ந்த
செங்கண் ணெடியான் சரிதமிது செப்ப லுற்றேன.

*   *   *   *

நாட்டுச்சருக்கம.

6. மஞ்சுசூழ் மணிவரை யெடுத்து மாலம
ரிஞ்சிசூ ழணிநக ரிருக்கை நாடது
விஞ்சைநீ ளுலகுடன் விழாககொண் டன்னது
துஞ்சுநீ ணிதியது சுரமை யெனபவே.

End:

2162. வலம்புரி வண்ணனு மகர முந்நீர் மண்மேனி
யுலம்புரிதோ ணெடியவனு முலக மெல்லா முடனவணங்கச்
சலம்புரி வினைவென்ற தங்கோன் செந்தா மரையடிக்கீழ்
நலம்புரி விழவியற்றி நாளு நாளு மகிழ்கின்றார்.

முத்திச்சருக்கம் முற்றும்.

வெண்பா.

பொழிந்து பொருள்விளக்கும் போழ்ந்திருள்கால் சீக்கு
மிழிந்தவரை யேற்றி நிறுத்தும் - செழுந்தாளத்
தோளா மணிதொகுத்தார் போலாதே தோலாக்கோ
கூளா மணியகத்துச் சொல்.

(கு-பு.)—

இது ஜைனகாவியங்களுள் ஒன்று; திவிட்டன விசயனென்னும் ராஜகுமாரர்களுடைய சரித்திரம்; நூலாசிரியர், தோலாமொழித்தேவரென்பவர்; இந்நூல் சேந்தனென்பவனது சபையில் அரங்கேற்றப்பட்டது; அச்சிடப்பெற்றிருக்கிறது; இது 2 சம்புடமாயிருக்கிறது—முதற் சம்புடத்தில் 6 சருக்கங்களும் 2-வது சம்புடத்தில் 3 சருக்கங்களும் உள்ளன; பூர்த்தியுடையது.

No. 108. நளவெண்பா, உரையுடன்.

NALAVENBĀ WITH COMMENTARY.

Pages, 126. Lines, 25 on a page.

Begins on fol 1*a* of the MS described under No. 98

A poem in the Veṇba metre by Pugaḷēndi dealing with the story of Naḷa For extracts, see pages 43, 44 and 221 of M. Seshagiri Sastri's Report on the Search of MSS. for the year 1896–97.

(கு-பு.)--

இந்நூல், வெண்பாப்பாடுதலில்வல்ல புகழேந்திப்புலவர்பாடியது; வேறோருரையுடன் அச்சிடப்பெற்றிருக்கிறது; அவ்வச்சுப் புத்தகத்திற் காணப்படாத பலவெண்பாக்கள் இதிலும் இதிற்காணப்படாத பல வெண்பாக்கள் அதிலுமுள்ளன; இதிற்காணப்படும் புதிய வெண்பாக்களிற் பல, இலக்கண வழுவாகவுள்ளன; இவ்வுரை திருத்தமானதன்று;

இதன் முதலிலெழுதப்பட்டிருப்பது நைடதத்திலுள்ள கடவுள்வணக்கச்செய்யுள்.

No. 109. நளவெண்பா, உரையுடன்.

NALAVENBĀ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 14 × 1⅛ inches. Pages, 207. Lines, 6 on a page Character, Tamil. Condition, much injured Appearance, old.

Complete.

Same work as the above .

(த-பு.)—

இது, முன்பிரதிபோன்றது ; பூர்த்தியுடையது ; மிகச்சிதிலமாயிருக்கிறது.

No 110. நளவெண்பா.

NALAVENBĀ.

Substance, palm-leaf Size, 17¾ × 1½ inches. Pages, 63 Lines, 8 on a page. Character, Tamil Condition, good. Appearance, old

Same work as the above ; but there is no commentary.

Some important stanzas not found in the printed editions are found in this manuscript

Complete. The first leaf alone is wanting.

Beginning :

வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
மந்தவிழுற் கட்டச் சமை (வதொக்கும்)—பைந்தெரியற்
றேனபாடுந் தாரநளனறன் றெய்வக் கதைதனக்கே
யானபாட வுற்ற விது

End :

வாழ்க மலைநாடு வாழ்கவளஞ் சேணாடு
வாழ்க வழுதி வளநாடே—வாழ்கவே
முன்னீர்மை யோடு முதனீர்மை காத்தோம்பு
நன்னீர் வயற்றொண்டை நாடு (452)

ஸுபமஸ்து.

விகிருதி௵ ஆடி மீ 5௳ எழுதிமுடிந்தது.

(கு-பு.)—

இது பெரும்பாலும் முன்பிரதியைப்போன்றது; மூலமட்டும் இருக்கிறது; இந்தப்பிரதியிலும் அச்சுப்புத்தகத்திலில்லாத பல வெண்பாக்கள் இடையிடையே காணப்படுகின்றன; அவை ஆராயத்தக்கன; இதில கடவுள்வாழ்த்துள்ள முதலேடு இல்லை.

No. 111. நைடதம்.

NAIḌADAM.

Substance, palm-leaf. Size, 13¾ × 1⅛ inches Pages, 377 Lines 5-6 on a page. Character, Tamil Condition, injured. Appearance, very old.

The 1st 6 leaves and leaves 24 to 29 (both inclusive) are not found.

This is also a poem giving the story of Naḷacakravarti (நளசக்கிரவர்த்தி); by one Ativīrarāmapandian (அதிவீரராமபாண்டியன்) of Tenkāśi (தென்காசி). His brother was Varatungarāmapāṇḍiar (வரதுங்கராமபாண்டியர்)

Wants 6 leaves in the beginning and 6 leaves in the middle

For extracts, see page 224 of M. Seshagiri Sastri's Report No. I.

(கு-பு.)—

இது நளசரித்திரத்தை விரித்துக்கூறுவது. 300 வருடத்திற்கு முன் தென்காசியிலிருந்து அரசுசெலுத்திய அதிவீரராமபாண்டியரால இயற்றப்பெற்றது; சரவணப்பெருமாளையரியற்றிய உரையுடன் அச்சிடப்பெற்றிருக்கிறது. இந்தப்பிரதியில மூலமட்டுமேயுள்ளது; முதலில் 6-ஏடுகளும 24 முதல் 6 ஏடுகளும் இல்லை.

No. 112. நைடதம்.

NAIḌADAM.

Substance, palm-leaf. Size, 14½ × 1¼ inches. Pages, 298. Lines, 7 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது ; சில ஏடுகள் சிதிலம் ; 22 என்ற எண்ணையுடைய ஏடுகள் 2 உள்ளன.

No. 113. நைடதம்.

NAIḌADAM.

Pages, 10. Lines, 10 on a page.

Begins on fol. 36a of the MS. described under No. 2.

Same work as the above.

Incomplete.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; இதில நாட்டுப்படலத்தின் பின்பாகமும் நகரப்படலத்தின் முன்பாகமும் இருக்கின்றன

No. 114. பதிற்றுப்பத்து, உரையுடன்.

PADIṚRUPPATTU WITH COMMENTARY.

Substance, paper. Size, 11¼ × 8¾ inches. Pages, 213. Lines, 20 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

This consists of ten poetic collections of ten stanzas each. All of them extol the greatness of one or other of the Śēra kings. This MS. does not contain the first and the tenth collections. This work has been printed.

வரைமருள புணரி வானபிசி ருடைய
வளிபாயந் தட்ட துளங்கிருங் கமஞ்சூ
னளியிரும பரப்பின் மாககடன முனனி
யணங்குடை யவுண . . . கருங்

* * * *

ஆரியர் துவன்றிய பேரிசை யிமயந்
தெனனங் கு(ம)ரியொ டாயிடை
மன்மீக கூறினர் ம(ற)ந்தபக் கடந்தே.

துறை, செந்துறைப்பாடாண் பாட்டு. வண்ணம், ஒழுகுவண்ணம். தூக்கு, செந்தூக்கு. பெயர், புண்ணுமிழ்குருதி.

வரைமருள்புணர் :—பிசிருடைய என்றது பிசிராகவுடைய என்றவாறு . . . . யானையெருத்த மேல்கொண்டு பொலிந்தநின் பலர்புகழ் செல்வமெனை மாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க. இதனாற் சொல்லியது அவன் வெற்றிச்செல்வச் சிறப்புக்கூறியவாறாயிற்று (1).

End:

மீன்வயி னிற்ப வானம் வாய்ப்ப
வச்சற் றேம மாகி யிருடீர்ந்
தின்பம் பெருகத் தோன்றித் தந்திணைத்
துறையினொஞ் சாமை நிறையக் கற்றுக
*   *   *   *
(பெ)ருநல் யானை யிறைகிழ வோனே

துறை, காட்சிவாழ்த்து வண்ணம, ஒழுகுவண்ணமும சொற்சீர் வண்ணமும், தூக்கு, செந்தூக்கும் வஞ்சித்தூக்கும். பெயர் வலிகெழு தடக்கை.

அச்சமென்பது கடைக்குறைந்தது ; இருள்-தன்பம தோன்றி, இன்பம பெருகவெனக்கூட்டுக . . . . .

இதனாற்சொல்லியது அவன தண்ணளியும், பெருமையும், சுற்றந்த(முமாலு). முடன்கூறிவாழ்த்தியவாறாயிற்று . நின்றொன பது கூன் (10)

குடடுவன இருமபொறைக்கு வண்மையூர் வெணமாளந்துஞ் செள்ளை பீன்றமகன . . . புரோகிதனுமட அறநெறி யறிவானுக வே பசவு மெருமையு மாடுமெனறுசொலலுவார்கள்.

ஒனபதாம்பத்து முற்றம்.

இரண்டாம்பதது முதல் ஒன்பதாமபதது வரைககும எழுதிமுடிந்தது.

(கு-பு.)—

இது சங்கப்புலவர்கள் தொகுத்த எட்டுத்தொகையுள நானகாவது தொகை ; புறப்பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்துள்ளது ; சேரர்குலத்தாருடைய பெருமையை நனறாகவிளக்கும் ; ஒவ்வொரு சேரர்மீது ஒவ்வொரு புலவர் பப்பத்துச் செய்யுளாகப் பாடியநூறு செய்யுட்களையுடைமையின, இந்நூல் "பதிற்றுப்பத்து", என்னப்பெற்றது ; இந்தப் பிரதியில் முதலாவது பத்தும பததாவது பத்தும் காணப்படவில்லை ; இடையிலுள்ள எட்டுப்பத்தும் உரைடடன் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன.

No. 115. பதிற்றுப்பத்து, உரையுடன்.

PADIRRUPPATTU WITH COMMENTARY.

Substance, paper. Size, 13¼ × 8¼ inches. Pages, 80. Lines, 25 on a page. Character, Tamil. Condition, good Appearance, old.

Begins on fol. 1a The other works herein are, Araneric-cāram (அறநெறிச்சாரம்) 41a, Kuruntirattu (குறுந்திரட்டு) 64a

Contains only 35 stanzas

Same work as the above

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது ; இதில் 2-ம் பத்தின் முதற்செய்யுள் முதல் 5-ம் பத்தின் 5-வது செய்யுள் வரையிலுள்ள பகுதிகள் இருக்கின்றன ; இறுதியில் ஒரு செய்யுளுக்குமட்டும் உரையில்லை.

No. 116. பதிற்றுப்பத்து.

PADIRRUPPATTU.

Substance, paper. Size, 13¼ × 8½ inches. Pages, 19 Lines, 25 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Contains from the second Pāttu to the 9th Pāttu

Text only : same work as the above

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது ; இதில் 2-ம் பத்து முதல் 9-ம் பத்து வரையிலுள்ள 80 செய்யுட்கள் இருக்கின்றன ; மூலமட்டும்.

No. 117. பிரபுலிங்கலீலை.

PRAPULIṄGALĪLAI.

Substance, palm-leaf. Size, 15⅓ × 1¼ inches Pages, 186. Lines, 8-9 on a page. Character, Tamil. Condition, good Appearance, old.

Complete.

A poem based on the teachings of Vīraśaiva religion commonly known as Liṅgāyata-mata. The author is *Sivapprakāśasvāmihal* of Turaimaṅgalam.

Beginning :

சுரர்கு லாதிபன றாயமலா நநதனம
பெருக வார்கடற் பெய்த வயிற்றினேன
கரக நீரைக கவிழத்த மதகரி
சரண நாளுந் தலைககணி யாககுவாம.

தண்ணிலவு புனைசடிலத திறைபுகழில
லமதேவன சரிதைத் தீமபால
புண்ணியர்தஞ் செவிவாயிற் றமிழச்சஙகத
தானமுகந்து புகட்டி னுறு
வெண்ணரிய புகழமலயத திருந்தவனோர்
வடிவெடுத்தா னென றுகூறப்
பண்ணியனமுத் தமிழககவிதைச சிவபபிரகா
சபபெரும்பேர் படைதது ளானே.

End :

பார்கெழு சகாதச மூவைந தாறமெழு பாணன காவ
தார்கிய ? சுரநா மங்கொ ளாண்டுறு விடைஞா யிற்றில்
சீர்கெழு மல்ல மனறன திருவிளை யாடற் காதை
கார்கெழு மிடறனெங் கோமான கருணைகொண் டியமபி னேனே.(23)

புண்ணிய முலகில வாழக புலநசெறு மீதானபு வாழக
பெண்ணொரு பாகன பூசை பேணிவா டியார் வாழக
கண்ணுத லொருவாச சாநத கற்புடைச சைவம வாழக
வண்ணலல் லமன்சீர கேட்கு மாத(ர)ர் வளர வாழக. (24)

மானமியகதி முறறும்

ஆக கதி 25-கது விருததம 1154
பிரபுலிங்கலீலை முறறுப்பெற்றது.

(கு-பு.)—

இது வீரசைவமதத்தைச் சார்ந்தது; இந்நூலாசிரியர் துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகள்; இந்தப் பிரதி பூர்த்தியாயிருக்கிறது; இதன் இறுதியிலுள்ள ஓரேட்டில் "குதிகிகிமுன்," "சித்ராமன," "சொல்லவதி" எனனும் முதலையுடைய செய்யுட்கள் மூன்று மிகையாகக்காணப்படுகின்றன; அவை இந்நூலின் இருபத்தைந்து கதியின் பெயரையும் முறையேயு உணர்த்துவன. இந்நூல் அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 118. மணிமேகலை.

MAṆIMĒKALAI.

Substance, palm-leaf. Size, 15 × 1¼ inches. Pages, 138. Lines, 8-9 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

This is one of the five great classics known to Tamil literature. Author—Śīttalaiccāttanār (சீத்தலைச்சாத்தனார்).

This poem gives an account of Maṇimēkalai, the daughter of Kōvalan, who is the hero of Śilappadikāram (சிலப்பதிகாரம்).

Complete.

Beginning :

இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளி மேனி விரிசடை யாட்டி
பொன்றிகழ் நெடுவரை யுச்சித் தோன்றித்
தென்றிசைப் பெயர்ந்தவித் தீப தெய்வதன்

இளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
வண்டமிழ்த் திறத்தின் மணிமேகலைதுறவு
மாறைம் பாட்டினு ளறியவைத் தனனென

பதிகமுற்றும்.

உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய

* * *

பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரகவென வாழ்த்தி
யணிவிழா வறைந்தன னகனகர் மருங்கென.

End :

தானந் தாங்கிச் சீலந் தலைநின்று
போன பிறப்பிற் புகுந்ததை யுணர்ந்தோள்

* * * *

தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திற மறுகெனப் பாவைநோற் றனளென.

பவத்திற மறுகெனப் பாவைநோற்ற காதை முற்றும்.

சிவமயம்.

(கு - பு.)—

இது, சிறந்த காவ்யங்கள் ஐந்தனுள் மூன்றாவது ; நூலாசிரியர் மதுரைக் கூலவாணிகன சாத்தனார் ; இவரை சங்கப்புலவராகிய சீத்தலைச்சாத்தனா ரெனப்படுவார் ; விஷயம், சிலப்பதிகாரத்துககுக கதாநாயகனான கோவலனுககு மாதவி யென்னும் நாடகக கணிகையின்பால பிறந்த மணிமேகலையின் துறவு ; இந்நூல் பௌத்தமதத்தைச் சார்ந்தது ; சிலப்பதிகாரத்தின் றொடர்புடையது ; இந்தப் பிரதியில் மூலம் பூர்த்தி. இந்நூல், பிரஸிடெனஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிர்ம்மஸ்ரீ, வே. சாமிநாதையரவர்களால் அரும்பதவுரை விசேடக குறிப்புக்களுடன் பதிபபிக்கப்பெற்றுள்ளது ;

No. 119. மணிமேகலை.

MAṆIMĒKALAI.

Substance, palm-leaf. Size, 17¼ × 1½ inches. Pages, 180. Lines, 8 on a page Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Same work as the above.

பவ-ளுூ மார்கழிமீ 15உ சுவாமவக்ஷம திதியெ புதவாரம நாழிகை 14 வாசகவல்சவ 18¾ வொஹ நாமயோகம 12½ நாழிகை தைதூலாகரணம 17¼ இந்தச் சுபதினததில உதையமாய் ஒரு நாழிகைக்கு யகவுலசுத்தில் மணிமேகலை முற்றியது. எழுதி முடிந்தது முற்றும்.

(கு - பு)—

இது முன்பிரதியைபபோன்றது ; பூர்த்தியுடையது.

No. 120. மதுரைக்காஞ்சி.
MADURAIKKĀÑCI.

Substance, paper. Size, 12⅝ × 7½ inches. Pages, 4. Lines, 23 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 5*b*. The other works herein are:—Perumbāṇārṛuppaḍai (பெரும்பாணாற்றுப்படை) 1*a*, 35*b*, 139*b*, Mullaippāṭṭu (முல்லைப்பாட்டு) 4*a*, 59*b*. Porunarārṛuppaḍai (பொருநராற்றுப்படை) 8*a*, Śirupāṇārṛuppaḍai (சிறுபாணாற்றுப்படை) 21*b*, 139*a*, Śirupañcamūlam (சிறுபஞ்சமூலம்) 66*a*, Paṭṭinappālai (பட்டினப்பாலை) 81*a*, Malaipaḍu-kaḍām (மலைபடுகடாம்) 99*a*, Tirikaḍukam (திரிகடுகம்) 145*a*, Iniyadunārpadu (இனியது நாற்பது) 161*a*.

This contains the text only. This is held to be the sixth poem in the work called the Paṭṭuppāṭṭu. This is known to consist of 782 lines, of which this MS. contains only the first 147 lines.

By Marutanār of Māṅguḍi: Naccinārkiniyar has composed a commentary on this work. Both the text and the commentary have been printed.

Incomplete.

Beginning:

ஓங்குதிரை வியன்பரப்பி
னொலிமுந்நீர் வரம்பாகத்
தேன்றூங்கு முயர்சிமைய
மலைநாறிய வியன்ஞாலத்து.

End:

தென்பரதவர் போரேறே
யரியவெல்லா மெளிதிற்கொண்
டுரியவெல்லா மோம்பாதுவீசி
நனிபுகன் றுறைது மென்று தேற்றெழுந்து
பனிவரார்.

(கு-பு.)—

இந்நூல் பத்துப்பாட்டுள் ஆறாவதுபாட்டு; மாங்குடி மருதனாராற் பாடப்பெற்றது; தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டியன் நெடுஞ்செழியன் வீரம், அவன்முன்னோர்பெருமை, அவனது நாடு நகரங்களின்வளம் முதலியவற்றை நன்கு புலப்படுத்தும்; இந்நூலின் அடிகள் 782 இல் இந்தப்பிரதியில் முதல் 147 அடிகளேயுள்ளன; இது முலப்பிரதி; இந்நூல் நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

No. 121. வேதாளக்கதை.

VĒTĀḶAKKADAI.

Substance, palm-leaf. Size, 14½ × 1¼ inches. Pages, 196. Lines, 6-8 on a page. Character, Tamil. Condition, very much injured. Appearance, very old.

This contains in verse the well known stories said to have been narrated to the emperor Vikramārka by a vampire.

By Kavikkalañciyam, son of Karuppan of Puduppāhai.

Complete.

Beginning:

(சீ)ரி தாகவித் தேசத்திற் றிங்கண்மும்
மாரி பெய்ய மறை(கள்) விளங்கவே
யாரும் வாழ வறங்க டழைத்திடப்
பாரி விககதை பாட லுற் றுமரோ. (1)

* * * *

புவிகது ளெண் புதுப் பாகைமந் த்ராதிபன்
கவிக்க ளஞ்சியன் சொல்லுங் கதைய(து
நவைச்சொ)ல் லாயினு நன்றல வாயினு
மெவர்களுங் கேட்ப . . . . . . (4)

* * * *

முதற்கதை.

புத்தியா லயனீ ரேழு புவனமும் படைத்த நாளி
லித்தலந் தன்னின் முன்னே யெழில்பிற வலஙக ரித்துப்
பத்தியின் வைககை யாலே பதிட்டைமா நகர மென்று
மெத்தவே யுலகிற் பேரா ளங்குமோர் பதியொன் றுண்டே. (2)

End:

கருத்தினன் பொடு கறுப்பனிங் தருள் கவிக்களஞ்சியன் கவிப்பிரான்
னுருத்திரன்றரு மயிர்குகன் றனை யுளத்திலிங்கெணி விளக்கமா
வருத்திவிஞசுமெ லகைச்செழுங்கதை யனைத்தையுங்கலை யகத்தியன்
றிருந்துசெந்தமி ழுரைத்தனன் . . தினத்தி(லைம்)பது விருத்தமே (42)

பலித்துகந்தது(ர்) முகிபபெரும்பெயர் படைத்(து)
வந்தவ (ரு)டத்திலே
நலத்திலங்குகன் னியிற்புகுந்திய தினத்த
திங்களொ ருபத்தின்மேற்

சொலத்தகுந்தின காத்தினங்கதி (க)மேற்றி
மேந்தச மிபெற்றநாள்
கலைப்பெருங்கதை விருத்தமிங்கிது கவிக்க
ளஞ்சிய முகிச்சதே (43)

அ(ண்ண)லாமரன் . . . கதியடைவர்தாமே. (44)

இருபத்தஞ்சாங்கதை முற்றும்.

ஆகவிருத்தம் 864.

(கு-பு.)—

இது காவியங்களுள் ஒன்ருகக கருதத்தக்கது ; புதுப்பாகையென்னு மூரிலிருந்த கறுப்பனென்பவனது குமாரராகிய கவிக்களஞ்சியம் என னும் புலவர் பாடியது ; இருபத்தைந்து கதைகளையுடையது ; இதிலு ள்ள விருத்தங்கள் 864 ; இந்தப்பிரதியில் இந்நூல் பூர்த்தியாயிருக்கி றது ; இதிலுள்ள சில ஏடுகள் சிதிலமாயிருக்கின்றன ; இந்நூல் அச் சிடப்படவில்லை.

(2) நீதிகாவ்யம்.

No. 122. அறநெறிச்சாரம்.

ARANEṚICCĀRAM.

Substance, paper. Size, 8¼ × 6½ inches. Pages, 46. Lines, 20 on a page Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein are, Tiṇaimoḷi-aimbadu, 49, Tiṇaimālainūṟṟaimbadu 74, Palaturaikārikai 87, Kārnārpadu 89, Innānārpādu 145.

Complete.

A work on the principles of Jaina morality. For extracts see pages 49 and 249 of Mr. Seshagiri Sastri's Report No. 1.

(கு-பு.)—

இது, திருமுனைப்பாடியாரால் இயற்றப்பட்டது ; சிறந்தநடையுள் ளது ; ஜைனமதசம்பந்தமான தருமங்களை வெண்பாவாற் கூறுவது ; இதன் செய்யுட்டொகை 226 ; இஃது அச்சிடப்பட்டுள்ளது ; இந்தப் பிரதி பூர்த்தியாயிருக்கிறது.

No. 123. அறநெறிச்சாரம்.

ARANERICCĀRAM.

Substance, palm-leaf. Size, 15¼ × 1¼ inches. Pages, 38. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1 *a*. The other work herein is Aruṅgalaeceppu 20*a*.

Same work as the above.

Complete.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; பூர்த்தியுளது.

No. 124. அறநெறிச்சாரம்.

ARANERICCĀRAM.

Pages, 45. Lines, 20 on a page.

Begins on fol. 41*a* of the MS. described under No. 115.

Same work as the above.

Complete.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது, பூர்த்தியுளது.

No. 125. அறப்பளீசுரர்சதகம்.

ARAPPALĪŚURARŚATAKAM.

Pages, 8. Lines, 8 on a page.

Begins on fol. 32 *a* of the MS. described under No. 2.

Author is (அம்பலவாணக்கவிராயர்) Ambalavāṇakkavirāyar.

This work consists of 100 stanzas in praise of Śiva as worshipped in the temple on mount Arappaḷi.

Contains only the first 8 stanzas.

Beginning :

காப்பு.

உம்பர்கோ னெம்பெருமா னேங்கரப்ப ளீசுரர்மேற்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே - யம்புவியோ
ராக்குந் துதிக்கையுளா னன்புடையார்க் கின்பருளிக
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

நூல்.

உயர்பிறப்பு.

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பினுண் மிகக
காட்சிபெறு நரசன்மமாய்க
கருதப் பிறந்தலரி ததினுமுயர் சாதியிற்
கற்புவழி வருதலரிது
வடிவமுட னவயவங் குறையாது பிழையாது
வருதலது தனினுமரிது
வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி
மாசில்வழி நிற்றலரிது
நெடியதன வானதை லரிததி னிரக்கமுள
நெஞ்சினே னாதலரிது
நேசமுட னுன்பதத் தன்பராய் வருதலிந்
நீணிலத் ததினுமரிதா
மடியவர்க ளமுதமே மோனமழபூ பதிபெற்ற
வதிபனெம தருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரரப்பளீ சுரதேவனே.

End :

தீவழிவிலக்கு.

வஞ்சகர் தமைக்கூடி மருவொணா தன்பிலார்
வாசலிற் செல்லொணாது
வாதெவ ரிடத்திலும் புரியொணா தறிவிலா
மடவர்முன் னிற்கொணாது
கொஞ்சமே னுந்தீது செயயொணா தொருவர்மேற்
குற்றங்கள் சொல்லொணாது
கோதைய ரிடத்தினிற் பரிகாச மாகாது
கோளுரைகள் பேசொணாது
நஞ்சுதரு மரமொடும் பழகொணா திருள்வழி
நடந்துதனி யேகொணாது

நதிபெருக் காகினதி னீஞ்சல்செய வொண்ணாது
நல்வழி மறகொணாது
. . . . திவைபெயலா
மறியுமெம நருமைமதனே
னனுதினமு மனதினினை தருசதர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. (8)

(கு-பு.)—

சதகம், 100 செய்யுட்களாலாகிய நூல்; இது, வைபபுஸ்தலமாகிய அறப்பள்ளி யென்னுமலையிற கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமானை முன்னிலைப்படுத்திய பாடியசதகம்; இதனை இயற்றியவர் அம்பலவாணக்கவிராயர்; இந்நூல் அச்சிடப்பட்டிருக்கிறது; இந்தப் பிரதியில் முதல் 8 பாடல்களேயுள்ளன; இறுதியேடு மிகச்சிதிலம்.

No. 126. ஆசாரக்கோவை, உரையுடன்.

ACARAKKŌVAI WITH COMMENTARY.

Substance, paper. Size, 13½ × 8½ inches. Pages, 34. Lines, 26 on a page. Character, Tamil. Condition, good. Appearance old.

Begins on fol. 137 *a*. The other works herein are, Nāladiyār 1*a*, Nītisāram 115*a*.

A metrical work on the rules of good conduct: by Peruvāyin Mulli of Venkayattūr.

Complete.

Beginning:

ஆரெயின் மூன்று மழித்தா னடியேத்தி
யாரிடத்துத் தானறிந்த மாத்திரையா னாசார
மாரு மறிவ தறனாக மற்றவற்றை
யாசாரக்கோவை யெனதொகுத்தான் றீராத்
திருவாயிலாய திறல்வண் கயத்தூர்ப்
பெருவாயின் முள்ளியென்பான.

எ - து, பகைவரான் அழித்தற்கு அரிய . . . . . . ஆசாரக் கோவை யெனச்செய்து திரட்டினான். நீங்காததிருமடந்தைக்கு வாயிலாகிய திறலையுடைய வண்கயத்தூர்ப் பெருவாயின் மகனாகிய முள்ளி யென்னும் பெயரையுடையான் (எ - று). (1)

நன்றியறிதல் பொறையுடைமை யின்சொலொ
டின்னாத வெவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியொ
டொப்புர வாற்ற வறித லறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்ட லிவையெட்டுஞ்
சொல்லிய வாசார வித்து.

எ - து, தனக்குப் பிறர் செய்த நன்றி அறிதலும் பொறையும் இன் சொல்லும் எல்லா உயிர்க்கும் இன்னாதன செய்யாமையும் கல்வியும் ஒப்புரவை மிக அறிதலும் அறிவுடைமையும் நல்லினத்தாரோடு நட்டலுமென இவ்வெட்டுவகையும் நல்லாரால் சொல்லப்பட்ட ஆசாரங்கட்குக் காரணம் (எ - று). (2)

End :

உரற்களத்து மட்டிலும் பெண்டிர்கண் மேலு
நடுக்கற்ற காட்சியார் நோக்கா ரெடுத்திசையா
ரில்லம் புகாஅர் விடல்.

எ - து, சோர்வற்ற அறிவையுடையவர், ஆரவாரஞ்செய்யும் இடத்தும் மடைப்பள்ளியிலும் பெண்டிர்கள் உறையிடத்தும் நோக்கார் எடுத்துரையார் இல்லத்துட்புகார் ஆதலால் நீ விடுக (எ - று). (100)

அறியாத தேயத்தா னாதுலன் மூத்தா
னிளையா னுயிரிழந்தா னஞ்சினா னுண்பா
னரசர் தொழிறலை வைத்தான் மணாளனென்
றொன்பதின்மர் கண்டீ ருரைக்குங்கா லெய்யான
வாசாரம் வீடுபெற்றார்.

எ - து, அறியாத தேசத்தான், வறியோன், மூத்தோன், சிறுவன், உயிரிழந்தவன், பயமுற்றவன், உண்பவன், அரசர்தொழிலில் தலைவைத்தவன், மணமகன் என்னும் இவ்வொன்பதின்மரும் உண்மையாயுரைக்குமிடத்து ஆசாரமிலிகளாவார் (எ - று). (101)

ஆசாரக்கோவை முற்றிற்று.

(கு-பு.)—

இது, சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்குக்களுள் ஒன்று; ஆசாரத்தைத்தெரிவிப்பது; 101-வெண்பாக்களாலாகியது; இதை இயற்றியவர் வெண்கயத்தூர்ப் * பெருவாயின் முள்ளியார். இந்தப் பிரதியில் இந்நூல் பொழிப்புரையுடன் பூர்த்தியாயிருக்கிறது. அச்சிடப்பெற்றுள்ளது.

* இது, வண்கயத்தூரெனச் சிலபிரதிகளிற் காணப்படுகிறது.

No. 127. ஆசாரக்கோவை, உரையுடன்.

ACARAKKŌVAI WITH COMMENTARY.

Substance, palm - leaf. Size, $9\frac{7}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 54. Lines, 9 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 56 *a*. The other works herein are, Tiruvahuppu 1*a*, Vēlviruttam 83*a* , Tirumurukāṟṟuppaḍai 88*a*.

Same work as the above.

Complete.

(கு-பு.)—

இது, முன்பிரதிபோன்றது ; இதில் மூலம் பூர்த்தியாயிருக்கிறது ; முதல் 82 பாடல்களுக்கு உரையும் உள்ளது.

No. 128. ஆசாரக்கோவை.

ĀCĀRAKKŌVAI.

Pages, 23. Lines, 10 on a page.

Begins on fol. 16 *a* of the MS. described under No. 86.

Same work as the above, but it contains only the text.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது ; மூலம் மட்டும் உள்ளது.

No. 129. ஆத்திசூடி, உரையுடன்.

ĀTTISŪḌI WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $17\frac{1}{2} \times 1$ inches Pages, 19. Lines, 4 on a page. Character. Tamil. Condition, good Appearance, old.

Incomplete.

An elementary work consisting of useful sentences inculcating morals, and intended for the use of the young.

Text by Auvaiyār and commentary by Vasantarāyar.

Beginning:

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
யேத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

உரை—ஆத்திசூடி - ஆத்திமாலையைச் சூடிய பரமசிவன், அமர்ந்த- விரும்பிய, தேவனை-மூத்த மகனாகிய விநாயககடவுளை, ஏத்தியேத்தி- துதிசெய்து துதிசெய்து, தொழுவோம் - வணங்குவோம் ; யாம் - யாங்கள், ஏகாரம் ஈற்றசை.

அறஞ்செய விரும்பு.

உரை—அறம் - தருமத்தை, செய - செய்தற்கு, விரும்பு - நீ ஆசை கொள்ளு. (1)

End:

55. தானமது விரும்பு.

உரை—தானமது - சற்பாத்திரங்களிலே தானஞ் செயதற்கு, விரும்பு - நீ ஆசைப்படு.

56. திருமாலுக கடிமைசெய.

(கு-பு.)—

இஃது, ஔவையாரால் செய்யப்பட்டது ; இந்தப் பிரதியில் 55 வாக்கியங்கள் உரையுடன் இருக்கின்றன ; 56 - வது வாக்கியம் உரையின்றி யிருக்கிறது.

No. 130. ஆத்திசூடி வெண்பா.

ĀTTIŚŪḌI VEṆBĀ.

Substance, palm-leaf. Size, 15½ × 1 inches. Pages, 110. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

A similar work on conduct and morals by Rāmabhāratiyār. Each sentence of the Āttiśūḍi is here made to form the last line of a stanza. The first 2 leaves are broken.

Beginning:

உலகம் புகழ்பாகை யோங்குதொண்டை நாடன்
திலகன் கணபதிமா சேய - னலமிகுத்த
வாழவாகும் புன்னை வனநாத னறமிழக்கே
துழாத்தீச் சூடி - துணை.

அருளாற் கபிலை யறமே செய(மென்)
றிருளகல வேங்கைக கியம்(பும் - பெருமையினால்)
மா(வ)ளரும் புன்னை வனநாத ெ(மய்த்துணையாய்)
மேவி யறஞ் செய்ய விரும்பு. (1)

End:

அந்தணர் வாழி யறம்வாழி கீர்த்திநிலை
தந்தவர்கள் வாழி தமிழ்வாழி - சநததமு
மாவனபர் புன்னை வனநாதா னிலவகையே
தாவோதுவதுவேதம்.

பாரோரர் புகழும் ? பார்வதிசெய் பாகமதாய்ச்
சீராத்திசூடிச செழுந்தமிழைப் - பேராக
நாகரிகன புன்னைவன நாதனவைபுனைந்தான
வாகுவினிற கீர்த்திமருவ.

குருவேதுணை.

Colophon:

காளயுகதி௵ ஆவணிமீ 30 தேதி வியாழக்கிழமை புனர்பூசநட்சத்திரம் கூடின சுபதினத்திலே தாபுமான (வன) ஆத்திசூடி வெண்பா முடிந்தது முற்றும்.

(கு-பு.)—

இது, 109 செய்யுட்களை யுடையது; இதிலுள்ள ஒவ்வொரு செய்யுளிலும் இறுதியில் ஆத்திசூடி வாக்கியமும் முதலில் அதற்கேற்ற உதாரணமும் அமைந்துள்ளன; இந்நூல் தொண்டைநாட்டில் பாகை நகரிலிருந்த வேளாளராகிய புன்னைவன நாதரென்பவரை முன்னிலைப்படுத்திக்கூறுவது. இதனை இயற்றியவர் இராம பாரதியாரென்பவர்; ஆத்திசூடி வாக்கியங்களுள் பிரசித்தியாய் வழங்காதனவும் இதிற் சில காணப்படுகின்றன. இந்தப் பிரதியில் முதல் 2 ஏடுகள் முறிந்து போய்விட்டன.

No. 131. ஆத்திசூடி வெண்பா.

ĀTTISŪḌI VEṆBĀ.

Substance, palm-leaf. Size, 16½ × 1 inches. Pages, 50. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 21*a*. The other works herein are :—Paḷamoḷi-viḷakkam 1*a*, Kadirkāmakkumaravēḷtuti 46*a*, Caturkōṇamālai 51*a*.

Incomplete.

Same work as the above.

(கு-4.)—

இது முனபிரதிபோன்றது ; இதில் காப்புசசெயயுளும், 13-வது முதல் 4 செய்யுட்களும் இறுதியில் ஐந்து செய்யுட்களும் இல்லை.

No. 132. இரங்கேச வெண்பா, உரையுடன். IRANGĒŚA VEṆBĀ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 16 × 1¼ inches. Pages, 174. Lines, 5-6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, very old.

This is a work on conduct and morals written in Veṇbā metre. It is based on the famous Tamil work known as Kuraḷ, the latter half of the Venbā stanzas herein being quotations from the Kuraḷ, the former half giving illustrative Purāṇic or other references.

The author of the work is Śāndakavirāyan—சாந்தகவிராயன்.

This work is also called Nīticūḍāmaṇi.

Complete.

சொன்னகம்பத் தேமடங்க றோன்றுதலா லன் பருளத்
தினனமுத மாகு மிரங்கேசா—மனனும்
அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

எ-து, அகர முதல எழுதது, அகரமும் மற்ற எழுததுகக(ளும்) பேத மாயிருந்தாலும், அகரநாதம், எழுத்துகளுட னெலலாம் கலந்துவரு மென்றது. ஆதிபகவன் முதற்றே யுலகு என்றது சர்வேசுரன் சர்வாந் தரி(யாமி)யாய, சாவலோகஙகளிலும் நிறைந்திருப்பாரென்றது. அகரநாதம் எழுத்துகளெல்லாம் கலந்து நின்றாற்போலே, சர்வேசுரன் லோகமெல்லாங் கலந்து நிற்பாரெனறு குறளிலே திரு(வு)ளம் பற்றினார்.

அதற்கு உதாரணம் :—

சொன்னகம்பத்தே மடங்கற்றோன்றுதலாலென்றது, இரணியனுக்கும் பீரகலாதனுக்கும் தர்ககமானபோது இரணியன் கைகாட்டிய தூ

ணிலே, நரசிங்கமூர்த்தி பிரசன்னமாக அந்தத் தூணினிடமாக வந்த படியினால் சர்வேசுவரன் லோகங்களெல்லாம் நிறைந்திருப்ப ரென்று குறளிலே திருவுளம் பற்றினபடிககு நிதரிசனமாக உதாரணமாச்சுது.

அன்பருளத்து இன்னமுதமாகும் இரங்கேசா என்றது, கடவுண் முன்னிலே யெனக்கொளக (எ-று). (1)

End :

சத்தியபா மூட மணியநறுங் கற்பகத்தை
யித்தலத்திற் றந்தா னிரங்கேசா—சித்தசனுக்
கூடுதல் காமத்துக (கினப மதறகி)ளபங
கூடி முயங்கப் பெறின்.

எ-து, நிழலி வருமை வெயயிலிலே நின்றறிவதுபோலும் ஊடுத லுங் காமத்தக்கு இன்பம். எப்படியென்னில், அவர்கள் மன அபிலா சைகளைக்கொடுத்து இன்சொல்லினாலே ஊடுதல் தீர்த்துக கூடி முயங் கில் ஏற்குமெனறு திருவுளம் பற்றினார்.

அதற்கு உதாரணம் :—

ஸ்ரீ கிருஷ்ணசுவாமிக்கு நாரதர் பாரிசாதபுஷ்பம் காணிக்கைகொடு க்க, அந்தப் புஷ்பத்தை உருக்குமணிககுச் சுவாமிகொடுககக்கண்டு, நா ரதர் சத்தியபாமையுடனே பொய்சொல்லிப பிணககுப்பண்ணிவைகக, அதற்க(ாக)ச் சுவாமி தெயவலோகத்துப் பாரிஜாதவிருக்ஷங் கொண்டு வந்து அந்த அம்மன் சிங்காரவனத்திலேவைத்தப பிணக்குத்தீர்த்துக கூடிமுயங்கி இருவரும சந்தோஷி(த்தார்கள்). ஆதலால், ஒருகாரியங்க ள்நிமித்தியமாக (ஸ்திரீக)ள் பிணங்கினால அவர்கடு அபேக்ஷையான பதார்த்தங்களைக்கொடுத்து இன்சொல் மொழிந்து . . குமது தலைவர்க்குத் தொழில் . . (எ-று.) (133)

ஸ்ரீ கிர்ஷ்ண ஸகாயம.

இரங்கேசவெண்பா காலயுகதி ௵ சித்திரைமீ 30௳ எழுதி நி (றைவேறின து).

ஸ்ரீமந் லக்ஷ்மீ நாராயணஸ்வாமி ஸஹாயம்.

(௩-பு.)—

இது, திருக்குறளிலுள்ள ஒவ்வோரதிகாரத்திலும் ஒவ்வொருபாட லையெடுத்துப் பிற்பாதியாக அமைத்து முற்பாதியில் அவ்வக் குறட்பா வுக்கேற்ற கதையையமைத் து 133-வெண்பாவாற் செய்யப்பெற்ற தொ ரு நூல்; சாந்தகவிராயர் செய்தது. அச்சிடப்பட்டுள்ளது; இந்தப்பிர தி பூர்த்தியுடையது; இதன் முதலிலுள்ள ஓர் ஏட்டில் ஔவையாரியற் றிய "அறமம்" என்ற முதலையுடைய பாடல் எழுதப்பட்டிருக்கிறது.

No. 133. இரங்கேச வெண்பா, உரையுடன்.

IRAṄGĒŚA VEṆBĀ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 18⅛ × 1¼ inches. Pages, 108. Lines, 6-7 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

The first leaf is broken and the 2nd and the 22nd leaves are wanting; contains only 117 stanzas.

Same work as the above.

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது ; இதில் 117 பாடல்கள் இருக்கின்றன.

No. 134. இரங்கேச வெண்பா, உரையுடன்.

IRAṄGĒŚA VEṆBĀ WITH COMMENTARY.

Substance, palm - leaf. Size, 14⅜ × 1 inches. Pages, 122. Lines, 5 on a page. Character, Tamil. Condition, good. Appearance, a little old.

Contains only 75 stanzas.

Same work as the above.

In the first leaf there is an isolated stanza in praise of Vināyaka.

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது ; இதில் 75 பாடல்கள் உள்ளன ; இதன் முதலிலுள்ள ஓரேட்டில "திருவாகதும்" என்ற முதலையுடைய விநாயகஸ்துதியாகிய வெண்பா எழுதப்பெற்றிருக்கிறது.

No. 135. இரங்கேச வெண்பா, உரையுடன்.

IRAṄGĒŚA VEṆBĀ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 14⅜ × 1¼ inches. Pages, 66. Lines, 7 on a page. Character, Tamil. Condition, good Appearance, old.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; இதில் 60 பாடல்கள் உள்ளன; இதன் முதலிலுள்ள ஓரேட்டில் "வரையாறு நாடு நகரூர் துரகமதகரியே, விரையாருமாலை முரசம்பதாகை யெயானை ... மே, யுரை [து] (யார்) தசாங்கத்தி னெவ்வொன்றை மாறி யுறவகுத்த தரையாளுமன்னர் முதலா ன[ய] வருக்குஞ் சாற்றுகவே" என்னுங் கலித்துறையும் "கொண்டன் முழங்கினவால்" என்னு முதலையுடைய, காரிகை யுதாரணச் செய்யுளொன்றும் எழுதபபட்டிருக்கின்றன.

No. 136. இனியதுநாற்பது, உரையுடன்.

INIYADUNĀṚPADU WITH COMMENTARY.

Pages, 7. Lines, 23 on a page.

Begins on fol. 161*a* of the MS. described under No. 120.

Incomplete.

By Pūdañcēndanār, son of Maduraittamiḻāśiriyar.

A poem in 40 stanzas enumerating such things as are pleasing and desirable.

Beginning:

யுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனனஞ்சா னாக லினிது.

எ - து, குழவிகள் தளர்நடையைக் காண்டல் இனிது; அவர் மழலைச்சொல்லைக் கேட்டல் அமிழ்துபோல மிகவும் இனிது; வினைக்கிழவன் வந்துசேர்ந்து தான வெம்மையுறும்போது மனத்தினகண் அஞ்சாது நிற்றல் இனிது (எ - று). (15)

End:

பத்துக்கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற றுண்ணா விழுப்ப மிகவினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில்.

எ - து, தான் இறுக்கும் இறையிற் பத்துமடஙகு இறுத்தும் தம் பதியின்கண் இருந்து வாழ்தல் இனிது; நனமையாய விளைவிற்குக் காரணமாகிய காரணஙகளைச் சிதைத்து உண்ணாத விழுப்பம் மிக இனிது; பலநாளும் நன்மையுடைய நூல்களைப் பழுதுபடாமைக கற்றல் போலக் காழ்த்தல் இனியது இல்லை. (எ - று). (40)

மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் செய்த இனிய(து) நாற்பது முற்றிற்று.

(கு-பு.)—

இது சங்கப்புலவர் தொகுத்த பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்று; இன்னது இன்னது இனிதெனறுசொல்லும்; 40 வெண்பாக்களையுடையது; மதுரைத்தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனாரியற்றியது; உரையுடன் அச்சிடப்பெற்றிருக்கிறது. இந்தப்பிரதியில் 15-வது செய்யுளின் பிற்பாதி முதல் இறுதிச் செய்யுள்வரையில் மூலமும் இச்செய்யுட்களின் உரையும் உள்ளன.

No. 137. இனியதுநாற்பது, உரையுடன்.

INIYADUNĀṚPADU WITH COMMENTARY.

Pages, 10. Lines, 20 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No 90.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முனபிரதிபோன்றது; அதிலுள்ள பாடங்களை உரையுடன் இதிலுமுள்ளன.

No. 138. இனியதுநாற்பது.

INIYADUNĀṚPADU.

Substance, palm-leaf. Size, 15⅛ × 1¼ inches. Pages, 4. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 7*a*. The other works herein are, Aindiṇai-aimbadu 1*a*, Saṅgaccaiuḷ 4*a*, Innānāṛpadu 5*b*, Kārnāṛpadu 9*b*, Kalavaḻināṛpadu 11*b*.

Complete. Same work as the above, but without commentary.

Beginning:

கண்மூன் றுடையான்றாள் சேர்தல் கடிதினிதே
தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிது.

பிச்சைபுக் காயினும் கற்றன் மிகவினிதே
கற்றவை கைகொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு.

For the end, see the stanza under No. 136.

(கு-பு.)—
இந்தப் பிரதியில் இந்நூல் மூலமட்டுமேயுள்ளது ; பூர்த்தி.

No. 139. இன்னாநாற்பது, உரையுடன்.
INNANĀṚPADU WITH COMMENTARY.

Pages, 41. Lines, 9 on a page.

Begins on fol. 73*a* of the MS. described under No. 122.

Said to be by Kapila. Consists of 40 stanzas that give an enumeration of such things as are painful and undesirable.

Complete.

For extracts, see pages 128, 330 and 331 of M. Seshagiri Sastri's Report No. 2.

(கு-பு.)—
இது, சங்கபுலவர்தொகுத்த பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று ; இன்னது இன்னது துன்பந்தரும் என்று எடுத்துச்சொல்லும் நாற்பது வெண்பாக்களேயுடையது ; இந்நூலை இயற்றியவர் கபிலரென்பவர் ; இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. இந்தப்பிரதியில் உரையுடன் பூர்த்தியாயிருக்கிறது.

No. 140. இன்னாநாற்பது.
INNANĀṚPADU.

Pages, 4. Lines, 9 on a page.

Begins on fol. 5*b* of the MS. described under No. 138.

Complete.

Text same as the above.

(கு-பு.)—
இது முன்பிரதிபோன்றது ; பூர்த்தியுடையது ; மூலமட்டும் உள்ளது.

No. 141. உலகநீதி.

ULAKANĪTI

Substance, palm-leaf. Size, 17 × 1 inches. Pages, 14. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

A work consisting of rules of conduct for young men At the end of each stanza the worship of Subrahmaṇya is enjoined.

By Ulakanāthan, a barber by caste.

Complete.

In fly leaves.

வீரபத்திரன் படிக்கப்பட்ட உலகநீதி யென்றறியவும்.
உலகநீதி புராணத்தை யுரைக்கவேமிகவும்
கலைகளாயிரங் கரிமுகன காப்பு ?

Beginning:

ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை யொருநாளு மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செயவாரோ டிணங்க வேண்டாம
போகாத விடங்களிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புரியதொல்லித் திரிய வேண்டாம்
வார்வான குறவரிட வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழத்தாய் நெஞ்சே.

End:

ஆதரித்துப பலவகையாயப் பொருளுந தேடி
அருந்தமிழா லறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தா லுலக நாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலக நீதி
காதலித்து மனமகிழநது கற்றோர் கேட்டோர்
கருத்துடனே மிகவாழந்து கருணை யுண்டாய்ப்
பூதலத்தின் மிகவாழ்ந்து பொருளுந் தேடிப்
பூலோக முள்ளளவும் வாழவார் தாமே

சிவமயம்.

குருகடாட்சம்.

(கு-பு.)—

இது. நீதிகளைத்திரட்டி எளிய நடையிற செய்யப்பெற்ற தொரு நூல்; 10 - பாடலகளையுடையது ; உலகநாதனெனபவரால் இயற்றப்

பெற்றது. இவர் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் மனத்தைநோக்கி முருகக்கடவுளை வழிபடுவாயாகவென்று சொல்லியிருக்கிறார். இந்தப் பிரதியில் இந்நூல் பூர்த்தி; முதற்செய்யுளின் 4-ஆம் அடி, 4-ஆம் செய்யுளிலும் 6-ம் செய்யுளிலுள்ள சில அடிகள், 7-ஆம் செய்யுளிலும் வந்துள்ளன. இந்நூல் அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 142. கபோதவாக்கியம். KAPŌTAVĀKKIYAM

Substance, palm-leaf. Size, 17¾ × ⅞ inches. Pages, 98. Lines, 3-5 on a page. Character, Tamil Condition, good. Appearance, old.

This gives the story of a male dove which burnt itself to satisfy the hunger of a hunter, and is said to have been narrated to Sugrīva by Rāma, when the former dissuaded him from extending his friendship and protection to Vibhīsana.

Incomplete.

Beginning:

கதிரவன் குலத்தி ைனே
வீமனுக் கிளையோனரேரை விரைந்து முனை ளுேட்டி ைனே.
ராமனைப் பணி(ந்துபோ)றறி (யிர)ஞ்சிதமாகச் சொல்வாம (5)
* * * *
சொன்னபின் ராமர் பாதந் தொழுதுசுக கிரீவன சொல்வான்
மன்னனே யயோத்தி வாழவே மனுஷனைப பட்சி ரெண்டு
முன்னமே காதத ைதன்று ழூர்த்திலோ சொன்னீ ரன்றோ
அன்னதே யறிய நன்ற வடியவர்க குரைத்தி ம(ா)தே(ா). (30)

End:

தேவினை விற்க லாகுள் செயபலாந் தானந் தானும்
பூவையைக கொல்லொ ைறது பூசலத தோர்க ளுககு
மேவியே தீயி லிப்போ வேட னுக கிரைநா னென்று
ஆவிய ... துணிநது வீழுமா னெனும் கபோத மப்போ. (212)
* * * *
தசையது வேணு மென்று சாற்றிய தல்லா லுன்ற
னிசைதரு கணவன் றனை யிறந்திடச சொனன துண்டோ
விசையிறு வோடி வந்து வீழ்ந்(த)த புள்ளை யென்று
பசையவே தசைதா னுண்டோ பசியது தீரு மோதான. (214)

(கு-பு.)—

கபோதம் - புறு; இது, விபீஷணன் இராமனைச் சரணமடையவந்த காலத்து அவ்விபீஷணனுக்கு அபயங்கொடுத்தல் தகாதென்ற சுகரீவ

னுக்கு இராமன் சொன்னதாகச் செய்யப்பட்டிருக்கிறது; செய்யுள் நடை சிறந்ததன்று; இந்தப் பிரதியில், தன்னிடம்வந்த வேடனது பசியைத் தீர்ப்பதற்காக ஆண் புறா தீயில்விழுந்து இறக்க, அதைக்கண்ட வேடன் பெண் புறாவை விளுவல் வரையுள்ள பகுதி இருக்கிறது; முதல் ஏடு இல்லை; இடையேயுள்ள சில ஏடுகள் முறிந்துபோய்விட்டன.

No. 143. குமரேசசதகம்.
KUMARĒŚAŚATAKAM.

Substance, palm-leaf. Size, 16½ × 1 inches. Pages, 96. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

A poem on conduct and morals, in which the stanzas are all addressed to Subrahmaṇya of Pulvayal, a place in the Pudukkōṭtai State.

By Guhapādadāsar.

Stanzas 47, 48, 79 and 100 are wanting

This work has been printed.

Beginning:

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசன்மேற்
றேமே வியசதகஞ் செப்பவே—கோமேவிக
காற்குஞ் சரவணத்தான்? கம்பகும் பத்தைநது
காற்குஞ் சரவணத் தார்? காப்பு.

1813-ம் வரு தைமீ மூலநக்ஷத்திரத்தில் ஐயாப்பிள்ளை குமரேசசதகம் துவக்கப்பட்டது.

நூல்.

பிராமணாள் நீதி.

குறையாத காயத்ரி மந்த்ரசெப மகிமையுங்
கூறுசரு திப்பெருமையுங்
கோதிலா வாகம புராணத்தின் வளமையுங்
குலவுயா காதிமுதலாய்
முறையா நடத்துவார் சகலநீ வினைகளையு
முளரிபோ லேதகிப்பார்
முதன்மைபெறு சிலைசெம்பு பிருதிவி யுடன் (தெய்வ)
முக்யமுண் டாக்கிவைப்பார்

திறையாக நீதிநெறி வழுவார்க ளாகையா
    னீண்மழை பொழிந்திடுவது
நிலமது செழிப்பது மிராசர்செங் கோல்புரியு
    நிலையுமா தவர்கள்பலனும்
மறையோர்க ளாலே விளங்குமிவ் வுலகத்தின
    மானிடத் தெய்வமிவர்காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
    மலைமேவு குமரேசனே.

End :

வாழி பெருமை.

வன்னமயி லேறிவரு வேலாயு தககடவுள
    மலைமே லுகந்தமுருகன
வள்ளிக் கொடிக்குமுன் வேங்கைமர மாகிநின்ற
    வானவர்கள் சேனாபதி
கன்னன்மொழி யுமையா டிருப்புதல்வ னரனமகன்
    கங்கைபெற் றருள்புத்திரன
கணபதிக் கிளையதொரு மெய்ஞ்ஞான தேசிகக
    கடவுள்குன றக்குடியினன்
பன்னரிய புல்வயலில் வாழ்குமரேசர்மேற
    பற்றுகுக பாததாசன
பாங்கா யுரைததததமி ழாசிரிய விருத்தமாய்ப்
    பகர்சதக நூறுகவியு
நன்னயம தாகப படித்தபே கேட்போர்க
    ளுளிலுங் கற்றபேர்கள்
ராசயோ கம்பெறுவர் பதவிநா ளும்பெறுவா
    நவின்முத்தி யும்பெறுவரே. (98)

ஐயாப்பிள்ளை - குமரேசசதகம்.

1813-ம் ஹு சித்திரைமீ 20உ எழுதி முடிந்தது.

(கு-பு.)—

* புல்வயல் - புதுக்கோட்டையைச்சார்ந்த தோரூர்; இந்நூல், அத்தலத்திலெழுந்தருளியுள்ள முருகக்கடவுளை முன்னிலைப்படுத்திப பாடப்பெற்றது; இதனை இயற்றியவர், குகபாததாசரென்னும் புலவர். இந்தப்பிரதியில் 47, 48, 99, 100 இவ்வெண்களையுடைய பாடல்கள் இல்லை. சில ஏடு ஒடிந்தும் சில ஏடு செல்லரிக்கப்பட்டு முள்ளன. இந்நூல் அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 144. குமரேச சதகம்.

KUMARĒŚA ŚATAKAM.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{2} \times 1\frac{1}{2}$ inches. **Pages**, 16. **Lines**, 11 on a page. Character, Tamil. Condition, good. **Appearance**, old.

Begins on fol. 104*a*. The other work herein is Tērūrnda-**purāṇaṁ** 1*a*.

Contains only 29 stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முனபிரதிபோனறது; இதில 29 பாடலகளுளளன.

No. 145. கொன்றைவேந்தன்.

KONṚAIVĒNDAN.

Substance, palm-leaf Size, $17 \times \frac{7}{8}$ inches. Pages, 14. **Lines**, 3 on a page. Character, Tamil. Condition, good. **Appearance**, old.

A poem by **Auvaiyar** inculcating useful lessons on conduct and morals. This MS. has certain readings which are different from those found in printed books

Complete.

In fly leaf.

சரஸ்வதி யம்மன ரக்ஷிககவேணுமபடிககு அடியேன பிரார்த்தி க்கப்பட்ட.

* * * *

Beginning:

கொனறை வேந்தன் செல்வ னடியை
யென்று மேதித் தொழுவே (ம்யாமே).

வாணி நமஸ்து.

அனனையும் பிதாவு முன்னறி தெய்வம்.
ஆலயந் தொழுவது சாலவு நனறு.

இல்லற மல்லது நல்லற மல்ல.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

End :

வொாதத விடத்தில் நித்திரைசெய.
வோதாதார்க் கில்லை யுணர்வுள வொழுக்கம்.

Colophon :

ஔவையாரருளிச்செய்த கொன்றைவேந்தன . . . . . ஆனந்த௵ பங்குனி௴ 11௳ . குமாரன ...ரசிஙகுககு யெழுதி நிறைந்தது முகிந்தது முற்றும.

(கு-பு.)—

இஃது, ஔவையாரால செய்யப்பட்டது ; இதில, முதலில் உயிர் வருககமும் பின் முறையே கசதநபமவ என்ற வருககங்களும் வந்துள்ளன. இந்த பிரதியில் இந்நூல் மூலம மட்டுமே இருககிறது ; பூர்த்தியுடையது ; அச்சுப் பிரதிககும் இதறகும் பாடபேதமுண்டு.

No. 146. கொன்றை வேந்தன்.
KONRAIVENDAN.

Substance, palm-leaf. Size, 15⅜ × ⅞ inches. Pages, 13. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured Appearance, old

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோனறது ; பூர்த்தியுடையது.

No. 147. சிறுபஞ்சமூலம், உரையுடன்.
ŚIRUPAÑCAMŪLAM WITH COMMENTARY.

Pages, 29. Lines, 23 on a page.

Begins on fol. 66*a* of the MS. described under No. 120.

This is one of the 18 kinds of Kīḻkkaṇakku works. Each stanza inculcates five moral lessons, and hence the work is called Pancamūlam. This work has been printed.

By Kāriyāśān, a Jaina.

Complete.

Beginning:

முழுதுணர்ந்து மூன்றொழித்து மூவாதான் பாதம்
பழுதின்றி யாற்றப் பணிந்து—முழுதேத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க் குறுதியா
வெண்பா வுரைப்பன சில

(கடவுள் வாழ்த்து) காமாதி மூன்றையும் ஒழித்து முற்றுமுணர்ந்து மூப்பில்லாதானபாதத்தை, மனக்குற்றம் நீக்கி மிகவும் வணங்கி, பல குணங்களையும் புகழ்ந்து, மண்பரந்த உலகில மக்கட்கெல்லாம் உறுதியாகிய பொருண்மேல் தொடுத்து, வெண்பாவாகிய சில செய்யுட்களை உரைப்பன.

ஒத்த வொழுக்கங் கொலைபொய் புலால்களவோ
டொத்த விவையல்ல வோர்நாலுட்—டொக்க
வுறுபஞ்ச மூலந்தீர் மாரிபோற் கூறீர்
சிறு பஞ்ச மூலஞ் சிறந்து.

எ-து, பொருந்திய ஒழுக்கமும், கொலைபொய் புலால் களவோடு ஒத்த இவையன்றி இவற்றுக்கு மறுதலையாகிய நான்கும், என்று சொல்லப்பட்ட இவ்வைந்தும் அகட்பட மிக்க பஞ்சத்தின் மூலத்தைத் தீர்க்கும் மாரிபோலச் சிறுபஞ்சமூலமென்னும் மருந்தாகக் கூறீர் மிக்கு.

End:

வழிப்படர் வாய்ப்ப வருந்தாமை வாயல்
குழிப்படர் தேய்ச்சொறக ளோடு—மொழிப்பட்ட
காய்ந்து விடுதல் களைந்துய்யக் கற்றவ
ராய்ந்து விடுத லறம்.

எ-து, பிறர்வழிச்செலவு, வாயகருங்காரியங்களை முயன்று வருந்தாமை, மெய்ம்மையல்லாத நெறியிற்சேறல், பிறரைப்பழித்துக் கூறுஞ் சொற்கள், நல்லார் சொல்லப்பட்ட குணங்களைந்து நீக்குதல் என இவ்வைந்தையும் கற்றறிவார் களைந்துநீத்தல் அறமாவது. (98)

மல்லிவர்தோண் மாக்கயவன் மாணாக்கன் மாநிலத்துப்
பல்லவர் நோயநீக்கும் பாங்கினாற்—கல்லா
மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலஞ்செய் தான்.

சிறுபஞ்ச மூலம் முற்றிற்று.

(கு-பு.)—

இது, பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று; இதிலுள்ள ஒவ்வொரு வெண்பாவிலும் ஐவைந்து நீதிகள் கூறப்பெற்றுள்ளன; இந்நூலை இயற்றியவர் ஜைனமதத்தினராகிய காரியாசானென்பவர்; இந்தப்பிரதியில் இந்நூல் திருத்தமாயும் பூர்த்தியாயும் பழுதில்லாமலும் உரையுடன் இருக்கிறது; இதன் இறுதி வெண்பாவிற் குறித்த 'மாக்கயவன்' என்ற பெயர், அச்சுப்பிரதியில் 'மாக்காயன்' என்று காணப்படுகிறது.

No. 148. திரிகடுகம், உரையுடன்.
TIRIKAṬUKAM WITH COMMENTARY.

Pages, 41. Lines, 24 on a page.

Begins on fol. 23*a* of the MS. described under No. 90. Text by Nallādanār. Commentary by Rāmānujāchāriyar of Tirukōṭṭiyūr.

Complete.

This is a Kīḻkkanakku work by Nalladanārar, and consists of stanzas each of which give expression to three moral principles or lessons. It has been printed. For extracts, see pages 239 and 240 of M. Seshagiri Sastri's Report No. 1.

(கு-பு.)—

இது பதினெண் கீழ்க்கணக்குகளுள் ஒன்று; ஒவ்வொரு பாடலிலும் மூன்று விஷயங்களைக் கூறுவது; வெண்பாக்களாற் செய்யப்பட்டது. இந்தப் பிரதியில் 101 பாடல்கள் பொழிப்புரையுடனும், 102-வது பாடல் உரை இல்லாமலும் உள்ளன; இந்நூல் அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 149. திரிகடுகம், உரையுடன்.
TIRIKAṬUKAM WITH COMMENTARY

Pages, 28. Lines, 21 on a page.

Begins on fol. 145*a* of the MS. described under No. 120.

Same work as the above.

Complete.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; பூர்த்தியுடையது.

No. 150. திரிகடுகம், உரையுடன்.
TIRIKAṬUKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 12½ × 1½ inches. Pages, 86. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein are, Nītineṛiviḷakkam 44*a*, Aruṅgalacceppu 95*a*, Vivēkacintāmaṇi 106*a*.

Same work as the above.

Complete.

(கு-பு.)—

இது முனபிரதிபோனறது; இதில் "பத்திமைசான்ற" என்ற முதற்குறிப்பையுடைய 100-வது பாடல் இறுதியாகவுள்ளது; அதன்பின் முற்றிற்று என்று எழுதப்பட்டிருக்கிறது.

No. 151. திருக்குறள், உரையுடன்.

TIRUKKURAḶ WITH COMMENTARY.

Substance. palm-leaf Size, 17¼ × 1¼ inches. Pages, 620. Lines, 7–8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Text by Tiruvaḷḷuvar, supposed to have been a native of Mylapore The commentary is by Parimēlaḻagar and is considered the best.

One of the 18 Kīḻkkaṇakku varieties.

This is a famous didactic work, and is so called because the stanzas are in the Kuralvenbā (குறள் வெண்பா) metre.

The work is divided into 3 chapters (1) Aṛattuppāl (அறத்துப பால்) (2) Poruṭpāl (பொருட்பால்) (3) Kāmattuppāl (காமத்துப்பால்)

Complete.

Beginning:

இந்திரன முதலிய இறையவர் பதங்களு
மந்தமி லின்பத் தழிவில் வீடும்
நெறியறிந்து எய்துதறகுரிய மாநதாககு
உறுதியென

உயர்ந்தோரான எடுக்கப்பட்ட பொருள நானகு;
அவை:—அறம, பொருள், இன்பம், வீடென்பன.

*   *   *   *

இவ்வாறுத்து அம ...டவர்க்கும் பொதுபபடக கூறினரென வுணர்க.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதறறே யுலகு

எ-து, அகரமாகிய முதலையுடைய, எழுததுககளெல்லாம்; அதுபோல ஆதிபகவனாகிய முதலையுடைத்து உலகம். (எ-று).

இது தலைமைபற்றிய எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத்தலைமை விகாரததானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயறகை யுணர்வானன்றி இயற்கை யுணர்வான முற்றுமுணர்தலானுங்கொள்க . . . .

இப்பாட்டால் முதறக   உண்மை கூறப்பட்டது. (1)

End:

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

எ-து, காமநுகர்ச்சிக்கு இன்பமாவது, அதனை நுகர்தற்கு உரியரா வார் ஆராமைபற்றித் தம்முள் ஊடுதல்; அவ்வூடுதற்கு இன்பமாவது, அதனை அளவறிந்து நீங்கித் தம்முள் கூடிமுயங்குதல் கூடுமாயின் அம்முயக்கம் (எ-று).

கூடுதல் ஒத்த அளவினராதல். முதிர்ந்த துனி ஆயவழித் துன்பம் பயத்தலானும் முதிராத புலவி ஆயவழிக் கலவி இன்பம் பயவாமை யானும் . . . . . னபதாம். (10)

250 காமத்துப்பால் முற்றும்.

திருத்தகுசீர் வள்ளுவனார் தெய்வப் பயனின்
கருத்தருமை தானே கருதி—விரித்துரைத்தான்
பனுவு தமிழ்தோ பரிமேலழகனெனு
மனனு முயர்நாமன் வந்து.

*　　　*　　　*　　　*

ஆக அதிகாரம் 133-க்கு குறள் வெண்பா 1330.

"ஆயிரத்து மூன்னூற . . . . வீற்றிருக்கலாம்."

*　　*　　*

ஆதியே சரணம்.

(கு-பு.)—

இந்நூல், திருவள்ளுவரால் செய்யப்பெற்றது; பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்று; அறம்பொருள் இன்பங்களை முறையே கூறுவது; 133 அதிகாரங்களை உடையது; மிகச்சிறந்தது. இவ்வுரை இந்நூலுரையாசிரியர் பதின்மருளொருவராகிய பரிமேலழகராற் செய்யப்பட்டது; இவ்வுரையுடன் இந்நூல் அச்சிடப்பெற்றிருக்கிறது; இந்தப்பிரதி பூர்த்தியுடையது.

No. 152. திருக்குறள், உரையுடன்.

TIRUKKURAḶ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $12\frac{3}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 662. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains 2 copies of the work. The first with commentary begins on fol. 1*a*, and the second without commentary on fol. 265 a

Both the copies complete.

Same work as the above.

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது; இதில மூலப்பிரதி யொன்றும் உரைப் பிரதியொன்றும் பூர்த்தியாயுள்ளன.

No. 153. திருக்குறள், உரையுடன்.

TIRUKKUṚAL WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $18\frac{1}{8} \times 1\frac{2}{3}$ inches. Pages, 460. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Same work as the above.

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது; திருத்தமாயிருக்கிறது; இதன்னிறுதியில் ஓரேடு இல்லை. மற்றுமுள்ள சில ஏடுகளும் சிதைந்துபோயிருக்கின்றன.

No. 154. திருக்குறள், உரையுடன்.

TIRUKKUṚAL WITH COMMENTARY.

Substance, paper. Size, $13\frac{1}{2} \times 8\frac{1}{4}$ inches. Pages, 387. Lines, 26 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

The author of the commentary is Maṇakkuḍavar.

Incomplete.

The stanzas are not given in proper order. This commentary has not been printed.

Beginning:

கடவுள் வாழ்த்து.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாகவுடைய ஆக. அவ்வண்ணமே உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாகவுடைத்து (எ-று).

End:

புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.

நிலனும் நீரும் பொருந்தினாற்போல பபொன ? பட்ட நெஞ்சுடையார் மாட்டுப்புலத்தல்போல இன்பந்தருவதோருலகம் உண்டு (எ-று).

நிலத்தொடு நீரியைதலாவது அவைவெப்பமும் தட்பமும் கூடி அனுபவிக்குமாறுபோல இன்பமுந் துன்பமும் கூட அனுபவிப்பார் மாட்டு என்றவாறாயிற்று.

திருக்குறள் மூலமும் உரையும் முற்றும்.

உரையாசிரியர்.

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவனூற
கெல்லை யுரையெழுதி னோர்.
சீர்த்திமிகு ஸ்ரீநிவா சையர் திருக்குறளை
நேர்த்தியாய்த் தேவ ருரையோடு—பூர்த்திபெற
முற்ற வெழுதினன் முன்னு பிரமாதி
யுற்றதிங்கண் மாசியுடு வோர்ந்து.

(கு-பு.)—

இதிலுள்ள செய்யுட்கள், முன்பிரதியைப்போன்றவை; இப்பொழுது வழங்கும் மூலபாடத்திற்கு முன்பினாக மாறுபட்டிருக்கின்றன; இவ்வுரை, இந்நூலினுரையாசிரியர் பதின்மருளொருவராகிய மணக்குடவராற்செய்யப்பெற்றது; சிற்சில இடத்து விசேடக்குறிப்புக்களமையப்பெற்றுள்ளது; பொழிப்புரை; இதுவரையிலும் அச்சிடப்பட்டதன்று; இந்தப்பிரதியிற் சில செய்யுட்களுக்கு உரையில்லை.

No. 155. திருக்குறள், உரையுடன்.
TIRUKKURAḶ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Pages, 322. Lines, 78 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Here the commentary only is different from the previous one.

The commentater seems to be a Śaiva but his name is not known.

Complete.

Beginning:

* * * *

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

எ-து, அடியாரிடுந் திருப்பள்ளித் தாமத்தின்மேல்வரும் சீர்பாதத் துணையால்? பூமியில வாழ்வார (எ-று). (3)

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

எ-து, இருவினைபற்றிய பாவமானது சிவகீர்த்தி பாராட்டுவாரிடத் துச் சேராது (எ-று). (4)

End:

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

எ-து. ஊடுதல் காமத்துக்கு இன்பம்; அந்த ஊடல்நீங்கிக் கூடப் பெறுவாராயின் எ-று. (10)

ஆக்குறள் 250.

அறப்பால 380; பொருட்பால் 700; காமப்பால் 250; ஆகக்குறள் 1330. எழுதி நிறைந்தது முற்றும். ருதிரோத்காரிஹூ ஐப்பசிமீ 18௳ புதன்கிழமை ரோகிணி நக்ஷத்ரம் தவிதிகை இந்த நாளில் திருவள்ளு வர் குறள் எழுதி நிறைந்தது முற்றும் . . . . . காளத்திலிங்கக்க விராயரவர்கள் சுகஸ்தலிகிதம்.

(கு-பு.)—

இந்தப் பிரதியில் மூலமும் உரையும் பூர்த்தியாயுள்ளன; முதற் பாதியிலுள்ள ஏடுகள் மிகச்சிதைந்துபோயிருக்கின்றன; சில குறிப்புக்களால், இவ்வுரையை இயற்றியவர், சைவப்பற்றுடையவரென்று எண்ணப்படுகிறது.

No. 156. திருக்குறள், உரையுடன்.

TIRUKKUṚAL WITH COMMENTARY

Substance, paper. Size, 13 × 8 inches. Pages, 338. Lines, 25 on a page. Character, Tamil. Condition, fair. **Appearance, old.**

Complete.

Same work as the above,

(த-பு.)—

இஃது, 155 செ. பிரதிபோன்றது ; பூர்த்தியுடையது.

No. 157. திருக்குறள், உரையுடன்.

TIRUKKURAL WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 14¼ × 1 inches. Pages, 420. Lines, 9 on a page Character, Tamil. Condition, fair Appearance, old.

Incomplete.

Same work as the above.

(த-பு.)—

இது பெரும்பாலும் முன்பிரதிபோன்றது. இதில் முதல் 1320 செய்யுட்கள் உள்ளன.

No. 158. திருக்குறள், உரையுடன்.

TIRUKKURAL WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 13¼ × 8½ inches. Pages, 176. Lines, 23 on a page. Character, Tamil Condition, injured. Appearance, old.

Slightly different in reading from the previous Ms.

(த-பு.)—

இதில்முதல் 546 பாடல்களுக்கு உரையுள்ளது; முன்பிரதிக்கும் இதற்கும் சில வேறுபாடுண்டு.

No. 159. திருக்குறள், பதவுரையுடன்.

TIRUKKURAL WITH MEANING.

Substance, palm-leaf. Size, 17¾ × 1¼ inches. Pages, 125. Lines, 5-6 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

The meaning of the Kuraḷ is herein given word for word.

Incomplete,

On fly-leaf—

பின்னைப்பாக்கம் வேலாமூர் ஸ்ரீனிவாசராகவன்
குறளும்-உரையும்.

Beginning:

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்தெல்லாம் = எல்லாவெழுத்துகளும்
அகரம் = அகரத்தை
முதல = முதலாகக்கொண்டிருப்பதுபோல
உலகு = உலகமானது
ஆதிபகவன் = ஆதிபகவனாகிய கடவுளை
முதற்று = முதலாகக கொண்டிருக்கிறது (எ-று). (1)

அறிவின் பயன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

வால் = பரிசுத்தமான
அறிவன் = அறிவையுடைய இறைவனது
நல் = நல்ல
தாள் = பாதங்களை
தொழாஅர் எனின் = வணங்காராயின்
கற்றதனால் = அவர், எல்லாநூல்களையும் படித்த அறிவினாலே
ஆய = உண்டாகிய
பயன் = பிரயோசனம்
என = என்ன (ஒன்றுமில்லை) (எ-று). (2)

End:

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

நிறை = நிறைந்த
மொழி = நனமொழியினையுடைய
மாந்தர் = மனிதர்களது
பெருமை = பெருமையை
நிலத்து = பூமியில்
மறைமொழி = அவர் சொல்லும் வேதவாக்[கினால்] (கு.)
காட்டிவிடும் = தெரியப்படுத்து[வர்] (ம்) (எ-று) (249)

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(த-பு.)—

இதற்குரிய செய்யுள் 1330 இல் இந்தப் பிரதியின்கண் முதல் 249 செய்யுட்கள் பதவுரையுடன் உள்ளன; இவ்வுரை திருத்தமான தன்று.

No. 160. திருக்குறள், உரையுடன்.

TIRUKKURAḶ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 12½ × 1¼ inches. Pages, 292. Lines, 6-7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, very old.

Contains 208 stanzas with the commentary of Vīramāmunivar (வீரமாமுனிவர்) and has an index in the beginning.

Incomplete.

கடவுள்வாழ்த்து அதிகாரம் 3.
பாயிரம் அதிகாரம் 2.
அறப்பால்வகுப்பு 2-க்கு அதிகாரம் 33.
பொருட்பால் வகுப்பு 4-க்கு அதிகாரம் 70.
காமப்பால் வகுப்பு 2-க்கு அதிகாரம் 25.

Beginning:

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (1)

எ-து, எல்லா எழுத்துகளுக்கும் அ-என்கிற எழுத்துத்தலையாயிருக்கிறது (அதுபோல) சர்வலோகத்துக்குங் கடவுளே தலைவர் (எ-று).

அ-என்கிற எழுத்து வேறே எழுத்துக்களுடைய வுதவியில்லாமலுச்சரிக்கப்படும். அன்றியே அதையுச்சரிக்கிறதுக்கவகாசமில்லாதே போனால் வேறொரு எழுத்தானாலு முச்சரிக்கக்கூடாது. அப்படிப் போல, கடவுளானது வேறொருத்தனுடைய வுதவியினாலுண்டாகாமல் தானாயிருக்கிறதுந் தவிர அவரில்லாதேபோனால் லோகத்திலேயொன்றானாலு முண்டாயிருக்கமாட்டாதென்கிறதினால் அ-என்கிற எழுத்தைக் கடவுளுக்குவமையாக்கி, அது சகல எழுத்துகளுக்கு மாதியாயிருக்கிறாப்போல, அந்த ஸர்வத்துக்குமாதியாயிருக்கிறதென்கிற லட்சணத்தைத் தோத்திரமாகச் சொன்னதுமல்லாமல் அவரை வணங்குகிறதுக்கு ஞாயங்காண்பித்தவாறு.

அகரமாவது - அ வென்கி றயெழுதது. முதல, முதற்று - முதலேயு டைத்து. ஆதிபகவன்-கடவுள். உலகு-லோகம்.

End:

நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றூற் கவ்வையாற்
காம நுதுப் பேமெனல். (208)

எ-து, நெய்யூற்றி நெருப்பை யவிப்போமென்கிறதும், ஆவலாதி யாச்சுது என்றறிவித்த ஒருவனுடைய காமத்தை யவிப்போமென்கி றதுஞ் சரி (எ-று).

நெருப்பிலே நெய்யூற்றினல் அதிகமாயெரியுமல்லாமல் அவியாது. அப்படிப்போலக காமத்தொ ழிலிலே தலைவைத்தவனுக்கு ஆவலாதி யாச்சுதென்றறிவிசதால் அதினல காமமென்கிற நெருடபு அவியாமல் என்காரியமெங்கும் அடிபட்டுப்போச்சென்று நாணம்போய்விடுகிறதி னல் முன்னிருந்த ரகசியமும் எச்சரிகனையும் விட்டுப்போட்டு மனசி ன்படியே அந்தத தொழில செய்கிறதுககும் காமமெனகிற நெரு ப்பு மேனமேலும் பெலத்துபோகி றககும எதுவாயிருக்குமெனபது கருத்து.

நுதுத்தல் - அவித்தல்., எரி - நெருப்பு, அற்று - உவமைச்சொல். கவ்வை - ஆவலாதி. எனல் - எனவேண்டாம்.

(கு-பு.)—
இது வீரமாமுனிவரால் தொகுககபபெறறது; இந்தப் பிரதியில் 208 குறள் வெண்பாக்கள உரையுடன உள்ளன; உரைநடை திருத்த மானதன்று.

No. 161. திருக்குறட்பயன்.
TIRUKKURATPAYAN.

Substance, palm-leaf. Size, $12\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Pages, 162. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol

This contains 200 select stanzas from Tirukkuraḷ with the commentary of Parimēlaḷakar.

Compilation by Vīramāmunivar. In fol. 1*a* there are 3 stanzas of an unknown author and also one stanza of Kuraḷ-veṇbā.

Leaves 42 to 45 and 80 and 81 are broken.

Beginning:

பாற்கடற் றழீஇய முற்றம் பரந்தவெம் மணிக ளுக்கி
நூற்கடற் பொலிந்த மாலை நோற்பன வவற்று முன்னீர்
மேற்கடற் றுறந்த வாகை வெளிப்பொரு ளமைதி செய்த
நாக்கடற் றவழும்வீர னற்குணச் செய்கை யாமே.

* * * *

திருவள் ளுவனுரைப்பன் றேர்ந்த பயன்றேர்ந்
தரிய குறளிரு நூறு.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன்முதற்றே யுலகு.

எ-து. அகரமாகிய முதலையுடைய, எழுத்துகளெல்லாம். அதுபோல ஆதிபகவானாகிய முதலேயுடைத்து உலகம் (எ-று).

இத்தலைமைபற்றிவந்த எடுத்துக் காட்டுவமை.

* * * *

இப்பாட்டான் முதற்கடவுளாணை கூறப்பட்டது. (1)

End.

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

எ-து, இவர்க்கு இதுசெயதால் இன்னது பயக்குமென்று ஆராயதல் இல்லாராய்ச் செயத உதவியாகிய ஈரமுடைமையை ஆராயின் அந்த நன்மை கடலினும்பெரிது.

* * * *

சென்னபட்டணம் சங்கத்திலிருக்கும் சவ

(கு—பு.)

இதில், திருக்குறளினின்று மெடுத்து வீரமாமுனிவரால் தொகுக்கப்பெற்ற 200 பாடல்கள் பரிமேலழகருரையுடன் உள்ளன; முதற்பக்கத்தில் வேறொருவராற செய்யபபெற்ற 3 விருத்தங்களும் ஒரு குறள் வெண்பாவும் இருக்கின்றன; இதிலுள்ள ஏடு 81 இல் 42, 43, 45, 80, 81 இந்த ஐந்தேடுகளும் ஒடிந்துபோயிருக்கின்றன; இன்னும் சில ஏடுகளும்

No. 162. திருக்குறள், வகுத்துரையுடன்.

TIRUKKURAL WITH VAHUTTURAI.

Substance, palm-leaf. Size, 10⅞ × 1⅛ inches. Pages, 632. Lines, 8 on a page. Character, Tamil. Condition, a little injured. Appearance, old.

Incomplete.

At the beginning there is found the following :—
ருத்திரோத்காரிஞு ஐப்பசிமீ 28உ சுக்கிரவார நாள் வீராசாமி.

Beginning :

அகரமுதல், etc.

எ-து, எழுத்துக்கெல்லாம் அகாரவெழுத்து முதலாயிருக்கிற ப்போலே, உலகத்துக்கெல்லாஞ் சர்வக்கியனை சுவாமி முதலென்ற வாறு. (1)

End :

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். (1330).

Colophon :

(கு-ப.)—

இந்தப்பிரதில், 700 செய்யுள் பொழிப்புரையுடனும் மற்றவை உரையின்றியுமுள்ளன; உரை நடை நனருகஇல்லே; இதிலுள்ள ஏட்டின்மொத்த எண் 318 இல 289, 290 இந்த நம்பருக்கு உரிய 2 ஏடுகளும் இலவாமையால், 1031 முதல் 1050 வரையுள்ள 20 செய்யுட்கள்

No. 163. திருக்குறள்.

TIRUKKUṚAḶ.

Substance, palm-leaf. Size, 9¾ × 1¼ inches. Pages, 266. Lines, 5 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 68*a*. The other works herein are Nāladiyar 1*a*, Cūḍāmaṇinikaṇḍu 20 *a*.

Complete.

Text same as the above

(கு-பு.)—

இது முனபிரதிபோன்றது; ஆனல் இதில் மூலமட்டுமுள்ளது; பூர்த்தியுடையது: இதனிறுதியிலுள்ள 3 ஏட்டில் சூடாமணி நிகண்டின் சிலபாடல்கள் உள்ளன.

No. 164. திருக்குறள்.

TIRUKKUṚAḶ.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Pages, 256. Lines, 5 on a page. Character, Tamil. Condition. injured. Appearance, old.

Six leaves are wanting in the middle.

Same work as the above

(கு-பு.)—

இது முனபிரதிபோனறது ; இதில இடையேசில் ஏடுகளில்லை ; உள்ள ஏடுகளிலும் சில சிதிலமாயிருக்கின்றன

No. 165. திருவள்ளுவமாலை.

TIRUVAḶḶUVAMĀLAI.

Substance, palm-leaf. Size, $15 \times 1\frac{1}{8}$ inches. Pages, 27. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol 47*a*. The other works herein are, Upadēśamālai 1*a*, Śivabhōgasāram 21*a*, Tanippāḍal 61*a*.

A collection of 53 stanzas composed by various authors in praise of Tirukkuṛaḷ and its author Tiruvaḷḷuvar

Complete.

Beginning:

அசரீரி.

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டொருத்தகு நற்பலகை யொக்க—விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

*　　*　　*　　*

கபிலர்.

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படிதான்-மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

End:

ஆலங்குடி வங்கனார்.

வளளுவர் பாட்டின் வளமுரைக்கின வாய்மடுகுந்
தெளளமுதின் றீஞ்சுவையு மொவ்வாதாற்—றெள்ளமுத
முண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் முப்பானை மகிழ்ந்து.

திருவள்ளுவமாலை முற்றும்.

ஆக 53.

(கு-பு.)—

இந்நூல், திருவளளுவரையும் திருக்குறளையும் பாராட்டிப்பாடிய 53 வெண்பாக்களையுடையது; இவற்றுள் முதலிலுள்ள நான்கு வெண்பாக்கள் முறையே அசரீரி, நாமகள், இறையனார், உக்கிரப்பெருவழுதியார் என்பவர்களாலும் மற்ற 49 வெண்பாக்களும் கபிலர்முதலிய சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர்களாலும் பாடப்பட்டவை; இந்நூல் திருக்குறளின் சிறப்புப்பாயிரமாதலின் இங்கே சேர்க்கப்பட்டது; இந்தப் பிரதியில் நூல பூர்த்தியாயிருக்கிறது; உரையுடன் அச்சிடப் பெற்றிருக்கிறது.

No. 166. திருவள்ளுவமாலை.
TIRUVAḶḶUVAMĀLAI.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 14. Lines, 8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 162*a*. The other work herein is Nāladiyar 1*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோனறது; பூர்த்தியுடையது.

No. 167. நல்வழி.
NALVAḺI.

Substance, palm-leaf. Size, $16\frac{3}{4} \times 1\frac{1}{8}$ inches. Pages, 24. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 4*a*. The other work herein is Tirumūlarvaidyam

A short poem appreciative of the rules of good conduct in 40 stanzas : by Auvaiyār.

Complete.

Beginning :

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்படைப்பேன்-கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்ததவம்
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொரு—ளெண்ணுங்கா
லீதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந
தீதொழிய நன்மைசெயல்.

End :

நன்றென்றுந் தீதென்று நானென்று தா[ய] (ன)ன்று
மன்றென்று மாமென்று மாகாதே—நின்றநிலை
தானேதா னாகத் துவந்தால் சம்பறுத்தா ராகைக்குப்?
போனவா தேடும் பொருள்.

முற்றும்.

(கு-பு.)—

இஃது, ஔவையாரால் இயற்றப்பட்டது ; 40 செய்யுட்களையுடையது ; அச்சுப்பிரதியிலுள்ள 40 செய்யுட்களில, சில செய்யுட்களுக்குப் பிரதியாக வேறுசெய்யுட்கள் 11 இதிற் காணப்படுகின்றன. அவைகளின் நம்பர் 11, 12, 13, 20, 23, 25, 26, 28, 32, 34, 36.

No 168. நல்வழி.

NALVALI.

Substance, palm-leaf. Size, 17½ × 1⅛ inches. Pages, 22. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Contains 44 stanzas of which only 30 stanzas are found in the printed editions; of the remaining 14 stanzas 7 are found also in the MS. described under the previous number, and 7 are new ones.

Same work as the above.

(கு-பு.)—

இது பெரும்பாலும் முன் பிரதிபோன்றது; இதில் 44 பாடல்கள் உள்ளன; அவற்றுள் அச்சுப் பிரதியிற்காணப்படும் பாடல்கள் 30. இல்லாத பாடல்கள் 14; அப்படியிருந்தும் முன் பிரதியிலுள்ள வேறு பாடல்கள் ஏழு; அதிலில்லாத வேறுபாடல்கள் ஏழு; அவற்றின் நம்பர் 12, 19, 22, 26, 31, 32, 33, 36, 37, 38, 39, 41, 43, 44

No. 169. நன்னெறி.
NANNERI.

Pages, 7 Lines, 9 on a page.

Begins on fol. 87*a* of the MS. described under No. 81

By Sivapprakāsasvāmi of Turaimaṅgalam. This work has been printed.

Complete.

A didactic poem similar to the above.

There are, however, some additional stanzas in this manuscript, which are not found in the printed editions

Beginning:

குவளைத் தந்தக் களிற்றை [வென்று] (ணா)வளைத்துறக்
கவளத்தந்தக் கரண மிருத்திய
பவளத் தந்தப் படிவ னிகா தொளிர்
தவளத் தந்தத் தலைவனை வாழ்த்துவாம்.
என்று முகமனியம்பா தவர்கண்ணுறுந்
தென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழுவோ
நாவிற் குதவு நயந்து. (1)

End:

பொன்னணியும் வேந்தர் புனைதா(ர)ப் பெருங்கல்வி
மன்னு மதிஞரைத்தா மறவேவ்வார் - மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங் கண் ணொக்குமோ காண். (40)

(கு-பு)—

திருச்சிற்றம்பலம்.

இது 40 வெண்பாக்களையுடையது; இதனை இயற்றியவர் துறைமங்கலம் சிவப்பிரகாசஸ்வாமிகள்; இந்தப்பிரதியில் நூல் பூர்த்தியாயிருக்கிறது; அச்சுப்பிரதியிற் காணப்படாமல் இதிற்காணப்படுகிற காப்புச் செய்யுள், இந்நூலாசிரியரியற்றிய கூவப்புராணத்திலுள்ளது.

No. 170. நாலடியார், உரையுடன்.

NĀLAḌIYĀR WITH COMMENTARY.

Pages, 220. Lines, 24 on a page.

Begins on fol. 1*a*, of the MS. described under No. 126.

This is said to be a collection of 400 choice stanzas selected from 8000 stanzas composed by 8000 Ksapaṇakas or Jaina ascetics

The poets of the Kaḍaiccaṅgam (கடைச்சங்கம்) have mentioned this work as the first of the 18 Kīḻkkaṇakku varieties; and as these poets are said to have lived about 1800 years ago, this work should have existed before that period. Certain Kṣapanakas are said to have been the authors of the work

Padumanār is said to have divided this work into three parts, each being known as a பால் and depending upon the subject matter

For extracts, *vide* pages 230 and 231 of Report No. 1. This has been printed

(கு-பு.)—

இது, பதினெண்கீழ்க்கணக்கினுள் முதலாவது; அறம் பொருளின்பங்களைப்பற்றிக்கூறுவது; 400 வெண்டாககளையுடையது; சமணமுனிவர் பலரால் இயற்றப்பட்டுப் பதுமனாரால் பால்முதலியனவகுக்கப்பட்டது; வையையாநதியில் இந்நூல் எதிரேறிய சிறப்புடையதென்பர்; இந்தப்பிரதியில் இந்நூல் பொழிப்புரையுடன் பூர்த்தியாகவுள்ளது; அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 171. நாலடியார், உரையுடன்.

NĀLADIYĀR WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $14\frac{1}{2} \times 1\frac{1}{2}$ inches. Pages, 264. Lines, 7 on a page Character, Tamil. Condition, fair. Appearance, very old.

Complete

Same work as the above But the commentary for the last 5 stanzas is wanting.

(கு-பு.)—

இதில், இந்நூல் வெண்பாக்கள் நானூற்றில் முன்னுள்ள 395 வெண்பாக்கள் உரையுடனும் மற்றவை உரையின்றியும் இருக்கின்றன; இது முன்பிரதிபோன்றது; சில ஏடுகள் ஒடிந்தும் சில ஏடுகள் செல்லரிக்கப்பட்டும் உள்ளன.

No. 172. நாலடியார், உரையுடன்.
NĀLAḌIYĀR WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $14\frac{1}{4} \times 1\frac{1}{8}$ inches Pages, 292. Lines, 6 on a page. Character, Tamil. Condition, Injured. Appearance, old.

67th leaf is wanting.

Same work as the above; but some additional stanzas are found in the beginning.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; இதன் முதலிற்சில வெண்பாக்கள் அதிகமாகக்காணப்படுகின்றன; இதில் 67-வது ஏடு இல்லை.

No. 173. நாலடியார், பதவுரையுடன்.
NĀLAḌIYĀR WITH MEANING

Pages, 321 Lines, 8 on a page

Begins on fol. 1*a*, of the MS. described under No. 166.

The meaning is given word for word.

Complete.

For extracts, see M. Seshagiri Sastri's Report No. 1, page 232 to 237.

(கு-பு.)—

இது பூர்த்தி யுடையது.

No. 174. நாலடியார், பதவுரையுடன்.
NĀLAḌIYĀR WITH MEANING.

Substance, palm-leaf. Size, $14 \times 1\frac{1}{4}$ inches. Pages, 282. Lines, 7 on a page. Character, Tamil Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.) —

இது முனபிரதிபோன்றது; பூரத்தி யுடையது.

No. 175. நாலடியார், பதவுரையுடன்.

NĀLAḌIYĀR WITH MEANING.

Substance, palm-leaf Size, 13 × 1½-⅛ inches, Pages, 320. Lines, 7–8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, very old.

Complete.

Slightly different in reading from the above

(கு - பு.)—

இந்தப்பிரதியில் நூல பூர்த்தியாயிருக்கிறது; முனபிரதிக்கும் இதற்கும் உரையிற் சில பேதமுண்டு.

No. 176. நாலடியார்.

NALAḌIYĀR.

Pages, 134. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 163.

Complete.

Text same as in the above.

(கு - பு.)—

இது முனபிரதிபோனறது; இதில் மூலமட்டும் உள்ளது; பூர்த்தி யுடையது.

No. 177. நீதிசாரக்கரு.

NĪTISĀRAKKARU.

Substance, palm-leaf. Size, 17 × 1¼ inches. Pages, 67. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

A work on the duties and conduct of a king.

Complete.

Beginning :

அறிவாகி யகிலமெலா மவையினகா ரணமா
யானந்த மயமாகிப் போக்குவரவின்றிக
குறியாகி நிதநியமா யருவமாகிக்
குணமாகி யசலமாய்ச் செல்கதியு மாகிச்
சிறிதாகிப் பெரிதாகுஞ சித்த சித்துத்
தெளிவுறவே தெளிந்தோர்க [ளுபளி] (டெளி) ந்தவேத
நெறியாகி நின்றபத கமலம் போற்றி
நீதிசாரக கருவை நிகழ்த்து வேனே.

அரியதத் துவமூனறு நடுநினற வித்தை
யதுதெளிந்த வறிவினர்கரு மற்றதெலாந் தெளியு
அரியவித்தை தனக்குநா லங்க மாகு
மதுவிரயி நடக்கினற நெறியுய . .
அரியவினை யைந்திலட்சண ? வியல்புதனை யறிதல
அருங்கல்வி நூறுகருத் திறம தாகும்
அரியவினை மாறுபட நடப்ப தெல்லாம்
அனியாயப் பகடியெனும் பொய்யவல நூலே.

End :

அறியுலக வழுகருண்மைத திறமு நாடி
யறிவினர்கள் கருத்துணமைக் கருவு நாடி
பறிவிலிகள் பலவினது கருவு நாடி
யானபுன ருத்தியின்றிப் பழமை நாடி
யறிபாரம் பரைநீங்கா வண்ண நாடி
யருங்கலைகாற் பொருடொழிலுக கலங்கார நாடி
பறியுத்திப் பிரமாணந தவறுமை நாடி
யருநீதிப் பொருள்விளகக மறைந்த தாமே. (8)

(கு - பு.)—

இஃது, அரசநீதியைத் தெரிவிப்பது; செய்யுள்நடை சிறந்ததன்று; 66 விருத்தங்களை யுடையது; இந்தப்பிரதியில் நூல் பூர்த்தியாக

No. 178. நீதிசாரககரு.

NĪTISĀRAKKARU.

Substance, paper. Size, 13¼ × 8 inches. Pages, 18. Lines, 25 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 78*a*. The other works herein are, Jñānamatiyullan 1*a*, Nītisāranubhavattiraṭṭu 27*a*, Appaiyanāyakkan Vaṁśāvaḷi 38*a*, Daivaccilayanviralividutūtu 87*a*.

Same work as the above.

Complete.

(கு - பு.)—

இது முன்பிரதிபோன்றது; பூர்த்தி யுடையது.

No. 179. நீதிசாரம், உரையுடன்.

NĪTISĀRAM WITH COMMENTARY.

Pages, 37. Lines, 23 on a page.

Begins on fol. 115*a* of the MS. described under No. 126.

This is a metrical rendering in Tamil of the Sanskrit work of the same name.

By Mūkkappan.

Beginning:

அனைத்துல கெங்குந் தானு யமரர்கோன் றேவ னாகி
நினைத்தவ ருளத்தி னித்த நேயமாய் நெடுமால் பாத
மனத்தினி லிருத்தி முன்ன மறைவல்லோ ருரைத்தநீதி
யினத்தினிற் றிரட்டியுள்ள சாரமா யியம்ப லுற்றேன்.

எ-து, சர்வலோக ஈசுவரனுமாய்த் தேவர்களுக்கெல்லாந் தேவனுயிருந்துள்ள ஸ்ரீ புருஷோத்தமனை நமஸ்கரித்து, சர்வ சாஸ்திரங்களிலு மெடுத்துத்திரட்டி, இப்படியிருந்துள்ள நீதிசாரத்தினுடைய திரட்சிதனைச் சொல்லுகிறேனென்றவாறு (1)

நன்று(தா)ன் றீதா ளுலு மவரவர் நயந்து த[ன்ன] (ம்மா)ற்
பண்ணிய பாவ நன்மை பலித்தவ ரனுப விப்பார்
சென்றிடு நூறு கற்பஞ் செல்லினுந் தவிர்ந்தி டாது
அன்றுசெய் யனுபோ கங்க ளனுபவித் திடவும் வேணும்.

எ-து நன்றேயாகிலும் தீதேயாகிலும் த[ன்ன] (ம்மா) ற் பண்ணப் பட்ட புண்ணியபாவ மிரண்டும் தா[னே] (மே) அனுபவிப்பார்கள். ஆதலால் நூறுகோடி கற்பஞ் சென்றாலும் அனுபோகந்தவி[ரு]ராது. எ-று.

End :

அருமறை போர்கண் முன்ன மமைத்திடு வடநூ றன்னைப்
பெருமையாப் பாரி(வ) யானும் பேர்பெற வுரைத்த நீதி
திருவரை யப்பனமைந்தன் மூக்கப்பன் செய்த பாட
லுரைபெற வுரைத்த நீதி கறறவ ரும்பராவர். (99)

ஆதிமா லயனும் வாழ்க வருந்தவ முனிவோர் வாழ்க
வேதசா(த்) திரமும் வாழ்க விண்ணுல கோரும வாழக
நீதிசா ரங்கள் வாழ்க நீ(ணி)லத் தோரும வாழக
போதனை தமிழ்சகு வல்ல புலவர்கள் வாழவர் தாமே. (100)

கேவிலகாயம், கண்டாயசபாணி கணே

திருச்சிறமடலம்.

(கு - பு.)—

இது, வடமொழியிலுள்ள நீதிசாரதகினின்றும் மொழிபெயர்ககப பெற்றது; இந்நூலின் 99 - வது செய்யுளால மூக்கப்பன் என்பவரால் செய்யப்பட்டதென்று தெரிகிறது; செய்யுள்நடை சிறந்ததன்று; 56-ம் பாடலிலும் 65-ம் பாடலிலும் முன் மூன்றடிகளும், 71, 72, 73, 74 - ம் பாடல்களும் அவற்றி னுரைகளும், 90 ம் பாடலின முன மூனறடிகளு ம் இந்தப்பிரதியில் இல்லை.

No. 180. நீதிசாரம், உரையுடன்.

NĪTISĀRAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 16¼ × 1 inches. Pages, 43. Lines, 5 on a page. Character, Tamil Condition, good. Appearance, old.

Contains only 52 stanzas.

Same work as the above.

On fly-leaf.

பருதி மதியிலகும் பார்மிசையோர்க கெல்லாந்
தருமநெறி நீதிதனைச் சாற்ற[வே] - கருதுயரந்
துங்கரவே ளுத்துயர்ந்த சுந்தரப்பொற செஞ்சடையிற்
கந்தர்பதஞ் சந்ததமே காப்பு

குருபாதமே கெதி.

(கு - பு.)—

இது முன்பிரதியைப்போனறது ; 52 செய்யுட்களே இதில் உள்ளன ; முதலில் 1 காப்புச்செய்யுள புதிதாக உள்ளது ; 12-வது ஏடு

No. 181. நீதிசாரானுபவத்திரட்டு.
NĪTISĀRANUBHAVATTIRAṬṬU.

Substance, palm-leaf. Size, $12\frac{1}{4} \times 1\frac{1}{3}$ inches. Pages, 118. Lines, 4 on a page Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete

A didactic work on morals and good conduct: by Nāgai Sattiyajñāni - (நாகை—சத்தியஞானி). It is divided into 2 parts, known as Manidariyalpu (மனிதரியல்பு) containing 46 stanzas, and Nītiyiyalpu (நீதியியல்பு) containing 74 stanzas.

Incomplete.

Beginning:

அறிவாகி யலகிலுயிர் தொறுநிறைந்த
நீதியது பேதமும்பேத
முறையான வேதத்தின் முடிவெல்லா
மறிந்துநாமு குணுகுண பேதங்கள்
குறியாகத் தெளிந்துண்மை குறித்தோர்க
முளத்துமவர் புறத்துமுாநின்ற
நெறியாகு மொருவனிரு பதமெனது
சிரத்ததமரு ளுளத்து நிலையாமே.

* * * *

அறிவனளித் தனவெல்லா மொன்றிறுல்
வகையுண்டா மதின்விபரமதிலே

மறைபுரியு மனிதருக்குப் பிறப்பிறப்புப
பொசிப்புப் போகங்களொக்குமெனினுங்
குறியறியுங் குணத்தாலே நால்வகையுண்
டெனவுரைத்தார் குறிக்கொளுநன்மேலோர்
முறையிதனை யறிந்தவர்களே கருமநன்று
மறியார்க்குப் பிசகுமாங்கருமம்.

அறியவரு சகாத்தந்தா னாயிரத்தி
யெழுநூற்றி யோரொருபதின்மே
லறிவுக்கே யுரிமையா நீதியது
தொகைவகையை முழுதுநேராய்ந்தே
யறிவிலே வலியரன்றி யெளியார்க்கும
பொருள்விளக்க மாம்வண்ணநாடி
யலைகடல்சூழ் புவனியிசை நாகைசத்தி[ய]
ஞானியமைந்தனனீதியன்றே.

(கு-பு.)—

இது. மனிதரியல்பு நீதியியல்பு என்ற இரண்டுபிரிவுகளை யுடையது; மனிதரியல்பிலுள்ள செய்யுட்கள் 16; நீதியியல்பிலுள்ளசெய்யுட்கள் 74; பலநீதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன; செய்யுள்நடை சாதாரணமானது; இறுதிச் செய்யுளால், இந்நூலை இயற்றியவர் நாகைச் சத்திய ஞானி யென்பதும் இந்நூல் சகாப்தம் 1710-ம் ௵த்தில் இயற்றப்பட்டதென்பதும் தெரிகின்றன; இந்தப்பிரதியில் இந்நூல் பூர்த்தியாயிருக்கிறது, 9, 26, 46, 52 இவ்வெண்களையுடைய ஏடு இவ்விரண்டு இருப்பதால் இதிலுள்ள ஏடு 63.

No. 182. நீதிசாரானுபவத்திரட்டு.

NĪTISĀRĀNUBHAVATTIRAṬṬU.

Pages, 21. Lines, 28 on a page.

Begins on fol 27*a*. of the MS. described under No. 178.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; பூர்த்தி யுடையது

No. 183. நீதித்திரட்டு.

NĪTITTIRAṬṬU.

Substance, paper. Size, 13⅜ × 8¼ inches. Pages, 319. Lines, 23 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Incomplete.

This is a collection of didactic stanzas selected from various works.

Beginning:

அறத்துப்பால்.

கடவுள்வாழ்த்து.

2. மதிமனனு மாயவன் வாண்முக மொககுங்
கதிர்சேர்ந்த ஞாயிறு சககர மொககு
முதுநீர்ப் பழனத்த தாமரைத் தாளி
னெதிர்மலா மறறவன கண்ணொககும் பூவைப
புதுமல ரொக்கு நிறம்.

நான்மணிககடிகை

End:

1021. பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே
பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலை பொருதநின் மணநகம ழகல
மகளிர்க கல்லது மலைப்பறி யலையே
நிலந்திறம் பெயருங் காலை யாயினுங்
கிளந்த சொன்னீ பொயப்பறி யலையே

* * * *

நனந்தலை யுலகஞ் செயதநன் றுண்டெனி
னடையெடு பறியா வருவி யாபப
லாயிர வெள்ள ஊழி
வாழியாத வாழிய பலவே.

பதிற்றுப்பத்து.

வாழ்த்து முறறும் ஆக 1476.

(கு-பு.)—

இஃது, ஒவ்வொரு விஷயத்தையும் பற்றிப் பல நூல்களிற் சொல்லப்பட்டிருக்கும் பாடல்களால் தொகுக்கப்பெற்றதொரு நூல்; பல அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; மிக்க உபயோகமானது; இந்தப்பிரதியில் சில பாடல்களில்லை.

No. 184. நீதிநெறிவிளக்கம், பதவுரையுடன்.

NĪTINEṚIVIḶAKKAM WITH MEANING.

Pages, 102. Lines, 8 on a page.

Begins on fol. 44*a* of the MS. described under No. 150.

Complete.

A didactic poem similar to Kuṛaḷ in nature and aim, probably intended to serve as an introduction to the study of that classic.

Text by Kumāraguruparaswāmikaḷ, and commentary by Sabhāpati Mudaliyār of Conjeeveram.

For Extracts see pages 240 and 241 of M. Seshagiri Sastri's Report No. 1.

(த-பு.)—

இந்நூல் குமரகுருபரசுவாமிகளாலும், உரை காஞ்சீபுரம் சபாபதி முதலியாரவர்களாலும் செய்யப்பட்டன ; இந்தப் பிரதியில் மூலமுமுரையும் பூர்த்தி யுடையன.

No. 185. நீதிவெண்பா, உரையுடன்.

NĪTIVEṆBĀ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 15 × $1\frac{1}{8}$ inches. Pages, 47. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein are, Pūjāvidhi 25*a*, Paṭṭaṇattār Pāḍal 26*a*, Aṣṭapuspam 47*a*, Śanīśvarastōttiram 49*a*.

Complete.

This is a work on morals and good conduct, and consists of 100 stanzas.

The leaves are of different size.

The transcription of this manuscript was completed on the 4th of Arpiśi in the year Saumya.

This work has been printed.

Beginning :

முதுணர்ந்தோ ரோதுசில முதுரையைப் பேதையே
னீதிவெண்பா வென்று நிகழ்த்தினேன்—ஞதிபரன்

வாமாங் க(ஸ்ஸ)தன் மணியுதரம் பூத்தமுதற்
கோமான் பெருங்கருணை கொண்டு.

என்பது, முதிர்ந்த அறிவுடைய ஞானவான்கள் . . . விக்கி னேசுவரருடைய கிருபையினாலே தமிழ் செய்கின்றேன் எ-று.

தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமறிதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தனவு மெண்ணிரோ நல்லோர்க
ளெங்கே பிறந்தாலு மென்.

எ-து, தாமரை சேற்றிலே முளைக்கும், பொன் மண்ணிலே பிறக்கும், முத்து சிப்பியிலே பிறக்கும், சவரம் மிருகத்தின்வாலிலே முளைக்கும், கோரோசனையும பாலும் பசுவின் வயிற்றிலே பிறக்கும், பூவிலே வண்டின் வாயெச்சில்பட்டு வரப்பட்டது தேன், பட்டு சிலந்திப் பூச்சியி(னுடைய) பிட்டத்தின் வாயிலேபிறக்கும், சவ்வாது பூனையி(னுடைய) பிட்டத்திலே பிறக்கும், நெருப்பு கல்லினும் மரத்திலும் பிறக்கும் . . . . பிறந்த இடங்கள் அசுசியென்று இகழார்கள் எ-று (1)

End:

நீதிநெறி . . . .
ஆதிபரஞ் சோதி யவர்பாத—மேதினியிற்
பூசித்த வர்க்கும் பொருளறியக் கேட்போர்க்கும்
வாசித்த வர்க்குமோக்ஷ மாம்.

எ-து, நீதிநெறி தப்பாத லோகத்திலே இருக்கப்பட்டபேருக்கும் பிரபஞ்சத்தாருக்கும் பரமசிவனைப்பூசித்தவர்க்கும் இந்த நீதிசாரம் படித்தபேருக்கும் இந்த பொருளைக்கேட்டபேருக்கும் கர்த்தாவாகிய பரமேசுவரன் மோக்ஷகதி அடைவிப்பான் எ-று (100)

சவுமிய ஹூ ஐப்பசி ௴ 4உ முடிந்தது.

(கு-பு.)—

இது, நூறு வெண்பாக்களையுடையது ; செய்யுள் நடை சிறந்தது; உரை சிறந்த நடையுடையதன்று ; இஃது உரையுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது ; இந்தப்பிரதி பூர்த்தி யுடையது.

No. 186. நீதிவெண்பா. உரையுடன்.

NĪTIVEṆBĀ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 16¼ × 1 inches. Pages, 90. Lines, 5 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol 1*a*. The other works herein are—Āyirattettu-śivālayappāḍal 45 *a*, Tanippāḍal 48*a*.

Contains only 99 stanzas.

Same work as the above, but there is some difference in the commentery.

துன்முகி ௵ தை மீ 3உ குருவார நாள் நீதி வெண்பா சிவலிங்கம் சங்கரநாராயணனுக்கு எழுதுவிச்சு பாடம்சொலலுயிச்சது.

(கு-பு.)—

இந்தப்பிரதியில் 99 பாடல்கள் இருககினறன; முனபிரதிக்கும் இதற்கும் உரையிற் சில இடத்துப்பேதமுண்டு.

No. 187. நீதிவெண்பா, உரையுடன்.

NĪTIVENBĀ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{4} \times 1$ inches. Pages, 102. Lines, 4 on a page Character, Tamil. Condition, good. Appearance, old.

Contains only 87 stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிறதிபோன்றது; இநதப்பிரதியில் 87 டாடல்கள் உள்ளன; 32-வது ஏடும் 13-வது ஏடும் இல்லே.

No. 188. நீதிவெண்பா, உரையுடன்.

NĪTIVENBĀ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{2} \times 1\frac{1}{8}$ inches. Pages, 50. Lines, 5 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோனறது; இதில் 76-வது பாடல் ஈறுகவுள்ள பாகம் இருக்கிறது; அவற்றுள்ளும் 22 முதல் 6 ஏடு இல்லாமையால் 47 கருமேல் 20 பாடல்கள் இல்லே.

No. 189. நெஞ்சறிவிளக்கம்.

NEÑJAṚIVIḶAKKAM.

Substance, palm-leaf. Size, $12\frac{1}{4} \times 1\frac{3}{8}$ inches. Pages, 28. Lines, 6–7 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

By Gaṇapati-dāsa.

The stanzas are all in the nature of an apostrophe to the mind, and aim at self-discipline and moral self-culture.

Complete.

Beginning:

வஞ்சக மனத்தி னுசை மாற்றிய பெரியோர் தாளிற்
கஞ்சமா மலரிட் டேத்துங் கணபதி தாசன் சொன்ன
நெஞ்சறி விளக்க மான நீதிநூல் நூறும் பாடக
குஞ்சர முகத்து மூலக குருபரன் காப்ப தாமே.

*   *   *   *

தந்தைதாய் நிசமு மல்ல சனங்களு நிசமு மல்ல
மைந்தரு நிசமு மல்ல மனையவ ணிசமு மல்ல
விந்தமெய் நிசமு மல்ல வில்லற நிசமு மல்ல
சுந்தர நாக நாதர் துணையடி நிசம்பார் நெஞ்சே.

*   *   *   *

End:

கனகமா மணிசேர் மூலக் கணபதி தாச னுனே
னினைவினு லறிந்து செப்பு நெஞ்சறி விளக்க நூறும்
வினவியே படிப்போர் கேட்போர் வினையெலா மகன்று மெய்யும்
பனமெனு மோட்ச நாலாமபதம்பெற்றுப் பரத்துள் வாழ்வார்.

நெஞ்சறி விளக்கம் முற்றும்.

(கு-பு.)—

இது, முதலிலும் இறுதியிலுமுள்ள செய்யுட்களால் கணபதி தாசரென்பவரியற்றியதென்று தெரிகிறது. இவர் இந்நூலிலுள்ள செய்யுட்கள்தோறும் மனத்தை நோக்கி, நாகநாதரை வணங்கு என்று சொல்லியிருக்கிறார். செய்யுள் நடை சாதாரணமானது; இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாய் இருக்கிறது.

No. 190. பஞ்சதந்திரம்.

PAÑJATANDIRAM.

Substance, palm-leaf. Size, $16\frac{3}{4} \times 1\frac{1}{8}$ inches. Pages, 244. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

This is a Tamil rendering of the Sanskrit work of the same name. This has been printed.

Complete

Some leaves in the beginning and in the middle are broken.

Beginning:

திருவளர் கமல வாவித் திகழ்புலி யூரிற் செம்பொன்
மருவிய பொதுவி லாடும் வள்ளலைப் பணிந்து போற்றிப்
பெருகிய வன்பாய் நீதி பேரறி வுடைய தான
கருதிய பஞ்ச தந்திரக் கதையையான் கூற லுறறேன்.

பாட்லீ புரத்து மன்னன் பகதெரி சனன்றன் பாலர்
மூடராயத் திரிதலாலே யவர்கண்மேன் மோக நீங்கி
வாடியிங் கிவர்களாலே பலனென்ன மலட்டா வொப்பாய்ப்
பீடிலர் பிறந்தார் மன்னோ பிள்ளையெண் ணிக்கைக் கென்று(ன)

End:

கூறினன் சோம சன்மா கோவிளங் காளைமைந்தர்
தேறினு ருபாயநீதித் திறமெலா மறிந்து மற்றும்
வேறுள கதையு . . ந்தார் வேந்தனு மவர்கண் மீதின்
மாறுகொண் டதுவு நீங்கி மனமகிழ்ந் திருந்து வாழ்ந்தார்.

62. அஞ்சுதந் திரத்திலுள்ள ஆகமதறிய வோத
வி(ன்) சொலைக் கேட்டு மைந்த ரிகலெலா மறிந்தாரப்போ.
வெஞரமர் தன்னி லேகி மீண்டிட நினைவுதோன் றும்
பஞ்சதந் திரத்தைப் பார்த்தாற் பலவகை தெரியலாமே.

அசம்பிரேட்சியகாரியத்துவம் முற்றும்.

	Page	Stanzas.
மித்திரபேதம்	1	215
சுகிர்லாபம்	43*b*	87
சந்திவிக்கிரகம்	57*b*	140
அர்த்தநாசம்	90*a*	41
அசம்பிரேக்ஷியகாரிதவம்	102*a*	62
		545

(கு-பு.)—

இது, 545 செய்யுட்களையுடையது; செய்யுள் நடை சாமானியமான து; அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப்பிரதியில் நூல் பூர்த்தியாகவுள ளது; முதலிலும் இறுதியிலுமுள்ள பல ஏடுகளின் அடிப்பக்கங்கள் முறிந்துபோய்விட்டன.

No. 191 பரத்தையர்மாலை.

PARATTAIYARMÂLAI.

Substance, palm-leaf. Size, 13 × 1 inches. Pages, 72. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Fol. 34 is wanting.

This work depicts the harm arising to one from keeping the company of courtezans and public women.

On fly-leaf.

சுப்பராயரவர்களுடைய பரத்தையர் மாலையென்று அறியவேண் டுவது.

Beginning:

காப்பு.

பொய்சொல்லி வாழும் பொதுமடவா ராசைதனை யநீ
மெய்யென்று நம்பி மெலியாதே—சைவத்
திருநீல கண்டருள் செல்வப்பிள் ளையை
யொருபோ தெனினுநெஞ்சே யோது.

நூல்.

சீர்கொண்ட மாணிக்க வல்லி ரதன
செயவல்லி நயவல்லி சித்ரவல்லி
யேர்கொண்ட சுகவல்லி மேகவல்லி
யியல்கொண்ட மகராச வல்லி யென்னும்
பேர்கொண்டு காமுகரை மயக்கி யாசைப்
பித்தளைய வைத்தபெரும் பிணங்க ளான
வார்கொண்ட முலைப்பரத்தை மாரை நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே.

பூமாலை மணிமாலை முத்து மாலை
பொன்மாலை மலர்மாலை புனிதமாலை
பாமாலை சர்க்கரைகற் கண்டு சீனி
பதுமரா கமபவளஞ் சாந்து மோகக
காமேவுங் கத்தூரி யெனும்பேர் கொண்டு
காமுகரைப் பணமபறிக்கக் கற்ற மாய
மாமாய வேசையரை மறந்து நீங்கி
மறைக்காட்டி லம்மானை வணங்கு வீரே.

End :

டகர்பழமபுண் ணுளிபரி காரி யெனனும்
பழமொழிபோற் பரத்தை(யர்பாற் கூடிக) கண்ட
சுகம்போது மெனறு மனத் துயரங் கொண்டு
சோர்மதன சிகாமணிகூற குருகு மிந்தத்
தகவில் பரத் தையர்மாலை கேட்போ ரெல்லாஞ்
சாலமிகச் செயும்பரத்தை மாரை நீங்கி
மகிமைபெறு மறைக்காட்டம் மானை வாழ்த்தி
மனையறமவ ழாதினிது வாழ்ந்துய வாரே. (101)

Colophon :

பரத்தையர் மாலை முற்றிற்று.

பராபவஹு சித்திரைமீ 3-ம் தேதி எழுதி முடிந்தது.

(கு-4).—

' இது, "மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே" என்ற மகுடமுள்ள விருத்தச்செயுட்கள் நூறும் முதலிற் காப்பு வெண்பா ஒன்றும், இறுதியில் நூற்பயன் விருத்தமொன்றும் அமையப்பெற்றுள்ளது; விஷயம், வேசையர் மயக்கத்தில் அகப்படாதேயென்பது; அச்சிடப்

பெற்றிருக்கிறது; இந்தப் பிரதியில், 34-வது ஏடு இல்லாமையால் 95, 96 என்ற எண்களையுடைய பாடல்களில்லை. இந்தப் பிரதி சிதிலம்.

மறைக்காடு—வேதாரணியம்.

No. 192. பழமொழி, உரையுடன்.
PALAMOLI WITH COMMENTARY.

Substance, paper. Size, 10¼ × 7 inches. Pages, 406. Lines, 24 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Some leaves are injured in the middle.

This is one of the 18 Kīlkanakku varieties.

By Munruraiyarayanar, a Jaina.

Contains 400 stanzas, each of which has embodied in it some old proverbial saying

This work has not been printed.

Beginning:

உலகத்தின்கண் கெடுத்தற்கு (அ)ரிய குற்றத்தைக் கெடுத்துச்சிறிதும் ஒழியாமல் முழுதுமுணர்ந்தவன்பாதத்தைத் தமக்கு உரிமைப்பட ஆராய்ந்து உணர்ந்தவர்க்கு ஒக்கமே உளதாவது; பேருடம்பினையுடையனுதலின் பெரியது போன்று எ-று.

கல்லாதான கண்ட கழிநுட்பங் கற்றூர்முற
சொல்லுங்கால சோர்வு படுதலா—னல்லாய
வினுமுந் துருத வுரையில்லை யில்லை
கனுமுந் துருத வினை.

எ-து, கற்றுவல்லாதான் ஆராய்ந்து கண்ட மிக்கநுண்மையை, கற்றூர் முன தான் சொல்லுங்கால் சோர்வுபடுதலால் நல்லாய் வினுமுற்படாத செபபுமில்லை. கனுமுந்துருத வினைகளுமில்லை. ஆதலால் அவைபோலக் கலவி முந்துருத நுண்மை யுணர்வுமில்லை எ-று. (1)

End:

நாணின்றி யாகாது பெண்மை நயமிக்க
வூணின்றி யாகா துயிர்வாழ்க்கை—பேணுங்காற்
கைத்தின்றி யாகா கருமங்கள் காரிகையாய்
வித்தின்றிச் சம்பிரத மில்.

எ-து, நாணின்றிப் பெண்மைக்குணம் உளதாகாது. இனிய ஊண் இன்றி உயிர் வாழ்க்கை உளதாகாது. ஆராயுங்கால் கைப்பொருளின்றிக் காரியங்கள் உளவாகா. வித்தின்றி விளையும் விளைவுமில்லை எ-று. (400)

பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறுங்—கொண்டினிதா
முன்றுறை மன்னவ னான்கடியுஞ் செய்தமைத்த
வின்றுறை வெண்பா விவை.

திருச்சிற்றம்பலம்.

முன்றுறையர்செய்த பழமொழி நானூறு முற்றிற்று.

(கு-பு).—

இது, பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று; பண்டைக்காலத்து வழங்கிய பழமொழிகள் நானூற்றினைத் தனித்தனியே இறுதியிற் பெற்ற நானூறு வெண்பாக்களையுடையது; இதனை இயற்றியவர் ஜைன மதத்தினராகிய முன்றுறையரையனார். இந்தப் பிரதியில் காப்புச் செய்யுளொழிந்த செய்யுட்களும் உரையும் உள்ளன. 223 ஆவது செய்யுளுக்குமேல் 314 ஆவது செய்யுள் வரையுள்ள கடிதங்கள் மிகவும் ஜீர்ணமாயிருக்கின்றன. இவ்வுரை இன்னம் பதிப்பிக்கப்படவில்லை.

No. 193. பழமொழி விளக்கம்.

PAḶAMOḶI VIḶAKKAM.

Pages, 40. Lines, 5 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 131.

This is a didactic poem, each stanza of which contains in it a proverbial saying.

By Śāntaliṅga-kavirāyar.

Incomplete.

சீர்கொண்ட கற்பகத்தை வாதாவி விநாயகனைத்
தில்லை வாழுங்
கார்கொண்ட கரிமுகனை விகடசக்ர கணபதியைக்
கருத்துள்வைத்துப்
பேர்கொண்ட ஞானநா யகிபாகர் நீணெறி யெம்
பெருமான் மீதி
லேர்கொண்ட நவகண்ட மிசைந்தபழ மொழிவிளக்க
மெத்த ? தானே (1)

* * * *

தன்மமதே செயவேணுந் தண்டலைநீ ணெறி
யாரே தயவு செய்வார்
வன்மவினை செயவேண்டாம் பொய்வேண்டாம்
பிறரையொன்று வருத்த வேண்டாங்
கனமநெறி வரவேண்டாம் வேண்டுவது பிறர்
க்குபகாரஞ் செயத
னன்மைசெய்தார் நலம்பெறுவர் தின்மைசெய
தார் தின்மைபெறறு நலிவர் தாமே. (4)

மறறெவரே தமிழ்பாடி நாட்டவலலர் ந(க்)கீரன
வலியனுகி
வெற்றிபுனை மீனுட்சி சுந்தரநா யகரெடுத்து
விளமபும போதிற
பற்றுளதண் டலைவாழுங் கடவுளெ(ன்று)ம்
பாராமற பயப்ப டாம
னெற்றிவிழி காட்டுகினுங் குறறமே குறறமென
திறுத்தினனே. (84)

கு-பு.)—
இது, தத்தம் இறுதியில் தனித்தனியே ஒவவொரு பழமொழி அமையப்பெற்ற நூறு விருத்தங்களை யுடையது; நூலாசிரியர், சாந்தலிங்கக் கவிராயர்; சோழநாட்டிலுள்ள "திருத்தண்டலைநீணெறி" என்னும் ஸ்தலத்தி லெழுந்தருளிய சிவபெருமானை முன்னிலைப் படுத்திச் செய்யப்பெறறது; நல்லநூல்; இந்தப்பிரதியில் 84 விருத்தங்களே உள்ளன.

No. 194. புறத்திரட்டு.

PURATTIRATTU.

Substance, palm-leaf. Size, 8¼ × 1 inches. Pages, 202. Lines, 6 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, very old.

Complete.

The stanzas herein are made up of selections from various works.

Beginning :

எண்ணிய வெண்ணிய செ[ய](வ)ய்தவ கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல் பணி வோர்க்கே.

*   *   *   *

மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப் – பின்னரு
மாதிரையா னிரையா னென்றென் றயருமா
லூர்திரைநீர் வேலி யுலகு.

முத்தொள்ளாயிரம.

மதிமனனு மாயவன் வாண்முக மொகக்குங்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கு
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளி
னெதிர்மலர் மறறவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரேயகரு நிறம.

நான்மணிக்கடிகை.

End :

நாளன்று போகிய புள்ளிடை தட்டப்
பதன்று புகருத்திறனன்று மொழியினும்
வறிது பெயர்கருவ ரல்லர் வெறிகொளப
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே.

இதுவுமது—

ஆக 417 ரு வாழுத்து.

கொடிவிடு முதலைவேற கூர்றக கணிச்சிக
கடிவிடு கொன்றையோன் காக்க-நெடிதலகிற
பூமலி நாவற் பொழிலகத்துப போய்நினற
மாமலைபோன் மன்னுக நீ.

வெண்பாமாலை.

பொருட்பால் ஆக 418. அறத்துப்பால முதலாக 2-ககு 613.

குமாரன் துணை.

(கு-பு.)—

இது - திருக்குறள, நாலடியார் இவைபோன்ற பாகுபாடுடையது; புறத்திரட்டென்றே வழங்கப்பெறறு வருகின்றது; "பிரசங்காபரண ம்" "சங்கத்தார் செய்த பிரசங்காபரணம" என முன் ஏடுகளில் நூத னமாக எழுதப்பெற்றிருக்கிறது; இதிலுள்ள பாடல்கள் பெரும்பா லும் சங்கச்செய்யுட்களி லுள்ளவைகளாகவே காணப்படுகின்றன; இந்தப பிரதியில், அறத்துப்பால் பாடல் 195 இல் 146 பாடல்களும் பொருட்பால் 418 பாடல்களு முள்ளன; 26 - வது முதல் 16 ஏடுக ளில்லை. இந்நூல் இதுவரையிலும் அச்சிடப்பட்டதன்று.

No. 195. மணவாள நாராயணசதகம்.

MAṆAVĀḶA NĀRĀYAṆA ŚATAKAM.

Substance, palm-leaf. Size, 17 × 1 1/16 inches. Pages, 103. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, new.

A poem in 100 stanzas inculcating rules of good conduct and morals.

By Narāyaṇa Bhāratiyār.

Complete.

Beginning:

காப்பு.

செந்திருவாழ் மார்பன் றிருவேங் கடசதகம்
பைந்தமிழா னீதிநெறி பாடவே—வந்தருளுங்
கார்முகமஞ் சங்கத்தான கைத்தா மரையணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு.

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ.

நூல்.

பூமேவு திசைமுகனை யுந்திதனி லீன்றதும்
புனிதவே தாகமமெலாம்
புருஷோத்த மன்றெயவ மெனபதும் பூசுரர்
பொருந்துமந் திரகன்மமுந்
தேமேவு மலர்மங்கை மார்பில்வளர் சீருஞ்
செகந்தனைக காத்தருள்வதுந்
தேவர்முதன் மருகசெந்து பகூழிசிலை மாமுஞ்
செழிககப் பதந்தருவதும்
பாமேவு பொருளலங காரஞ் சிறப்பதூஉம்
பலவிதமு நீயென்றதாற்
பரதெயவ முண்டென் றிருப்பார்க
ளைநநூல் படித்தவித மோதெரிகிலேன்
மாமேவு பைந்துளவ மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்கடராயனே.

End:

உனதுபாதம்போற்று மடியார்கள் சிந்தையி
லுகந்துநீ யென்று [மற] (முறை) வா

யுன்னிடந் திருமாத ரெண்மருஞ் சேர்வரவ
ருதவியா னிதிகள்சேருங்
கனநிதிகள்சேர்ந்ததாற் றனதன்வரு வானுடன்
கருணைபுரி நேயன்வருவான
காதலித் தானுமை வருவளவ னென்னையாற்
கந்தன்வரு வான் மருகனுற்
றனதுமா மனும்வருவ னரசன்வர வாலமரர்
சகலருங் கண்டுமெகிழ்வார்
தருமனு செழிக்குமருள் சேருமிஞ வன்றியே
தவமொன்று செயவேணுமோ
வனருக மடைந்தைவளர் களமூரில் வாழின்ற
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே (100)
ஒருமலை யெடுத்துமழை காத்தவட மலைதேவ
ருபயபத சேவைதனையே
யுளங்கொண்டு வெண்மணியில் வாழுழுத்தாரைய
னுதவு நாரணபாரதி
பொருமலை பெறுங்கனக யுதகங்கள் யாவும்
பொருந்துகட வனைபுவவோர்
புகழ் சபையி லெனது வேங் கடசதகநீதியும்
புகலான நீதியென்பார்
திருமலைநலான்சகர வர்த்திகுல பூஷணன்
திருவாய் மொழிப்ரபந்தம்
தினமுந் துதிக்கின்ற திருமலாசாரியன்
சேகரன் கருணாகரன்
மருமலை நிகர்த்தபுயன் மாடபூ சுரதீபன்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே (101)

முற்றும்.

(கு-பு.)—

சதகம்— நூறுபாடலாலாகிய நூல்; இந்நூல் காப்பு உள்பட 102 பாடல்களையுடையது ; திருவேங்கடமுடையானை முன்னிலைப்படுத்தி இயற்றப்பெற்ற நீதிநூல்; இதனை இயற்றியவர் நாராயணபாரதியார்; இந்நூலின் ஒவ்வொரு பாடலி னீற்றடியிலும் ' மணவாளநாராயணன்

மனதிலுறை . . . வேங்கடராயனே' என்று சொல்லியிருத்தலால், இது, மணவாள நாராயண சதகம் என்னும் பெயரை யுடையதாயிற்று; மணவாளநாராயணன்—களமூரிலிருந்தவனும் இந்நூலாசிரியருக்கு உபகாரஞ் செய்தவனுமாகிய ஒரு பிரபு; இந்நூலைப்பற்றிய சில வரலாறு இறுதியிலுள்ள பாடலால் அறிவிக்கப்படுகிறது; இந்தப் பிரதி பூர்த்தியுடையது.

No. 196. மணவாளநாராயணசதகம்.

MAṆAVĀḶANĀRĀYAṆA ŚATAKAM.

Substance, palm-leaf. Size, 17¾ × ⅞ inches. Pages, 114. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, a little old.

Same work as the above.

Two stanzas in the end are wanting.

(கு-பு.)—

இது முன்பிரதியை ஒத்திருக்கிறது; இதனிறுதியில் இரண்டுபாடல்கள் இல்லை.

No. 197. முதுமொழிக்காஞ்சி.

MUDUMOḶIKKĀÑJI.

Pages, 282. Lines, 7 on a page.

Begins on fol. 39*a*. of the MS. described under No. 86.

One of the 18 Kīḻkanakku varieties by Madurai Gūḍalūr Kiḻār (மதுரை கூடலூர் கிழார்).

Complete.

Beginning:

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை. (1)
காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல். (2)
மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை. (3)
வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை. (4)
* * * *

End:

இன்பம் வேண்டுவோன் றுன்பந் தண்டான்.
துன்பம் வேண்டுவோ னின்பந் தண்டான்.

ஏமம் வேண்டுவோன் முறைசெய றண்டான்.
காமம் வேண்டுவோ னின்பந் தண்டான். (10)

மதுரைக் கூடலூர் கிழார்செய(த) முதுமொழிக்காஞ்சி முற்றும்.

ஆகக் குறட்டாழிசை 100.

(கு-பு)—

இது பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று; சிறந்தபத்து முதலாகத் தண்டாப்பத்து ஈறாகவுள்ள பத்து அதிகாரங்களையுடையது; நூலாசிரியர் மதுரைக் கூடலூர் கிழார்; இந்தப்பிரதியில் நூல் பூர்த்தியாயிருக்கிறது.

No. 198. வாக்குண்டாம்.

VĀKKUNḌĀM.

Substance, palm-leaf. Size, 16½ × 1⅛ inches Pages, 17. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol 19*a*. The other work herein is Aruṇagiri antādi 1*a*.

A metrical treatise by Auvaiyār on the rules of good conduct. This is also called Mūdurai.

Complete.

Beginning:

வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலரா
ளோக்குண்டா மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

End:

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து.
மறைக்குமாங் கண்டீர் மரம். (30)

முற்றும்.

(கு-பு)—

இஃது ஔவையாரால் இயற்றப்பட்டது; காப்பு உட்பட 31 வெண்பாக்களையுடையது; மூதுரை யெனவும் வழங்கும்; இந்தப் பிரதியில் நூல் பூர்த்திபெற்றிருக்கிறது.

No. 199. விவேக சிந்தாமணி.
VIVĒKACINTĀMAṆI.

Pages, 35. Lines, 9 on a page.

Begins on fol. 106*a* of the MS. described under No. 150.

A collection of pithy stanzas from various works.

Beginning:

அல்லல்போம் வல்வினைபோ மன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போ—நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தின் மேவுங்
கணபதியைக் கைதொழுதக் கால்.

விக்கினேசுரர் துதி முற்றுப்பெற்றது.

நூல்.

ஆபத்துக் குதவாப் பிள்ளை யரும்பசிக் குதவா வன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திர மறியாப் பெண்டிர்
கோபத்தை யடக்கா வேந்தன் குருமொழிகொள்ளாச் சீஷன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பலனில்லை யேழுந் தாமே (1)

End:

இந்திரன் பதங்கள் குன்று மிறையவர் பதங்கண் மாறு
தலஙகளி லுயர்ந்த கச்சித் தலமுமே நீடு வாழி
துலங்கிய கங்கை யாறு சூழ்ந்தபொன் மேரும் வாழி
அலங்கிரி வீர பண்ணுட் டழகுபொற் சிலையும் வாழி. (71)

(கு-பு.)—

இது பண்ணைட்டாராகிய வன்னியர்களையும் அவர்களது வில்லையும் சிறப்பித்துக் கூறுவது; வன்னியர்—(வீரசம்புமுனிவர் செய்தயாகத்தில் அந்த) அக்கினியில் தோன்றியவர். வில்லுக்கு "சிலை" என்பதும் ஒரு பெயராதலானும் இந்நூலில் அச்சொல் மிகுதியாகப் பிரயோகிக்கப்பட்டிருத்தலானும் இந்நூல் எழுபது பாட்டுடையதாதலானும் இது சிலையெழுபதெனப்பட்டது. இஃது அச்சிடப்பட்டிருக்கிறது; அதன் முதற்குறிப்பாலும் இந்நூலிலுள்ள முந்தை நாளென்னுமுதலையுடைய பாடலாலும் இது கம்பரென்பவராற் பாடப்பெற்றதென்று தெரிகிறது. ஆயினும் இது கவிசககரவர்த்தியாகிய கம்பர் வாக்கென்று துணியக்கூடவில்லை.

No. 283. சிலையெழுபது.

ŚILAIYEḶŪPADU.

Substance, palm-leaf. Size, 18 × $1\frac{1}{8}$ inches. Pages, 16. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein are Kāśittuṇḍivināyakarpadikam 9*a*, Kāśippairavarpadikam 14*a*, Śeṇḍalaṅgāravaṇṇam 18*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது; பூர்த்தியாயிருக்கிறது.

No. 284. புறநானூறு, உரையுடன்.

PUṞANĀNŪṞU WITH COMMENTARY.

Substance, paper. Size, $8\frac{1}{4}$ × $6\frac{1}{2}$ inches. Pages, 300. Lines, 20 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

A collection of 400 stanzas by different authors. This is one of the Eṭṭuttohai varieties and is of historical value, as the names of certain personages who lived in ancient times in the Tamil

country are referred to herein. It also throws much light on the customs which prevailed among the people in those olden days.

Beginning:

கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
யூர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப

*　　*　　*　　*

நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே.

வாழ்த்து ; பாரதம்பாடிய பெருந்தேவனார்.

திருமுடிமேற் சூடப்படுங் கண்ணி, கார்காலத்து நறியகொன்றைப் பூ ; அழகிய நிறத்தையுடைய திருமார்பின் மாலையும், அக்கொன்றைப்பூ . . . . நீர்கொலைவறியாக்குண்டிகையானும் தாழ்ந்த திருச்சடையானும் சிறந்த செயற்கரிய தவத்தையுடையானுக்கு. என்றவாறு . . . .

பெரியோனை மனமொழி மெய்களால் வணங்க அறமுதல் நான் பயக்குமென்பது கருத்தாகக் கொள்க.

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு

*　　*　　*　　*　　*

சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்.
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே.

திணை, பாடாண்டிணை. துறை, வாழ்த்தியல். சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர்.

அணுச்செறிந்த நிலனும், அந்நிலத்திலோங்கிய ஆகாயமும், அவ்வாகாயத்தைத் தடவிவருங்காற்றும், ... நின்கடற் பிறந்த ஞாயிறு நின்கடற் குளிக்கு நாட(ு)தலால், செல்வமுடையையாக என்று வாழ்த்தவே கேடின்மையின் நீடுவாழ்க என வாழ்த்தியவாறாயிற்று. (2

End :

அருவி தாழ்ந்த பெருவரை போல
வாரமொடு பொலிந்த மார்பிற் றண்டாக்
கடவுள் சான்ற கற்பிற் சேயிழை
மடவோள் பயந்த மணிமரு ளவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிகென் றேத்தி
*　　　　*　　　　*　　　　*
துளிநசைப் புள்ளி னளிநசைக் கிரங்கிநின்
னடிநிழற் பழகிய வடியுறை
கடுமான் மாற மறவா தீமே.

திணை, பாடாண்டிணை. துறை, பரிசில் கடாநிலை. பாண்டியன் இலவந்திப்பள்ளித்துஞ்சிய நன்மாறனை வடவண்ணக்கன் சாத்தன்.

(கு-பு.)—

இஃது, எட்டுத்தொகையுள் எட்டாவது தொகை; 400 செய்யுட்களையுடையது; கடவுள் வாழ்த்துப் பாரதம் பாடிய பெருந்தேவனாராலும் மற்றவை முரஞ்சியூர் முடிநாகராயர் முதலியபலபுலவர்களாலு பாடப்பெற்றது; இந்நூலால் முற்காலத்துத் தமிழநாட்டிலிருந்தோர் கள் இன்னாரின்னாரெனபதும், மற்றும் அக்காலவழக்கம்பலவும் அறி கொள்ளலாம்; இந்தப் பிரதியிற் காணப்படுவன முதல் 196 செய் மூலமுமுரையும் 197-வது செய்யுள்மூலமுமே; இந்நூல் புறமெனறும் சொல்லப்படும். அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 285. சரவணஞானியார் ஒருபாவொருபது.

ŚARAVAṆAJÑĀNIYĀR ORUPĀVORUPATU.

Pages, 6. Lines, 10 on a page.

Begins on fol. 113*a* of the MS. described under No. 270.

Complete

In praise of a certain ascetic named Śaravaṇadēśikar of Kāñcīpuram, a disciple of Śivajñānamunivar of the Tiruvāḍuturai Mutt.

Beginning :

திருவாருங் கச்சிச் சரவண ஞானிலயச் சென்றடைந்தே
குருவாப் பணிந்தொரு வாசகங் கேட்டபின் குற்றமெல்லா
மெரிவாய்ப் படுமிரும் பஞ்சென மாற்றி யிடுக்கண்செயுங்
கருவாம் பிறப்பறுத் திம்மையி லேசிவங் காட்டினனே. (1)
*　　　　*　　　　*　　　　*

End :

ஏறிய யானென தென்னுஞ் செருக்கி னிகலடக்கி
யூறிய வைவகைப் பாச வலியு மொதுக்கியொன்றாய்
வீறிய வீசன் கழலிணை மேவ விடுத்தனனே
தேறிய ஞானச் சரவண தேவன் றிருவருளே. (10)

ஒருபாவொருபது முற்றும்.

சரவணபவனெனைச்சார்ந்த துணையே.

(கு-பு.)—

இது, திருவாவடுதுறைச் சிவஞானமுனிவர் மாணுக்கராகிய காஞ்சீபுரம் சரவணதேசிகர்மீது செயயப்பெற்றது ; அந்தாதியான 10 கலித்துறைகளையுடையது ; செய்யுள் நடை சிறந்தது ; இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாக இருக்கிறது ; இன்னும் அச்சிடப்படவில்லை.

No. 286. சிவஞானபாலையர் கலம்பகம்.
ŚIVAJÑĀNAPĀLAIYAR KALAMBAKAM.

Substance, palm-leaf. Size, $14\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 57. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

In praise of Sivajñānapālaya Dēsikar, who was at one time the head of the Mutt at Pommapuram: by Śivaprakāśasvāmihaḷ of Turaimaṅgalam.

Beginning :

சித்திதருங் கச்சிச் சிவஞான தேசிகன்பாற்
பத்திதரும் பல்வகைய பாட்டுதவு— மத்தி
யலங்கலாவானை யடுத்தப்பி ஃ யீனற
விலங்கலா வானை விரைந்து.

நீர்தாங்கு சடாமவுலி நெடுங்கயிலைக் கிரியாகப்
பார்தாங்கு வரையெல்லாம் பனிககலைவெண் மதியாகக்
காயகதிர்மான் றேரிரவி கடலமுதந் தானுகப்
பாய்திரை வார் கடல்யாவும் பண்ணவர்கோன் பகடாக
ஞாலத்த களிநனைத்து நகைமணிப்பாம் பிறையாக
வாலத்த பணிமுழுது மாககுபெரும் புகழுடையோய் ! (1)

நாவலர் புகழுசிவ ஞான தேசிக
வெவ்வ மகன்ற சைவ நாயக
நின்னடிக கமல நெஞசுற விருத்தி
நறுமலர்தூவி நாடொறும் பரவுதுஞ
செல்வச் செருக்கிற செவிபெட் டிருககுங்
கல்லாமாந்தர் கடைத்தலைச சென்று
கரத்திற் றீம்பாற கமர்கவிழ்த் தாங்குப்
பற்பல பன்முறை பாடி நினைப்
பாடா மாந்தர் பககற்
கூடாவடியாரிற் கூட்டுக வெனவே. (1)

End :

அறிவதை யறிந்தார் மூவ ராறுமுகக் குமரன் றன்பான்
முறைவரு வருண முறாறு முககனன குருவென் றன்பு
செ [று] (றி) கிலன் ம [யிலை] (வய) வெறபுச் செஞ்சடை முனி
வன் [ருண] (யாக) கை
குறியவன் குறுகி லானெங கோனசிவ ஞானி தானே. (93)

அவஞான நீககி யெமையாளுந் தென்றில்லை யம்பலத்துச்
சிவஞான தேசிகன் மேறபிள்ளைப் பாட்டுத் திறம்பகர்ந்தான்
றவஞான நூலருஞ் செந்தமி ழோருஞ் சரியெனவே
பவஞானந் தீர்க்குஞ் சிவபபிர காசன பயனறிந்தே.

ஆறு முகனு மகத்தியனு நீயல்லால்
வேறு புலவருண்டோ மேதினியிற—றேறுஞ்
சிவஞானி [ப்] பிள்ளைத் திருநாமங் கூறுந்
தவமே சிவப்பிரகா சா.

சுபமஸ்து.

(கு-பு.)—

இது, பொம்மபுரம் ஆதீனத்துச் சிவஞானபாலைய தேசிகர் விஷய மாகத் துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகளால் இயற்றப்பட்டது; செயயுள் நடை சிறந்தது. இவ்வகைப்பிரபந்தம் தேவர்க்கு (100)-உம், ரிஷிகளுக்கு (95) - உம், ராஜாககளுக்கு (90) - உம் மந்திரிகளுக்கு (70)-உம், வைசியர்கசு (50)-உம், மறறவர்கசு (30)-உம், ஆகியசெய யுட்களாற் பாடவேண்டுமெனபது விதி; இந்நூல் 95 செயயுட்களா லாகியதோ 100 செயயுட்களாலாகியதோ தெரியவில்லை; இந்தப்பிரதி யில் 93 செய்யுட்களே காணப்படுகின்றன; அச்சுப்பிரதியிலும் இவ் வளவு செய்யுட்களேயுள்ளன.

No. 287. திருக்கலம்பகம், உரையுடன்.

TIRUKKALAMBAKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 18 × 1⅛ inches. Pages, 269. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete with commentary.

A Jaina poem in praise of the Arhadēvar: by Udīcidēvar.

செய்யுள் முதல்.		பக்கம்.	பா.	செய்யுள் முதல்.		பக்கம்.	பா.
அருவினைவிடும்	...	105	90	விரையாமலர்	...	71	67
அறமா முயிர்குலே	...	98	85	விலங்காபிறந்த	...	97	83
அமராடாளும்	...	80	75	விட்டகல்வதே	..	100	87
அஞ்சனநெடுகெழ	...	103	92	வேண்டுதல்வே	...	63	58

Beginning :

பதினறுவர் பொன்வண்ணர் பச்சை யிருவா
மதிவண்ணா மற்மிரு ரிருவர்—கதியடைநத
செம்மைநிறத் தோரிருவர் சேர்ந்த முகிலிருவ
ரெம்மைகக்குந் தெயவ மெமககு.

(பதப்பொருள்) — பொன்வண்ணர் - பொனனிறமுடையவர்கள், பதினறுவர் - பதினுறுதீர்த்தகரரும், பச்சை - பசுமைநிறமுடையவர்கள், இருவர் - இரண்டு தீர்த்தகரரும், மதி - சந்திரனபோன்ற, வண்ணர் - நிறமுடையவர்கள், ஓரிருவர் - இரண்டுதீாத்தகரரும் . . . எம்மைக்கும - இம்மை மறுமை அம்மையென்னும் எப்பிறப்பினுக்கும், தெய்வம் - ஸ்வாமி, எமககு - எங்கட்கு. எனறவாறு. . . . முநிஸுவ்ரத, நேமியென்னுமிருவரும் நீலவண்ணர்.

கொச்சக வொருபோகு கலிப்பா.

பூநான்கும் பொதுளிவெறி திசைநானகும போயுலவத்
தேனூர்ந்து சுருமபாடத் திகழபிண்டித் திருநீழ
னிலவுமிழந்து நீர்ததும்ப நிழன்மாலே நித்திலஞ்சூழ
குலவிலங்கு மதிமூனறிற குடைமூன்று முடனிழறறப
பாங்கிலகு மணிக்கவரி பனனூரு யிரமசைய
வோங்கரியா சனத்தும்ப ருலகுதொழ விருந்தனையே!

*   *   *   *

அலமரு துயரினே யெறியுநின்
னிலமரு திகிரி நீடுவாழ் கெனவே. இது சுரிதகம்.

(பதப்பொருள்) — பூநானகும் - நால்வகை மலர்களும், பொதுளி - நெருங்கி, வெறி - அம்மலர்களின் வாசனேயானது, திசைநான்கும் -

நான்கு திக்கிலும், போய் - சென்று, உலவ - திரிய, தேன் - அம் மலர்களின் மதுவை, ஆர்ந்து - உண்டு, சுரும்பு - நால்வகை வண்டுகள் பாட - இசைபாட, திகழ் - விளங்கப்படுகின்ற, பிண்டி - அசோகினுடைய, திரு - அழகிய, நீழல் - நிழலில், ... பிறவி - பிறப்பாகிய, கானத்து - காட்டில், அலமரும் - சுழலுகின்ற, துயரினை - துன்பத்தை, எறியும் - அறுக்கின்ற, நின - உனது, நிலம் - மூவுலகத்தினும், மரு - மருவிய, திகிரி - அறவாழி, நீடு - அநந்தகாலம், வாழ்கென - வாழவேண்டுமென்றே. (எ - று).

(பொழிப்புரை) — நால்வகை மலரும் நெருங்கி அம்மலர்களின் வாசனை நான்குதிக்கினுஞ் சென்றுதிரிய, அம்மலர்களினது மதுவையுண்டு நால்வகை வண்டுகள் இசைபாட, விளங்கப்படுகின்ற அசோகினுடைய அழகிய நிழலிற் பிரகாசத்தை வீசிக் குணமானது துளும்பக குளிர்ச்சிபொருந்திய முத்துமாலைகள் சூழ்ந்த மிகவும் விளங்குகின்ற மும்மதிபோல் மூன்றுகுடையும் அவ்வசோக நிழலுடனே நிழல் செய்ய. . . . . . . அறவாழி அநந்தங்காலம் வாழவேண்டுமென்றே யாம் உன்னைத் துதிப்போம். (எ-று)

சுரும்பு, அமரர், மூன்றில் எனபன - கடைக்குறை விகாரம்; குலவிலங்கு, ஒருதனி எனபன - மீமிசைப்பதம் . . . . . . உவஹொமானுமாயஃ, வியாமானுமாயஃ எனவாம் 26. (1)

End:

வெண்பா.

பலவாம் பருவமெலாம் பாரளிக்குங் காலை
யுலவாவொன் றாக வுரைத்தார்—பலரெனினுங்
காவலராந் தேவ ரொருவரே யாங்கவர்தாட்
பூவலரா நாஞ்சூடும் பூ. (110)

(பதபொருள்) — பலவாம் - பலவாகிய, பருவமெல்லாம் - உத்ஸர்ப்பிணி அவஸர்ப்பிணியென்னும எல்லாககாலத்திலும், பார் - பூமியை, அளிக்கும் - இரட்சிக்கின்ற, காலை - காலத்தில், உலவா - மாறுபடாமல், ஒன்றாக - ஒருதன்மையாக, உரைத்தார் - தத்துவமுரைத்தார், பலரெனினும் - பலராணலும், காவலராம் - சுவாமிகளாகிய, தேவர்————, ஒருவரே - தன்மையாலொருவரே, ஆங்கவர் - அந்தத்தேவருடைய, தாள் - பாதமாகிய, பூ - பொலிவினையுடைய, அலராம் - மலராகும், நாம் - நாமெல்லோரும், சூடும் - சிரத்தில் தரிக்கும், பூ - மலரானது. (எ-று

(பொழிப்புரை)—சாதுக்களே . . . . நாமெல்லோரும் சிரத்திற்றரிக்கும் பூவானது அந்தத் தேவருடைய பாதமாகிய பொலிவினையுடைய மலர். (எ-று.)

இதனால், எககாலத்திலும் சுவாமி ஒருவரென்றும் அவர் தாள்மல ரே யாவருந்தரிக்கத்தககதெனறுங் கூறப்பட்டன. சூடும் பூ, எழு வாய். அலராம், பயனிலை. (110)

உதீசிதேவரருளிச்செயத திருக்கலம்பகம முடிந்தது.

நமோ ஜிநாய நமோ ஸித்தேப்ய:

ஆசிரிய[விருத்தம](ப்பா).

வையக மடந்தை வா[ழக](ண்)முக மாகிய
மெய்வளர் தொண்டையம் பதிகசண் படாது
கன்னிகா ரதது மனனிய பெரும்புகழ்
பழியில் பல்குடிப் பையூர்க கோட்டத்து

* * * *

யாரணி நெடுந்துறை யார்ப்பா கைகயோ
ஆரசர்க கரசனெனு முரைசால் பெருமையிற
றவில் வடபான் மொழிதலை மணந்த
தேவ னென்னுந் தெனறிசைப் பெரும்பெயா
மாவண் டமிழின வாது நெறி பயினற
சாவக நிலையோன சாகசிய குடாரன்.

* * * *

ஓதினர் பழிச்சின ரெல்லாரு
சேதியம் பெருநெறி சேர்குவர் விரைந்தே.

முற்றும்.

சுபகிருதுவரு தைமீ 22உ வியாழக்கிழமை பூரட்டாதி நக்ஷத்தி ரம், திரிதிகை திதி, பரீகம், தைதுலம் இந்தச்சுபதினத்தில் எழுதி முகிந்தது முற்றிற்று. திருககலம்பகம் கவி 111-ககு, உரை 111; ஆக மூலமும் உரையும் 222.

(கு-பு.)—

இஃது அருகதேவன் விஷயமானது; நூலாசிரியர், உதீசித்தே வர். இவர் 'சாககியகுடாரன்' எனறு புகழ்ப்பெற்றிருககிறார். இந் நூல் ஜைனமதச்சார்பாகவுள்ளது; 110 பாடலால் முற்றுப்பெற்றிருக்கி ன்றது. இதிலுள்ள மருட்பா, முதலில் 52 அடி வெள்ளடியாகவும் ஈற்றில் 2 அடி ஆசிரிய அடியாகவும் தவமென்னும் துறையாகவும் அமைந்துள்ளது. இந்தப் பிரதியில் நூல் உரையுடன் பூர்த்தியாகக் காணப்படுகிறது; மூலமட்டும் அச்சிடப்பெற்றிருககிறது.

No. 288. திருக்கலம்பகம்.

TIRUKKALAMBAKAM.

Substance, paper. Size, 10 × 7½ inches. Pages, 57. Lines, 20 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Complete.

Same text as in the work described under previous number.

(கு-பு.)—

இது முனபிரதிபோன்றது; இதில மூலம் பூர்த்தியாயிருககிறது.

No. 289. திருக்கலம்பகம்.

TIRUKKALAMBAKAM.

Substance, palm-leaf. Size, 14½ × 1⅛ inches. Pages, 58. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 121*a*. The other work herein is Darmaparīkṣai 1*a*.

Complete.

Same work as the above.

இர(ததா)க்ஷிஹூ விரு[க்ஷி](ச்சி)கமீ 15உ கிருஷணபக்ஷ[மி](ம்) சோமவாரம் அனுஷம் இந்தச் சுபதினததில் மோட்டூர் பெரி(ய) தம்பி ஹஸ்தலிகிதம்.

(கு-பு.)—

இது முன பிரதிபோனறது ; இதில் மூலம்பூர்த்தியாகவுள்ளது.

No. 290. திருத்தணிகைக்கலம்பகம்.

TIRUTTAṆIHAIKKALAMBAKAM.

Substance, palm-leaf. Size, 16½ × 1 inches. Pages, 48. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

In praise of Muruhakkaḍavuḷ as worshipped in the temple at Tiruttaṇibai.

Beginning:

நலம்பகமுந் நான்குடைய நற்றணிகை வேலோன
கலம்பகத்தைப் பாடவழி காட்டுஞ்—சிலம்பகஞ்சேர்
வாலிபத்தி கண்டெதிர்ந்தோா வனமைதந்தோன் மைந்தனெ
வாலிபத்தன வாலிபத்தன வநது. [னறும்

நீர்கொண்ட சடைமுடியோ னெறறிவிழி யினிற்பிறந்து
சீர்கொண்ட சரவணத்தின செங்கமல மிசைவளர்ந்து
கார்த்திகையின் முலைப்பாலுங க . . முலைப பாலுமுண்டு
வார்த்திரைக கடலிடைச்சென றசுரர்குலங் களைத் (தொ)லை
தேவர்சிறை தனைமீட்டுத தெய்வமடப் பிடியணைதது [த்துத்
மூவா தொழுந் திருததணிகை முதுகிரியி லெழுஞ்சுடரே!

* * * *

தொண்டர்கள் புகழ்தரு சுப்பிர மணிய
மண்டில மதிமுக வளளி நாயக
வுனதிரு வடியை யுளந்தனி லிருத்திய
பனமலர் தூவிய பணிகுவேன் யானே
யிறந்தும் பிறந்து மிருவினைக கயிற்றின
யாப்புறு முடலி னுசையைத துறந்து
தனனுயிர் போல மன்னுயிர்க ளிரங்கி
யனபொடு கெழீஇ யரு . னை புரிந்து
சனனிதி நீங்கா தினனரு ளை .நது
மேலாம வாழ்வு பெற்றவர்
காலாற பணிப்பதென கைகளாற் செயவே. (1)

End:

ஓங்கா தரத்திற பிறர்நீங்கை நாளு முரைததெனது
தீங்கா யிரமுங கரந்தெனை யாண்டனன் றெனறணிகை
நீங்காதவேல னஃதறிந் தென்றனை நீடுலகிற்
பாங்கார் குறத்தி திருடனென றேசும் பயனறிநதே. (96)

* * * *

ஏறும் புகழசேர் தென்றணி கைக்கொ . . .
. . . . யோர் சேவடி நெஞ்சிற குறிததிட்டோர்
வீறுங கமலத் தந்தண னறியா வீடெயதி
வீறும் படிதீ வி . . . . (100)

திருசசிற்றம்பலம்.

(கு-பு.)—

இது, திருத்தணிகை முருகக்கடவுள் விஷயமானது; இந்தப் பிரதியிற் பூர்த்தியாயிருக்கிறது; இதன் இறுதியிலுள்ள ஒரேடு மட்டும் முறிந்துபோய்விட்டது.

No. 291. திருவரங்கக்கலம்பகம்.

TIRUVARAṄGAKKALAMBAKAM.

Substance, palm-leaf. Size, $14\frac{3}{4} \times 1\frac{1}{8}$ inches. Pages, 49. Lines, 6 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

A well-known poem in praise of Śrī Raṅganāthasvāmi as worshipped at Śrīraṅgam: by Piḷḷaiperumāḷ Aiyaṅgār.

Beginning:

மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத் தாற்கடைந்
துறைப்பாற் படுத்தித் தமிழா யிரத்தின் சுவையமுதங்
கறைப்பாம் பணைப்பள்ளி யானன்ப ரீட்டங் களித்தருந்த
நிறைப்பான் கழலன்றிச் சென்ம விடாய்க்கு நிழலில்லை

* * * *

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கு
நீர்பூத்த திருமகளு நிலமகளு மடிவருடச்
சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணிகேட்ப
மறைப்படலைத் துழாய்மார்பின ஞாயிறுபோன் மணிவிளங்க
வரியதா னவர்க்கடிந்த வைம்படையும் புடைதயங்கக
கரியமால் வரைமுளரிக் காடென்று கிடந்தாங்குப்
பாயிரநான் மறைபரவப் பாற்கடலுட் பருமணிச்சூட்
டாயிரவாய்ப் பாம்பணைமே லறிதுயிலி னினிதமர்ந்தோய்!

* * * *

எனபொழி யாக்கையுட் சேர்க்கினு
மன்பொழி யாமை யருண்மதி யெனக்கே. (1)

End:

காவிரிவாய்ப் பாம்பணைமேற் கருமுகில்போற்
கண்வளருங் கருணை வள்ளல்
பூவிரியுந் துழாயலங்கற் பொன்னடியே
தஞ்சமெனப் பொருந்தி வாழ்வார்

யாவரினு மிழிகுலத்தோ ராகு
மவர்கண்டீ ரிமையா நாட்டத்
தேவரினு முனிவரினுஞ் சிவனயனென்
றிருவரினுஞ் சீரி யோரே. (100)

* * * *

மழைமுகி லெனவேப ணைமுக கந்திகழ
வரியர வணையேறி வாழ ரங்காத
மெழிறரு மிருதாளி லேக வம்பக
மெனுமொரு தமிழ்மாலை தான ணிந்தனன
குழலிசை யளிமேவு கூரம் வந்தருள்
குருபர னிருபாத போத மடைந்தவ
னழகிய மணவாள தாச னனபாத
மடியவ ரடிகூடி வாழு மன்பனே. (102)

கலம்பகம் முற்றும்.

(கு-பு)—

இது, ஸ்ரீரங்கத்திலுள்ள ரங்கநாதப்பெருமாளமீது பிள்ளைப்பெருமாளையங்காரால் இயற்றப்பெற்றது; செய்யுள்நடை சிறந்தது; இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாயுள்ளது; அச்சிடப்பெற்றிருக்கின்றது.

No. 292. திருவரங்கக்கலம்பகம்.

TIRUVARAṄGAKKALAMBAKAM.

Substance, palm-leaf. Size, $16\frac{3}{4} \times 1\frac{1}{8}$ inches. Pages, 52. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; பூர்த்தியாயுள்ளது; இதிற் சில ஏடுகள் சிதிலமாயிருக்கின்றன.

No. 293. திருவரங்கக்கலம்பகம்.

TIRUVARAṄGAKKALAMBAKAM.

Substance, palm-leaf. Size, $16\frac{3}{4} \times 1$ inches. Pages, 56. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முனபிரதிபோனறது ; பூர்த்தியாயிருக்கிறது.

No. 294. திருவரங்கக்கலம்பகம்.
TIRUVARAṄGAKKALAMBAKAM.

Pages, 42. Lines, 6 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 200.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன பிரதிபோனறது ; மிகச் சிதிலமாயிருக்கிறது ; இடையிற் சில ஏடுகள் இல்லை.

No. 295. திருவரங்கக்கலம்பகம்.
TIRUVARAṄGAKKALAMBAKAM.

Pages, 5. Lines, 5 on a page.

Begins on fol. 37*a* of the MS. described under No 260.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோனறது ; இதில் "மறைபபாற்கடலை" எனபது முதலான தனியன்களும் நூலின முதற்செய்யுளும் உள்ளன.

No. 296. திருவேங்கடக்கலம்பகம்.
TIRUVĒṄGAḌAKKALAMBAKAM.

Substance, palm-leaf. Size, 16¾ × 1 inches. Pages, 102. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Complete.

In praise of Tiruvēṅgaḍamuḍayān as worshipped in the temple at Tiruppati: by Kavivīrarāghavamudaliyār.

Beginning:

விரகறி முத்தமிழ வீர ராக(வ)ன்
வரகவி மாலை(யை)ய வழுத்துந் தோறெலா
முரகனும் வானனு மொகககக் கூடினும
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே.

* * * *

மலர்மேவு திருமகளும் வாட்டடங்க ணிலமக(ளு)
மலர்மேவு குழனீளை யணஙகுமிரு மருங்கிருபப
வலனோங்கு பரமபத மாமணிமண் டபத்திலமர்
நலனோங்கு பரம்பொருளாய் நான்குவியூ கமுமானய!
உபயகிரிப் புயராம னெனகெண்ணன் முதலான
விபவவுரு வமுமெடுதது வீறுமுயிர் தொறுங்குடிகொ
ளந்தரியா மியுமான தனமையாமே யெளிதாக
விந்தநெடு வேங்கடத்தி லெவலோருந் தொழநின்றய!

* * * *

வணங்குபு தொழுதுன் குணஞ்சில துதிப்பல்
பிழை வுளத்தே சேடபூ தனுமாய்ச
சந்தத மிகுபர தந்திரனகி
யுனைகைங் கரிய முகபபா
லனுதினஞ் செயவைத் தருண்மதி யெனவே. (1)

End:

கண்ணு யிரம்பெற்ற கோனுல கோஙகிய கற்பககாத்
தண்ணுரும பூவையும் வேண்டிலம் வேண்டிந தலைககணிபூ
வெண்ணார்க கிரு [ெ] ளன்ன வேஙகடந தானமுெண்ட ரேவற்
[ெமுழில்
பண்ணுசைத் தொண்ட ரவர்தொண்டர் தொண்டர் பதமலரே
[(100).

முற்றும்.

முத்த மிழ் ககவி வீர ராகவன்
பத்தி யிற்றுதி பாவின் மாலையை
நித்த நித்தமு மோது வாரவ
ரத்த னப்பன தாளை வாழவரே.

முற்றும.

விசுவாவசு ௵ ஆனிமீ 3௨ எழுதியது.

(கு-பு.)—

இது திருவேங்கடமுடையான் விஷயமானது; கவிவீரராகவமுத லியாராற் செயப்பெற்றது; செய்யுள் நடை சிறந்தது; அச்சிடப்பெற் றிருக்கிறது; இநதப்பிரதியில் நூல் பூர்த்தியாகவுள்ளது.

No. 297. தில்லைக்கலம்பகம்.

TILLAIKKALAMBAKAM.

Substance, palm-leaf. Size, $17\frac{1}{4} \times 1\frac{1}{16}$ inches. Pages, 49. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

In praise of Naṭarāja as worshipped in the temple at Chidambaram : by Iraṭṭaiyar.

Beginning:

சீர்கொண்ட மன்றமென்றுந் திருச்சிற்றம் பலமென்று
மேர்கொண்ட பொழிற்றில்லை யெழிற்பொன்னம் பலமென்றும்
வார்கொண்ட முலையுமையாள் வாழ்பேரம் பலமென்றும்
பேர்கொண்ட கனகசபைப் பெரும்பற்றப் புலியூரே.

(இது தரவு).

பூலோக முதலாய புவனங்க ளளிப்பதுவுஞ
சாலோகந் தருவதுநின சரணார விந்தமன்றே!

பூமீது வலஞ்செய்து புகழ்ந்தோது மடியவர்க்குச
சாமீப மளிப்பதுநின் றாட்கமல மலரன்றே!

நீருருஞ சடைமௌலி நிலவெறிப்ப மறையொலிப்பச்
சாரூபந் தருவதுநின றமரைப்பூஞ சரணமன்றே!

(இவை மூன்றும் தாழிசை.)

அதனால்

(இது தனிச்சொல்.)

அலம்புநீர் மூழ்கிய மஞ்செழுத்து நவின்றும்
பொலம்புனை நறுமலர் புனைந்துஞ
சிலம்படி பரவுதுஞ் செனனமறற பொருட்டே.

(இது சுரிதக நேரிசையொத்தாழிசைககலிப்பா.) (1).

End:

உயிர்வருக்கமோனை அகவல்.

அம்பலக கூத்தன் ஆரூர் மாநவன்
இடைமரு தீசன ஈங்கோய மலையினன்
உறையூ ரெந்தை ஊற(ன்)மா நகரினன்
எறும்பியா மலையினன் ஏடகத் துறைவோன
ஐயா றமர்ந்த வமரர்கள் பெருமான்

ஒற்றியூ ருறைசே(வ)ான் ஓமாம் புலியூர்ச்
சிற்றம் பலவன் சீர்பர வுது(மே).

திருச்சிற்றம்பலம்.

விரோதிகிருதுஸு ஆவணிமீ 12வ பொய்கைபாக்கம் வயித்திய நாத முதலியார் குமாரன் சுப்பராயன படிக்கின்ற தில்லைக (கலம்பகம்) முற்றும்.

(கு-பு.)—

இது, "கலம்பகத்திற்கு இரட்டையர்கள்" என்று பிரசித்திபெற்ற இரட்டையரால் இயற்றப்பெற்றது; சிதம்பரத்திலுள்ள நடராஜமூர்த்தியின விஷயமானது; அச்சிடப்பெற்றிருக்கிறது; இந்தப்பிரதியில நூல் பூர்த்தியாயுள்ளது.

No. 298. நசரைக்கலம்பகம், உரையுடன். NAŚARAIKKALAMBAKAM WITH COMMENTARY.

Pages, 8. Lines, 8 to 10 on a page.

Begins on fol. 20*a* of the MS. described under No 2.

Incomplete.

Contains only one stanza: in praise of Jesus Christ as the Nazarene.

Beginning.

மணியாருங் கடலுடுத்த (வசுமதி)யின் மறமழிபப
வணியாரு மகத்தியல்வ தமாரறிந் தருத்தியுற
அருவழியா யிருந்தலகி லசண்டபொருட் கமலனுநீ
கருவழியா யுருவாகிக் கன்னிசே யாயினையே!

* * * *

நலமேவு மணியமா நாட்டினிய நசரையெனுந்
தலமேவித் தயைநிழலைச் சத்தியெனத் தரித்தனையே!
திருவேசு நசரையெனத் திரியுலகு மிகவாக
மருவீசு திலயமுறல் வளமுளதின் றகையாமோ!

* * * *

வெற்புதித்தனை—யற்புதித்தனை
வேதமாயினை—நாதமாயினை
கதிரிறந்தனை—மதிதிறந்தனை
யொருமையாயினை—குருமையாயினை

இதனுரை :—தகப்பனுமாய் மருமகனுமாய்த் தலைவனுமாய்ப் புத்திவருத்துங்குருவுமாய அன்புள்ளதாயுமாகினே ; . . . மலையிற்பிறந்தனே ; அதிசயமுள்ளவனுயினே ; வேதமாயினே அவ்வேதத்துத்தொனியாயினே ; வானுலகத்திருநதனே ; ஞானக்கண்டி ; ஒருமையாயினே ; பெருமையாயினே எனக.

(கு-பு.)—

இது கிறிஸ்துவமத சம்பந்தமானது ; 1 - பாடலேயுள்ளது.

No. 299. மதுரைக்கலம்பகம்.
MADURAIKKALAMBAKAM.

Substance, palm-leaf. Size, 13¾ × 1⅝ inches. Pages, 40. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

In praise of Sōmasundarakkaḍavuḷ as worshipped in the temple at Madura : by Kumaraguruparasvāmihaḷ.

Beginning :

புந்தித் தடத்துப் புலக்களி றோடப் பிளிறுதொந்தித்
தந்திக்குத் தந்தை தமிழுக்குத வெனபதென் றண்மலர்தூய
வந்திப் பதுந்தனி வாழுதது மதுமுடி தாழத்துநின்று
சிந்திப் பதுமனறிச சிததி விஞயகன சீரடியே.

ஆறு
நாறு மலர்கொடு
கூறு மடியவர்
பேறு பெறுவரே.

மணிகொண்ட திரையாழி சூழ்திரிதிர மருங்கசைஇப்
பணிகொண்ட முடிச்சென்னி யரங்காடும் பைந்தொடியும்
பூந்தொத்துக் கொத்தவிழ்ந்த புனத்துழாய் நீழல்வளர்
தேநதத்து நறைகக்ஞ்சத் தஞ்சாயற் றிருந்திழையு
மனைகிடமன றிருமார்பு மணிக்குறங்கும வறிதெய்தத்
தனக்குரிமைப் பணிபூண்டு முதற்கற்பின றலைநிற்ப
வம்பொனமுடி முடிச்சூடு மபிடேக வல்லியோடுஞ [ள்.
செம்பொனமதிற் றமிழ்க்கூடற் றிருநகரம் பொலிந்தோய்கே

* * * *

அம்மா கிடைத்தவா வெனறு
செம்மாப் புறூஉந் திறம் பெறற் பொருட்டே.

End :

அகவல்.

கட்புலங் கதுவாது செவிப்புலம் புக்கு
மனனிடைத் தூங்கி வாயிடைப் போந்து
செந்நா முற்றத்து நனனடம் புரியும்
பலவேறு வண்ணத் தொருபரி யுகைத்தோய் !
புட்கொடி யெடுத்தொரு பூங்கொடி தனனொடு
மட்கொடி தாழந்த வான்கொடி யுயர்த்தோய !
ஓரோ ழாழி சீர்பெறப் பூண்டு
முடவுப் படதத சுடிகையுட் கிடந்து
நெடுநிலை பெயரா நிலைத்தே ரூர்நதோய . . .

முளையின றுமுளைத்த மூல லிங்கத்
தளவையி னளவா வானந்த மாகக
னின்பெருந் தனமையை நிகழ்நதுதும யாமென
மன்பெருஞ் சிறப்பிற்றம் மதிநலங் கொளினே
பேதைமைப் பாலரேம் பெரிது மாதோ
வேத புருடனும் விராட்புரு டனுமே
யினைய தின றன்மைமற் றெம்ம னோரு
நினையவுஞ சிலசொற புனையவும் புரிதலின
வாழிய பெருமதின றகவே
வாழ்யென் மனனு மணிநா வுமமே.

(கு-பு.)—

இது மதுரைச் சோமசுந்தரக்கடவுள் விஷயமானது; குமரகுருபர ஸ்வாமிகளால் இயற்றப்பட்டது; அச்சிடப்பட்டிருககிறது; இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாகவுள்ளது. இந்நூலினபின உள்ள ஓரேட்டில மயிலாப்பூர்த தேவாரத்தில் 7 பாசுரங்கள் எழுதப்பட்டிருககினறன.

No. 300. அங்கயற்கண்ணம்மை கலிவெண்பா.
AṄKAYAṞKAṆAMMAI KALIVEṆBĀ.

Pages, 9. Lines, 8 on a page.

Begins on fol. 29*a* of the MS. described under No. 82.

Complete.

A poem in praise of the goddess Mīnākṣī as worshipped in the temple at Madura.

Beginning:

காப்பு.

மங்கையிடப் பாக மதுரைவருஞ் சொக்கரிட
வங்கயற்கண் ணம்மை யகவலுக்குத்—துங்க
வரிமருகா கொன்றை யணிவார் முருகா
கரிமுகவா நீயிதற்குக் காப்பு.

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரு மேனிக கனங்குழலே—யாராயும்
வேதமுத லாகநின்ற மெய்ப்பொருளே மின்னொளியே
யாதி பராபரையே யம்பிகையே—சோதியே
யண்டமெல்லாம் போற்று மரும்பொருளே யாரணங்கே
யெண்டிசைக்குந் தாயான வீச்வரியே—தெண்டிரையில்
வந்தமுதே யென்று மறவாம லேயிருப்பார்
சிந்தைதனி லேயுறையுஞ் செல்வி—

End:

கொந்தளகப் பந்திக் குயிலே சிவலோகத்
தைந்தருவே மூவுலகுக் காரணியே—யெந்தனுடை
யல்லல்வினை யெல்லா மகற்றியே யஞ்சலென்று
நல்லசிவ பாக்கியத்தை நல்கியே—வல்லபத்தா
லாசுமது ரஞ்சித்ர வித்தார மென்றுலகிற்
பேசுகின்ற வுண்மைப் பெருவாக்கு—நேசமுடன்
றந்தென்னை யாட்கொண்டு சற்குருவா யென்னிடத்தில்
வந்திருந்து புத்தி மதிவிளைந்—சந்தமு
நீயே துணையாக நின்றிரட்சி யுங்கருணைத்
தாயேநின் றாளே சரண்.

(கு-பு.)—

இது, மதுரை மீனாக்ஷியம்மை விஷயமானது; இச்செய்யுள், கலிவெண்பாவே; காபபுச்செய்யுளில் "அங்கயற்கணம்மை யகவலுக்கு" என்றிருப்பது தவறு; அச்செய்யுள் யாப்பிலக்கணந் தெரியாதவர்பாடிச் சேர்த்திருககவேண்டுமென்று தோற்றுகிறது; இந்த நூல் இந்தப் பிரதியிற் பூர்த்தியாக இருககிறது; செயயுள் நடை சாதாரணமானது; அச்சிடப்பட்டதன்று.

No. 301. கந்தர்கலிவெண்பா.

KANDARKALIVEṆBĀ.

Substance, palm-leaf. Size, 5½ × 1½ inches. Pages, 26. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein are Sarasvatikaliveṇbā 14*a*, Kumaranahaval 17*a*.

Complete.

In praise of Muruhakkaḍavuḷ as worshipped in the temple at Tiruccandūr: by Kumāraguruparasvāmi.

Beginning:

பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையுந்—தேமேவு
நாதமுநா தாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமா—யாதிநடு
வந்தங் கடந்தநித்தி யாநந்த போதமாயப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த

End:

எழுத்து முதலைந் திலககணமுந் தோயந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்—தொழுக்கமுட
னிம்மைப் பொருளி னிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்துத்—தம்மைவிடுத்
தாயும் பழைய வடியா ருடன்கூடித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்.

கலிவெண்பா முற்றும்.

(கு·பு·)—

இது, திருச்செந்தூர் முருகக்கடவுளின்மீது குமரகுருபரஸ்வாமிகள் இயற்றியது; செய்யுள்நடை சிறந்தது; இதற்குத் திருச்செந்தூர்ப் போற்றிக்கலிவெண்பாவென்றும் ஒரு பெயருண்டு. இந்நூல் அச்சிடப்பட்டிருக்கிறது; இந்தப்பிரதி பூர்த்தியாகவுள்ளது.

No. 302. கந்தர்கலிவெண்பா.

KANDARKALIVEṆBĀ.

Pages, 15. Lines, 9 on a page.

Begins on fol. 242*a* of the MS. described under No 83.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது; பூர்த்தியாகவுள்ளது.

No. 303. சரசுவதிகலிவெண்பா.

SARASUVATIKALIVEṆBĀ.

Pages, 6. Lines, 10 on a page.

Begins on fol. 14*a* of the MS. described under No. 301.

Incomplete.

In praise of Sarasvatī.

Beginning:

அரிஓமதூ வட்சரமே யைம்பத்தொன ரூன
சரசுவதி யேநமோ தாயே - திரிபுரையே
வாகதினிலே வந்துதவும் வாலசிவ மோகினியே
நாகதிலே யந்திருககு நாமகளே - தோகதியே
பதினெண் கலைதனையும் பாடவே யென ஞவின்
மதுரம் பொழியவரு வாமியே - கதியான

End:

வலலினமே மெல்லினமே யிடையினங்கண் மூன்றுமே
நல்ல துரைத்தருளு நாரணியே - யெல்லா நீ
யோமென்ற மந்திரமே யோநமசி வாயமென்ற
வாமென்ற மந்திரமே யா.

ஓம் ஞானசிவ சரணமே நமோநம ஓம் மூலவிக்கினேசுரனே நமோ சிவா ஓம் நமோ. குருபாதம்.

(கு-பு.)—

இது, ஸரஸ்வதி விஷயமானது; செயயுளநடை சிறந்ததன்று; மிக்க பிழையுடையது; இநதப்பிரதியில பூர்த்தியாக இல்லை; ஏட்டின் தலைப்பில் சரசுவதி அகவல் என்று தவறாக எழுதபபட்டிருக்கிறது.

No. 304. சிவபராக்கிரமக்கலிவெண்பா.

ŚIVAPARĀKṚAMAKKALIVEṆBA

Substance, palm-leaf. Size, 9⅛ × 1¼ inches. Pages, 24. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 186*a*. The other works herein are Śānandagaṇēśarpurāṇam 1*a*, Ahattiyartēvāratiraṭṭu 89*a*, Tiruviḷaiyāḍaṛkalivenbā 170*a*, Karuṇaittiruviruttam 180*a*, Tirunāmakkōvai 184*a*.

Complete.

A hymn of prayer addressed to Śiva. In this work the greatness of Śiva in all His sixty-four different manifestations is described.

Beginning:

பாருவதி பாகன் பரமன பராககிரமந்
தேருங் கலிவெண்பாச் செப்பவே—மேரு
வினாயகனே தந்தருளும் வேழமுகச் சித்தி
வினாயகனே காக்க விரைந்து.
திருப்பாற் கடல்கடைந்து தெள்ளமுதமுண்ண
விருப்பாகித் தேவரெலா மேவிப—பொருப்பாகு
மந்தரமே மத்தாக வாசுகியே நாணாகச்
சந்திரனை யேயடையாய்த தானமைத்து—வந்திழுக்கு
மாலயனு மிந்திரனு மவா வருந் தானவரும்
வேலைவிடங் கண்டு வெருண்டோடி—யோலமிட்
டெங்கள் பிரானை யிதுசமய மென்றிரக்க
வங்கவரைக் காக்க வருள்சுரந்து—செங்கையினா
லாலத்தை வாங்கியதை யாபோசனமாகக்
ஞாலத்தை காதத நலம்போற்றி—பாலகற்கா
வந்தெதிர்த்த வந்தகனை மார்பி ழுறவுதைத்த
கந்தமலர்த் தாள்ன் கழல்போற்றி.

End:

வந்தெதிர்த்து விலவளைத்து மாதுமையாள் விட்டசரஞ்
சிந்திட வென்ற செயங்கண்டு—ஈந்தரனேசர்
கோதண்ட தீக்ஷா குருவென்று கொண்டாடிக்
கோதண்ட பாணி புகழ கோள்போற்றி—வேதண்ட
மாமேரு வில்லாய் வளைத்தோன் பராக்கிரம
நாம மறுபத்து நான்கினையுந்—தாமமுற

நீற்றிறெனுடு கண்டிபுனை நேசமிகு மாதவர்க்குச்
சாற்றும் வியாதனிரு தாள்போற்றி—சாற்றரிய
வாலவாய் தனனின்மா ருதுசெய்யு மாறுபத்து
நாலு விளையாட்டி னலம்போற்றி—மூலமறை
போற்றுங் கயிலைமலை போற்றி மதுரைநகர்
போற்றிசிவன் செஞ்சரணப் போது.

திருச்சிற்றம்பலம்.

மீனாட்சியம்மன் றுணை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் சிவபெருமானுடைய 64 திருவுருவங்களும் தம்மைக் காக்கவென்று சொல்லுதல் முகமாக அவற்றின் பெருமைகளை விளக்கிக்கூறுவது; செய்புள் நடை நயமாக இருக்கிறது; எங்கும் அகப்படாதது; இன்னும பதிப்பிககப்படவில்லை; இந்நூல் செய்தவர், மதுரையிலுள்ளவரென்று தோற்றுகிறது.

No. 305. திருவிளையாடற் கலிவெண்பா.

TIRUVIḶAIYĀḌAṞKALIVEṆBĀ.

Pages, 21. Lines, 6 on a page.

Begins on fol. 170*a* of the MS. described under No. 304.

Complete.

In praise of Śokkanāyakar as worshipped in the temple at Madura. This poem is in accordance with the Tiruviḷayāḍarpurāṇam of Parañjōtimunivar.

The authorship of this work is open to discussion. Some attribute it to Anantakavirāyar of Mānūr, others to Parañjōtimunivar.

Beginning:

நாற்றிக்கும் போறறு நதிமதுரைச் சொக்கரையான்
போற்றிக கலிவெண்பாப் போற்றிசெயயச் - சீற்றமுடன்
றைக்குஞ் சரமுகைத்தோன சாயவிழித் தோனுதவு
கைககுஞ் சரமுகத்தோன் காப்பு.
பூமேவு கற்பகநா டாளும் புரந்தரனார்
தீமை விருத்திரனைச் செற்றபழி - போமாறு
பொறகமலந் தோய்ந்து விமானத்தைப் பூசிக்க
நற்கருணை செய்த நலம்போற்றி - நற்றவத்தோ

ரீசனார் சாத்து மெழினமலரைக் கால்சிதைத்து
வாசவனார் வெள்ளானை மண்ணிழிந்து - பூசனைசெய்
தல்லற் படுசாபந் தீர வருள்சுரந்த
மல்லற் கருணை வளம்போற்றி - நல்வணிகன்.

End:

[அங்கொருத்தி;
மன்றற்குச் சான்றாக வன்னி கிணறிலிங்க
மன்றழைத்துக் காட்டு மருள்போற்றி - யனறிறைவ
ஞற்றிய வாட லறுபத்து நான்கினையுஞ்
சாற்றிய தென்முனிவன் றாள்போற்றி - சாற்றிய.
வண்ணங்கேட் டர்ச்சித்த மாமுனிவர் தாள்போற்றி
தண்ணங் கயற்கண்ணி தாள்போற்றி - யண்ணலருள்
போற்றி மதுரைநகர் விண்ணிழிந்த பொற்கோயில்
போற்றி கருணைமுகப் போது.

திருவிளையாடற் கலிவெண்பா முற்றும்.

(கு-பு.)—

இஃது, ஒரு கலிவெண்பா ; மதுரைச் சொக்கநாயகர் விஷயமானது 64 திருவிளையாடல்களையும் பரஞ்சோதி முனிவர்செய்த திருவிளையாடற்புராணத்திலுள்ளபடி முறையே கூறி அவற்றைச் செய்த அருளைப் போற்றி எனத்தனித்தனியே முடிக்கப்பெற்றிருக்கிறது ; இதனைச் செய்தவர் மேற்படி பரஞ்சோதி முனிவர் என்பர் சிலர், இஃது அச்சிடப் பெற்றுள்ளது ; இந்தப்பிரதியிற் பூர்த்தியாக இருக்கிறது.

No. 306. மாரியம்மை கலிவெண்பா.

MĀRIYAMMAI KALIVENBĀ.

Substance, palm-leaf. Size, 15¾ × 1⅛ inches. Pages, 22. Lines, 6 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 21*a*. The other works herein are Māriyammai-varṇippu 1*a*, Māriyammaitālāṭṭu 16*a*, Māriyammaipadam 32*a*, Māriyammaippadikam 34*a*.

Complete.

In praise of the goddess Māriyamman, who is considered to be the presiding deity over small-pox and other similar epidemic diseases. This manuscript is stated to have been written by one Karivaradan of Poyhaipākkam.

Beginning:

மாதேவி யான மகமாயி மாரியுமை
மீதே பிரபந்தமது விந்தையுட மேனுதற்கு
நற்பலமா கத்துணையெந் நாளு மிருககவுயர்
கற்பகத்தின பொறபாதங காப்பு.
ஆதி பராபரையே யண்டபகி ரண்டமுதற்
சோதியாய் நினறதொரு சுந்தரியே—வேதியர்கள்
போற்றுங் கயிலாய புண்ணியனூர் தனனிடத்தில்
வீற்றிருககும் பார்வதியே வித்தகியே—சாற்றரிய
கண்ணு ரமுதமெனுங கன்னிகையே கா; தருவப்
பண்ணூர் மொழிபயிலும் பைங்கிளியே—விண்ணூர்தம்

End:

சிந்தா மணியே செகசோதி காரணியே
யெந்தாயே யெனனைரக்ஷி யெபபொழுதும்—செந்திருவே
மாமாரி வாழியே வைய கததுண் மனனுயிர்கள்
தாமாரி யெனறுந் தழைத்தோங்கு—பூமாரி
வாழியெந் நாளுமிக வாழிமுத்தே மேனமேலும்
வாழிமககள வாழிமுதது [ம் வாழியே] (மே). (130)

திருச்சிற்றம்பலம்.

மாரியம்மன் கலிவெண்பா முற்றும்.

இவை எழுதினது பொயகைபபாககம் கரிவரதன் நெட்டெழுத்து.

திருச்சிறறம்பலம்.

(கு-பு.)—

இது மாரியம்மையெனனும்துர்ககையின் விஷயமானது; இதை யியற்றியவர் மாரியம்மையையும் பார்வதியையும் அபேதமாகக்கொண்டு துதித்திருககிறார்; இச்செய்யுளில பலவகை வழுக்களும் உள்ளன; இந்தபபிரதியில் நூல் பூர்த்தியாக இருககிறது.

No. 307. துரோபதைகுறம்.

TURÔPADAIKUṚAM.

Substance, palm-leaf. Size, $17\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Pages, 24. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

This poem describes that Draupadi, disguising herself as a woman of the Kuravar caste and having in her arms Śri Kriṣṇa who had metamorphosed himself into a child, entered Hastināpura as a forteller of future events while the Paṇḍavas were living in their exile incognito.

Beginning:

திருந்திய புகழ்ப்பாரு சாலன்
செல்விதுரோ பதையாடானும
பெருந்திரு வானைப் பசகல
பேசிய குறம்யான பாட
வருந்திய தெயவ ராஜ
புரமதில் வாழுங் கெங்கை
தரு[ந்தி] (ங்க) ய முகவன பாதந்
தகமகிழ்ந் துதிசெய வேனே.

* * * *

பஞசபாண் டவருந் தேவி பாஞ்சாலி தானுங் கூட
வஞ்சகத் தூரிய ஞலே வனவாசம் பனனி ரண்டு
தஞசமா யொழிந்த பின்பு தீானுமே வி(ரா)ட தேசம்
வஞசியுந் தானுங் கூட மனனவர் வந்து சேர்ந்தார்.

* * * *

End:

வீமனூர் செந்நெ றன்னே வரைத்திடப பயிரு மாச்சு
பூமியிற் கிளிக ளெல்லாம் புசித்துத்தா னிருந்த தப்போ
வாமனன் கிருஷ்ண தேவன் மாயவ னருளி ஞலே
நேமமாங் குந்தி மகக ணிதியுடன வீறறி ருந்தார்.

* * * *

அலகை முலேசுவைத்த வச்சுதா பச்சை
யிலகுமணி மார்பவெழில் ரங்கா—வுலகளந்த
பாதனே மாலே பரமனே பங்கயகண்
ணுதனே முன்னே நட.

அனந்தபிள்ளே வாத்தியார் எழுதினது.

Colophon:

துரோபதை குறம் முற்றும்.
மார்ச்சுமீ 10உ.

(கு-பு.)—

குறமென்பது, குறத்தி குறிசொன்னதைச் சிறப்பித்துப்பாடும் ஒரு வகைப் பிரபந்தம்; இந்நூல் தருமபுத்திரர் அஞ்ஞாதவாசஞ்செய்து

கொண்டு விராடநகரத்தில் இருக்கும்போது திரௌபதி குறத்திவேடம் பூண்டு மாயையாற் குழந்தைவடிவான கிருஷ்ணனுடன் அஸ்தினுபுரி வந்து குறி சொன்னதென்று புனைந்துரைக்கப்பட்டுள்ளது; செய்யுள் நடை சிறந்ததன்று; இடையே வசனமும் கலக்கப்பெற்றுள்ளது. இந்தப்பிரதி மிகவும் சிதிலமாயிருககிறது.

No. 308. குற்றாலக்குறவஞ்சி.

KUṞṞĀLAKKUṞAVAÑJI.

Substance, palm-leaf. Size, 13⅜ × 1⅛ inches. Pages, 118. Lines, 6 or 7 on a page. Character, Tamil Condition, injured. Appearance, old.

Complete.

A poem dedicated to the praise of Śiva as worshipped in the temple at Kuṟṟālam in the Tinnevelly district: by Tirikūṭa-rājappakavirāyar.

Beginning:

பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடனின ருடிய பரமன்
சிறுவனைப் பாரதப பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுங் கடைவாய்ப் படுமுன்னே - மேல்விழுந்தே
யுற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

பூமலி யிதழி மாலை புனைந்தகுற் றாலத் தீசர்
கோமலர்ப் பாதம் போற்றிக் குறவஞ்சித் தமிழைப் பாட
மாமத(த)த் தருவி பா(ய) மலையென வளர்ந்த மேனிக்
காமலி தருப்போ லைந்து கைவலான காவ லானே.

* * * *

தேர்கொண்ட வசந்த வீதிச் செல்வர்குற் றாலத் தீசர்
பார்கொண்(ட) விடையிலேறும் பவனியெச் சரிக்கை கூற

நேர்கொண்ட புரிநூன் மார்பு நெடியகைப் பிரம்பு மாகக்
கார்கொண்ட முகிலே றெனனக் கட்டியக் காரன் வந்தான.

End:

தென்னூடெல் வாழுனைத் தேடித் தவித்தேனே சிங்கி! அப்பால்,
இந்நாட்டில் வந்தென்னை யெப்படி நீகண்டாய்—சிங்கா !
நன்னகர்க் குற்றால நாதரை வேண்டினேன—சிங்கி !மணிப்,
பன்னகம் பூண்டாடீரப்பாடிக்கொண்டாடுவோம்—சிங்கா !
பாடிக்கொள் வாரெவ ராடிக்கொள் வாரெவர்—சிங்கி ! நீதான்,
ஆடிக்கொணடாற்போதும் பாடிகக்கொளவேண்டா—சிங்கா !

வெண்பா.

சுற்றுத சுறறெல்லாஞ் சுற்ற.

(த-பு.)—
குறவஞ்சி யென்பது, தமிழ்ப்பிரபந்தம் 96 வகையினுள் ஒன்று; இது குறவஞ்சிககுரிய பலதுறைகளின் முகமாகக் குறறுலததின பெருமை கனை விளக்குவது ; இதனை இயற்றியவர், இததலத்துககுச் சமீபித்த ஊரிலிருந்த திரிகூடரா சப்பககவிராயர் ; இத்தலம் திருககுற்றாலமென் றே வழங்கப்பெறுகின்றது ; திருநெல்வேலி ஜில்லாவில உள்ளது. இந் தப்பிரதியின் முடிவில் ஒரேடு இல்லை; சிங்கனுககும் சிங்கிக்கும் சம்வா தம் முடியும் வரையுள்ள பகுதிகள் இருக்கின்றன ; இந்தப் பிரதியின் முதலிலுள்ள "பவளமால்" எனனும் பாடல், திருவாதவூரர் புராண த்தின்கடவுள் வாழ்த்துச்செயயுள் ; 'காலன் வருமுன்' என்பது பட்டினத்துப்பிள்ளையார் பாடிய பாடல்; "பூமலி" என்பது முத லியன இந்நூற் செயயுட்களே.

No. 309. சிதம்பரக்குறவஞ்சி.

CIDAMBARAKKUṞAVAÑJI.

Substance, palm-leaf. Size, 14¼ × ¾ inches. Pages, 68. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

A poem in praise of Naṭarājar as worshipped in the temple at Cidambaram. It is in the form of a dialogue between a husband and a wife of the Kurava caste.

Beginning:

பிரமன்மால்¦போற்றுகின்ற பெரும்பற்றப் புலியூர்வாழுந்
தருணசீர் நடேசர் மீது தமிழ்க்குற (வஞ்சி பாட)

. . ரம் விகனத் தீர்கரு மேலைக்கோ புரத்தில் வாழுங்
கருணைசெய தருடந் தோங்குங் க . . . . ன.

தோடையம்.

ராகம, நாட்டை, தாளம், சமபை.
சம்பரம திகம்பர பரம்பர பொனம் (பல)
. . . லம்புட னடம்புரிபொற் சரணர்
உமபர்முனி கிம்புருஷர் தமபுருடன குமப
முனி யமபு . . (சிதம்) பரேசர்மீது
கஞசமலர் புஞசமஞ் மிஞ்சிவள ரஞசிதநி
ரஞசனகு திஞசிரச மிஞசுபரி பாக
(கொ)காஞ்சக(ளி) . . பிர பஞசமகி முஞசறரு
மின்சுகுற வஞசிநான் பாடல்செய செய.

End:

. . சேர்ந்திருப்போம் சிங்கா.

விருத்தம்.

சமபரம மாகமுதத் தாசாணி யெங்கும வாழ்
யும்பாமு . . . .
(தெ)தனபுலியூர் மகிழ்ச்சி சேர்சில காமி பஙக
ரம்பல வாண னொறு மனபருள வாழி வாழி.

மஙக(ளம).

. . . . வாணருகருத
தெரிந்து தமிழ வாசிககச செலலப்பிள்ளை தோனறிஞனே
மணந்த தமிழப்புலியூர் வ . . . . . .
. . த் தமிழவாசிககச் செல்லபபிள்ளைதோனறிஞனே
வளந்திகழந்த புலியூா மாநட ராசர் நாட்டில்.

(கு-பு.)—

இது, சிதம்பரம் நடராஜா விஷயமானது; செய்யுள்நடை சிறந்த தன்று; இந்தப்பிரதியின் கடையிற சிற்சிதபாகம இல்லை; சில ஏடு முறிந்தும் சில ஏடு செல்லரிக்கப்பட்டு மிருககினறன; இறுதியில் வாழத்தின் பிறகு 'தமிழ வாசிககச் செல்லபபிள்ளைதோன்றிஞன்' எனறு இருத்தலால் இந்நூலை இயற்றியவா பெயர் அதுவாகலாமென றும் தோற்றுகிறது.

No. 310. திருப்பாகையூர்க்குறவஞ்சி.

TIRUPPĀHAIYŪRKKURAVAÑJI.

Substance, palm-leaf. Size, 12¼ × 1⅓ inches. Pages, 77. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

A description of the holiness of Tiruppāhaiyūr now known as Poyhaippākkam, and of the greatness of the god Poyyamoḻiyīśar as worshipped there. The poem belongs to the kind of composition called Kuṟavañji as it is addressed to a woman of the Kuṟavar caste.

Beginning:

தார்காண்ட சடையர்மழுப் படைய ரொரு விடையர்
தையல்பார்ப பதிநாதர் பொயகைப்பா கையில் வாழ
சீர்கொண்ட பொயயாத மொழிப்பாமா மீது
திறமிஞசு குறவஞசிப் பிரபந்தம் பாடக்
கூர்கொண்ட கிளர்மருப்பன் வளர்பொருப்ப னளித்த
குமரிசுதன் கம பதன குஞ்சரவைங் கரவன்
கார்கொண்ட மெயயனம தையனம(த கு)ம்ப(க
கற்ப)கத்தின் பொற்பதத்தைக் கருதுவன்காத் திடவே.

தனன தனன்ன தனன தனதன தனன தனதன தனன[illegible]
[illegible]ரக மணிதிகழ் சரண பரிபுர வொலிகள் சலசல சவெனவே
யிரதி யுருவசி யிவளை நிகரிலையெனமி னடநிற நிறெனவே.

End:

தில்லை காளத்தி யருணை திருச்செங்கா டவிநாசி
முல்லை பேரளம் வேதா ரண்ணிய முக்களூர் வடகாசி
குடவாச னள்ளாறு கும்பகோணந்திரு வோத்தூர்
கடலூர் திருப்பனந்தா டிருக்கடை யேடகம் பூத்தூர்

தைய லேபல தலமுண் டதுதனி லுண்டையா வண்மையே
பொய்கைப்பாகை நற்றலங்காணவிப் போதவந்தன லுண்மை
[யே

கொச்சகக்கலிப்பா.

(1) தோடையம். (6) சரசசிந்தாமணி.
(2) பயணி. (7) மையல்.
(3) கோகிலமோகினி. (8) குறத்தி.
(4) வெண்ணிலா. (9) சரண்.
(5) தென்றல். (10) தலைவளப்பம்.

(கு-பு.)—

திருப்பாகையூர் என்பது, பொய்யாகைப்பாககமென்று வழங்கப்படுகிறது; இந்த, அத்தலத்துள்ள பொய்யா மொழிச்சர் விஷயமான குறவஞ்சி இதில் எழுத்துப்பிழையன்றியும் கூறியது கூறல் முதலாய பலபிழைகள் காணப்படுகின்றன; இந்தப்பிரதியில், குறத்தியை நோக்கி, நீ பார்த்துவந்த தலங்களைச் சொல் என்று கேட்டவனுக்கு அவள் சொல்லும் பாகம் வரை உள்ளது.

No. 311. கச்சியப்பதேசிகர்நெஞ்சுவிடுதூது.

KACCIYAPPADĒŚIKARNEÑJUVIḌUTŪDU.

Pages, 76. Lines, 7 on a page.

Begins on fol. 136*a* of the MS. described under No. 83.

Complete.

An eulogistic poem on Kacciyappa-Dēsikar, a disciple of Śivajñānadēśikar of the Tiruvaḍutorai Mutt.

Beginning:

காப்பு.

கச்சியப்ப தேசிகனென் கண்கலந்தின் பீர்தருள
நச்சியெழு நாளொ நேச னறுபணி - யிச்சகத்தை
யாக்கி யழிக்கவலா னசெசாடிதத்த தான்முதன்மை
யார்க்குமெனக் கொண்டா னடி.

(நூல்.)

உலகளித் தோன்முன் னுதித்தோன தேமே
ன்னிலவுதரு வச்சுடாய நீன் றோன - குலவுயிர்கட்
கனறே பிரா யமைந்து மதனறிவா
லென றேபுங் காணு வியல்பிருன் - பொனரு
தருவு முருவு மருவுருவு மல்லா
தொருகுணமு மில்லா தொளிர்வான - திரிமலத்து..

End:

தீரா வெனவுரைத்துத் தேனொழுகு முற்பலத்தார்
தாரா வெனப்பலகாற் றாழ்ந்திறைஞ்சி - யோரா
றறுமறைநூ லாதி யனைத்தினையு மீனும்
பிரணவம்போற் கேசரங்கள் பேணித் - திரமாகும்
பொற்கொன்றை வாங்கிப் புரிநெஞ்சே கொண்டுவந்து
நற்பெருவாழ் வீங்கெனக்கு நல்கு.

திருச்சிற்றம்பலம்.

கச்சியப்ப தேசிகன், நெஞ்சுவிடுதூது.

முற்றும்.

கச்சியப்பதேசிகர், திருவாவடுதுறை யாதீனம் சிவஞான தேசிகருடைய சிஷ்யர்; இவர், அரிய பெரிய நூல்க ளியற்றிய மகாவித்துவான்; இவர் இயற்றிய நூல்களின் பெயர்கள் 456 - ம் கண்ணிமுதல் 470 - ம் கண்ணிவரைக்கு முள்ள பாகத்திற கூறப்பெற்றிருக்கின்றன; இந்நூல் கச்சியப்பதேசிகர்மீது செய்யப்பட்டுள்ளது; 534 கண்ணிகளையுடையது.

No. 312. குமாரதேவர் நெஞ்சுவிடுதூது.
KUMĀRADĒVAR NEÑJUVIḌUTŪDU.

Substance, palm-leaf. Size, 10 × $1\frac{3}{8}$ inches. Pages, 26. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 128*a*. The other works herein are Tiruppōrūrsannitimuṟai 1*a*, Tanippāḍal 141*a*.

Complete.

A poem in praise of Kumāradēvar, an ascetic of Viruttāśalam: by his disciple Tiruppōrūr Cidambarasvāmihaḷ.

Beginning:

தஞ்சமென்றோர்க் கின்பந தருகுமர தேவன்மே
னெஞ்சுவிடு தூது நிகழ்த்தவே - விஞ்சும்
பழமலைவா ழாழத்துப் பாழிமத வேழக்
கழலிணை வாரிசமே காப்பு.

பூவாய்ந்த கற்பகப்பூம் பொங்கரிடத்திற் சிறந்தோன்
றாவாய்ந்த செங்கமலத் துள்ளிருந்தோன் - மாவாய்ந்த
மார்பகத்தோ னுகழுற்றோர் வருசகக்கூற் றைக்கடந்த
சீர்மிகுந்த காயத் திறன்முனிவோ - ரோர்மிகுந்த
மாணிக்கப் பைவிரித்து வாழுரகர் பாருறைவோ
ராணிப்பொன போன்றமறை யாகமங்கள் - பேணி.

End:

திருவடியில் விண்ணப்பஞ் செய்து வணங்கி
யிருமைதரு மிவ்வுலக மெல்லா - மொருமைபெறு
பேரின்ப மாகியெனறும் போரா திருந்தவிந்தச்
சீரன்ப னுயேன் செறிந்தோஙகத் - தாரன் ா
யினறிவளுக சீதி யெழில்வள்ளா லெனறியம்பி
நன்றெனவே சம்மதிப்ப நன்குரைத்து - மன்றலுறு
சற்குமர தேவன றருங்குவளை மாலைநெஞ்சே
யிற்பெறவே வாஙகிவா வின்று.

வெண்பா.

எவ்வுயிர்கருந் தாயா யிருந்தின் பமுதளிக்குஞ்
செவ்விதரு சறகுமர தேவன்பா - லவ்வியந்தீர்
நெஞ்சமே செஙகுவளை நீண்மாலை வாங்கிவரச்
செனுசெவ்வே தூதாகிச் செல்.

சிவனறிரு வுருவா மைந்து சின்மய வெழுத்தும் வாழி
தவன்றந நீறும் வாழி நயனநன் மணியும் வாழி
கவினறரு குமார தேவன் கழலிணை யிரண்டும் வாழி
யவன்றிரு வடியார் தம்மோ டாருயி ரனைத்தும் வாழி.

திருச்சிற்றம்பலம்.

குருவே சம.

(௲-௫.)—

குமாரதேவர் விருத்தாசலத்திலிருந்த ஒரு துறவி ; சாந்தலிங்கசுவாமிகளுடைய சிஷ்யர் ; இவர் பூர்வாசிரமத்தில் கன்னடதேசத்தை யாண்ட ஓர் அரசர் என்பர் ; வீரசைவ மதஸ்தர் ; இவர் செய்த சாஸ்திரங்கள் (14) உள்ளன இந்நூல் இவர்மீது இவர் மாணுக்கராகிய திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் இயற்றியது ; செய்யுள் நடைசிறந்தது ; இந்தப்பிரதியிற் பூர்த்தியாயிருக்கிறது.

No. 313. குமாரதேவர் நெஞ்சுவிடுதூது.

KUMĀRADĒVAR NEÑJUVIḌUTŪDU.

Substance, palm-leaf. Size, 13¼ × 1⅛ inches. Pages, 34. Lines, 6 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Aparōkṣātmānubhavadīpikaivacanam 18*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோனறது ; பூர்த்தியுள்ளது.

No. 314. கொற்றங்குடியார் நெஞ்சுவிடுதூது.

KORRAṄGUḌIYĀR NEÑJUVIḌUTŪDU.

nce, palm-leaf. Size, 8 and 9 × 1½ inches. Pages, 24. Lines, n a page Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol 31*a*. The other works herein are Namappattu 1*a*, Vaḍivuḍayammai 5*a*, Tihirivanapattu 11*a*, Tiruvuḷappattu 13*a*, Udavuppattu 15*a*, Gaurippattu 17*b*, Śodipattu 20*a*, Nūṟṟeṭṭu-tiruppadistuti 23*a*, Kuḷaikkādarśaraṉ 28*a*, Tanippāḍalhal 29*a*, Gurūpadeśam 43*a*, Karunilaippōdakam 48*a*.

Complete.

In praise of one Maraijñānasambandar: by his disciple Koṟṟaṅgudi Umāpati Śivācāriyar

Beginning:

பூமேவு முந்திப் புயல்வண்ணன் பெறபமைந்த
நாமேவு மாதுபுணர் நான்முகத்தோன் - றாமேவிய
பன்றியு மேனமுமாயப் பாரிடந்தும் வான்பறந்து.
மென்று மறியா வியல்பிறு - னறியும்.

* * * * *

End:

வெம்பும் பிறவி லை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் றூர்வாங்கி—. . . .

வஞ்சமே யும்விழியார் வல்வினை யெல்லா மகல
நெஞ்சமே வ * நினைந்து.

கொற்றவன் குடியார் நெஞ்சுவிடு தூது
முற்றும்.

கஉ அ-ம் ஆண்டு வைகாசிமீ கஅவ எழுதி முகிந்தது.

(கு-பு.)—

இது, தமது ஞானசாரியர்மீது கொற்றங்குடி உமாபதி சிவாசாரிய ராற் செய்யப்பெற்றது ; சைவ சித்தாந்தசாத்திரம் 14-இல் ஒன்ருகவும் சேர்க்கப்பெற்றுள்ளது ; செய்யுள்நடை நன்ருக இருக்கிறது ; இந்தப் பிரதி பூர்த்தியுடையது.

No. 315. பணவிடுதூது.

PAṆAVIḌUTŪDU.

Pages, 37. Lines, 10 on a page.

Begins on fol. 250*a* of the MS. described under No. 83.

Complete.

In praise of a certain noble lord named Tiruvēṅkaṭanādar. The poem is so called because wealth is therein personified and is described as having been sent as a messenger to bring a certain dancing girl by one who was abundantly enriched by the bounty of Tiruvēṅkaṭanādar.

Beginning :

வெல்லுந் திறனமாதை வேங்கடே சேந்திரன்மேற்
சொல்லும் பணவிடு தூதுக்கு - வல்லதொரு
கம்பகும்பத் தானையனறு கைகக்ழுங்கு போலாடுங்
கம்பகும்பத் தானைமுகன் காப்பு.

(நூல.)

பார்தந்த வேதன் பதும முகத்துதித்த
சீர்தந்த தெய்வத் திருக்குலத்தா - னோர்தந்த
முப்புரிநூன மார்பிஞன் மூதலகெ லாம்விளங்குஞ்
சுப்ரமண்ய விம்பமெனச் சோதியா - ஞைப்பி
லுபய குலத்தாம னுண்மையரிச் சந்த்ர
னபபனக னங்க னனங்கன் - சபைதிறைந்த

போசனனு(ப)மன பூச்சகர வாளமனு
ராசன விசயன ரகுராமன - வீசுபுகழ்

End:

கோலவளை யிட்ட கொடுங்கையிலே நான்படுத்த
காலமல்ல வோவெனககுக கண்ணுறங்கு - நீலி
கொலைக்கருங்கண் பாயந்து குடைந்திடுமென மார்பின்
முலைக்கருங்கண் பாய் தலே முக்யம் - பெலககத்
துரைப்பண நீ கைப்புகுந்தாற ரேகைமட மின்று
ளரைப்பணமென கைக்குள்வச மாமே - வரைப்புறத்திற்
பீடுபெறு மாமேகம் பெயயவந்த போதுமயி
லாடுவதே யல்லா லமைபுமோ - வோடுவதோ
வெய்யவனைக் கண்டு விரிவதல்லாற் பூங்கமலச்
செய்ய மலர்முகிழ்ச்சி செய்புமோ - வையாநீ
தூதுசென்றால் வந்தெனது சோகந் தணிபளந்த
மாதுதனைப் போயழைத்து வா.

திருச்சிற்றம்பலம்.

Colophon:

(கு-பு.)—

இது, மாதையிலிருந்த திருவேஙகடநாத ரென்னும் பிரபுவாகிய அந்தணர்மீது செயயபபெறறது; செய்யுள்நடை நன்றாக இருக்கிறது; சற்று ஏறககுறைய 340 கண்ணிகளையுடையது; பொருளின் பெருமைகளை எடுத்துககூறுவது; இந்தப பிரதியில் நூல் பூர்த்தியாயிருக்கிறது.

No. 316. சங்கரமூர்த்திவிறலிவிடுதூது.

ŚAṄKARAMŪRTIVIRALIVIḌUTŪDU.

Substance, palm-leaf. Size, 13¼ × 1¼ inches. Pages, 114. Lines, 6-10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

In praise of one Śaṅkaramūrti, a wealthy personage of old in Tinnevelly.

Viṟali is the name given to a particular actress. In this class of poems she is described as having been sent out as a messenger.

காப்பு.

Beginning:

என்னை புமின் னமுற் திருதலுங் கருணையாலே
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

* * * * *

நூல்.

[illegible]

End:

[illegible]

* * * * *

[illegible]

(கு-பு.)—

சங்கரமூர்த்தி யென்பவர், திருநெல்வேலி [illegible] ஒரு பிரபு; இந்நூல் இவர்மீ[illegible] செய்ய[illegible]; [illegible] 31-[illegible] [illegible] [illegible] [illegible]; இந்நூல் அச்சிடப்படவில்லை; இந்த [illegible] 1 முதல் 51 வரையிலுள்ள [illegible] முறையே இருக்கின்றன; பிறகு 59-வது, 63-வது [illegible] வேறொரு நூலினிடையுள்ள [illegible] உள்ளன; கடையிற [illegible] காணப்படவில்லை.

No. 317. தெய்வச்சிலையான்விறலிவிடுதூது.
DEYVACCILAIYĀNVIṞALIVIḌUTŪDU.

Substance, palm-leaf. Size, $11\frac{1}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 83. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

In praise of a certain wealthy personage who lived in the Pāṇḍiya kingdom.

Beginning:

தென்னவனு டாளுமங்கைத் தெய்வச் சிலைமீது
சொன்ன விறலிவிடு தூதுக்கு - முன்னிறபன்
சிந்தைமகிழ் மாறனைமேற் செந்தமிழ்வே தம்பாடு
மெந்தை மகிழ் மாற னிசைந்து.

1161௵ ஆடிமீ 29 தேதி வியாழக்கிழமை உத்தராட நக்ஷத்திரமும் பெற்ற சுபதினத்தில் விறலிவிடுதூது எழுதத் தொடங்கினது.

பார்கொண்ட திண்புயத்துப் பச்சைமா லுந்தியினுள
வேர்கொண்ட செங்கமல மேன்பொகுட்டி - னேர்கொண்
டுதித்தப பிரம னொருவ னிருந்து
விதித்துலகெல் லாம்படைக்கு மேனாட் - கதித்ததொரு

End:

வந்தா னொருவன மணவா ளனைததொழுதாள்
செந்தா மரைத்தாண் மேற றெண்டனிட்டா-னைந்தருவுந்
தேனுவும்போ னல்குகொடைத் தெய்வச் சிலைராயன
ருனுதவ வேண்டியசம் பததினுக் - வானவாகள்
போற்றுகும ரேசனைப பூசிக்கும் வேளையினு
மேறறசந்தி பண்ணுமவ வேளையினும் - வேற்றரசர்
சிங்கமெனுந தெய்வச் சிலைரா யனைவாழ்த்தி
நங்கையுடன கூடி . . . . பங்க(ய)ப்பூம்
பெண்மயிலு மாலும் பிரியாமல் வாழவதுபோன்
வண்மையுடன வா(ழ்)நதார் [மன] மகிழ்ந்து.

(கு-பு.)—

தெய்வச்சிலையான என்பவன, பாண்டிநாட்டிலிருந்த ஒரு பிரபு; இவனிருந்த நாடு, ஊர் முதலியனவும், இவனது வம்சமும், கீர்த்தியும், 49 - கண்ணிமுதலியவற்றால் தெரிகின்றன. இந்நூல் செய்யுள்நடை சிறந்தது; இன்னும் அச்சிடப்படவில்லை, இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாக இருக்கிறது; பின்பிரதிக்கு இது மூலப்பிரதி; தெய்வச்சிலைத்தாதாபேரில் விறலிவிடுதூது என்றும் இரண்டிடத்திற் காணப்படுகின்றது.

No. 318. தெய்வச்சிலையான்விறலிவிடுதூது.

DEYVACCILAIĀNVIṞALIVIDUTŪDU.

Pages, 40. Lines, 25 on a page.

Begins on fol. 87*a* of the MS. described under No. 178.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதியைப்போன்றது; பூர்த்தியாக இருக்கிறது.

No. 319. கலிங்கத்துப்பரணி.

KALIṄGATTUPPARAṆI.

Substance, paper. Size, 7¾ × 7¼ inches. Pages, 93. Lines, 20-25 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

An eulogistic poem written in commemoration of the conquest of the Kalinga country by a certain Cōla king named Vijayendaracōlan. The poem is of some historical importance as it gives the genealogy of the Cōla kings: by Jayaṅkoṇḍār.

குலோத்துங்க சோழன் ராஜ்யபரிபாலனம் பண்ணின வருஷம கலியுகாப்த சகம் 3629, சாலிவாகன சகம் 419

Beginning :

உண்மைமுறை செயங்கொண்டா
ருரைத்த கலிங்கத்துப் பரணிதனை
யொண்மைபெறு கவிநாவலர் யிரத்தொன்பா
னூற்றுப்பத் தொன்ற மாண்டு
நுண்மைவலி சாலிவாகன சகாத்தம்பதி
னேழ் நாமறெண் ணுன்காம்
வண்மைகுக் கிலவருட மகிபதிமக் கீந்தி
துரை வருவித்தாரே.

* * * * *

அருந்தமிழ கசட்ற வருளிய வுரவோன்
றிருந்தடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே.

புயலவண்ணன புனல்வார்ககப் பூமிசையோன
றெழில்காட்டப் புவனவா(ழ்க)கைச்
செயல்வண்ண நிலைநிறுதத மலைமகளைப் புணாந்தவனைச்
சிந்தை செயவாம்.

சூதளை வளவெனு மிளமுலைத்
துடியளை வளவெனு நுண்ணிடைக
காதளை வளவெனு மதர்விழி(க)
கடலமு தனையவா திறமினே. (1)

புனை பட விளமுலை வளாதொறும்
பொறியறி வுடையரு நிலைதளர்ந்
திடைபடு வதுபட வருளுவீ
ரிடுகத வுயர்கடை திறமினே. (2)

பொன்னித் துறைவனை வாழ்த்தினவே
பொருனைக் கரையனை வாழ்ததினவே
கன்னிக் கொழுநனை வாழ்த்தினவே
கங்கை மணாளனை வாழததினவே. (325)

* * * * *

வேத நன்னெறி பரககவேயபயன்
வெம்பு லிப்பகை கெடுபபவே
பூத லம்புவி புரகக வேபுவி
நிலைகக வேபுயல சுரககவே. (329)

(சர)நிரைத் தானைன தண்டனி நூங்கந தலைமிலசககெங
கரநிரைக காரையுங காண்பர்கொல் லோகலிங கத்துவெம்போர்
பொரநிரைத் தார்விட்ட வேழமெல் லாம்பொன்னி நாட்டளவும்
வரநிரைத்தான் றெண்டை மானவண்டை மாநகர் மனனவனே.

தடங்குலவு நாண்மாலைத் தாமத்தங் கையில்
விடங்குலவு வெள்வாள விதிர்ப்ப - நடுங்கியதே
Begins on fol. 61*a* of the MS. described under No. 165.

Similar to the above.

Contains 20 stray stanzas of poetic merit.

Beginning:

சண்டைப்பைக் குள்[ளிருந்து](ளுயிர்தன்) தாய[ரிய] (ருந்தத்)
தானருந்து
மண்டத் துயிர்பிழைப்ப தாச்சரிய - மண்டி
யலைகின்ற வன்னே யரனிடத்தி லுண்மை
நிலைகண்டு நீயுணர்ந்து நில்.

End:

இப்பாடே வந்தியம்பு கூடுபுக லென்கிளியே
யொப்பாடாச் சீருடையா னூர்வதெனனே - யெப்போதுந்
தேன்புரையுஞ் சிந்தையராயத் தெய்வப்பண் ணேத்திசைப்ப
வானபுரவி யூரு மகிழ்ந்து.

(கு-பு.)—

இதில் 20 தனிப்பாடல்கள் உள்ளன.

No. 358. தனிப்பாடல்.

TANIPPĀḌAL.

Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 141*a* of the MS. described under No. 312.

Stray stanzas taken from a certain collection of poems known as Tiruppōrūrsannadhimuṛai composed by Cidaṁbarasvāmihaḷ.

Beginning:

அகிலாவி யுண்டெனக காதலி னீசட மாமெனவே
முகிலோ மகலிப் புழுகற லாடிமொய் வாசங்கொண்டு
நகிலே சுமந்து வருந்திடை சாய நணுங்குழலார்
தகிலே யெனுதுள மேபோரி வேலனைத் தாழ்ந்திறைஞ்சே.

End:

தீர்த்தஞ் சிவானந்தஞ் செய்யதல மோமாகு
மூர்த்தி பராப்பிரம முத்திதருஞ் - சீர்த்த
திருப்போரூ ருண்மையிதைத் தேர்ந்த பெரியோர்
மருப்போதன் கைப்படார் வந்து.

சன்னிதிமுறை முகிந்தது முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது திருப்போரூர்ச் சனனிதி முறையினின்றும் தொகுத்தெடுத்த சிலபாடல்களையுடையது. 'விடுபாட்டு' என்று எட்டின தலைப்பில் குறிக்கப்பட்டிருக்கிறது.

No. 359. தனிப்பாடல்.

TANIPPĀḌAL.

Pages, 8. Lines, 6 on a page.

Begins on fol 1*a* of the MS. described under No. 218.

Contains certain selections from Tiruvaḷḷuvar, Kaṁbar and other poets.

Beginning:

பூவி லயனும் புரந்தரனும் பூமிதனைத்
தாவி யளந்தோனுந் தாமறியார் - நாவி
விழைநக்கி நூ(னொரு)டு மேழையறி வேனோ
குழை(நக்கும்) பிஞ்சகன்றன் கூத்து

End:

> பெருத்திடுஞ் செல்வநோய் பிணித்த காலையி
> லுருத்தெரி யாமலே யொளி மயங்கிடு
> மருத்துவ மேதெனில் வகையிற் கே(ட்)பிராற்
> றரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமே.

(கு-பு.)—

இதில் திருவள்ளுவர் கம்பர் முதலியவர்கள்செய்த பாடல்களுள் சிலவுள்ளன; இடையே திருவள்ளுவநாயனார் பாவையகவல் என்ற பெயரோடு 'வேதப்பரஞ்சோதி' என்ற முதலையுடைய செய்யுள் ஒன்றுள்ளது; அஃது அகவலன்று; ஆனந்தக்களிப்புப்போன்ற சந்தமுடையது; திருக்குறள் செய்தவர் வாக்கென்று எண்ணச் சிறிதும் இடமில்லை.

No. 360. தனிப்பாடல்கள்,

TANIPPĀḌALKAL.

Substance, palm-leaf. Size, $12\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 7. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 10*b*. The other work herein is Jñānōpadeśam 1*a*.

A collection of stray stanzas by Kapilar and his brothers.

Beginning:

> நான்முகத்தோன் கூறிய நாலு வழிவகை
> யான சிறப்பி லரும்பொருளைக் கூறுங்கா
> லாண்முதி தோஷ பெண்முதி தோஷ
> நாண்முதி தோஷ கோண் முதி தோஷ
> நல்வினை முப்போ தீவினை முப்போ
> செல்வஞ் சிறப்போ வறிவு சிறப்போ

End :

ஆணும் பெண்ணு மல்லது வேறு
குலமு மில்லை குடியு மில்லை
பிழைபேணி னடப்பது பிழையெனப் படுமே
சிறப்புறு செல்வமுங் கல்வியு மல்லது
பிறப்புநலந் தருமோ பேதையீர் பேதையீர்.

அதிகமான் சொல்.

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட்டே ரைக்கும்
விருப்புற் றமுதளிக்கும் மெய்ய—னுருப்பெறறு
லூட்டி வளர்க்காதோ வோகெடுவா யன்னேயென்
வாட்ட முனககேன் மீ

(கு-பு.)—

இதன் முதலிலுள்ள அகவல், கபிலரெனபவர் ஜாதிபேதமில்லை யென்றுகூறியதெனபர். இதன்பின் 2 வெண்பா உள்ளன.

No. 361. தனிப்பாடல்கள்.

TANIPPĀḌALHAḶ.

Pages, 7. Lines, 10 on a page.

Begins on fol. 74*a* of the MS. described under No. 270.

Ten stray stanzas in praise of certain Śiva shrines and of certain Ācāryas in Conjiveram.

Beginning :

மணிகண்டா நின்னை மருவடியேன் பாசப்
பிணிகண்டா வாவென்று பேராய்—நணிநின்றுற்
பூரணனென் னுமம் பொருந்தா தவைக்குளவாம்
பேரறிவும் போமோ பிரிநது (1)

ஆணவமே யென்னை நீயாண்டிருந்தாய் தென்னல்வரை
தானுதிருக்கா ஞசியில் வாழு தக்கேசன்—பேணியென்னை
யின்றடிமைக் கொண்டா னினி யென்னையா ளககருதிற்
கொன்றிடுவ னன்றுய்க் குறி. (2)

End:

பணிகைக்குக் கங்கண மாக்கொண்ட சங்கரன் பாலுதித்தோன்
றணிகைக்கு நாயக னாகிய சண்முகன் றனை நெஞ்சே
யணிகைக்கு வித்திரந் தைத்திதின் றூடி யிறைஞ்சுசை வயேன்
மணிகைக்கு வந்த தெனக்காட்டும் பேரினபை வாழ்குதுமே 10.

(கு-பு.)—

இதில் காஞ்சீபுரத்திலுள்ள சில தேவர்களின் துதியும் ஆசாரியரது துதியும் கலந்து இருக்கின்றன; 10 பாடல்கள் உள்ளன.

No. 362. தனிப்பாடற்றிரட்டு.

TANIPPĀḌAṞṞIRAṬṬU.

Substance, palm-leaf. Size, 16½ × 14¾ inches. Pages, 224. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

A collection of rare stanzas from different authors.

Beginning:

புவிக்காதி பகியிளசை புரந்தவேங்க டேசரெட்டன் புலவோர் சொன்ன
கவிக்காதி வள்ளலைக்கண் டாசைகொண்டா ளுக்கமுதைக் கரைத்துப் பால்வார்த்
துவிக்காதிவ் வளவேனும் புகட்டு சகியேமுகத்தைத் துடை தண்ணீரு
தவிக்காதி லேசுக்கா ளுலும்வைத்தா திவள்காமத் தகைக்குத் தானே. (1)

*   *   *   *

பாரத் தலைவிரிக்கும் பனஞைட மேற் சுற்றும்
சோர விளநீர் சுமந்திருக்கும்—நேரே
யேறி யிறங்கும்? யேந்திழையுந் தென்னமரம்
பேறுமிரண் டொன்றாகப் பேசு.

சுமார் வெண்பா (மாத்திரம்) முன்னூற்றெண்பத்தாறு.

End:

கனிவந்த சொல்லியர் வேளகரு மாணிக்கங் கப்பைவெற்பிற்
றனிவந் தனமொரு வேட்டையென் றனபின்பு தந்தியெனறுன்
முனிவர்த கோடடுக் கலையதென் றன்பின் முயலசென்று
னினிவந்து சிற்றெறும் பாணுலு மாமிவ ணையஃதுவே.

(கு-பு.)—

இதில் பற்பல அரியபாடல்களுள்ளன; உத்தேசம் 1000 பாடல் வரை இருக்கலாம்; இவற்றுள அச்சிடப்படாதபாடல்கள் பல இருக்கின்றன; இந்தப்பிரதியிற் சில ஏடுகள் சிதிலமாகவுள்ளன.

No. 363. தனிப்பாடற்றிரட்டு.

TANIPPĀḌAṞRIRAṬṬU.

Substance, palm-leaf. Size, $14\frac{7}{8} \times \frac{3}{4}$ inches. Pages, 146. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

A collection of 225 stanzas from different authors.

அட்டவணை.

ஏறில்லா.	நீற்றோனு.
இறந்து.	மலரோனு.
அசைகதும்.	முனியகாறு.
ஊருங்கிளை.	காகத்திரு கண்ணுக்.
கண்ணுக்கினிய,	முனிவரு மனனரு.
வெண்பாவிரு.	மீண்டாரென.
மானமுள்ள.	ஊழிககருஙகங்கு.
ஆழிக்கிதவ.	போமெனறிற.

Beginning:

ஏறில் லாதவர் தானு யிருப்பவ
ரெப்போது முள்ளவ ரெல்லா மறிந்தவர்
மாறில் லாதவர் மாட்சிமை யுள்ளவர்
வளரு நன்மைச் சொரூபம தான(வர்)
பேறு தாரவர் பேரின்ப முள்ளவர்
பிறந்தி றக்குஞ் சரீரமில் லாதவ
ராறு நாலு லட்சண முள்ளவ
ரவரே கர்த்தரென் றறிந்துகொ ணெஞ்சமே. (1)

* * * *

End:

ஊழிக் கருங்கங்கு னீக்கிவெய் யோனையிங் குள்ளழைக்குங்
கோழிக் குலத்தை வளர்ப்பதல் லாற்கொழுங் காவி(ம)ள்ளர்
மேழித் தமிழ்மணக குந்நெலலை நாதர் வியன்சிலம்பிற்
பாழுக்கு யான்வளர்த் தேனகிளி யோடன்னம் பால்பகர்ந்தே.
போமெனறிற.

(கு-பு.)—

இதிலுள்ள பாடல்கள் 225; இவை ஒருநூலிலுள்ளவையுமல்ல; ஒரு வரரற்பாடப்பட்டவையுமல்ல; இப்பாடல்களுககு முகற் குறிப்பு முதலி விருககிறது; இந்தப் பிரதியில 63 என்ற எண்ணிட்ட ஏடு இல்லை.

No. 364. பலகவித்திரட்டு.

PALAKAVITTIRAṬṬU.

Pages, 16. Lines, 45 on a page.

Begins on fol. 48*a* of the MS. described under No. 186.

Contains certain stanzas in praise of God and in praise of a Muhammadan master.

Beginning:

அண்ணு மலைநாதர்க கன்புவைத்த மெய்யடியா
ருண்ணு முலைபாத முட்கொள்வார-நண்ணுத
சொற்கததி லெய்திச் சுகத்தை யடைந்திருப்பார்
நற்கருணை கொண்டிருப்பார் நாடு.

End:

காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
தோயந்து சிவந்தது மின்னுள் கொடுஙகணை தொல்புவியி
லாய்ந்து சிவந்தது கற்பூரக ணெஞ்ச மவனியிலே
யீந்து சிவந்தது வாழ்சையதக காதி யிருகரமே.

(கு-பு.)—

இதில் கடவுள்துதியான செய்யுட்களும் சைதக்காதி யென்னும் முகம்மதியமதப் பிரபு விஷயமான செய்யுட்களும் மற்றும் விநோதமான சில செய்யுட்களுமுள்ளன.

No. 365. பலதுறைக்காரிகை.

PALATUṚAIKKĀṚIKAI.

Pages, 2. Lines, 16 on a page.

Begins on fol. 44*a* of the MS described under No. 122.

A collection of seven stray love-stanzas selected from different writers.

Beginning:

1. மாலே நிகரொத்த சந்திர வாணன் வரையிடத்தே
பாலேறிப் பாய்ந்திடத் தேன்மாரி பெய்யநற் பாகுகற்கண்
டாலே யெருவிழ முப்பழச் சாற்றி னமுதவயன்
மேலே முளைத்த கரும்போவிம் மாதுக்கு மெய்யெங்குமே.

End:

7. கனம்பிரிந் தாலுமின வான்பிரிந் தாலுங் கதிர்புனல்விட்
டனம்பிரிந் தாலும் புயல்போலு மேனிய ரம்புயமின்
றனம்பிரிந் தாலுந்தென் ஞாநூர்த் தியாகர்தமடியார்
மனமபிரிந தாலு முனைப்பிரி டேனடி மாதங்கமே.

(கு-பு.)—

இதில் ஏழு கலித்துறைகள் உள்ளன; அவை வேறுவேறு கோவைகளிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டவை; இன்பச்சுவையை விளைப்பவை.

No. 366. பலதுறைக்காரிகை.

PALATURAIKKĀRIKAI.

Substance, palm-leaf. Size, $17\frac{1}{4} \times 1\frac{5}{8}$ inches. Pages, 2. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 44*a*. The other work herein is Sōtiḍasaṅgraham 1*a*.

A collection of rather vulgar love-stanzas selected from different authors.

Beginning:

கட்டிக் கரும்பே கனியுவைத்த தேனேயென் கண்மணியே
விட்டுப் பிரிந்தொரு மாதம்போ லாச்சுதே யென்றன் மேவுதனை
யொட்டுங் கரும்பும் போல விருந்த வுறவுதனில்
விட்டுப் பிரிந்தவர்க் கல்லோ தெரியும் விசாரங்களே.

End:

வந்தது காத மினிச்சற்று தூர மதுரைககப்பா
லந்தர மான வழியுறு காத மத[ற்க]ப்புறத்தெரு
சந்தனச் சோலையு ந ணீர்த் தடாகமுந் தாமரையுங்
கொத்தளங கொநதள மெனறே யொருமயில கூபபிட்டதே.

ராமஜெயம்.

(கு-பு.)—

இதிலுள்ள பாடல்கள் 7; மிகவும் கிராமியமானவை; பிழையா கவே யுள்ளன.

No. 367. பலபாடற்றிரட்டு.
PALAPĀḌARṚIRAṬṬU.

Pages, 62. Lines, **4-9** on a page.

Begins on fol. 8*a* of the MS. described under No. 82.

A collection of stray stanzas dealing with various topics.

Beginning:

தருசபூ லொடுநூ புரமுந் துகிலும் தறுகட் புலியதளுஞ்
சந்தொடு வெண்பொடி யுஞ்சிறு பைங்கிளி யு(ங்) கலை யும்பொறியா
ரரவுந் தொடியுந் தாளப் பணியு மணிவெண் டலைவடமு
மங்குறை தோடுங் குழலுஞ சடையு மழுகுட ணிவை மருவி
மரகத மதியும் வெள்ளைக கதிரு மாறு தோருருவில்
வந்தது போலென் றுயு நீயு மதியிலி யென்ற[ன ற]ன்னை
விரைவொடு வந்து புருந் தாளுந்திற மெத்தவு மற்புதமே
வேலை யினும் . . மாதவ முற்றிய வேத கிரிக்கரசே.

* * * *

புதைப்பார் தனத்தை யதன்வா யிலுமண்ணைப் போட்டுத் தன்வாய்க்
கதைப்பார்க ளிலுமண்ணைப் போட்டுககொள் வார்பசி யாலிரங்கிப்
புதைப்பா ரெடுத்துண்ண மாட்டார் செருப்பிட்ட பாதத்திறு
துதைப்பார்க்கு மேகொடுப் பார்சென்ம பாப வுலுத்தருமே. (158)

மாலைத் தாமரை விழித்திரு மணங்கொளத் துளப
மாலைத் தாமரை வாருதி யெழுங்கதிர் மலர்த்துங்
காலைத் தாமரை காட்டிய கருணையங் கண்ணன்
காலைத் தாமரைக் கணமக லாதுநங் கருத்தே. (1)

End:

நாடகத் தீ கீத லீலா விநோதக்தி நாராய ணீயாமளீ
நாதத்தி யோங்கார ரீங்கார சுந்தரீ நாதரிட சம்பாஷணீ
யாடகத் தீவீர வீரேசு ஒரிகுமரி யாரணீ ய[ன்]னபூரணி
யானந்த தாண்ட வா டம்பரீ சத்திமயி டாகினீ சர்தரூபி
பாடகத் தீசங்க வாகனை ரு . . . . . .

(கு-பு.)—

இதில் தெய்வத்துதியும் நரத்துதியுமான பாடல்கள் சிலவும் நீதி யும் விநோதமுமான பாடல்கள் சிலவும் சீட்டுக்கவிகள் சிலவும் சிங் காரரசமான பதங்கள் சிலவும் காணப்படுகின்றன ; அச்சிலில்லாத பாடல்கள் பலவும் அச்சிலுள்ள பாடல்கள சிலவுமாக இருக்கின்றன.

No. 368. பலபாடற்றிரட்டு.

PALAPĀḌAṞṞIRAṬṬU.

Substance, palm-leaf. Size, 16 × 1⅛ inches. Pages, 129 Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured Appearance, old.

A collection of certain stanzas in praise of certain wealthy personages. The names of the authors of the stanzas cannot be made out.

Beginning:

நேயராலே மருதினராயசீ
காயமேலமனிய லிகநேயமா
மாயனேகலியாணிமனேயகா
சீயரானதிருமலேராயனே. (1)

மதுரைச் சொககநாயகர்சொன்ன இயற்கை வாசனை அகவல்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டன மொழிமோ
பயலியது கெழீ இய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோநீ யறியும் பூவே. (2)

End:

மாடொழிய மும்மதஞ்சேர் வாகனத்தி லேறினரோ
வோடொழியப் பொற் கலத்திலுண்டாரோ - நாடறியத்
தென்கண்ட சோலேத்திரு வொற்றியூருடையா
ரென் கண்டிவரா (டலே).

. . . . டமாணன்
மெய்யாமிரு வகைநண்பையு மெண்ணுதகை வளையும்
விழிமையுமொா ழித்தாளிது மேன்மைக்கியல் பாமோ
செய்யாரமெ ழிகசுந்திரு நென்மைப்பதி தனிலே
தென்னூலுணர் வாரும்வட திசைநூலுணர் வாருந்
துய்யாருமி வன கல்வியின் மலையத்தவ னெனவே
சொல்லப்பெரு மாணல்கிய செல்லப்பெரு மாளே.

(கு-பு.)—
இதிலே பற்பல பிரபுககண்மீது பாடப்பெற்ற பற்பல அரிய பாடல்கள் இருக்கின்றன; அவற்றுள் இதுவரையில் அச்சில் வராத பாடல்கள் பல; அச்சில்வந்த பாடல்கள் சில, இதிலுள்ள பாடல்தொகை முந்நூற்றுக்குக குறைவில்லை.

No. 369. பலர்பேரிற்பாடியகவி.

PALARPĒRIṞPĀḌIYAKAVI.

Substance, palm-leaf. Size, 16½ × 1 inches. Pages, 137. Lines, 4-5 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Similar to the above.

These stanzas seem to be in praise of certain very ordinary person.

Beginning:

அருள்பெருக வாகீசர் தங்காத லித்தா
யங்கமலப் பொற்பாத மனுதின (மும் பணிந்து)
தெருளாகம சாஸ்திரந் தெரிந்தகுண தூயன்
திரிகால செபசந்தி செய்யும்பிர தாபன்
பொருளான பிரம்மகுலம் விளங்கவரு நேயன்
போதவே பாசநக ராதிமா தவனே
குருவான நயினையைய ரீண்டருளு மைந்தன்
குணமுடனே குழந்தையா நாகேசர் வாழி.

End:

தேயா மதியு முகம்போ லிருந்து தினந்தினமு
மீயா வருங்கவி வாணரு மந்தண ருததமர்க்கு
வாயாலே கேட்டதெல் லாந்தருந் தம்பியப் பாமுதலி
சேயா வனைவர்[க்கு]நே யாவீரா சாமி சிரோமணியே

(த-பு.)—

இதில் குழந்தை நயினுக்குருக்கள், நாகப்பையர், கணக்குச்சாமிப் பிள்ளை, தம்பு நாயககர்; ஆண்டியப்ப முதலி, சிரங்கச்செட்டி முதலிய செட்டிகள், சில பொனவேலைககாரர்கள். சில ரெட்டியார், சில துலுக்கர் முதலிய ஐம்பது மனிதர்களமீது பாடப்பெற்ற பாட்டுக்கள் உள்ளன: அவை கும்மி, கலித்துறை, கொச்சகம், விருத்த முதலிய பல வகைச் செய்யுட்களாக இருக்கின்றன; வாககு, சாதாரணமானது.

No. 370. பலர்பேரிற்பாடியவண்ணம்.

PALARPĒRIṞPĀḌIYAVAṆṆAM.

Substance, palm-leaf. Size, $14\frac{5}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 57. Lines, 7-9 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

A collection of stray stanzas in praise of certain god and men.

Beginning:

சீரா ருந்தா துகுகளுசத் திருத்கடந்தனி லுதித்தமண்டல
மாகா யந்தா பரசங்கத் திரட்களுந்தரு பரப்பிர்மம்பணி
சரணயுகளபரி புரசிலரிகளற பதனதகன திரி
புரமணிமார்பின

மீதாய் நின்ரு டியவன்கைத் தலத்தழுந்கிட வளைத்தசந்தி
லாய்பா ரந்தா வருதந்தர் பரத்துமந்திர முரைத்தபைங்கிளி
யதரபவளவமு தயரவனிதைகுற வரிவையிருவருண
வருளுமுலாசர்

சீதா ரம்பா சலகும்பத் துதித்தசிந்துரு வகத்தியன்குரு
வாவா யுங்கா இனிரமபத் தமிழுப்ப்ரபந்தம துரைத்தவன்பின
ருணகிரிமுதிய தமிழுமடியவர்க ' மதுகவிதையயு
மணியும் விலாசர்.

குரவமாலையு மணிந்த புயத்திஞர் . . . . (1)

End:

கார்த்திகைமிஞர்களிரு டாற்கலசமாறுகனி
வாய்க்குளமையாதொழுகு பாற்றரளமாலநிகர்
வரைத்தோகையார் . . . துரைத்தோகையாரசுரர்
குலததோகையார்தமது பதத்தோகையார்முனிவர்

தாய்க்கொருவிரோதமக ளூர்க்கொருவிரோதமின
நீர்க்கொருவிரோதமுலை . . . . . .
தனத்தோடுதோயுமளி யினததோடுபாயுநெடு
மரத்தோடுசாயுமிரு சரத்தோ காயுவளர்

காட்டின்மடமானினுயர் வீட்டின்மயில்காணுமொரு
கூட்டில்விளையாடுதொழில் காட்டுமிருநிலவிழி
மருட்பார்வையாலளிகள் குடிப்போயவிடாமலதை
யருட்பார்வையாலருகி லணைததேவிடாதகுழன்

மட்டுவார்குழலி யொருபாகர் . . .
பட்டபாடமையு மினிமேவுமே.

தாயுமானசுவாமி வண்ண முற்றிற்று.

(க-பு.)—

இதில் முருகக்கடவுள், மருந்தீசர், அம்பலவாணர், ஞானகிரீசர், தாயுமானவர், சேதுபதி, சிவகிரித்துரை, சடையப்பன இவர்கள்மேல் பாடப்பெற்ற வண்ணங்கள் இருக்கின்றன.

No. 371. பலர்பேரிற்பாடியவண்ணம்.

PALARPĒRIṞPĀḌIYAVAṆṆAM.

Substance, palm-leaf. Size, 18 × 1 inches. Pages, 136. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good Appearance, old.

Some leaves are broken.

Similar to the above.

Beginning:

நீடுவிற்சுரும்பு மாரனைக்கடிந்து
மானிடப்ரபஞ்ச மா(யை)யைத்துரந்து
கரணத்தி ஞெடுநீத்த சிவசித்தி தருதறப
ரவிவஸ்து வைமனத்தி னிலிருத்தியோக

சாதனைக்குகந்து ஆசனத்திருந்து
தாள்வழுத்து மன்பர் பாலரு(ட்) புரிந்து
மனபத்தி பெறுமுற்றி புரியற்று பசரித்து
சிவசு(த்த) சம(யத்தை) நிலையிட்டதேவ

னீதிநற்கொழுந்து சோதிமெய்க்கொழுந்து
வீழியிற்பதிந்த வாழ்சிவக்கொழுந்த
ிருபற்ப சரணத்தை யி[ருதை]தயத்தி னிலிருத்தி
ஒருபொற்கு டைநிழறற வுலகததையாளு
வள்ளல்காரி சுரபிமுலே போலவே . . . . (க)

End :

புலவருககமு தினையளித்தவர் புவியனைத்தையொ ரடியடக்கினர்
பூவைமாமலர் போலுநீடொளி யானமேனியர் வேதவாயினர்
அரவினுச்சியி னடனமிட்டவர் சகடுமுற்பொடி படவுதைத்தவர்
ஆனையானது மூலமேயென வேகராவிழ வாளியேவிய
புனிதரச்சுத ரிடையர்பக்கலி லுறியிறக்கிநெய் தயிர்குடித்தவர்
பூசலாலுயர் வாலிதூளெழ வாளியேவிய வாளியேவியர்
முனிவரர் பார்ப்பார் பூத்தலர்ந்த நாபியுடையார்
* * * *

தழுவியிட்டகை வளைகலுககென நெரிபடககொடி யிடைசலித்திட
வாரிசாதக மானதாளினில் .. ாவுநூபுர வோசைகோவென
மணியிசழ்கொடி படநககுறி மணிமிடறுமினி லினிதழுத்திட
மோகமாகிய தேறலானது பானமாகிய போர்கள்போனமகிழ்
தனிமயககமு மருவியிட்டுமெ யவசமு றிடை . . . .
வாகவேயனு போகலீலையெ நாளுநானமற வேனிராமய
மோக்ஷவினப வாழ்வு மிதுவே. (1)

திருமாகறல் வீற்றிருந்த பெருமாள்பேரில் வண்ணம் முற்றும்.

(கு-பு.)—

இதில் சொக்கநாதர், காமீசர், ஆராவமுதர், வேதபுரீசர், சிதம்ப ரேசர், செண்டலங்காரப்பெருமாள், ராமநாதர், சுப்பிரமணியர், வே தகிரிநாதர், திருமாகறல்வீற்றிருந்த பெருமாள், பாண்டியன், பர ராசசிங்கன், சடையப்பன் இவர்கள்மீது பாடப்பெற்ற வண்ணங்கள்

No. 372. பலர்பேரிற்பாடியவண்ணம்.

PALARPĒRIRPĀDIYAVAṆṆAM.

Substance, palm-leaf. Size, 16 × 1 inches. Pages, 156. Lines, 4 on a page Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Poyyāmoḻiśar Aṣṭakam 79*a*.

Similar to the above.

Beginning:

பஞ்சிட்டாளோமன தெடுக்கடியிடாத
பெண்கிட்டான மோகினி ரதிககுமதிரூபி
பூலோக ரம்பைருது வாருடி ரண்டுவய
தீராறு முண்டழகு பூங்கிளிமாது

கும்பிட்டே நானவளை யெட்டுவிசையாவி
நெஞ்சுக்கைகதோசிறி தி(ர)ககமிலையாளை
நேரேவ ளர்ந்து(ெ ா)லை வாளோடு கண்கணெடு
வா[ன்]றாணி லொனறியபின வேண்டியபோது

பந்தற்பூமை யி விருதஇயுறவாடி
மஞசதைதவாருமென வெட்கமென நாணி
மேலேவிழுந்துகிளி போலேமொழிந்துகொடி
போலேதுவண்டுரதி தான்செயய நேருவள்
தோடிபாடிககொளளவள் கரிய.மாய். (1)

End:

வாழியுளரா மன்பொருப்பின் ம(ட)வ(ா) ஏருடிப் பிரிவுறி(னு)ந்
தாழு மவர்கட் படிந்துசுகம் தருவீரகபாடந் தருமிஞே.

சிவா.

(கு-பு.)—

இது, பொய்யாமொழீசர், இராமநாதர், சொககநாதர், சிதம்பரேசர் முதலியதேவர்மீதும் அனந்தய்யர், ராமு உடையார், நல்லண்ண உடையார் முதலிய பிரபுககள்மீதும் பாடப்பட்ட பல சந்தக்கவிகளையும் மற்றும் சில கவிகளையுமுடையது.

No. 373. பலர்பேரிற்பாடியவண்ணம்.

PALARPĒRIṞPĀḌIYAVAṆṆAM.

Substance, palm-leaf. Size, 14⅛ × 1⅛ inches. Pages, 26. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Haidarśópanam 14*a*.

Differs from the above in containing only one additional stanza.

(கு-பு.)—

இதில் ராமநாதர், செண்டலங்காரப் பெருமாள், சிதம்பரேசர், காமீசர், பாண்டவர் இவர்கள்மீது பாடப்பெற்ற வண்ணங்கள் உள்ளன; இவற்றுள் பாண்டவர் வண்ணம் ஒன்றுமே வேறு பிரதிகளில் இல்லாதது; மற்றப்பகுதி முன்பிரதி போன்றது.

No. 374. பன்னூற்பா.

PANNŪṞPĀ.

Substance, palm-leaf. Size, 8 × 1⅛ inches. Pages, 7. Lines, 10 on a page Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 18*a* The other works herein are Tiruvācakam 1*a*, Tiruvaṅgamālai 4*a*, Tiruvelukūṟṟikkai 5*a*, Ahattiyatiraṭṭu 6*b*, Śaravaṇabhava-sanmuga-sivāya-ahaval 7*b*, Tēvāram 8*b*, Ṣūry stōttiram 16*a*, Parāparamālai 21*a*, Tiruttoṇḍatohai 32*a*, Tiru vempāvai 34*a*, Tēvāram 36*a*.

Collections of stanzas from Brahmōttarakāṇḍam, Paṭṭanattāṟ-pāḍal, Vivēkacintāmaṇi and other works.

Beginning:

கண்ணுதலா லயனேநாக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்சகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்றாவே நன்று
பரன்சரிதை (தனை)க் கேட்குஞ் செவிகளே செவிக
ளண்ணல் பொலன் கழலிணையு ணெஞ்சமே நெஞ்சம்
மவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை.

End:

ஆதிரை பரணி யார லாயில்[யும]மூப் பூரங் கேட்டை
தீதுறு விசாகஞ் சோதி சித்திரை மகமீ ரா(றி)ல்
மாதனங் கொண்டார் தாரார் வழிநடைப் பட்டார் மீளார்
பாய்(தனிற்)படுத்தார் சாவர் பாம்பின்வாய்த் தேரை திண்ணம்.

(த-பு.)—

இது பிரமோத்தர கண்ட முதலிய சைவபுராணங்களிலும் **சோ**திட நூல்களிலுமிருந் தெடுக்கபபட்ட சில செய்யுட்களேயுடையது.

No. 375. அஞ்சனசோரன்கதை.

AÑJANACŌRANKADAI.

Substance, palm-leaf. Size, 18 × $1\frac{1}{3}$ inches. Pages, 10. Lines, 6 on a page. Condition, good. Appearance, old.

Begings on fol: 96*a*. The other works herein are Kaumudikadai 1*a*, Anantamadikadai 100*a*, Ottāyanamaharājankadai 120*a* and 133*b*, Dēvadaiyārkadai 122*b*, Jinēndirabhaktarkadai 127*b*, Pārisēṇakumārankadai 131*a* and 150*a*, Visnukumārankadai 136*a*, Śaṭṭippulaiyankadai 140*a*, Danadēvankadai 146*a*, Paninīlanangaikadai 153*b*, Jayakumārankadai 163*b*, Dhanaśrīkadai 167*a*, Satyaghōṣankadai 109*a*, Urittāpasankadai 171*b*, Pādikāppankadai 173*a*, Idiveṇṇaikkārankadai 175*b*.

Complete.

The story of a certain thief named Añjanacōra who came across one Jinadattaśrāvaka engaged in the performance of severe penance, and having been instructed by him, himself performed that penance, and obtained wealth and prosperity.

The story is of Jaina origin.

Beginning:

[illegible]
[illegible]

ஸகலகர்மவிப்ரமுக்தனுகி ஜன்மஜராமரணுதி ஸகல ஸம்ஸாரவிகார விரஹிதமாகி . . . . தேவர்களாலும் ராஜாக்களாலும்பூஜிக் கப்பட்டாரெண்மர்; அவர்களாவ[ன] (ர்)—அஞ்சனசோரனும் அனந்தமதிநங்கையும் ஒத்தாயணமஹாராஜனும் தேவைதயாரும் ஜினேந்திரபக்தரும் பாரிஷேணகுமாரரும் ஒத்தாயணமஹாராஜனும் விஷ்ணுகுமாரரும் என. அவர்களில் சங்காநிவ்ருத்தியென்கிற தர்சனங்கத்தில் ப்ரஸித்தனுகிய **அஞ்சன சோர**னது சரிதமாவது :--

ஜம்பூத்வீபபாரதக்ஷேத்ரத்துக கதாகுசலமென்னும் நாட்டு ரங்கமென்னும் [ருட்டுரங்கமென்னும்] நக(ர)த்து ஸ்ராவகர் ஜினதத்தனெ

பார். இவர்பார்யை ஜினமதியென்பாள். ஒருநாள் ஸர்வகுப்திபத் தாரகரென்பார் ஒருதிவ்யதபோதனர் அபூர்வதீர்த்த வந்தனார்த்தமாக எழுந்தருளுகின்றார்.

End:

மற்றொருநாள் தேவர்களையழைத்து இரண்டரைத்வீபங்களுளுள்ள ஜினாலயங்களும் மற்றுள்ள தீர்த்தஸ்தானங்களுமடைவிப்ப நமஸ்கரித்து அத்தியந்தம் கருதார்த்தனாகி அமரேந்திரன்போல ஸகலஜின பவனங்களிலும் பெருஞ்சிறப்புச்செய்து தர்சனவிசுத்தனாதலில் தேவர்களாலும் ராஜாக்களாலும் பூஜிதனாகி அந்தியகாலத்து ஸமாதியோடுமுடித்துத் தேவனாயினன.

இவ்வண்ணம் சங்காதிவ்ருததியென்னும் தர்சனாங்கத்திற்கு அஞ்சனசோரன உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றன னென்றவாறு.

சுபமஸ்து.

(கு-பு.)—

இது சருவகுத்திபட்டாரகரென்னுமுனிவர், தமக்குச் சாதுர்மாஸ்ய விரதத்தில் உணவளிக்கவந்த ஜினதத்தருாவகர்தரித்திராயிருப்பதையறிந்து அவருக்குச் செல்வமுண்டாகுமபடி ஒரு மந்திரத்தையுபதேசித்து, 'கூர்மையான வேல வாள் முதலிய ஆயுதங்களைக் கீழே நிறைத்து அதன்நேரில் மேலே ஆயிரங்காலுள்ள தோருறிகட்டி அதிலிருந்து ஓர் உருவுககு ஒருவடமாக ஆயிரம் உருச்சொல்லி ஆயிரம் வடத்தையும அறுப்பாயாக; அவ்வாறு செயதால் தேவதைகள்வந்து ஆயுதங்களில்விழாமல் உனனைத்தாங்கி நீவேண்டியவிபவங்களைகொடுக்கும்' என, ஜினதத்தர் அவவாறு தொடஙகி இரண்டு மூன்று வடமறுத்து அஞசியஞசி இறங்கியேறுதலை அங்கே திருடவந்த அஞ்சனசோரன் கண்டு விசாரிக்க, ஜினதத்தர் நடந்ததைச்சொல்ல, அவன் மிக்க பணத்தை அவருக்குக் கொடுத்து அவரால் அம்மந்திரத்தை உபதேசிக்கப்பெற்று, குறித்தபடிசெய்த, அந்த வித்தியைப்பெற்றான் என்று கூறுவது; ஜைனமத சம்பந்தமானது ; பூர்த்தியுடையது.

No. 376. அரிச்சந்திரன்கதை.

ARICCANDIRANKADAI.

Substance, palm-leaf. Size, 16⅛ × 1¼ inches. Pages, 88. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 160*a*. The other works herein are Kandapurāṇavacanam 1*a*. Tērūrndavācakam 204*a*. Kapilaivācakam 218*a*.

Wants the 16th leaf : otherwise complete.

The well-known Purāṇic story of Hariścandra giving an account of his unswerving adherence to truth in spite of all trials and troubles.

Beginning :

பூர்வகாலத்திலே பாண்டுமகாராஜாவினுடைய குமாரனாகிய தர்மராஜா ராச்சியபரிபாலனம் பண்ணிககொண்டிருககச்சே திருதராஷ்டிர குமாரனாகிய துரியோதனனானவன வந்து தர்மராஜாவினுடனே வஞ்சகமாயச் சூதாடி ராஜயத்தையெல்லாங்கட்டிககொண்டான.

* * * *

அப்போது அந்தரிஷியானவர் தர்மராஜாவைப்பார்த்துச் சொல்லுகிறார் :—பூர்வகாலத்திலே தேவேந்திரனுடைய சபையிலே பிரபலமான ராஜாக்களும ரிஷீசுரர்களும வந்து கூடியிருந்தார்கள. அப்போது தேவேந்திரன் இவர்களைப்பார்த்துககேட்கிறான :—"பூர்வகாலத்திலே எந்தராஜாக்கள் தர்மத்துடனே ராஜயபாரம்பண்ணினார்கள்? இந்தக் காலத்திலே யார்யார் எந்தப்படி நடக்கிறார்கள்? அந்தச் சமாசாரங்களையெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லவேணும்" என்று தேவேந்திரன் கேட்டான. அப்போது தேவேந்திரனைப்பார்த்து அந்தச்சபையிலே முன்னேயிருந்த வசிஷ்டரானவர் சொல்லுகிறார்.

* * * *

திரிசங்குராஜாவினுடைய புத்திரன் அரிச்சந்திரமகாராஜா. இந்தப்படி பாரம்பரையாய் ராஜயபாரம் பண்ணிககொண்டுவந்தார்கள்.

End :

ராஜாவுஞ சந்திரமதியும் லோகிதாச்(சுவ)னும அயிராவதத்தின பேரிலே யேறிக்கொண்டு அயோத்தியாபட்டணத்துககுவந்து ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களையும் அழைப்பித்துச் சகல ரிஷிகளையும் அழைப்பித்து விசுவாமித்திரர் பட்டாபிஷேகம் பண்ணிவைத்தார். இந்தக்கதை சூதபுராணிகர் சௌனகாதி ரிஷிகளுககுச்சொன்னது.

Colophon :

பஞ்சம அத்தியாயம்.

முற்றும்.

அரிச்சந்திரன கதை முற்றும்.

(தி-பு.)—

இஃது ஐந்து அத்தியாயங்களாகப் பிரிக்கப்பெற்றுள்ளது; வசன நடை நன்றாக இல்லை. இஃதுள்ள ஏடுகள் 45 இல் 16-வது ஏடு இல்லை இடையே 3 ஏடுகள் முறிந்துள்ளன.

No. 377. அளகேசுவரராசன்கதை.

ALAKĒŚUVARARĀŚANKADAI.

Substance, paper. Size, $11\frac{1}{2} \times 8\frac{1}{2}$ inches. Pages, 78. Lines, 15 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 66*a*. The other works herein are Kappal Śāstiram 1*a*, Tērūrndavācakam 41*a*.

Complete.

A Tamil novel, the subject of which is the marriage of the daughter of Alakēśvara with a wood-cutter. The heroine of the story Ēlavārkuḷalāl is said to have put to disgrace several learned persons in controversy, and at last one Nakkīrar is said to have defeated her and made her consent to her marriage with a wood-cutter.

Beginning:

அளகாபுரியென்று ஒரு பட்டணம். அதிலே அளகேசனென்று ஒருராஜா. அந்தராஜாவுக்கு ஏலவார்குழலாள் என்று ஒருபெண் உண்டு. அந்த அளகேசனென்கிறராஜா ராச்சியபாரம் பண்ணுகிற காலத்திலே, இந்தப்பெண் அழகுள்ளவளானபடியினாலேயும . . . . ஒரு உபபரிகைகட்டி அந்த உபபரிகையிலே ஏலவார குழலாள் என்கிற பெண்ணையும் அவளுக்குப்பிரியமான தோழிமாரையும் கூடவைத்தார.

End:

அப்போது மாரணங்கையன்பாக நற்கீரர்
கொப்பெனவே பார்த்துனைநான கொன்றேனே—இப்போதே
யேமறவுயிர் மீண்டு மெழுந்திராச(ச்) சபையில்
வீற்றிருந்து சொல்லாய விரைந்து

இதினுரை.—அப்போது அந்தப்பெண்ணை அன்பாக நற்கீரரெனபவர் செ[ற்ற] (த்த) வளை முகநத்துப்பார்த்து, 'உன்னை நான் கொன்றேனே இப்போது முன்பெற்றிருந்தவுயிர் மறுபடியும் உண்டாயெழுந்திருந்து இராசசபையில் நன்றாயிருந்துகொண்டு நடந்தசெயதியைச் சொல்' என்று [ன] (ர்).

(த-பு.)--

இது, தமிழறியும் பெருமாள்கதையென்றே இப்பொழுது வழங்கிவருகிறது. முதலிற்கதையும் பிறகு அக்கதையிலுள்ள பாடல்களுக்குப் பொருளும் எழுதப்பெற்றுள்ளது. இதில் அளகேசுவரனது மகளாகிய வலவார்குழலாள் பின்ஜன்மத்தில் முறையே பாம்பாகவும் தமிழறியும்பெருமாளாகவும் பிறந்தாளென்றும் அப்பொழுது அத்தமிழறியும்பெருமாளென்பவளை நக்கீரரென்னும் புலவர் வென்று ஒரு விறகுகட்டிக்காரனுக்கு அவளை மணம்புரிவித்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது; அளகேசுவரனது பிரஸ்தாவம் வேறு ஒன்றுமில்லை; உற்றுநோக்கின் உண்மையான சரிதமன்றென்பது விளங்கும்.

No. 378. அளகேசுவரராசன்கதை.

ALAKĒŚUVARARĀŚANKADAI.

Substance, paper Size, $15\frac{7}{8} \times 10\frac{1}{4}$ inches. Pages, 24. Lines, 55 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 9*a*. The other works herein areTērūrndavācakam Irāmappan-ammānai 21*a*, Jātinūl 53*a*, Śrīkaraṇarpurāṇam 64*a*. Complete.

Same work as the above.

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது; பூர்த்தியாகவுள்ளது.

No. 379. அளகேசுவரராசன்கதை.

ALAKĒŚUVARARĀŚANKADAI.

Substance, palm-leaf. Size, $16\frac{3}{4} \times 1$ inches. Pages, 120. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது; பூர்த்தியாகவுள்ளது; மிகச்சிதைந்திருக்கிறது.

No. 380. அனந்தமதிகதை.
ANANTAMADIKADAI.

Pages, 39. Lines, 6 on a page.

Begins on fol. 100*b* of the MS. described under No. 375.

Complete.

This story is also of Jaina origin. It relates the incidents in the life of Anantamadi which led her to remain unmarried throughout life.

இனி, காமக்ஷாநிவருத்தியாகிய தர்சனங்கதநில ப்ரஸித்தையாகிய அனந்தமதி நங்கை சரிதமாவது

Beginning :

ஜம்பூத்வீப பரதக்ஷேத்ரத்து அங்க விஷய சம்பா நகரத்து இப்பர் குலவைச்யர் அர்ஹத்தாஸரென்பார். இவர் பார்யைகள் முப்பத்திருவர். ஜினதாஸியார் மகள் அனந்தமதி நங்கை யென்பாள். இவள் ஸர்வாங்கோபாங்க சுந்தரியாகி வளர்ந்து ஏழு ஸம்வத்ஸரஞ் சென்ற பின் ஒரு நாள் இவள் அர்ஹத்தாஸருடன் ஜினபவனம் புக்கு நமஸ்கரித்து அர்ஹத்தாஸர் ஸாமாயிக பண்ணியபுறப்படுமளவும் அனந்தமதிநங்கை திருமுற்றத்திருந்து தோழியரோடு விளையாடுகின்ற பொழுது.

End :

ஆத்மஸ்வரூபம் பாவித்து ஸல்லேகனாவிதியால் சரீரபரித்யாகஞ் செய்து அச்யுதகல்பத்து அமரேந்திரனாகி இந்திர சுகமனுபவித்தார். இவ்வண்ணம் ஸகலமும் துக்கநிபந்தனமுமாகிய ஸம்ஸாரத்துக்கத்தினை வெறுத்து ஸகலமும அதீதமுமாகிய பரமானந்த சுகத்தினை ஆதரித்து ஸுகதிபெற்ற அனந்தமதி நங்கை காமக்ஷாநிவ்ருத்தியென்னும் தர்சனத்திற்கு உதாஹரணமாகச் சொல்லப்படுகின்ற[து](னள்) என்றவாறு.

ஶுபமஸ்து.

(த-பு.)—

இஃது இப்பர்குடியிற் பிறந்த அருகத்தாசரென்னும் செட்டிக்குத் தாசியிடம் ஜனித்த அனந்தமதி யெனபவள் சிறு பருவவிளையாட்டில் ஒரு பெண்ணை மணவாளனுகப்பாவித்து வாழ்க்கைப்படுவதாகக் கேட்டறிந்த அருகத்தாசர் அப்பெண்ணுக்குப்பின்பு விவாகஞ்செய்யக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டாரென்றும் அதனையறிந்த அனந்த

மதி அந்த ஆசையை நீக்கி மதிவரரென்னும் முனிவரரால் பிரமசரிய விரதம் பிரசாதிக்கப்பெற்று அதிலே நின்று மேன்மை யடைந்தா ளென்றும் கூறுவது; ஜைனமதத்தைச்சார்ந்தது; இந்தப பிரதியில் இக் கதை பூர்த்தியாயிருக்கிறது.

No. 381. இராமாயணவசனம்.
IRĀMĀYAṆAVACANAM.

Substance, palm-leaf. Size, 18¼ × 1½ inches. Pages, 723. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete in seven Kāṇḍas.

The story of the Rāmāyaṇa in prose.

The style of this work is not good.

Beginning:

நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம
வீடுயர் வ[லி](ழி)ய தாககும ்வ[கியன] (ரியங) கமலை நோககு
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையில் ராமன சேருள் வலி கூறு வோர்ககே.

மீனாக்ஷியம்மன துணை.

உச்[சினி] (சயினி) மாகாளி பட்டணம, காசிப்பட்டணம், குண் டினபுரப் பட்டணம் மிதுலாபுரி பட்டணம், வட மதுரைப பட்டணம், கன்னோசிப்பட்டணம, கலிஙக பட்டணம், காவேரிபட்டணம், வாலாகிரி பட்டணம், அளகாபுரிபபட்டணம், விந்தாபட்டணம, அமராபதிபட்ட ணம, விசையநகரபபட்டணம், மதுராபுரிபபட்டணம், சென்னைப்பட் டணம், சிரஙகப்பட்டணம, விந்தைபபட்டணம், விதர்பபப்பட்டணம், முதலாக (ஐம்)பத்தாறு படடணத்துககும் நாயகமாகவிருக்கிற பட் டணம், அயோததியாபுரிபட்டணம். இதறகு ராஜாதி ராஜனுயிருக்கப் பட்டவர் தசரதமகாராஜா.

End:

இராமரும், தம்பிமாரும், மக்களும் அயோத்தியாபட்டணம் கோச லைநாடுங்குறைவில்லாதபடிககுக கவ்வென்ற சத்தமில்லாதபடிக(கு) ரட்சித்துக்கொண்டு தேவர்கள், ரிஷிகள், வேள்வி தவசு தவககுறை வராமல்காத்து ரட்சித்துககொண்டு ராஜயபரிபாலனம் பண்ணிக் கொண்டு சுகததிலே யிருந்தார்கள்.

ராம ஜெயம்.

Colophon:

ஏழை சோபனம் எந்திழை சோபனம்
வாழி சோபனம் மங்கள சோபனம்
ஆழி யானும் அரக்கர் குலத்தைத்
தூளியாகத் துவைத்தது சோபனம்.

(கு-பு.)—

இதில் ஏழுகாண்டங்களும் பூர்த்தியாகவுள்ளன. வசன நடை சிறந்ததன்று.

No. 382. இராமாயணவசனம்: யுத்தகாண்டம். IRĀMĀYAṆAVACANAM: YUDDHAKĀṆḌAM.

Substance, palm-leaf. Size, 16¾ × 1 inches. Pages, 907. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

A Tamil rendering of the Yuddhakāṇḍa, which is the sixth canto of the well-known Rāmāyaṇa.

Beginning:

சாமாதேவி சொல்லுகிறாள்:—"அம்மணி! சீதாதேவி! வானரதளத்திலேபோய் இராமலட்சும[ண](ணர்க)ளைப் பார்த்தேன். சுகமாய் வாசம்பண்ணுகிறார்கள். மகானுபாவரான விபீஷணர் சேநாபாணியாய்த் தம்முடைய மந்திரிகள் நாலுபேரோடே சாக்கிரதையாயிருக்கிறார். சகல வானரர்களும், சிலா பர்வதங்களைக் கையிலே பிடித்துக்கொண்டு இலங்காபுரி மேலே வந்து ஏறவேணுமென்கிற துரையோடேகூடி ஜாக்கிரதையாயிருக்கிறார். அப்புறம் ராவணனுடைய சந்நிதியிலேயானால் ராவணனுடைய தாயாரான கைகேசிதேவியும், அவளுடைய பிதாவான மாலியவந்தனும், பின்னும் ராக்ஷதர்களுக்குள்ளே பெரியவர்களும ராவணனைப்பார்த்துச் சொன்னா(ர்க)ள். தேவரீரை சுவாமி சமட்சேபத்திலே கொண்டுபோய் விட்டுவிடச் சொல்லி சொன்னாள்."

End:

ராமசந்திரர் ராஜ்யத்தை யடைந்து சகல ராக்ஷதர்களையுஞ் சங்கரித்து ராஜ்ய பரிபாலனம் பண்ணிகொண்டிருக்கச்சே, ரகுநாதனைக்கண்டு, அவரைச்சந்தோஷப்படுத்தவேண்டுமென்று சகலமான மகரிஷிகளும அயோத்தியாபுரிக்கு வந்தார்கள்.

வால்மீகராமாயணம் யுத்தகாண்டம் சருக்கம் 142.

Colophon:

பவ ஹு மார்கழிமாதம் 5உ ஆதிவார நாள் மகாராஜராஜஸ்ரீ தாமிச்சேல்துரையவர்களுக்கு வாத்தியார் வாசுதேவப்பிள்ளை யெழுதிக்கொடுத்த வால்மீகராமாயணம்.

எழுதி நிறைந்தது முற்றும.

(கு-பு.)—

இது வால்மீகிராமாயணத்துக்குச் சரியான மொழிபெயர்ப்பென்று தோற்றுகிறது; 200-வது முதல் 653-வது வரைக்கும் உள்ள 454 ஏடுகள் காணப்படுகின்றன. இவற்றுள் யுத்தகாண்டம் 34-வது சர்க்கத்திலிருந்து அகாண்டம் 142-வது சர்க்கம் வரையுள்ள பகுதிகள் இருக்கின்றன; நல்ல திருத்தமானதன்று.

No. 383. உருக்குமாங்கதசரித்திரம்.

URUKKUMĀṄGADACARITTIRAM.

Substance, palm-leaf. Size, 18 × 1 inches. Pages, 147. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

The story of Rukmāṅgada in relation to its bearing on the Ēkādaśī fast.

Contains also a number of Sanskrit and Telugu quotations given in Tamil characters.

Beginning:

(தெலுங்கு.)

விநுமுநீ வரயநா விந்நபமொ(க)கடி
மனமுன சிந்தவே[வ](தா) மறு கலங்கி . . .
யதனு யெரிகி யெரகங்க சேயு
துஷ் க்ருதமுலு, பரிகரிஞசடகு (ந)விரத முதகுனே . . .
ஆவு பாசன விரத மானதி யிச்சி
காவவெ நனுவேக காருண்ய மூர்த்தி. (1)

* * * *

உபவாஸபரோ [புத] (பூத்)வா
பூஜயே(த்) மதுசூதனம்
ஏகாதசீஸமுத்தேன
வன்(ஹி)நா பாதகே(ந்)தனம்

பஸ்மதாம் யாதி ராஜேந்த்ர
ஜன்மாந்தரா(ச) தோ(த்)பலம்.

அகோ வாருமையா! ருகமாங்கத மகாராஜாவே! எந்த விரதாக்னியி ஞலே அறிந்து பண்ணின பாவமும், அறியாமல் பண்ணின பாவமும், செதம் பண்ணின பாப(மு)ம், இனிமேலே பண்ணப்போகிற பாப(மு)ம் இ(வை)களெல்லாம் [எந்த விரதாக்கினியிஞலே] பஸ்மமாகப்போமோ அந்த விரதமாகிற அககினி யேதென்றல், யாதொரு மனுஷன் அரிவா சரத்திலே உபவாசமாகவிருந்து (நிய)மத்தோடேகூட அரியை யுப[வா]ரசிச்சு ராதரி சாசரணம்பண்ணி . . . உபவாசமாகவிருப்பா ஞகில் இந்த விரதாகனியிஞலே நூறுஜனமத்திலே பண்ணப்பட்ட சகல பாபஙகளும பஸ்மமாகப்போ . . . மோக்ஷத்தை யடைவன். ஆகையிஞலே நீரும் அப்படியே விரதாசரணம் பணணுமையா! ருக்கு மாங்கத மகாராஜாவே!

End:

* * * *

"ஏகாதசி உபவாசமபண்ணித, துவாதசியிலே நிததிரைபண்ணிஞ லும் அந்தப் பலததிலே பாதிப்பலம் தந்தோம்." இப்படிச சொல்ல [நெங்குற] தினற தேவதை [ய] (க)ள் வாககியம் கேட்டு மோகினி தோஷத்தோடே கூடிக கிருதார்த்தையாஞேமென்று எண்ணிக ண்டு சுகத்திலேயிருந்தாள். ஹரி ஓம்.

Colophon:

சித்தார்த்தி ஞூ மாசிமீ 4உ குருவாரம் ச[வு]தர்த்தி அத்த நக்ஷத் திரம் எழுதினது, முற்றும். இந்தப்படிக்குச் சூரிசங்குககுச் சுப்பையர் எழுதிககொடுத்த பொ[ச]த்தகம. பிழையிருந்தால் பெரியோர்கள் பிழைதிருத்திப் போடவேண்டியது. வாசக தோ(ஷ)ம் சமித்தருள வும்.

(கு-பு.)—
இதில் தெலுங்குப் பத்யமும், ஸம்ஸ்க்ருதச்லோகமும், தமிழ் வசன மும் கலந்திருககினறன ; இது பூர்த்தியுடையது.

No. 384. உறித்தாபஸங்கதை.

URITTĀPASANKADAI.

Pages, 4. Lines, 6 on a page.

Begins on fol. 171*b* of the MS. described under No. 375.

Complete.

A Jaina story setting forth the punishment which befell a man and a woman for having committed theft and enjoyed stolen property.

Beginning:

(இனி அஸ்தேயவ்ரதமில்லாமையால் அநர்த்தமெய்திய உறித்தாபஸன் சரிதமாவது)—

ஜம்பூத்வீபத்துப் பரதக்ஷேத்ரத்து [ஸ]வத்ஸவிஷய கௌசம்பியென்னும் நகரத்து ராஜா ஸ்ரீஷேணமஹாராஜா. இவன் தேவி ஸ்ரீமதியென்பாள். இவர்கட்குப் புத்ரர் ஸ்ரீகரனும் சிவதேவனுமெனப்பார் இருவர் இவர்களோடு வித்யாப்யாஸகாலத்து ஸச்சாத்ரனாய் வர்த்திப்பான், வாவிக்கும் ஸ்ரீநந்தைக்கும் புத்ரன் ஸ்ரீதத்தனென்பான். அந்நகரத்துப் புறம்பாக உத்யானவனத்திலே ஒரு தாபஸன் மாயா வ்ருத்தியால் ப்ராணிஹிம்ஸை பரிஹாரமாகத் தரை(மி)தியாமல் உறிமேலிருந்து அஹோராத்ரமுந் தவஞ்செய்கின்றானாக எல்லாருமறிய நடித்துக் ...ட்டி(னன்).

End:

களவுகண்டு கொண்டுவந்த தனம் வாங்கப்பெறுவென்று இவனை நாஸிகாச்சேதனம்பண்ணித் தண்டித்துத் 'தாபஸனுக்குத் தண்டமென்' என்று தண்டம்விதிக்குமவர்களை வினவ, அவர்களும் 'கையிரண்டுங் காலிரண்டுந்தறித்துத் தூரவிடுவது' என்று விதிப்ப, ராஜாவும் அவ்வண்ணம் தாபஸனைத் தண்டிப்பித்தனன்.

இவ்வண்ணம் அஸ்தேயவ்ரதமில்லாமையால் அநர்த்தமெய்தினவர்க்கு உறித்தாபஸன் உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றனன். என்றவாறு.

சுபமஸ்து.

(கு-பு.)—

இது, பொய்யான தவவொழுக்கத்தையுடைய உறித்தாபஸனிடம் ஸ்ரீதத்தனென்பவன் அந்திநேரத்துவந்து மாலைக் கண் தோற்றாதவன்போல நடித்து, அத்தாபஸன் இரவில் உறிவிட்டிறங்கி நகரிலுள்ள செல்வர் வீட்டிற்புகுந்து திருடிவந்து ஒரு வேசைக்குக் கொடுத்து இன்புற்றுவருவதையறிந்து விக்ரமகேசரியென்னும் சேனாபதிக்கு அறிவிக்க, அவன் சூழ்ச்சியால் அத்தாபஸனைப் பிடித்துவந்து அரசனிடம் விட, அவ்வரசனாணையால் அந்த வேசை மூக்கறுபட்டாளென்றும், அத்தாபஸன் கைகாலறுப்புண்டானென்றும் திருட்டுப்பொருளாலுண்

டாகும் கெடுதிகளைக் கூறுவது; ஜைனஸமயத்தைச் சார்ந்தகதை; மணிப்ரவாள நடையுடையது; இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாயிருக்கிறது.

No. 385. ஒத்தாயணமகாராஜன் கதை
OTTĀYAṆAMAHĀRĀJANKADAI.

Pages, 5. Lines, 6 on a page.

Begins on fol. 120*a* of the MS. described under No. 375

This relates the story of a Jaina king named Ottāyaṇa, whose sense of humanity and patience was tested and was seen to possess the striking quality of not getting disgusted even with very repulsively unsightly persons and things.

Beginning:

இனி உவர்ப்பின்மையாகிய தரிசனங்கத்திற் பிரசித்தராகிய ஒத்தாயண மஹாராஜன சரிதமாவது—

ஜம்பூத்வீப பரதக்ஷேத்ரத்து சிலபியென்னும் நாட்டு ரோருஹமென்னும் நகரத்து ராஜா ஒத்தாயண மஹாராஜன்; ப்ராம்ஹணீயமென்னும் நாடு வைசாலியெனனும் நகரத்துச் சேடக மஹாராஜனுக்கும் பத்மாவதியெனனுந் தேவிககு(ம்) புத்ரி ப்ரபாவதி யென்பாள். இவள் ஒத்தாயண மஹாராஜனுககுத் தேவியாயினள். . . . ஸௌதர்ம்மேந்த்ரன் சுதர்மையெனனுமம ஆஸ்தான மண்டபத்துத் தேவராசிகளால பரிவ்ரதனாகியிருந்து தாம்மோபதேசம் பண்ணாநின்ற காலத்து, "ஸமயக தாசனமாகிய அஷ்டாங்கங்களில் உவர்ப்பினமையென்னும் அங்கத்தில் ஒத்தாயண மஹாராஜனையும் ப்ரபாவதியையும் ஒப்பார் பூலோகத்து யாவருமில்லை" என்று ப்ரசம்ஸித்து வினயம் பண்ணி ஆஸ்தான மண்டபத்திருந்தான்.

End:

"யான் உங்கள் தர்சன மாஹாத்மியத்தினைப் பரீக்ஷிப்பான்வேண்டி இவ்வண்ணம் தபோதனா வேஷங்கொண்டு அஜ்ஞானத்தாற் பரீக்ஷிக்க வந்தேன்" என்றுசொல்லி "எனது அதிக்ரமமெல்லாம் ஸஹிக்க வேணும்" என்றிறைஞ்சி ஒத்தாயண மஹாராஜாவையும் ப்ரபாவதியாரையும் ஸிம்ஹாஸனத்திரு(த்தி)ப் பாற்கடல் நீர்கொண்டுவந்து அபிஷேகம்பண்ணித் திவ்ய வஸ்த்ராபரணங்களால் அலங்கரித்துப் பொன் மழையும் பூமழை(யும்) பொழிந்து இவர்கள் சாரித்ரத்தினைக்கண்டு

ஸம்யக்தர்சன சுத்தி பரிபூர்ணராகிய இவர்கட்குப் பெருஞ்சிறப்பியற்றி நமஸ்கரித்து ஸ்வர்க்கலோகமடைந்தனன்.

இவ்வண்ணம் உவர்ப்பினமையெனனும் தர்சனாங்கத்திற்கு ஒத்தாயண மஹாராஜா[வை] உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றனன். என்றவாறு.

சுபமஸ்து.

(கு-பு.)—

இஃது ஒத்தாயண மஹாராஜன் உவர்ப்பினமையென்னுந் தர்சனாங்கத்திற சிறந்தவனென்று அவனை ஸௌதர்ம்மேந்திரன் புகழககேட்ட மணிசூடனென்னும் தேவன அதனைப் பரீக்ஷிகக விரும்பித் தான கண்டோர் யாருமருவருககககூடிய புண் முதலியவற்றைக காலகைகளிலுடையவனாகிவர, அரசன் அருவருககாமல் தீர்ககந்த நீர வடியுங் காலைக கழுவிப் புரோக்ஷித்துககொண்டானென்றும் யானைத் தீ நோயுடையனாகி மிகவுமுணடு வாந்திபண்ணத் தனது பொற்பாத்திரத்திலேந்தினனென்றும் பிறகு அத்தேவன மகிழ்ந்து தன நிஜரூபத்தைக் காட்டிஅவனுககுப் பெருஞசிறபபுக்களைச செய்துபோயினனென்றும் கூறுவது; பூர்த்தியுடையது.

No. 386. ஒத்தாயணமஹாராஜன்கதை.

OTTĀYAṆAMAHĀRĀJANKADAI.

Pages, 6. Lines, 6 on a page.

Begins on fol. 133*b* of the MS. described under No. 375.

Complete

Relates certain incidents in the life of a certain Jaina king named Ottāyaṇa indicative of his benevolence and magnanimity.

Beginning:

(இனி வாத்ஸல்யமாகிற தர்சனாங்கத்திற் ப்ரஸித்தராகிய ஒத்தாயண மஹாராஜன் சரிதமாவது)—

ஜம்பூத்வீபத்து . . . . . . ப்ரபாவதி. இவள் கல்யாண விதியால் ஒத்தாயண மஹாராஜனுககுத் தேவியாயினள். இவளோடு மஹாராஜன் இஷ்டவிஷய காமபோகங்களையனுபவித்து இனிது செல்கின்றகாலத்து, அவந்தி விஷயத்து உஜ்ஜயினியென்னும் நகரத்து ராஜா த்ருதிஷேணன்; தேவி மலையாபதி. இவர்கட்குப் புத்ரன ப்ரத்யோதனனென்பான். ப்ரபாவதி ஸர்வாங்க ஸுந்தரியாதலில் இவளது

ஸௌந்தர்யாதிசயத்தினைப் பிறர் சொல்லக்கேட்டு இவளையே காமுற்றுச் செல்கின்ற நாளில் ஒத்தாயண மஹாராஜன் மாற்றரசனொருவன் மேல் படையெழுந்துபோக, அது கேட்டு ப்ரத்யோதனை பலத்தோடுங் கூடச்சென்று ரோருஹபுரமடைந்து ஒத்தாயண மஹாராஜனை பவனங் குறுகி இவளைக் கைப்பிடித்துக் கொண்டுபோகக் கருதினை).

End:

'நீ ஆர்ஹதனைவதறியாது யானசெய்த உபஸாக்கமெல்லாம் கூடிப்பாயாக' என்று தனைவிட்டு உபசாரஞ்செய்ய அவனும் வந்து நமஸ்கரித்துக்கிடப்ப, 'தாம்மத்துள்ளாரை அஜ்ஞானம்பண்ணிப் பிழைசெய்தேன்' என்று அவனை மஸ்தகத்தப்பொறித்த நாயப்பொறி தீரப் பொற்பட்டங்கட்டிச் சாதுரங்க பல[த்தோடு] (மு)ங்கொடுத்து அவனுக்கு ராஜ்யத்துக்கு வேண்டும வஸது ாஹரங்கிகளெல்லாங் கொடுப்ப, கொண்டுபோயத் தனனகரமடைந்து ராஜ்யம்பண்ணி இனிதிருந்தனன்.

இவ்வண்ணம அறததுள்ளார்கடு அனபுடைமையாகிய வாதஸல்யமெனனும் தர்சனங்கத்திறகு முனசொலலபபட்ட ஒததாயண மஹாராஜன் உதாஹரணமாகச சொலலப்படுகினறனன. எனறவாறு.

சுபமஸ்து.

(கு-பு.)—

இஃது ஒத்தாயண மஹாராஜன் பகைமேற் சென்றிருந்த பொழுதில் அவன் மனைவியாகிய பிரபாவதியை விருமபி, உஜ்ஜயினியரசன் பிரத்தியோதனன் அங்கே வந்து அவள கையைப் பிடிக்கத்தொடங்கினன். அதனையறிந்த அவள் நடுநடுங்கி, 'என கறபுநிலை கெடாதருள வேண்டும்; கெடின உயிர வாழேன' என்று கடவுளைத் துதித்தனள். யக்ஷிதேவதை தோனறி அவ்வாதததளளி மூர்ச்சிக்கச் செயதது. இதனைப் பரிசனங்களாலறிந்த ஒத்தாயண மஹாராஜன கடிதிற பகைவென்று வந்து அவனைப் பிடித்துக்கட்டி அவன் நெற்றியில நாய் முத்திரை பொறித்துத் தண்டப் பிரத்தியோதனனென்று பெயருமிட்டு அவன் பொருளனைத்தையுங கைககொண்டு அவனைச சிறையிட்டனன. இதனை அந்தப் பிரத்தியோதனனுடைய பால்ய ஸ்நேஹிதராகிய காளயவரென்னும் ஆகாச சாரணர் அறிந்து அங்கேவந்து அவனுக்கு ஜின தர்மங்களை யுபதேசித்து 'சில வ்ரதங்களைத் தப்பாமல் அனுஷ்டித்தால் உன் துயரங் கெடும்' என்று சொல்லிப்போக, அவனும மெய்யாக அனுஷடித்து வருதான். பின்பு ஒத்தாயண மஹாராஜன அவனை ஆர்ஹதனென்று அறிந்து உபசரித்து ராஜ்யங்கொடுத்தனுப்பினனென்று கூறுவது; பூர்த்தியாயிருக்கிறது.

No. 387. கந்தபுராணவசனம்.
KANDAPURĀṆAVACANAM

Pages, 317. Lines, 4 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 376.

The 56th leaf is wanting.

The Purānic account of the life of Muruhakkaḍavuḷ known in Sanskrit as Skandha or Kumāra.

Beginning:

முன்னொரு காலத்திலே தொண்டைநாட்டிலே பாலாற்றங்கரையிலே மே[ன்](ம்)பாட்டினையுடைய கச்சியாலயத்திலே பார்வதி வந்து சிவனைப்பூசித்து அனேக வரப்பி[ற](ர)சாதங்களைப் பெற்றருள, மறுபடி விஷ்ணு வந்து கூர்ம அவதாரம் பண்ணிச் சிவனைப்பூசித்து அனேக வரங்களைப் பெற்றுப்போனார். பின்னொரு காலத்திலே பி[ற](ர)மதேவா வந்து சிவனைப் பூசித்திருக்கையிலே அனேகம் பி[ற](ர)ம ரிஷிகள் வந்து பி[ற](ர)மாவை நமஸ்க[க]ரிக்க, "சுவாமி! அடியே[ன](ங்)கள் நன்றாக(க)தபசுபண்ணுகிறதற்கு இயல்பாகிய இடம் எவ்விடம்?" என்று கேட்க, அப்போது பி[ற](ர)மதேவர் பார்த்து ஒரு [லெ]த[ற்](ர்ப்)பையைக் கிள்ளிப் பூமியிலே வடக்கே முகமாக உருட்டி, "இது நின்ற இடந்தான் உங்களுக்குத் தபசுக்கேற்ற இடம்" என்று சொன்னபோது அவர்களும் அதன் பின்னோடே போகிறபோது அது நின்ற இடம் நைமிசாரணியமா[ச்சு](யிற்று).

End:

அப்போ(து) வேடராசா குமாரசுவாமிக்கு வள்ளியம்மையைக் கலியாணம் பண்ணிக்கொடுத்தான். அப[பி](பு)றம் குமாரசுவாமி வள்ளியம்மையையழைத்துக்கொண்டு மயில் வாகனத்திலெழுந்தருளித் திருத்தணி மலையிலே சி[று](றி)துகாலமிருந்து மறுபடி கந்தமாப[று](ரு)வதத்திற்குப் போகிறபோது தெய்வயானையம்மன் சுவாமிக்கு, பஞ்சாலாத்தியெடுத்து நமஸ்கரித்து நின்றாள். அப்போது சுவாமிக்கு இரண்டு பக்கத்திலும் தெய்வயானையும் வள்ளியம்மையும் வாசம் பண்ணினார்கள். அப்போ(து) சகல தேவதைகளும் வணங்கும்படி குமாரசுவாமி கந்தமா பருவதத்திலே வாசம்பண்ணினார்.

வள்ளியம்மை திருக்கலியாண முற்றும்.

(கு-பு.)—

இது முருகக்கடவுளுடைய சரித்திரத்தைக் கூறுவது; கச்சியப்பசிவாசாரியரியற்றிய கந்த புராணத்தின் சுருக்கமாகவுள்ளது; முருகக்கடவுள் தோன்றிவளர்ந்து சூரசங்காரஞ்செய்து தெய்வயானையையும் வள்ளியையும் மணம்புரிந்தது இறுதியாகவுள்ள கதை இதிலுள்ளது. வசனநடை சிறந்ததன்று. 56-வது ஏடு இல்லை.

No. 388. கபிலைவாசகம்.

KAPILAIVĀŚAKAM.

Substance, palm-leaf. Size, 17½ × 1¼ inches. Pages, 24. Lines, 6 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Retales the story of a cow which kept its promise and returned in time to the den of a lion to become its prey. Illustrates the value of the virtue of truthfulness.

வெண்பா.

ஒற்றை விடைய னொளிசே ரிளம்பிறையன்
கற்றைச் சடையன கனமழுவோன்—நெற்றிக்கண்
ஒண்ணுடையான றேவி யுமையவளை பெறறெடுத்த
கண்ணுடையா னிக்கதைககே காபபு.

தேவிசகாயம்.

ஸ்ரீமது உத்[தி](த)ர பூமியிலே காம்பீலிநாட்டிலே கெங்கையாற்றுக்கு வடகரையிலே தெய்வநாயகபுரமெனகிற அக்கிர(க)ாரத்திலே குடிவிளங்கினனென்கிற ஆயன மேய்ககிற பசுககள் நானூறு ஐந்நூறு பசுககளுண்டு அந்தப் பசுககளுக்குப் பேர், காமாட்சியென்றும், மீனாட்சியென்றும், விரூபாட்சியென்றும . . . . . . இந்திராணியென்றும், சோணாசலமென்றும் இப்படிக்கொத்த பசுக்களுண்டு.

எனனுடைய சரீரத்து மாங்கி[ஷ](ச)த்தைப் புசித்துப் பசியாறுமையாவென்று வேண்டிககொள்ள, இப்படிப் பசுவும் புலியும் வாதாடிக் கொண்டிருக்கிற சமயத்திலே ரிஷப வாகனத்தின்மேல் கைலாசவாசனாயிருக்கப்பட்ட ஆதிபரமேசுவரன . . . . . பிரம்மவிஷ்ணு முதலான பேருடனேயும் வந்து பசுவுக்கும், புலிககும், கன்றுக்கும் காட்சிகொடுத்து விமானத்தின் பேரில் ஏறிக்கொண்டு கைலாசமெழுந்தருளிப் போனார்[கள்].

ஆகையால், இந்தக்கபிலையினுடைய கதையைப்படித்தபேரும் கேட்டபேரும் மோக்ஷமடைவார்கள். என்றவாறு.

காளயுக்தி ௵ தை ௴ 1 உ.

செருவை கிருஷ்ணதாஸ் குமாரனுக்கு வேங்கடாசலம் எழுதிக் கொடுத்த கபிலைவாசகம். எடுத்தவன் படித்துக்கொடுக்கவும்.

(கு-பு.)—

இது சத்தியம் 'தவறலாகாதென்னும் நீதியைப் போதிப்பது; இதிலுள்ள கதை:—ஒரு கபிலைப்பசு தன்னை உண்ண வந்த புலியை நோக்கி, 'நான் என் கன்றுக்குப் பால்கொடுத்துவிட்டு உனக்கு இரையாக வருகிறேன்' என்று சொல்லிப்போய் அவ்வாறே செய்ய, அப்புலி உண்ணேனென்று சொல்ல, இரண்டும் வாதாடுகையில் நாரதர் அதனைக்கண்டு ஈசுவரனிடம் போய்ச்சொல்ல அவர் அவற்றுக்கு நற்கதி அளித்தனரென்பது; இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாயிருக்கிறது.

No. 389. கபிலைவாசகம்.

KAPILAIVĀŚAKAM.

Substance, palm-leaf. Size, 17 × 1¼ inches. Pages, 26 Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதியைப்போன்றது; பூர்த்தியுடையது; இதிலுள்ள ஏடுகளெல்லாம் செல்லரிக்கப்பட்டும் முறிந்துமுள்ளன.

No. 390. கபிலைவாசகம்.

KAPILAIVĀŚAKAM.

Pages, 26. Lines, 4 on a page.

Begins on fol 212*a* of the MS. described under No. 376.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இதிலுள்ளது முன்னுள்ள கதையே; ஆயினும் முன் பிரதிக்கும் இதற்கும் வசனத்தில் சில வேறுபாடுண்டு; இந்தப் பிரதியிலும் நூல் பூர்த்தியாயிருக்கிறது.

No. 391. கபிலைவாசகம்.

KAPILAIVĀŚAKAM.

Substance, palm-leaf. Size, 17 × 1¼ inches. Pages, 50. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது; பூர்த்தியாயிருக்கிறது. இந்தப்பிரதியின் முதலில் 'வெற்[பு](ப)தனில் வேங்கையினுல் மெய்ஞ்ஞானமும் புகழுரு, சொற்கபிலை வாசகத்தைச் சொல்லவே—நற்பிணுடன், பூணுர மார்பன புலித்தோ லுடையழகன, சாரூத கண்ணே கருத்து.' எனனும் வெண்பா ஒன்று புதிய ஏட்டில் உளளது.

No. 392. கேரளவுற்பத்தி.

KĒRAḶAVURPATTI.

Substance, palm-leaf. Size, 11 × 8½ inches. Pages, 135. Lines, 14 or 15 on a page Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Begins on fol. 1*a*. The other work herein is Erāmappan Ammānai 73*a*.

Contains an account of the origin of Keraa or Malabar.

Beginning :

கலி 3446 வருஷத்திலே குலசேகரப்பெருமாள் திருவஞ[சக்கு](சைகக)ளம் முக்கால்வட்டம் சத்திரம் உண்டு பணணிஞர். பிற்பாடு பதினெட்டு வருஷமானபோது, குலசேகரப்பெருமாளிறந்துபோஞர், அந்தப பெருமாள் ராச்சியத்தை எல்லாருக்கும் பஙகிட்டுக் கொடுத்தார்.

End :

அவ்வி டத்தில் த(லை)மையான கைதுக்கலோ என்றவர் அந்தப்பெண்ணைக் கலியாணம் பண்ணி அவர் இராசசியத்தையடககிக்கொண்டு

இவ்விடத்திற்குக் கணக்கு ஒப்புவித்துககொண்டு வந்தார். அவர் விழுந்துபோன பிற்பாடு அவர் குமாரன இஸ்கந்தர்சுல்தான் நமககு அடக்கம் கொடாமல் போனான்.

(கு-பு.)—

இது கேரளதேசத்தின் வரலாறறைக கூறுவது.

No. 393. கௌமுதிகதை.

KAUMUDIKADAI.

Substance, palm-leaf. Size, $18\frac{1}{4} \times 1$ inches. Pages, 223. Lines, 4-5 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Stories said to have been narrated to king Śrēṇika of Magadha: by Gautama.

Beginning :

ஸ்ரீவர்த்தமாநமாநம்ய ஜிநதேவம் ஜகத்ப்ரபும் வக்ஷ்யேஹம் கௌமுதீம் ந்ரூணாம் ஸம்யக்த்வகுணஹேதவே.

(எனபது)—ராக த்வேஷ மோக மத ஹர்ஷ மாத்ஸர்யாதி ஸகல தோஷவி[வ்ர]முகதனாகிய பகவதர்ஹத்பரமேச்வரன ஸ்ரீவீர வர்த்தமான ஸ்வாமிகளை நமஸ்கரித்து, கௌமுதியெனனும புண்ய கதையினைச் சொல்லுவன, பவ்யப்ராணிகளுககு ஸம்யக்த்வகுணமுண்டாகுதல் காரணமாக.

ஜம்பூத்வீபத்துப் பரத க்ஷேத்ரத்து மகதவிஷயத்து ஸந்ததம் ஸ்ரீ விஹாரத்தினையும் தான பூஜா தபசீலங்களாற் சிறந்த ஸ்ராவகரையும் அழகிய வனங்களையுமுடைததாகிய, அளகாபுரியொககும் ராஜக்ருஹ நகரத்து ராஜா, ஸ்ரேணிக மஹாராஜன்; தேவி, சேலினி மஹாதேவீ; தேவீ தேவர்களிருவரும் இஷ்டவிஷய . போகங்களையனுபவித்து இனிது செல்கின்றகாலத்து இந்த நகரத்துப பாஹ்யோத்யானத்து உலாவுகின்ற வனபாலகன் அபூர்வமாயின சில கண்டுசொல்லுவான்.

End :

குணதரபட்டாரகர் ஸ்ரீபாதத்து ஜிநதீக்ஷாப்ராப்தராயினார். சிலர் ஸ்ராவகவ்ரதம் கைக்கொண்டனர். சிலர் சுபபரிணாமமடைந்தனர். ராஜா பார்யை லக்ஷ்மி முதலாயினார் மந்த்ரிபார் . . . . அர்ஹத்

தாஸர் பார்யைகள் க்ரந்தலதை முதலாயினோரெண்மரும் உததி ஸ்ரீக ளென்னும் ஆர்யாங்கனைகள் ஸமீபத்து தீக்ஷாப்ராப்தராயினர். சிலர் ஸ்ராவகவ்ரதம் கைக்கொண்டனர். ராஜா முதலாயினோர் தபோ திசயத்தால் ஸ்வர்க்கமடைந்தனர்; க்ரமேணமோக்ஷமடைகுவரென் று கௌதமஸ்வாமிகள் அருளிச் செயயக்கேட்டு ஸ்ரேணிகமஹாமண் டலேச்வரன் முதலாயினோர் ஸம்யக்த்வ விசுத்தியடைந்தனர்.

ஸ்ரீவீதராகாயநம:

கௌமுதி கதை ஸமாப்தம்.

(கு-பு.)—

இது மகததேசத்து அரசனாகிய சேணிகமஹாராஜனுக்குக் கௌத மரென்பவரால் சொல்லப்பட்டது; உத்தர மதுராநகரத்தவர்களாகிய உதிதோதயராஜன், சுபுத்தி மந்திரி, அருகத்தாஸஸ்ரேஷ்டி, ஸ்வணகுரனென்னும் திருடன் இவர்களுடைய வரலாற்றைக்கூறுவது; சைன மத ஸம்பந்தமானது; ஸம்ஸ்கிருதமும் தமிழுங்கலந்த மணிப்பிரவாள நடையுடையது; இந்தப பிரதியில் நூல் பூர்த்தியாகவுள்ளது. இஃது இன்னும் அச்சிடப்படவில்லை.

No. 394. கௌமுதிகதை.

KAUMUDIKADAI.

Pages, 189. Lines, 6 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 375.

The 82nd leaf is wanting.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது; இதில 82-வது ஏடு இல்லை.

No. 395. சட்டிப்புலையன்கதை.

CAṬṬIPPULAIYANKADAI.

Pages, 13. Lines, 6 on a page.

Begins on fol. 140*a* of the MS. described under No. 375.

A Jaina story intended to set forth the great moral and religious value of refraining from killing.

One Śaṭṭippulaiyan, a hangman by profession, made a vow to refrain from killing persons on the full moon day; and when once ordered by the king to hang three guilty persons on such a day, he refused to obey the king's orders. Thereupon he was thrown into a deep ditch along with the three persons to be hanged, so that they might all be devoured by the crocodiles that were there. The story says that while the three punishable persons were devoured by the crocodile, the virtuous hangman was left unharmed.

Beginning:

இனி ஏகாதச பேதத்தனவாகிய ச்ராவகஸ்தானங்களுள் த்விதீயஸ்தானத்தனாகிய தர்சனிக ப்ரதிகனால் அனுஷ்டிக்கப்படும் வ்ரதங்கள் பனிரண்டு. அவையாவன :— அனுவிரதமைந்தும் குணவிரத மூன்றும் சிக்ஷாவ்ரதம் நாலுமெனு. அவற்றுள் அனுவ்ரதமைந்தாவன;— கொல்லாமையும் பொய்யாமையும் கள்ளாமையும் காம மாடாமையும் பொருள்வரைதலுமெனவிவை. . . . .

அஹிம்ஸா வ்ரதத்தினை அதிசாரமின்றியனுஷ்டித்து அப்யுதயம் பெற்ற சட்டிப்புலையன் சரிதமாவது :—

ஜம்பூத்வீப பரதக்ஷேத்ரத்து மகதவிஷயத்து ராஜக்ருஹமென்னும் புரத்து ராஜா ச்ரேணிக மஹாராஜன். அவன் ராஜ்யஞ்செய்யாநின்ற காலத்து அந்நகரத்து ஸகல ஜனங்களுக்கும் ஒரு வியாதி தோன்றித் தோன்றிய மூன்று நாளின் மரித்துச் செல்லாநிற்ப, ஒரு சண்டாளன் சட்டிப்புலையனென்பானுக்கு அந்த மஹாவ்யாதி தோன்(ற) அவன் தன் மனைவிக்குச் சொல்லுவான்.

End:

மஹாராஜன் மிகவும் பயவிஸ்மயங்களையுடையனாகி வந்து கண்டு பக்திபண்ணி, 'உம்மு(டை)ட(ய) வ்ரத மகிமையறியாமையால் ப்ரமாதஞ் செய்தேன். இதனை க்ஷமிப்பீராமின்' என்றுசொல்லிச் சிறப்புச்செய்து, என்னே அஹிம்ஸாவ்ரதத்தின் மகிமையிருந்தவாறு' என்று விஸ்மிதனாயினன்.

இவ்வண்ணம் அஹிம்ஸாவ்ரதத்தில் த்ருடராயினோர் பெறும் அப்யுதயத்திற்குச் சட்டிப்புலையன் உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றனன் என்றவாறு.

சுபமஸ்து.

(த-பு.)—

இது சேணிகமஹாராஜன் அரசாட்சி செய்துவருகையில் ஒருவகைச் சுரநோயால் அதுகண்ட மூன்று நாளில் மனிதர்களிறந்துவர, அந்நோய் கண்ட மூன்று நாளில் சுடுகாட்டுக்குப்போன கொலையாளியாகி

ய சட்டியென்னும் புலேயன் ஒரு தபோதனரால் தன்னேய் தீரப்பெற று அவரிடம் மிக இரந்து பருவகாலத்திற் கொல்லாதிருத்தலென்னும் விரதம் மேற்கொண்டிருந்தான். பின்பு அரசன் தன்நாட்டில் அந் நோய் நீங்கற்பொருட்டுச் சிலதாருபதேசப்படி சுகிலாஷ்டமி முதல் பர்வம் வரையில் கொலே நிகழாதபடிசெய்து அருகக்கடவுளுக்கு நை மித்திகபூசை நடத்திவர, சதாத்தசியன்று மந்திரி புரோகித சேனு பதி குமாரர் மூவரும் ரஹஸ்யத்தில் ஆடு கொன்றுதின்றனர். அதனே மாலேக்காரனுக்கும் அவன மனேவிககும் நடந்த வாககுவாதத்தினுல் நகரிசோதனேக்குச்சென்ற அரசனறிந்து மறுநாளில் ஆடுகொன்ற மூவ ரையும் கொல்லும்படிவிதிகக, சட்டிப்புலேயன், 'இன்று பருவமாதலால் அத்தொழிலேச் செயயேன்' என, அரசன் சினந்து அந்நால்வரையும் கிடங்கிலுள்ள முதலேக்கு இரையாகும்படி தள்ளுவிக்க, முதலே மற்ற மூவரையுமிழுப்ப, அப்பொழுது மனமாருத சட்டிப்புலேயனது விரத தி டத்தைத் தேவேந்திரன் கண்டு மகிழ்ந்து தேவ ஸ்திரீகளுககுக் கட்டளே யிட, அவர்கள் அக்கிடங்கின நீருக்குமேலே சிங்காதனமிட்டு அதில் அவனே இருக்கசசெயது பூசிகக, அரசன்கண்டு அதிசயித்து அஞ்சிப்ப ணிந்தானென்று கொல்லாமையின பெருமையை விளக்குவது ; பூர்த் தியுடையது ; 143-வது ஏடு ஒடிந்திருககிறது.

No. 396. சதமுகராவணன்கதை.
ŚATAMUKARĀVAṆANKADAI.

Substance, palm-leaf. Size, 17 × 1⅜ inches. Pages, 134. Lines, 7–8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Wants beginning.

This story says that, after Rāma had conquered Rāvaṇa in the battlefield, a Rākṣasa named Śatamukharāvaṇa (meaning a hundred-faced Rāvaṇa) came and overpowered Rāma and his army, whereupon Śīta assumed a gigantic form and killed him.

Beginning :

ப்போட்டல் தேவாந்தகன் சுவாமி பாணத்தினுலே அறுபட்டுப்போ னதைக்கண்டு முப்பத்து முக்கோடி தேவர்களும் முனீசுவரர்களும் சந் தோஷத்தையடைந்து தேவதுந்துமியிற் பதினெட்டுவகை மேள வாத் தியங்களும் வௌங்கி, சுவாமிபேரிலே புஷ்பமாரி[ப்] பொழிந்(து) "சுவாமி! தேவரீருடைய (கிரு)பா கடாட்சத்தினுலே தேவாந்தகனு டைய உபத்திரவம் தீர்ந்தோம்" என்று சுவாமியைத் தோத்திரஞ்

செய்தார்கள். அந்தத் தேவதுந்துமி[ப்](பட்டமாத்தி)ரத்திலே அனுமார், அங்கதன், சுக்ரீவன, விபீஷணர், பின்னும் வானரசேனைகளெல்லோருமெழுந்திருந்து நினருர்கள். சகல சேனைகளுடனே சுவாமி பாளையம் வந்து சேர்ந்தார். அதினபிறகு தேவாந்தகன விழுந்தவுடனே பின்னோடே வந்த இராட்சதர்கள் சிறிதுபேர் தப்பிப்போயச் சதமுகராவணசமுகத்திலே போய்அடித்துவிழுந்து அழுது, "சுவாமி ! நம்முடைய சேனுபதியாகவிருககிற தேவாந்தகன யுத்தத்திலே அடிப்பட்டுப்போனுன். நாங்கள் மாத்திரம் தப்பி வந்தோமையா" என்று சொன்னுர்கள்.

End :

இந்தப் பிரகாரமாய்ப பூர்ணசந்திரன உதையமானுற்போலே சுவாமி சிங்காதனத்தினமேரிலே கருணைந்தமாயிருந்தார். இப்படிக் கொலுவாக இருக்கையிலே சகலமானபேரும சேவித்துக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியுங் கொலுவாகவிருந்தார்.

Colophon :

வெகுதானிய ஞூ சித்திரை மீ 29 உ, அச்சய திருநாள் சதமுகணன் கதை முற்றிற்று.

சங்ககுளத்திலிருக்கும் கணபதி சாஸ்திரிகள் குமாரன நாராயணையன் சதமுகராவணன (கதை) எழுதி முகிநதது.

(கு-பு.)—

இது தசமுகராவண ஸம்ஹாரமான பின்பு மாயாபுரிவாசியும் சிவலிங்கமொன்றை உட்கொண்டிருந்தமையால் ஒருவராலும் வெல்லப்படாதவனுமாயிருந்த சதமுகராவணனெனனும ராக்ஷஸன, இராமன், இலக்குமணன், சுகரீவன், அஙகதன் முதலியவர்களையும் வெனறுவிட, நாரதருடைய உபாயத்தைக்கேட்டு இராமனுல் அனுப்பப்பட்ட சீதை கோரமான பெரிய வடிவையெடுத்துக்கொண்டு அந்த ராக்ஷஸனைக கொன்ருளென்று கூறுவது ; இந்தப் பிரதியில் முதலில் ௩௩ ஏடுகளில்லை ; ௩௪-வது ஏடு தொடங்கி ௧௦௦-வது ஏடுவரைககும உள்ளன. வசன நடை சாமானியமானது.

No. 397. சத்தியகோஷன்கதை.

SATTIYAKŌṢANKADAI.

Pages, 6. Lines, 6 on a page.

Begins on fol. 169*a* of the MS. described under No. 375.
Complete.

The story of how a certain prime minister, who received in secret the property of another and refused to return it, stating that he had not received it at all, was found out to have done wrong and was rightly punished in the end.

Illustrates that untruth is certain to be detected and punished in the end.

Beginning :

ஜம்பூத்வீப பரதக்ஷேத்ரத்து ஸிம்ஹபுரமென்னும் நகரத்து ராஜா ஸிம்ஹஸேனமஹாராஜன்; தேவி, ராமதத்தையென்பாள்; மந்திரி ஸ்ரீபூதியென்பான்; இவன் ஸத்யவாதாதிசயத்தால் ஸத்யகோஷனென்னும் நாமத்தையுடையனாகி வர்த்திக்கின்றகாலத்து, பத்மஷண்டமென்னும் நகரத்து ஶ்ரேஷ்டி சுதத்தனென்பான்; இவன் பார்யை ஸுமித்ரை; இவர்கட்குப் புத்திரன் பத்ரமித்ரனென்பான்; இவன் ரத்நத்வீபமென்னும் த்வீபத்துப்போகி அனேக ரத்னங்கள் ஆர்ஜித்து ஸிம்ஹபுரத்திலே இருப்பானாகி நினைத்துவந்து ஸ்ரீ பூதிஸமீபமடைந்து தனது வ்ருத்தாந்தமெல்லாஞ்சொல்லி இவன் ப்ரமாண புருஷனென நினைந்து இவன்கையிலே ஒருவருமறியாதவண்ணம் தனது மாணிக்கச் செப்பினை நிக்ஷேபித்துப்போ(யினன்).

End :

"இவ்வண்ணம் அபந்ஹவதோஷம் பண்ணின இவனுக்குத் தண்டமென்" என்று வினவ, அவர்களும் ஸர்வஸ்வஹரணமும் மஹாமல்லராலெடுத்திடப்பட்ட முப்பது சவட்டைகளும் மூனறு கம்ஸபாத்ரம் நிறைந்த சாணகந் தீற்றுதலுமென்கிற தண்டங்களை விதிப்ப, ராஜாவும் அவ்வண்ணஞ்செய்கென்று நியோகித்தபின் ஸ்ரீ பூதியும் அந்தத் தண்டங்களுக்காற்றாது அஸஹ்யவேதனையால் ஆர்த்தத்யானத்தோடும் மரித்தனன்.

இவ்வண்ணம் அஸத்ய தோஷத்தால் அநர்த்தமெய்துவார்க்கு ஸத்யகோஷன் உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றனன். என்றவாறு.

சுபமஸ்து.

(த-பு.)—

இது, சிங்கபுரத்துச் சிங்கசேனராசன் மந்திரியாகிய சத்தியகோஷனென்னும் ஸ்ரீபூதி, தன்னிடம் பதுமஷண்ட நகரத்துப் பத்ரமித்ரனெனனும் செட்டி பிறருக்குத் தெரியாது கொடுத்திருந்த மாணிக்கச் செப்பினை அபகரித்துக்கொண்டு அச்செட்டி 'கொடு' என்று கேட்ட காலத்து 'நீ கொடுக்கவில்லை' என்று சொல்லிவிட, அச்செட்டி எவ்

விடத்தும் நின்று சொல்லிக்கதற, ஐயுற்ற அரசியாகிய ராமதத்தை சூதாட்டத்தில் அம்மந்திரியைப் பூணூலையும் நாமமுத்திரையையும் பந்தயமாக வைக்கச்செய்து வென்று அவற்றைத் தன் சேடியாகிய நிபுணமதியிடம் கொடுத்துத் தந்திரமாகச் சில வார்த்தைசொல்லி மந்தரியின் பொக்கிஷககாரனிடம் அனுப்பி மாணிக்கச் செப்பை வருவித்து அரசனிடம் கொடுப்ப, அரசன் தர்ம்மாதிகாரிகள் விதித்தபடி மந்திரியின் பொருளனைத்தையும் கைக்கொண்டு அவனுக்கு மூன்று கம்ஸபாத்திரநிறைந்த சாணகத்தைத் தீற்றி மல்லர்களைக்கொண்டு முப்பது சவட்டையடியும் கொடுப்பிக்க,அவன் வேதனைபொறாது மாண்டானென்று கூறிப் பொய்யினால் விளையுந் தீங்குகளை விளக்குவது; பூர்த்தியுடையது.

No. 398. சயகுமாரன்கதை.

JAYAKUMĀRANKADAI.

Pages, 7. Lines, 6 on a page.

Begins on fol. 163*b* of the MS. described under No. 375.

Complete.

Illustrative of the virtue of self-restraint.

Narrates the story of a certain king famous for self-control and self-restraint.

Beginning:

(இனி, பரிமிதபரிக்ரஹத்திலே ப்ரஸித்தராகிய ஜயகுமாரர் சரிதமாவது).

ஜம்பூத்வீபத்துப் பாதக்ஷேத்ரத்துக் குருவிஷயத்து ஹாஸ்தினபுரமென்னும் நகரத்துக குருகுலத்து ராஜா ஸோமப்ரபனென்பான்; தேவி லக்ஷ்மிமதியென்பாள்; இவளுக்குப் புத்ரன் ஜயகுமாரன்; இவன ஆதி சக்கரவர்த்தியாகிய பரதேச்வரன் திக்விஜயகாலத்து உத்தர பரதத்து மேகமுகரென்னும் வ்யந்தரரைத் தன் ஸிம்ஹநாதத்தால் ஜயித்தமையில் சக்ரவர்த்தியும் மிகவும் ஸந்தோஷித்து இவனுக்கு மேகஸ்வரரென்று விஜய நாமங் கொடுத்தனன்.

End:

தேவன் மாயாரூபம் நீங்கித் தன் வடிவுகொண்டு நமஸ்கரித்தலும், குமாரன் விஸ்மிதனாகி, 'நீயார்? ஞ்துவென்?' என்று வினவ, தேவனும், "குமாரனே! தேவேந்த்ரன் உன்னுடைய பரதாரநிவ்ருத்திவ்ரத

மாஹாத்ம்யத்தினை ப்ரசம்ஸிக்கக்கேட்டு யான் அறியாமல் பரீக்ஷிக்க வந்தேன். யான்செய்த அபராதமெல்லாம் க்ஷமிக்கப்பெறவேணும்" என்று விநயோபசாரஞ்செய்து விகரியையால் ஒரு ஸிம்ஹாஸனம் நிர்மித்து அதன்மேல் குமாரனையும ஸுலோசனையையும் இருத்திப் பாற்கடல் நீரால் அபிஷேகம்பண்ணித திவ்ய வஸ்த்ராதிகளால் அலங்கரித்துத் தர்மானுராகமுடையனுக்கித தேவலோகமடைந்தனன.

இந்த மேகஸ்வரகுமார சரிதவரதப்ரபஞ்சமெலலாம் ஸ்ரீ புராணத்துக கண்டுகொள்க.

இவ்வண்ணம் பரிமித பரிக்ரஹவ்ரததநிறகு மேகஸ்வர குமாரன உதாஹரணமாகச் சொல்லப்படுகினறனன். எனறவாறு.

சுபமஸ்து.

பஞ்சவரதகதை முற்றும்.

(கு-பு.)—

இது மேகஸ்வரகுமாரன கதையெனறும் கூறப்படும். இதில் குருதேசத்துள்ள ஹாஸ்தினபுரதது ராஜாவாகிய ஜயகுமாரனது பரிமித பரிகரஹ வரததைதகுறிதது சௌதாமேந்திரன புகழ, அதனைக கேட்ட மணிசூடனெனனுந தேவன அதனைப் பரீக்ஷிககவெண்ணித் தன அவதி ஞானததால் அந்த ஜயகுமாரன முனபொருகால் காஞ்சனையென்னும் வித்யாதரஸதிரீயின வடிவுகண்டு அதிசயித்ததையறிந்து அவ்வடிவுகொண்டு வநது 'என்னை அணையாவிடின யான இறப்பேன்' என்று கூற, அவன இது தகுதியனறென்று சிறிதும் உடன்படாமைக, அத்தேவன மகிழநது தன நிஜவடிவைககாட்டி அவனைச சிஙகாதனத் தேறறித திருபபாறகடல் நீரால் அபிஷேகம் பண்ணிவிட்டுத் தன நகரமடைநதானென்று சொல்லுவது; பூர்ததியுடையது.

No. 399. சிரீகருணர் சரித்திரம்.

SIRĪKARUṆAR CARITTIRAM.

Substance, paper. Size, $17\frac{2}{3} \times \frac{3}{4}$ inches. Pages, 22. Lines, 4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Sekarunar Arupattinālu (64) Gōttiram and Sūttiram.

Complete.

Relates the story of the birth of 64 children to Brahmā and Sarasvatī, who had been born as mortals in this world owing to the

curse of the sage Durvāsas. All these children came to be known as Śirīkaruṇar on account of their having obtained blessings at the hands of Lakṣmī.

Beginning:

வேதவியாசர் சொனன பிரம்மாண்ட புராணததிலெ சீர்கருணர் புராணவசனம் ; இத்தைப் பாண்டியன் வாசல தளவாய் வேலஞ்செறு உடையான் குலச்சிறை நயினர் அந்தப் புராணத்தை அழைப்பித்துப் பாண்டியன் முதலான பேருங் கேட்கத் தேப்பெருமாள் கையில் கொடுத்துப் புராணத்திலேயிருககிற பொருளை அர்த்தப்படுத்தி விருய? மதுரையிலிருககிற ராசன் குலபாரிசநாதன கையில் கொடுத்து தமிழ்ப் படுத்திஞர். இது வயணமெனனவென்றல்.

End:

இந்த அறுபததுநாலு வீடும் அறுபத்துநாலு ரிஷிகோத்திரமும் ஆறு சூத்திரத்துடனேயும் அபிவிர்த்தியாயிருககிருர்களென்றவாறு.

சுபமஸ்து.

சீர்கருணர் புராணம் வாசகமாய் எழுதிமுடிந்தது முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், துர்வாச முனிவருடைய சாபத்தால் பிரம தேவரும் ஸரஸ்வதீ தேவியும் மானிட வடிவோடு தாமரைப்பூவிலே வெவவேறிடத்துப் பிறந்து ஆத்திரேயவேதியர் சுபகுணமாலையென்னும் பெயர் பூண்டு வளர்ந்து விவாகம் செயயப்பெற்று 64 பிள்ளைகளைபெற அப்பிள்ளைகள் ஞான முனிவரது வேண்டுகோளால் இலககுமியினுடைய கருணையை அடைந்தமைபற்றி "ஸ்ரீகருணர்" எனப்பட்டார்கள். என்னும் வரலாற்றைக் கூறுவது ; இந்தப் பிரதியில் பூர்த்தியாக இருக்கிறது.

No. 400. சிரீகருணர் சரித்திரம்.

ŚIRĪKARUṆAR CARITTIRAM.

Substance, paper. Size, 11 × 8½ inches. Pages, 481. Lines, 17 & 2 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Begins on fol. 34. The other work herein is Jatinūl 1*a*.

Complete.

Similar to the above.

Beginning:

சீர்பரந்த கமலமுக வாணி மாதுந்
திருப்பரந்த விழியிணையும் வதனந் துண்டங்
கார்பரந்த வளகம்வரைப் பயோத ரஞ்சேர்
காமாட்சி யம்மை பெறற கயமு கத்தோன்
ஞர்பரந்த திருவிழிய ஊங்க ரத்தோன்
இந்துநிற நிகர்மருப்போ (னிருதாள் போற்றிப்)
பேர்பரந்த சீர்கருணர் புராணமிந்தப்
பேருலகம் வருமாறு பேச லுற்றும்.

எ து, etc.

* * * *

ஸ்ரீ கைலாயவாசமாயிருக்கப்பட்ட ஈசுவரன் அறுபத்துநாலு திருவிளையாடல் விளையாடின பிறகு சமணர்கள் உலகமெங்கும் பரவி, சிவபரமாகவிருந்த பாண்டியமகாராசனை மனசு பேதிச்சுப் போகப்பண்ணி, சமணர்கள் மதத்திலே யிருககச்சொல்லிப் போதனைபண்ணி, சிவனைத் துதிபண்ணிப் பஞ்சாட்சரத்தைச் செபித்துத் தியானம்பண்ண வொட்டாமல் பண்ணினார்கள்; அதுகண்டு பாண்டிய ராஜாவண்டையிலே பிரதானியராயிருககப்பட்ட சீாகருணரில் குலச்சிறை நாயனும் பாண்டிய ராஜாவின் பெண்சாதியும் சிவபரமாயிருக்க அந்தச் சமயத்திலே, etc.

End:

சீர்கருணருக்கு இந்தப்படி தசாங்கமுங்கொடுத்து, இந்தப் பூலோகததிலே நீடூழி காலமும் சந்திராதித்தர் வரைக்கும் வாழுமென்று தொண்டிர ராஜன், சென்னி, சேரன், தா(மிர)ச்சாதனம், சிலா(சாத)னம் பண்ணிக்கொடுத்து, சுகமாய் வாழ்ந்திருங்கோளென்று ஆசந்திரார்க்கஸ்தாயியாக நிலை நிறுத்தினார். அந்தப் பூர்வோத்தரம் புராணசித்தமாயிருக்கப்பட்ட சீர்கருண புராணத்தையும், பார்த்து சீர்கருணர் சதகத்தையும் பார்த்து அதிலேயிருந்த அர்த்தத்தை. பூநறிய வளம்பதியுடையார் கெவுதமரிஷி கோத்திரம் ஆ(சுவ)லாயன சூத்திரம் திருவேங்கடநல்லூருக்குப் பி(ரதி)நாமமான கொன்றையூர்க் கணக்கு ஆறுமுகப் பிள்ளை குமாரன் குருவப்பன் தனக்குத்.

சீர்கருணர் புராணம் முற்றிற்று.

Colophon:

(கு-பு.)—

இந்தக் கதை முன்பிரதியை ஒத்ததே ஆயினும் இதை இயற்றியவர் வேறென்று தோற்றுகிறது ; இதனை நூலிறுதியிலுள்ள வாக்கியத்தால் ஊகித்தறியலாம். இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாக இருக்கிறது.

No. 401. ஸிரீகருணர்சரித்திரம்.

ŚIRĪKARUṆARCARITTIRAM.

Pages, 25. Lines, 29 on a page.

Begins on fol. 64*a* of the MS. described under No. 378.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிக்கு மூலப்பிரதியென்று தோன்றுகிறது ; இதில் நூல் பூர்த்தியாக இருக்கிறது.

No. 402. ஸிரீகருணர் அறுபத்துநான்கு வீட்டுக்கும் கோத்திரம், சூத்திரம்.

ŚIRĪKARUṆAR AṞUPATTUNĀNGU VĪṬṬUKKUM GŌTTIRAM, SŪTTIRAM.

Pages, 14. Lines, 4 on a page.

Begins on fol. 12*a* of the MS. described under No. 399.

Complete.

This is a continuation of the story given in the MS. described under No. 399.

It gives details regarding the lives of the 64 children who became heads of different families.

There is a prayer of the end of two persons of that caste named Nārāyaṇa Piḷḷai and Veṅku Piḷḷai.

Beginning :

வீட்டின் கி. ஊர்.	கோத்திரம்.	சூத்திரம்.
1. ஆதியூர் ...	ஆத்திரிய வேதிய ரிஷி ...	ஆபஸ்தம்பம்.
2. பெருமுளைசையூர்.	கற்பரிஷி	காத்தியாயனம்.
3. தைப்பதாகையார்.	பாரத்துவாசரிஷி ...	போதாயனம்.
4. புலிப்பாக்கம் ...	வியாக்ரமகரிஷி ...	ஆசுலாயனம்.
5. பல்லாபுரம் ...	சனகரிஷி	வைகானசம்.
6. மங்கலபுரம் ...	தேவரிஷி	ஆசுலாயனம்.
7. திருநின்றையூர்.	முஞ்சிமகரிஷி ...	போதாயனம்.
8. பருந்தூர் ...	புயங்கரிஷி	போதாயனம்.

End :

கார்த்தியாயன சூத்திரத்துக்கு எஜுர் வேதம். வைகானச சூத்திரத்துக்கு அதர்வண வேதம். ஆகச் சூத்திரம் ௬ க்கு வேதம் 4.

* * * *

ஆகையால், எங்களுகது யதாப்பிரகாரம் சுதந்திர வகையராச் செலவுகொடுத்து ரக்ஷிக்கவேண்டியது. தர்ம சமஸ்தானத்தே நம்பிக் கொண்டிருக்கிறோம். இரக்ஷிககவேண்டியது.

நாராயண பிள்ளை.

வெங்கு பிள்ளை.

(கு-பு.)—

இது, ஸ்ரீகருணர் சரித்திரத்தின் தொடர்ச்சியுடையது. இதனால் ஸ்ரீகருணர் 64 வீட்டுக்காரருடைய ஊரும் கோத்திரமும் சூத்திரமும் வேதமும் தெரிகின்றன. இதன் இறுதியில், இப்பரம்பரையோர் எழுதிக்கொண்ட விண்ணப்பம் ஒன்றுள்ளது.

No. 403. சிவமதமடாதிபதிகள்சரித்திரம்.

ŚIVAMATAMAṬĀDHIPATIKAḶCARITTIRAM.

Substance, paper. Size, 14⅓ × 10⅝ inches. Pages, 22. Lines, 35 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 31*a*. The other works herein are Citrakūṭamahattvam 1*a*, Nālumandirikadai 15*a*.

Gives a short account of the Tamil Śaiva Mutts in the Madras Presidency.

Beginning :

ஆதிசாஸ்திர சிவப்பிரகாசக் கட்டளைப்படி பிரதானமான கோவில் சிதம்பரத்தில் ஆகமசாஸ்திர(ம்) விதிச்ச பிராமண குருமடங்கள் ௬. அவர்களால் பண்டாரக்குருக்கள (ை)மச்ச ஆதீன மடங்களும் பண்டாரக் குருக்கள் மூலமாக பண்டாரச் சன்னிதிமடங்களும் பலவித . . . . மடபதிகளையும் இவர்கள் பூசிக்கிற கோவில்களையும் இவர்கள் அனுஷ்டிக்கிற பேதாபேதங்களான மகாலிங்க பூசைகளையும் அவர்களைப் பார்த்தமாத்திரத்தில் இன்ன மடாதிபதிகளைச் சேர்ந்தவர்(க)ளென்று அ(றி)ய அடையாளங்களையும் பேர் விபரங்களையும் [யிப்ப] இப்பொழுது முக்கியமான பிரபலர்(க)ளையும் இவர்(க)ளைப்ப(ற்றி)ன சாஸ்திர (பு)ஸ்தகப்பேர் விபரங்களையும் அறிந்த மாத்திரம் இதினடியில் சொல்[லப்படும்]லுகிறேன் :—

கலை[க்கியா](ஞா)னம் ௬௪ க்கு.

காவியச(ா)லம். * * *
நாடகச(ா)லம். ஆ௪
சத்தசாலம். மதுரம்
சோதி[ஸ்ய](ட)ம். சித்திரம்.
திருவே . ம். வித்தாரம்.
காமசாஸ்திரம். கலியாண சாஸ்திரம்.
சிற்பசாஸ்திரம். ஆ௪, கலை(ஞ)ானம் ௬௪.

(கு-பு.)—

இது பாடல்பெற்ற சிவக்ஷேத்திரங்கள் இருநூற்றெழுபத்து நான்கனுள் இன்ன இன்ன நாட்டில் இன்ன இன்ன தலங்கள் உள்ளனவென்பதையும் இன்ன இன்ன மடங்களுககு இன்னாரின்னார் தலைவரென்பதையும் இன்ன இனன நூல்கள் இந்தச் சமயத்தைச் சேர்ந்தனவென்பதையும் கூறுவது; பூர்த்தியென்றும அபூர்த்தியெனறும் நிச்சயிக்கக் கூடவில்லை.

No 404. சிவமதமடாதிபதிகள்சரித்திரம்.
ŚIVAMATAMAṬĀDHIPATIKALCARITTIRAM.

Substance, paper. Size, 12¼ × 9¼ inches. Pages, 40. Lines, 21 on a page Character, Tamil. Condition, good. Appearance, new.

Begins on fol. 61*a*. The other works herein are Citrakūṭamahattuvam 1*a*, Nālumandirikadai 19*b*, Kumārakoṇḍanayakanvaṁśāvaḷi 81*a*.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போனறது; அதிலுள்ள அளவேயுள்ளது.

No. 405. சினேந்திரபக்தர் கதை.
SINĒNDIRIBAKTAR KADAI.

Pages, 8. Lines, 6 on a page.

Begins on fol. 127*b* of the MS. described under No. 375.

Complete.

A Jaina story.

Beginning:

(தர்ம உபலோப கூஷனமென்னுந் தர்சனங்கத்திற் ப்ரஸித்தராகிய ஜினேந்த்ரபக்தர் சரிதமாவது).

ஜம்பூத்வீபத்துப் பரதக்ஷேத்ரத்து அங்க விஷயத்துத் தான்யபுர மென்னு நகரத்துக கள்ளராய கீர்த்திதரன் முதலாயினர் நால்வர் கள்ளரோடு ஒரு நாள் களவுகண்ட பொருளை நாலுகூறாகப் பாகித்த இடத்துக் கீர்த்திதரன் 'எனக்குப் போதாது' என்ன, 'நீ பெருநிலை நிற்கு மத்தனையன்றே, எங்களைப்போல க்லேசமும் ஸாமர்த்யமும் உனக்குண்டோ' என, அவன் 'யான் என்னத்திற் சிறியேன்' என்ன, 'நீ ஸமர்த்தனாகில் சம்பாநகரத்து இப்பர்குலத்து ஜினேந்த்ரபக்தர் ஜினாலயத்துப் பகலிரவென்று தெரியாமலெரிகின்ற மாணிக்க விளக்குக் களவுகண்டு வரவல்லையோ' என, 'இனி நீங்கள் சொன்ன இது கொடு வந்தால் அல்லது கூறுகொள்ளேன்' எ(ன்)று மாறுகொண்டுபோந்து சிந்திப்பா(ன்).

End:

ஜினேந்த்ர பக்தரைக்கண்டு 'உம்மைப்போலே எனக்கு ஸத்புத்ரரை எங்குங்கண்டதில்லை. நான் தான்யபுரத்துநின்றும் இந்த மாணிக்க விளக்குக் காரணமாகப் பொய்த்தவம்பட்டேன். உம்முடைய ப்ரஸாதத்தால் ப்ராணம் பெற்றேன. இனி எனக்கு ஜினதீக்ஷை தருவிப்பீராமின்' என, அவரும் இவரது சித்தவ்ருத்தியறிந்து 'இன்னந் தான் உனக்குத் தரவுநிற்குமோ' என்ன, 'யான் ஸம்ஸார வைராக்யத்தால் ஸம்யக்தர்சனங்கைக்கொண்டேன்' என்று ஸத்யமாகச் சொல்லியபின் ஸர்தோஷித்து யமதரரென்னுங் குருக்கள் பார்ச்வத்தே தீக்ஷிப்பித்தார். அவரும் தபச்சரண விசுத்தராகிக் கீர்த்திதரபத்தாரகரென்னுந் திவ்யதபோதனரானார்.

இவ்வண்ணம் அறத்துள்ளார்செய்த பழிநீக்குதலென்னுந் தர்சனங்கத்தில் ஜினேந்த்ரபக்தர் உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றார். (எ - று.)

தமோஸ்து.

(கு-பு.)—

இது சினேந்திர பக்தரென்பவர், தாம் கட்டிவைத்த ஜினாலயத்துள்ள மாணிக்கதீபத்தைத் திருடிவருவதாக திருடர் நால்வருள் ஒருவராகிய கீர்த்திதரரெனபவர் மற்ற மூவரோடும் பந்தயம் போட்டுக் கொண்டு ஆர்கதவேஷத்தோடுவந்து சினேந்திரபக்தர் வியாபாரத்தின்பொருட்டு ஒரு சோலையில் பரஸ்தானமாக இருந்தபொழுது அவ்விளக்கைத் திருடித் தன் ஓலியலில் சுற்றிகொண்டு புறப்பட, அத்

நகர்க்காவலாளி ஆலயத்தில் விளக்கைக் காணாமல் இவரைக்கண்டு விளக்கெங்கேயென்று கேட்க, இவர் அஞ்சி உளறுதலால் இவரிடமுள்ள தென்றறிந்து இவரைப்பிடித்துக் கட்டிவைத்து ஜினேந்திரபக்தரிடம் தெரிவிக்க, அவர் 'உலகத்தார் கள்வன் திருடினனென்றுது க்ஷமணன் திருடினனென்பர்' எனவஞ்சி ஜைனமதத்தவர் பழியை நீக்கக் கருதி, 'நான் விளக்கைக் கொண்டுவரும்படி சொன்னேனே' என்று சொல்லி அந்தக் கீர்த்திதரரை விடுவித்தாரென்றும் பிறகு கீர்த்திதரர் யமதரரிடம் உபதேசம்பெற்று மெய்த்தவஞ்செய்து கீர்த்திதரபத்தாரகரென்று பிரசித்தி பெற்றாரென்றும் கூறுவது; பூர்த்தியுடையது.

No. 406. சுகுணன் கதை.

SUGUṆAN KADAI.

Substance, palm-leaf. Size, 15 × 1¼ inches. Pages, 10. Lines, 6 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

A story relating to one Suguṇan of Oudh.

Beginning:

அயோத்தி பட்டணத்தில் சுகுணனென்ற ஓர் மனுஷனிருந்தான். அவன்பேரில் கானகவிரிவே? னென்ற [விராடசசுன] (இராக்ஷஸன்) பகையாயிருந்தபடியினாலே, அவனைக் கொல்ல அவனுடைய வீட்டின் பிறகு உட்கார்ந்திருக்கையிலே, ஓர் அவசரத்தினால் அவன் புறப்பட்டதைக்கண்டு, கூட இராக்கதன் பின்தொடர, அவ்விடத்திற் 'பிரஜைகள் மிகுதியாயிருக்கிறபடியினாலே இங்கேதா(ே)ன இவனைக் கொல்லக் கூடாது. இந்த ஊரிலிருந்து வயல் வெளியிலே வருமபோது கொல்லுவேன்' என்றெண்ணி ஊரிலிருந்து வயல் வெளியிலே அந்த மனுஷனும் இராட்சத[து]னும் இரண்டுபேரும் வருஞ்சமயத்தில், நடுவழியிலே ஓராறு இருந்தது. அதைப் பார்த்து இராட்சதன், 'மனிதன் இந்த ஆற்றின் அக்கரைக்குப் போகுமளவிலே அவனைக்கொன்று ஆற்றிற் போட்டுவிடுவோம்' என்று நினைத்து அந்த வாற்றின்மேல்தாண்டி, அக்கரையில் நின்றுகொண்டிருக்க, சுகுணனென்பவன் ஆற்றிலிறங்கிப் பாதத்தைக் கழுவுகிறபோது ஆற்றின் கரையில் ஒரு சின்ன ஆமையைக்கண்டு . . . அந்த ராட்சதனைப் ப[ா]ல்லாற் பிடுங்கி ஆற்றிலே கொண்டுபோய்த் தண்ணீரி[ரி]லே அமிழ்த்திப்போட மரணமானான்,

End:

ஆகையால், பூலோகத்திலேவந்த ஆமையாயப் பிறந்து நீ நன்மை செய்[து யீண்டா](த இன்றை) வரைக்கும் பதிறுயிரம் வருஷம் ஆமைச்சொருபத்தோடிருந்தேன். என்று தன காதிலிருந்த ரத்தினத்தை எடுத்து, அவன கையிறகொடுத்து ஆகாசமார்க்கமாய்ப் பறந்து மாயமாய்ப் போனுள். அவன் அந்த இரத்தினத்தை வாங்கி அதனுலே மகாராஜனுகிச் சுக சந்தோஷத்தோடே இருந்தான.

(கு-பு.)—

அயோத்தியாபுரியிலிருந்த சுகுணனென்ற மனிதனை ஓரிராக்கதன் கொல்லக கருதியபொழுது அச்சுகுணனுக்கு நாரதருடைய சாபததால் ஆமைவடிவை அடைந்திருந்த காந்திமதியெனனும் ஓர அப்ஸரஸ்திரீ உதவிபுரிந்து அவவிராக்கதனைககொனறு மறுபடி தன வடிவையடைந்து அச்சுகுணனுக்குத் தன காதிலணிநதிருந்த ரததினததைக கொடுகக, அவனபெறறு நலல செல்வவானுகி வாழ்ந்திருநதானெனபது இதிற் கூறப்பட்டுள்ளது; வசன நடை சாமானயமானது; பூர்த்தி யுடை

No. 407. தனச்ரீயின் கதை.
DANAŚRĪYIN KADAI.

Pages, 5. Lines, 6 on a page.

Begins on fol. 167*a*.

The story of one Danaśrī. She is cited in Jaina stories as an example of one who suffered death in consequence of her having caused the death of another.

Beginning:

அஹிம்ஸாவ்ரதமின்மையால அனர்த்தமெய்திய தனஸ்ரீயுடைய சரிதமாவது)—

ஜம்பூத்வீபத்துப் பரதக்ஷேத்ரத்து வதஸவிஷயத்து முருகச்சமென்னும் நகரத்து ராஜா தனபாலன். அந்நகரத்து வைச்யன் ஸ்ரீபாலன். இவன் பார்யை தனஸ்ரீயெனபாள். இவர்கட்குப் புத்ரன ஜயத்ஸேனனெனபான். இவ(னு)க்கிளையாள் ஸ்வர்ணமாலை. இவர்கட்குக் கர்மகரனுய வர்த்திப்பான் சீலதரனெனபான். ஸ்ரீபாலன் அஸாத்யமானதொரு வ்யாதிதோன்றி இறந்தபின் தனஸ்ரீ சீலதரனைக்கொண்டே க்ருஷயாதி ஜீவனுேபாயங்களெல்லாஞ் செய்வித்துச் செல்லா

நனை காலத்துத் தனஸ்ரீ சீலதரனுடன்கூட ஏகாந்த ப்ரதேசத்திருந்து க்ருக ஸார்யவார்த்தை பேசுகின்ற இதுகண்டு ஜயத்ஸேனன் அதனை ஸஹியாளுகி(னுன்).

End:

ராஜா தனஸ்ரீயை அழைப்பித்து 'ஸ்வர்ணமாலை சொன்னபடியுண்டோ' என்று தனஸ்ரீயைக் கேட்ப, அவளும் பயத்தினுற் புகுந்தபடி சொல்லியபின் ராஜா மிகவும் கோபித்து 'இவ்வண்ணஞ் செய்வித்த இவளுக்குத்தண்டம் என' என்று தண்டவிதானம் பண்ணுமவர்களைக் கேட்ப, 'நாஸிகாச்சேதனம்பண்ணிச் சகட்டின காலிற்கட்டி யிழுப்பிப்பது' என்று தண்டவிதானம் பண்ணவெ(ன்ற)னர். அவ்வண்ணஞ் செய்கவென்று ராஜா நியோகிப்ப, அவளை அவ்வண்ணம் தண்டித்தார்கள்.

இவ்வண்ணம் அஹிம்ஸா வ்ரதமிலலாமையால் அனர்த்தமடைவோர்க்குத் தனஸ்ரீ உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றனள் என்றவாறு.

(கு-பு.)—

இது, தனஸ்ரீ தன்னைக்கோபித்த குமாரனை ஜயதஸேனனை அவனிம் சீலதரனுக்குச சோறனுப்பி அச்சீலதரனை கொலலுவிக்க, ஸ்வர்ணமாலையின் புலம்பலால மஹாஜனங்கள ஜயத்ஸேனன் வாராமையையறிந்து அரசனுககறிவித்தார்கள். அரசன விசாரிக்கையில் அச்சத்தால் உண்மையைச சொன்ன தனஸ்ரீ தண்டிககபபட்டாளென்று கூறுவது. பூர்த்தியாகவுள்ளது.

No. 408. தனதேவன் கதை.

DANADĒVAN KADAI.

Pages, 8. Lines, 6 on a page.

Begins on fol. 146a of the MS. described under No. 375.

Complete.

Another Jaina story. Illustrates the virtue of truth-speaking and the viciousness of untruthfulness.

Beginning:

(இனி ஸத்யவ்ரதத்தினை ரக்ஷித்து அப்யுதயம்பெற்ற தனதேவன் சரிதமாவது)—

ஜம்பூ த்வீபத்துப் பரதக்ஷேத்ரத்து விதேஹவிஷயத்துப் புண்டரீகிணி நகரத்த ராஜா ப்ரஜாபாலனென்பான். அந்த நகரத்து வைச்ய[ன](ர்) தனதேவனும் ஜினதேவனு மென்பாரிருவர் தங்களில் பந்துபாவத்தால் வர்த்திக்கின்றகாலத்த ஜினதேவன் ஈலயாத்திரையால் வ்யாபாரம் பண்ணப்போவான வேண்டி ஒரு மரக்கலஞ் சமைப்பித்து ஜைனனுகிய தனதேவனை யழைப்பித்து 'நமக்கு ஸஹாயராய் நம்முடன் மரக்கலமேறிப் போதுவீராமின' என, இவனும் 'என்பக்கல் ஒரு த்ரவ்யமுமில்லை ; யான போந்துசெயவதென?' என்று சொல்லி (னன்).

End :

தனதேவனும 'என எண்ணுயிரம் பொனனல்லது கொள்ளேன்' என்று மறுப்ப, பொன கொடுத்த, 'ஜினதேவன ஸ்வம்மெல்லாம் பண்டாரமாக்கி மனையிலுள்ளதெல்லாம் ஒ(டு)க்கிக்கொண்டு நம் தேசங்கடக்க இவனைக்கடிவது' என்று நியோகிக்க, இவன நாடுகடிவதில் எனனையே கடிவதென்று ரமனகரிப்ப, ராஜாவும் இவ னுடைய மாஹாத்மியத்தினைக் கண்டு விஸ்மிதனுகி 'உமக்கு நாம இரண்டு கார்யஞ் செயதுதந்தோம். நமக்கு நீரொரு காாயஞ் செயயவேணும' என்று ப்ரார்த்தித்துத் தன பாண்டாகாரததிலே இரண்டு நூறுயிரம பொன்கொடுத்து வஸ்த்ராபரணுதிகளால ஸமமானஞ்செயது பூஜித்தனன்.

Colophon :

இவ்வண்ணம் ஸத்ய வரதபலததிறகுத் தனதேவன் உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றனன. (எ-று.)

சுபமஸ்து.

(கு-பு.)—

இந் புண்டரீகிணி நகரத்து ஜினதேவன கப்பல் யாத்திரைக்குத் தனதேவனைத் துணையாகவேண்டி அவனுக்கு 1,000 பொன் சரக்குவாங்குவதற்குக கடனுகக்கொடுகக, அவன வாங்கிய சரக்குகளுள் சிலவற்றை 10,000 பொனனுக்குவிற்று ஜினதேவனிடம் வாங்கிய 1,000 பொனனுக்கு லாபமுள்பட 1.500 பொனனும் கப்பற்கூலிக்கு 500 பொன்னும் ஆக 2,000 பொன கொடுததுவிட்டு மிஞ்சிய 8,000 பொன்னையும் சரக்கையுங்கொண்டுவர, கண்ட ஜினதேவன பேராசையால் அவற்றையும் தன்னதென்று தன முத்திரையைப் பொறிக்க, தனதேவர் தடுக்க இருவரும் வீடுவந்து சேர்ந்தனர். பின் ஜினதேவனபோய் அரசனைக்கண்டு விலையிலாத மாணிக்கமிரண்டுகையுறையாக அளித்துத் தனதேவன் செயயும் அநியாயத்தைத் தீர்க்கவேண்டுமென்ன, அரசன் அவனை வருவித்தகேட்டு ஸாக்ஷியில்லாமையால் இருவரையும் துலாபாரத்து நிறுப்பித்து 3 நாள் உபவாசமிருப்பச்செய்து பின் நிறுப்பித்து

அவர்கள் வாய்மொழியையுங் கேட்டு ஜினதேவனே அசத்தியம் சொன்னவனென்றறிந்து மரக்கலத்துள்ள பொருளனைத்தையும் தனதேவனுக்குக் கொடுக்கும்படி சொல்ல, அவன் 8,000 பொன்னல்லது கொளளேனென, அதனைகொடுத்து ஜினதேவன் பொனனனைத்தையும் தன்னதாக்கி ஜினதேவனைத் தேசாந்தரமேகும்படி கட்டளையிட, தனதேவன் வருந்தி எனனையே அவ்வாறு செயகவென, அரசன் அதிசயித்தக கட்டளையைமாற்றி 'உமதிஷடபபடி நான இரண்டுஞ்செய்தேன்; எனதிஷ்டப்படி நீர் ஒன்றுசெயக' என்று இரந்து 200,000 பொன்னும் ஆடைமுதலியனவும் அத்தனதேவனுககு ஸம்மானஞ்செயது பூசித்தானென்று கூறுவது; பூர்த்தியுடையது.

No. 409. தாடிவெண்ணெய்க்காரன் கதை.
TĀḌIVEṆṆAIYKKĀRAN KADAI.

Pages, 5. Lines, 6 on a page.

Begins on fol. 175*b* of the MS. described under No. 375.

Complete.

A Jaina story to illustrate the evils arising from an over-covetous imagination.

Beginning:

(இனி, பரிமித பரிக்ரஹமெனனுமவ்ரதமில்லாமையால அனர்த்தமெய்திய தாடிவெண்ணெய்க்காரன் சரிதமாவது)—

ஜம்பூத்வீப பரதக்ஷேத்திரத்து மதுரையென்னும் நகரத்துள்ளான் தாடிவெண்ணெயக்காரனென்பான இவன ஒருகாரியத்திலும் உத்ஸாஹமிலனாகி அகுசலனாதலில் இவனைப் பந்துவர்க்கமெல்லாம உபேக்ஷிப்பித்தபின் இவன போந்து கோவர்த்தனமெனனும் நகரத்துத் தொறுப்பாடியில் வந்துசேர்ந்து இடைச்சியர் மோர்க்கலங்களில் மேல்மிதக்கிற வெண்ணெய லேசமெல்லாம் ஈர்ககாலெடுத்துத் திரட்டிககொண்டும் அவர்கள் வார்தத மோர்குடிககுமிடத்தக தனது தாடியிற்றங்கிய வெண்ணெயைவாங்கிககொண்டும இப்படி நாள்வழி ஒருபிடி வெண்ணெயதிரட்டி ஜீவித்துச் செலவாதினறு(ன்).

End:

அவ்வளவில் காற்கடையிற் கட்டியிருந்த உறியற்று வெண்ணெய்ப் பானை வீழ்ந்து தகர்ந்துடைந்து எரிகின்ற நெருப்பினில் வீழதலும் நெருப்புப் பொஙகியெழுந்து குடிசைவாசலை மூடிககொண்டு சுட்டுவிட்டது. இவனு மூட்டபட்டு அக்னிபாதையால் மரணமடைந்தனன்.

இவ்வண்ணம் லோபகஷாய பரிணமமுடையார் பரிமிதபரிக்ரஹ மென்னும் வ்ரதமில்லாதார் இவனைபோல அனர்த்தமெய்துவாராத லில் இவன் உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றனன். (எ-று.)

*   *   *   *

Colophon:

சோபகிருது ஷு ஆவணி மீ ௨௨ குழப்பலூர் நயினுத்தைநயினர் புத்திரன குட்டியாரயினர் குமாரன அய்யநயினர் கௌதமிகதை, அஷடாங்கசரித்ரம், பஞசவாதகதை எழுதிப் படிச்சு முடிஞ்(ச)து. முற்றும் . . .

(கு-பு.)—

இது தாடிவெண்ணெயககாரன கோவர்ததன நகரத்து இடையர் பசுக்களை மேயத்துககொண்டு அவர்களாலுண வளிககப்பெற்று அவர்கள் கட்டிககொடுதத குடிசையில இருந்து வருகையில் ஒருநாள் கால் மாட்டிலே ஒரு கட்டையில உறிகட்டி அதில வெண்ணெய்ப்பானையை வைத்துவிட்டுப் பரண்மேற்படுத்துககொண்டு "இப்பொழுது சேர்த்து வருவதுபோலவே இனனும் சிலநாள வெண்ணெயசேர்த்து விற்று வட்டிக்குக் கொடுத்துவந்தால் பெருஞசீமானுகி மாடமாளிகை கட்டிககொண்டு அவற்றிலிருககலாம. அப்பொழுது ஏவியவேலைசெய்ய உடனே செய்யாத தாசியை இப்படி உதைககவேண்டும்" என்று எண்ணிக காலைநீட்டி யுதைக்க, உறியறறு வெண்ணெயப்பானை விழுந்துடைந்து அருகே குளிருக்குப பரிஹாரமாக மூட்டியிருந்த அக்கினிகுண்டத்திற்சேர உடனே அதிலிருந்த நெருப்பு மூண்டெழுந்து குடிசையையும் இவனையும் சுட்டழிதத தெனக்கூறுவது; இந்தப்பிரதி பூர்த்தியுடையது.

No. 410. தேரூர்ந்தவாசகம்.

TĒRŪRNDAVĀCAKAM.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{2} \times \frac{3}{4}$ inches. Pages, 72. Lines, 3-4 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

One Vīdivadaṅgan, the son of a certain Chōla king, was found guilty by his father for having carelessly driven his chariot on a calf and killed it. Thereupon the king ordered that his son should share the same fate as the calf by the chariot being driven over his

body. The story ends by saying that the gods moved by the impartial justice of the father came down and rescued the son from death.

This incident is narrated in the Periya-purānam as having occurred in Tiruvālūr where to this day are to be seen in stone the chariot, the dead calf, and the king's son thrown underneath the chariot.

Beginning:

பாரூர் பசுபபழிககுப பாலன றனைககிடத்தித
தேரூர்ந்த சோழன் றிருககதைதககு—நீரூர்நத
தும்பைச் சடைமுடியார் தோகையுமை யாள்ப[யான்ற](யந்த)
கம்பக கடக்களிறே காப்பு.

சூரியவங்கிசதிலே தோனறப்பட்ட ராசவங்கி[ஷ](ச)த்திலே சோழன் மரபிலே, உததுங்கசோழனென்றும, குலோத்துங்க சோழனென்றும், கரிகாலச்சோழனென றும, ராசேசந்திரச்சோழனெனறும், இப்படித்தோனறப்பட்ட நள்ளிகடை கிள்ளிமுதல் நாறபத்தெண்ணாயிரம் சோழன்பரபபிலே ஒரு ராசாவானவன.

End:

ஈசு[ப](வ)ரனும் ராசாவைப்பா[ா]த்து 'நமக்குச் சந்தோஷமாச்சுது பசுவாகவந்தது நாமாகவும் சேஙக[ன்ஞ](ன்ரு)கவந்தது எமனுகவும் இப்படி உனனுடைய அன்பு சோதிக்கவந்தோம இனிமேல் நீரும் உம்முடைய தேவியும் குமாரனும் மந்திரியும் நீங்கள் நாலுபேரும் கயிலாசமேவாருங்கோள்' எனறு அனுககிரகமபண்ணிப் புஷபவிமானத்திலேறிக கயிலாசமே எழுந்தருளினர் (எ - று).

(கு-பு.)—

இதிலுள்ளகதை, பெரிய புராணததிலுளள திருவாரூர்ச சிறபபு என்னும் பகுதியில் சுருக்கமாக அமைநதுளளது. இநதப பிரதியில் இக்கதை பூர்த்தியாக இருககிறது

No. 411. தேரூர்ந்தவாசகம்.

TĒRŪRNDAVĀCAKAM.

Pages, 27. Lines, 4 on a page.

Begins on fol. 204*a* of the MS. described under No. 376.

Complete.

Same as the above.

(த-பு.)—

இந்தப் பிரதியில் இந்நூல் பூர்த்தியாயிருக்கிறது; பெரும்பாலும் முன் பிரதியை ஒத்தது.

No. 412. தேரூர்ந்தவாசகம்.

TĒRŪRNDAVĀCAKAM.

Substance, palm-leaf. Size, 15½ × ⅞ inches. Pages, 46. Lines, 5 on a page. Character, Tamil. Condition, good. Appearance, very old.

Incomplete.

Slightly different from the above.

(த-பு.)—

இது பெரும்பாலும் முன் பிரதியை ஒத்தது; ஏடுகளி லுவிகள் ஓடிந்துள்ளன; இந்தப் பிரதியில் சிவபெருமான காட்சிகொடுத்தாரென்ற பகுதிவரையிலிருக்கிறது; இறுதியிற் சிலபாகம் இல்லை.

No. 413. தேரூர்ந்தவாசகம்.

TĒRŪRNDAVĀCAKAM.

Substance, palm-leaf. Size, 10 × 1⅛ inches. Pages, 52. Lines, 5 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Similar to the above.

> ஆ[றூ](ரூ)ரு(ம)ம பலமு மாடிய கூத்தமுகுற
> தேரூறு மரன பெருமையு[ம்] - ஆரூ[றூ](ரூ) ரில்
> தே[றூ](ரூ)ர்ந்த சோழ ா திருக்கதையைச் செப்புதற்குக்
> கா[றூ](ரூ)ர்[ந்தன] கணபதி காப்பு.

பராபரத்தின் கண், சதாசிவன தோன்றிச் சதாசிவன்கண ருத்திரன்தோன்றி, ருத்திரனகண் ஈசன தோன்றி, ஈசன் கண் மகாவிஷ்ணு தோன்றி, மகாவிஷ்ணு(வின) கண் பிரமா தோன்றி. பிரமாவின் கண் சூரியன் தோனறிச் சூரியவம்சத்திலே தோன்றப்பட்ட ராஜவம்சத்திலே, சோழராஜாக்களில் ஆரோ வென்னில், உத்துங்க சோழனென்றும், குலோத்துங்க சோழனெனறும், ராஜேந்திர சோழனென்றும், மனுநீதிகொண்ட சோழனென்றும், ஆளப்பிறந்த சோழனென்றும்,

அருந்தவச் சோழனென்றும், கெங்கைகொண்ட சோழனென்றும், ஜயங்கொண்ட சோழனென்றும், மண்ணளந்த சோழனென்றும் திரு[நூத்து](நீற்று)ச் சோழனென்றும, ஆதிலொருகடமை கொண்ட சோழனென்றும், கரிகாலச் சோழனென்றும், பு[த்தி](ற்றி)டங்கொண்ட சோழனென்றும், காட்சி கொடுத்த சோழனென்றும், காட்சி கொண்ட சோழனென்றும, வரகுண்ணிச் சோழனென்றும், திருமுடிச்சோழனென்றும், காவேரிகரைகண்ட சோழனென்றும, இப்படித் தோன்றப்பட்ட சோழ ராஜாக்களிலே ஒரு ராஜா தாமசிந்தையாயிருக்கிற பருவத்திலே.

End :

. . அப்போது) ராசாவும் தேவியும, குமாரனும், மந்திரியும் எழுந்திருந்து பகவானைச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணி அனேக சந்தோஷத்துடனே, தே[ச](த)ாத்திரமபண்ணி, ராசாவும் பரமேசுவரரைப்பார்த்து ஒரு விண்ணப்பஞ்செய்வார் :—'தேவரீருடைய பாதாரவிந்தமும், தேவரீர் சந்நிதியிலே பதவியும் தரவேண்டும்' என்று கேட்டார். அப்போ(து) பரமேசுவரர் மகாசந்தோஷப்பட்டுப் புஷ்ப வருஷத்தினாலே அபிஷேகஞ்செய(வித்)துப் பொன்னின விமானத்திலே வைச்சுககொண்டு சகலமானபேர்களோடேயும கைலாசத்துக்குக்கொண்டு எழுந்தருளினார்.

ஆகையாலே இந்தச் சோழராசாவின கதையைக கேட்டபேர்கள், எழுதினபேர்கள், படிததபேர்கள் எல்லாரும் இச் சோழராசன பெற்ற பலம் பெறுவார்கள் (எ - று).

(கு-பு.)—

இது முன் கதையேயாயினும் முன் பிரதிகளுககும இதறகும வசன நடையில் பெரும்பாலும் மிக்க வேறுபாடு காணப்படுகிறது ; இந்தப் பிரதியில் இக்கதை பூர்த்தியாயுள்ளது.

No. 414. தேரூர்ந்தவாசகம்.

TĒRŪRNDAVĀCAKAM.

Pages, 49. Lines, 16 on a page.

Begins on fol. 41*a* of the MS. described under No. 377.

• Complete.

Same as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது ; பூர்த்தி யுடையது.

No. 415. தேரூர்ந்தவாசகம்.

TĒRŪRNDAVĀÇAKAM.

Pages, 16. Lines, 48 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No 378

Complete.

Same as the above.

(கு-பு)—

இது முன் பிரதிபோனறது ; பூர்த்தியுடையது.

No. 416. தேவதையார் கதை.

DĒVATAIYĀR KADAI.

Pages, 11. Lines, 6 on a page.

Begins on fol. 122*b* of the MS. described under No. 375.

Complete.

A story regarding Dēvataiyār who was tested and tried and found to possess superior insight and wisdom.

Beginning:

(இனி அந்யதருஷ்டிஸபைளர்க்கா நிவ்ருத்தியென்னுந் தர்சனுங்கத் திற ப்ரஸித்தராகிய தேவதையார் சரிதமாவது)—

ஜம்பூத்வீபத்துப பாரதக்ஷேத்ரத்து வெள்ளி(யம்) பெருமலையில் தென்சேடியில் தாணிதிலகமெனனும் நகரத்து ரதிவேகனென்பான்[தரு] வித்யாதரனொருவன தீர்த்தவந்தனார்த்தமாகப்போகின்றான். உத்தர மதுரை யெனனும நகரமடைந்து அங்கேயெழுந்தருளியிருந்த அவதி மனப்பர்யயஜ்ஞானங்களையுடைய ஸர்வகுப்திபத்தாரகரென்னும் திவ்யதபோதனரையடைந்து நமஸ்கரித்தத தர்மச்ரவணம்பண்ணினபின் தேபாதனர் 'எங்குப்போகின்றீர்' என்றகேட்டருள, 'யான்மகதவிஷயத்து ராஜக்ருஹமென்னும் நகரத்துத் தீர்த்தங்கள் வந்திக்கப்போகின்றேன்' என்று வித்யாதரன சொல்லியபின தபோதனர் 'ராஜக்ருஹமென்னும் நகரத்துட்போகின்றீராகில், அங்கே உண்டொருவிதத்தரென்பார் ஒரு திவ்யதபோதனர் அருளினர். அவர்க்கு நமஸ்காரஞ்செய்தமையும் அந்நகரத்து ச்ராவகி தேவதையென்பாள். அவளுக்கு ஆசீர்வாதம் பண்ணினேனென்றும் சொல்லுவீராயின்' என்(றார்).

End :

வித்யாதரன் 'உத்தரமதுரையில் ஸர்வகுப்திபத்தாரகர் உம்மை வினவியருளினார். உம்முடைய தாசனமாஹாத்மியத்தினைப் பரீக்ஷிப்பான வேண்டி இவ்வண்ணம் என்னால் விகிரியை பண்ணப்பட்டது. இவ்வண்ணம் ஸம்யகத்வசுத்தராயினார் இககாலத்து எங்குமில்லை' என்று ஸ்தோத்ரம்பண்ணிப் பொன்மழை பூமழைபொழிந்து நமஸ்கரித்து வித்யாதரன போயினன்.

இவ்வண்ணம் அந்யதருஷ்டி ஸம்ஸர்ககாபாவமெனனும் தர்சனங்கத்தில் தேவதையார் உதாஹரணமாகச் சொல்லப்படுகின்றனர் (எ-று)

ஸ்ரீரஸ்து.

(கு-பு.) —

இது தரணிதிலக நகரத்திலிருந்த ரதிவேகனெனனும் வித்யாதரன் ராஜக்ருஹ நகரத்துள்ள பெரியோர்களை வணங்கநினைத்து வருகையில் உத்தரமதுரையில் ஸர்வகுபதிபட்டாரகரைப்பணிந்து தான செல்லுங் காரியததைச் சொல்ல, அவர் 'அப்படியானால் அங்கேவசிக்கும ஸ்ராவகியாகிய தேவதையென்பாளுககு என ஆசிர்வாதஞ்சொல்லுக' என, அவன் அங்கேவந்து தன் மாயையால் பிரமதேவர், திருமால், சிவபெருமான், புத்தர், அருகர்போனற வடிவுகளை முறையேகொண்டு தர்மோபதேசஞ்செயதனன. அதனையறிந்த அந்நகரததார் பலரும்வந்து தேவதையாரையழைத்தனர். அவர இவை மாயமெனறு துணிந்து சொல்லித் தாம் அங்கேபோகாதே யிருநதனர். பின்பு அநத வித்யாதரன தேவதையாரிடத்திறகுவந்து அவர் அடுப்பில் மூட்டிய நெருப்பைக் குளிரும்படிசெயய, அவர் 'முனமாயைசெட்தோரும் நீரோ' என்ன, அவன் 'ஸர்வகுப்திபத்தாரகர் உமமைவினவியருளினார்; அதனால் நான் பரீக்ஷித்தேன். உம்மை யொப்பார் ஒருவருமிலலை' என்று புகழ்ந்துபோயினன் என்றுகூறுவது; பூர்த்தியாயிருக்கிறது.

No. 417. தொண்டைமான கதை.

TONḌAIMĀN KADAI.

Substance, palm-leaf. Size, $11\frac{7}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 32. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, very old.

Incomplete.

Some leaves are wanting in the middle.

Gives an account of a certain king of old who reigned in Tondaimandalam. In this work a list of kings and the names of the several incarnations of Visnu in the respective Yugas are found given.

Beginning :

வெண்பா.

ஆனவிரு பத்திரண்டோ? டாறுப துடன்பெருக்கிப்
போன வருடம் புகுவித்து—மானவேயாய்
முந்நூறு நாற்பதுடன் மும்மூன்றுங் கூட்டிமே
லந்நாள் சகாத்த மறும.

கிருதயுகத்திலே விஷ்ணு அவதாரமெடுத்தது—மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகாவதாரம், நரசிம்மாவதாரம். ஆக அவதாரம் 4

* * * *

தோஷபாரனுயிருக்கிற சமயத்திலே இந்தப்பிள்ளையான ஆதொண்ட சக்கிரவாத்திக்குச சகல உபசாரமுஞ்செய்ய விடுதியுமுடியமுங்கற்பித்து நாளொருவண்ணமும பொழுதொருமேனியுமாக எவ்வனத்துடன் ஒன்றுலொன்று குறைவின்றி ஆதரவுடன் வளர்த்திருக்கிற நாளில் ஒருநாள இந்தப்பிள்ளையும சகல வித்யாபாண்டித (ய) ஆயுத சிலம்பசாஸ்திரமும் . . . மிகவும் ஒங்கித தனபிதாவிலும் அதிகமாகியிருந்தருள, அதுகண்டு சோழமகாராஜனும நாம்நாககன்னியருக்குச் சொலலிவந்தபடிக்கு இந்தப்பிள்ளைக்கு அரசாட்சிகொடுக்கவேண்டுமென்று கருதி(னன்).

End :

நாககன்னிகையும் 'யானபெற்றபுதல்வனை என்செய்வேன்' எனக் கடலி(வி)ட்டு ஆதொண்டை மாலையணிந்து அனுப்பச்சொல்லி ஆதொண்டை அடையாளமாக அனுப்பினுல் நமபுதல்வனென்று அறிந்து காக்கிறேமென்று சொல்லிவந்தார். யாழும் கெற் உற்பத்தியாய்ப் பதினறு வயதளவும் லவிகைள்வி ஆயுத[சாச்ச]வித்தைகள் பலவும் சகல சாஸ்திர புராணமந்திரக்கேளவிச் சித்தியுங்கற்று என்னறி.

(கு-பு.)—

இது, தொண்டைமண்டலத்தரசன விஷய மானகதை ; இதில் தொண்டைமண்டலம்—24 கோட்டம், 79 உள்நாடு 1900, நத்தம் 64 அக்கிரகாரம், 3600 குடி ஆகிய இவைகளையுடையதென்றும், திருமாலின் தசாவதாரங்களுள் முதல 4ம் கிருதயுகத்திலென்றும், அதற்கடுத்த 3-ம் திரேதாயுகத்திலென்றும், அதற்கு அடுத்த 2-ம் துவாபரயுகத்தி

லென்றும் மற்றஒன்றும் கலியுகத்திலென்றும், இவயுகங்களிலிருந்த அரசர்கள் இன்னாரின்னாரென்றும், மற்றும் சில அரசருடைய காலம் இன்னது இன்னதென்றும் எழுதப்பட்டிருக்கின்றன; இந்நூல் இறுதியிலும் இடையிலுமுள்ள சில ஏடுகள் இந்தப்பிரதியில் இல்லை.

No. 418. நஞ்சமகாராஜன் கதை.

NAÑJAMAHĀRĀJAN KADAI.

Substance, paper. Size, $8\frac{1}{2} \times 6\frac{5}{8}$ inches. Pages, 100. Lines, 12 on a page Character, Tamil. Condition, good. Appearance, new.

Begins on fol. 9*a*. The other works herein are Hanumantappattu 1*a*, Arunācalēśarakalitturai 5*a*.

Incomplete.

A story in which the characteristics of different classes and types of women are described to a king by name Nañjamahārāja.

Beginning:

வாரீர் நஞ்சமகாராஜாவே! என்னைப்போலொத்த ஜனங்களிடத்தில் உமக்கு மநப்பிரவேசமானதெங்கே யிருக்கிறது. என்னிடத்தில் உம்முடைய மனமெப்படியோ "அப்படியே எனக்குமிருக்கும். இப்படிச் சிறிதுவார்த்தைகளைப்பேசிக்கொண்டு, "அனேக அபராதத்தையெல்லாம் போகத்தக்கதாகச் செய்தீர" என்றுசொல்லி, மறைவாயிருக்கப்பட்ட இட்டமான வார்த்தைகளைச் சொல்லுகிறாள். "நீ, நாயகனிடத்திலே பிரத்தியட்சமாக அபராதத்தைப் பண்ணுகிறாய். பார்க்கச்சே எப்படிச்செய்யலாமோ" இந்தப்பிரகாரமாகச் சொல்லாநின்ற அந்த ராஜாவினுடைய சரீரத்தைப்பார்த்து, மிகவும் ஆதரவுடனே கூடினவளாக ராச்சிய லட்சுமியுடனேயும், அனேக கலைகளுடனேயும் பழகியிருக்கப்பட்டவரே, புசபலபராக்கிரமத்தையுடைத்தாயிருக்கிறவரே!

End:

உனக்கெங்கேயிருக்கிறது என்னைப்போலே நீயொத்த சனங்களிடத்திலே ஆச்சரியம். வஞ்சனைபண்ணப்பட்ட இவ்விடத்தில் வாரீர்சுவாமிராஜாவே! உம்மாலே யெவ

(கு-பு.)—

இது, நஞ்சமஹாராஜனைப்பார்த்து ஸ்வாதீனபதிகை முதலிய நாயகிகளின் இலக்கணங்களைப் பிறர்கூறுவதாகச் சொல்லுவது; இந்தப்பிரதியில் நூல அபூர்த்தியாயிருககிறது.

No 419. நஞ்சமகாராஜன் கதை.

NAÑJAMAHĀRĀJAN KADAI.

Substance, palm-leaf. Size, $10\frac{3}{4} \times 1\frac{1}{8}$ inches. Pages, 55. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old·

Incomplete.

Same story as the above.

(கு-பு)—

இது முன் பிரதிபோனறது; அதிலுள்ள அளவேயுள்ளது; சிதில மாயிருக்கிறது.

No. 420. நம்பாடுவான் சரித்திரம்.

NAMBĀḌUVĀN CARITTIRAM.

Substance, palm-leaf. Size, $16 \times 1\frac{1}{4}$ inches. Pages, 39. Lines, 6-7 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old.

Complete.

One Nambāḍuvān, a Pañcama by birth, used to praise God in the morning hours. One day a vampire caught hold of him and wanted to make a hearty meal of him. He promised on oath to the vampire that he would return and become its prey after having sung the praises of Visṇu in the Tirukkuruṅguḍi temple, if it would only let him go then. And he was accordingly allowed to go; he returned and kept his promise. The vampire then praised him for his truthfulness and bade him go home unharmed.

Beginning :

ஶ்ரீமதே ஹயக்ரீவாய நம:.

ஶ்ரீவேதநாயிகாயவராஹப்ரஹ்மணே நம:.

ராமாநுஜ (தயாபாத்ரம் ஜ்ஞாநவைரா)க்ய பூஷணம் |
ஶ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஶிகம் ||
யோநித்யமச்யுத . . . . த்யே ||
மாதாபிதா . . . . மூர்த்நா ||
ஸ்வஸ்தம் . . . . நிதயே ||
நமஸ்தஸ்மை வராஹாய லீலயோத்தரதே மஹீம் |
குரமத்யகதோ . . . . ணாயதே ||
ப்ரளயோதந்வதுத்தீர்ணாம் ப்ரபத்யேஸஹம் வஸுந்தராம் |
மஹாவராஹ தம்ஷ்ட்ராக்ர ஸ்ருஷ்டி கோமலைஸ்தவநை: ||
ஸமஸ்ரவாஸ்த ஸம்யக்தம் ஸதாஸஸாரண ஸ்ருஷ்டிதை: ||
(ஶ்ரீவத்ஸ)க்ஷ ஸம் தேவதிவ்யகௌஸ்துபஹாஷிதை: ||
வராஹஸ்ருஷ்டிணம் தேவம் ஶங்கசக்ரதராயுதம் |
யாஸ வரணஸ்ய ஸம்ஹரக்ஷா வைராவாவ தரஸாவஜ்ஜ: ||
ஶ்ரீஸ்ருஷ்டிஸரவாவ—

End :

இந்தப்பிரகாரம் கேட்டருளின நாச்சியாரும ப்ரளயார்ண வத்தா(லு)ண்டான (இளை)ப் பெ[ா]லலாந்தீர்ந்து காளரூபமா யிருக்கிற வைபவத்தை இன்று கேட்டபடியினலே இபபோ (து)தான் கிருதார்த்[தரா](தையா)னேனென்று அருளின(ள்)
யேஷாம் ஸதே தேவி காருண்யாய ஸம்யத: |
கஸ்யாம்தாரயதே ஸ்ருஷ்டி தஸஸ்ருஷ்டாந்ஸா ஸாராது ||
ய: ஸதே(ந)ஸம்ஸோமாந்யம் விஷ்ணுலோகம் ஸகச்சதி |
இதி ஶ்ரீ வராஹபுராணே உத்தரபாகே ஶ்ரீ வராஹஸ்ருஷ்டி ஸம்வாதே தாநவைஷவணாம ஷட்சத்வாரிம்ஶோத்யாய: ||
ஹரி: ஓம் | ஶுபமஸ்து ||

ஶ்ரீவராஹப்ரஹ்மணே நம:.

(கு-பு.)—

இது, திருக்குறுங்குடியில் இழிந்த சாதியிற் பிறந்த நம்பாடுவா னொ ன்பவர் கார்த்திகை மாதத்துச் சுக்கிலபட்ச ஏகாதசி யிரவில் தூங்கா

மலிருந்து திருமாலைத் துதிக்கும்பொருட்டுக் கையில் வீணையை யெடுத்துக்கொண்டு கோயிலுக்கு வரும் வழியில் ஒரு பிரமராட்சஸ் கடும்பசியோடு வந்து இவரைப் பிடித்துண்ணத் தலைப்பட்டது. இவர் 'நான் ஜாகர விரதத்தை முடித்து வருவேன்' என்றும் 'தவறினால் இன்ன இன்ன மாபாதகர் அடையுங் கதியை யடைவேன்' என்றும், அதன் மனங்கொள்ளச் சொல்லிப்போய மறுநாட் காலையில் வர, அஃது இவர் உயிரினும் மெய்ம்மையைப் பொருளாகக் கொண்டதற்கு அதிசயித்து, 'நீ இரவு பாடிய கானத்தின் பலனைக்கொடுத்து உயிரோடு செல்வாயாக' என்ன, இவர் மறுப்ப, பின்பு, அரை யிரவு பாடிய பாட்டின் பலனையும் அதன் பின் ஒரு சாமம் பாடிய பாட்டின் பலனையும் கேட்பவும் இவர் கொடேனென்ன, 'ஒரு பாட்டின் பலனையாவது கொடுத்து எனக்கு இவ் வடிவத்தை நீக்கவேண்டும்; யான் முன்பிறப்பில் ஓரந்தணன்; யாகத்தின் நடுவிய காலத்தில் இறந்தமையால் இவ்வடிவுற்றேன்' என்று சரணமடைய, இவர் மனமிரங்கித் தாம் பாடிய பச்சிம கானத்துள் ஒரு ஸ்வாமாங்ப ... பலனையீந்து அவ்வடிவை நீக்கினரென்று இசையின் பெருமையைக் கூறுவது; வராக ரூபியான திருமால் பூதேவிக்குச் சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது; வராக புராணம் உத்தரகண்டத்துப் பதினொன்காவது அத்தியாயத்துக்கு மொழி பெயர்ப்பாகவுள்ளது. மூல சுலோகமும் இடையிடையே எழுதப்பெற்றிருக்கிறது. பூர்த்தியுடையது.

No. 421. நளசக்கரவர்த்தி கதை.

NALACAKKARAVARTTI KADAI.

Substance, palm-leaf. Size, 17 × 1⅛ inches. Pages, 211. Lines, 6-7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol 43*a*. The other work herein is Kuśalava-nāṭakam 1*a*.

The well-kown story of Nala and Damayantī.

Incomplete.

Beginning:

வியாசம் வஸிஷ்ட ந(ப்)தாரம்
சக்தேபௌத்ரமகல்(மஷம்)
பராசராத்(ம)சம் வந்தே
சுகதாதம் தபோ நிதி(ம்)

(வ்யாசாய) விஷ்ணு ரூபாய
வியாச ரூபாய விஷ்ணவே
நமோவை ப்ரம்மநிதயே
வாஸிஷ்டாய நமோ நமகா.

என்று, முனிசிகாமணியாகிய வேதவியாசரைத் தோத்திரம்பண்ணி, வைசம்பாயனர் ஜெனமேஜெய மகாராசாவுக்குச் சொன்ன அநுசாம் (வேத) மான பாரதகதையிலே சாரமா(யி)ருக்கப்பட்ட நவரசம்போலே ருசிக்கப்பட்ட நளசக்கரவர்த்தி கதையைக் கீர்த்திச்சுவாமியா(னசிரீ) அரி(க்கு) ஆனந்தமான தெண்டம் சமர்ப்பித்துக் கவனம் சொல்லுகிறேன்

*   *   *   *

துவாபர யுகந்திலே சந்திரவங்கி(ச)த்தார்களான பாண்டுராஜா புத்திரர்கள் தர்மராசா, வீமசேனன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவனிவர்களைந்துபேரும் கௌரவர் தாயாதிகளான (திருதராஷ்டிரன) புத்திரர்களான துரியோதனன் துச்சாதனன் முதலான நூ(?)பேருடனேயும், கர்ணன சகுனியுடனேயும் சூதமாடி

*   *   *   *

End :

நள ராஜாவை வரவ(ழை)முக்கிற நிமித்தம (இ)ரண்டாவது சுயமரம் என்று சொல்லி அனுப்புவிச்சார். தான வராமல் ரிதுபன்னராசன் வந்ததென்ன? தானவர வெட்கப்பட்டு நாலுபேர் முனபாக பெண்சாதியைவிட்டுப் போனோமே, எப்படி வருவோமென்று ஆலோசனையிலுலே யிருக்கிறாரோவென்று பாகிமார சொன்னபிறபாடு நளராசா சொலலுகிறார்.

அடி பாஙகிமாரே !

(கு-பு.)—

இதில் நளன் இருதுபனனசாரதியாகி வீமராசநகரத்திற்கு வந்து சேர்ந்தானென்ற வரையில் உள்ள கதை இருக்கிறது; வசன நடை திருத்தமானதன்று; இதில் 47-வது ஏடு இல்லை.

No. 422. நளசக்கரவர்த்தி கதை.

NALACAKKARAVARTTI KADAI

Substance, palm-leaf. Size, $17\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 169. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Same work as the above

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; இதில் நளன் சூதாடி நாடிழந்தபின் காட்டை யடைந்து பக்ஷியைப்பிடிக்கமுயன்றபொழுது தனது ஒரு வஸ்திரத்தையும் இழந்தானென்னும் வரையிலுள்ள கதை இருக்கிறது; இதில் சில ஏடுகள் முறிந்தும் சில ஏடுகள் செல்லரிக்கப்பட்டும் உள்ளன.

No. 423. நாசிகேதுசரித்திரம்.

NĀCIKĒTUCARITTIRAM.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{4} \times 1\frac{1}{8}$ inches. Pages, 33. Lines, 4 on a page Character, Tamil Condition, injured. Appearance, old.

Complete.

The story of Nācikētu and of his recollections of what he observed in the regions of hell : as narrated to his father. This is an imitation of the story of Nacikētas as given in the Kaṭhōpanisad, but is different from it in many respects

Beginning :

தேவர்களில மிககோலலாம் திரளாகக கூட்டமிட்டுத் தர்மங்களைக் கேட்குமிடத்து தேவர்கள் தேவன திருமணிமார்பன் . . .

* * * *

இப்பால் தேவாதிகளெல்லாம் வநது வணங்கி நிற்க ஸ்ரீமந் நாராயணசுவாமியும் நீங்கள்வந்தகாரணமேதெனறு கேட்க, தேவாதிகள் விண்ணப்பஞ் செயவார்களா:

பூலோகத்திலே புண்ணியபாபமிரண்டும் அறியும்படி அடியேங்களுக்கு அருளிச்செயயவேண்டுமென்ன. அப்பொழுது அருகேயிருந்த தர்மபுத்திரருக்கு அருளிசசெபதார்.

* * * *

முனனாள், கிரேதாயுகத்திலே (இவ்)வியாங்கமகரிஷி சிவபூசை பண்ணினாலொழிய, அதிக மோ(க்ஷ)மில்லையெனறு ஆதி குருநாதன் அருளிச்செய்கையால், நாம் சிவபூசை பண்ணவேண்டுமென்று தன்னுடைய பிள்ளை நாசிகேதுவை யழைத்து, (தாம்) சிவபூசைபண்ணிப் புண்ணியங்கள் பெறவேண்டுமெனறு காலமேபோய்த் திருமஞ்சனமும் திருப்பள்ளித்தாமமும் [காலா]காலந் தப்பாமல் எடுத்துவரச்சொல்லி அனுப்ப, அப்படியே நாசிகேதுவும் தனனுடைய பிதாவானவர் சொற்படியே

திருமஞ்சனமுந் திருப்பள்ளித்தாமமும் [காலா]காலந் தப்பாமல் எடுத்துக்கொண்டுவர, திவ்வியாங்க மகரிஷிபூசை பண்ணுவார்.

End:

தன்னுடையகூண்டிலேயடைந்து சுகத்திலே இருமென்று அனுப்ப, விடைகொண்டு தனனுடைய கூண்டிலே யடைந்து, தந்தையான திவ்யாங்க மகரிஷிபாததகிலே தணடன்பண்ணித் தான் எமலோகம் புகுந்து எழு நரகமும், நாலு சொர்ககவாசலும் புகுந்த அதி[ெ]சயமெல்லாம் விண்ணப்பஞ்செயய, அபபோது நாசிகேதுவைச் சிவபூசை பண்ணினபேர் இப்படிச் சொர்க்கமடைவார்களெனறு அருளிச்செயதார்.

ஸ்ரீ கிருஷ்ணதேவன தர்மராசாவுக்கு அருளிச்செயதபடி (எ-று).

Colophon:

சௌமியஞு ஆவணிமீ 5உ எழுதி நிறைந்தது

(கு-பு.)—

இது சிவபத்தராகிய திவ்யாங்க மகரிஷியென்பவர், தமது குமாரராகிய நாசிகேதுவைநோககி, சிவபூசைககுரிய திருமஞ்சனமுதலிய பொருள்களைக காலந் தவறுமற கொண்டுவரும்படி சொலலியிருந்தாரென்றும் அககுமாரரும் அவவாறே செயதுவருகையில ஒருநாள் சில ராசகுமாரர்கள் ஆடிய விளையாட்டைப் பார்ததுககொண்டிருந்துவிட்டுக் காலந்தப்பிக கொண்டுபோயக கொடுத்தாரெனறும் அககுற்றத்திற்காகத் திவ்யாஙகமகரிஷி தமது குமாரனை யமலோகம் புகுந்து மீண்டுவருகவெனறு சபித்தாரென்றும் அவவாறே அவரும் அங்குச்சென்று யமனுடைய அருளால் அங்குள்ள எழு நரகங்களிலும் நான்கு சுவர்க்கங்களிலும் நிகழ்ந்த விசேஷங்கள் பலவற்றையும் நேரிற பார்த்துவந்து தம் தகப்பனாரிடம் சொனனுரெனறும அவரும் அதனைக கேட்டுச் சிவ பூசையின் பலனைக் கொண்டாடினுரென்றும் சொலலுகிறது; இந்தப்பிரதியில் நூல் பூர்த்தியாக இருககிறது; இதில சில ஏடுகள் சிதைந்துள்ளன.

No. 424. நாலுமந்திரி கதை.

NĀLUMANDIRI KADAI.

Pages, 83. Lines, 20 on a page.

Begins on fol. 19*b* of the MS. described under No. 404.

Complete.

The story relating to the four ministers of king Aḷakēśvara who ruled in Aḷakapuri. Each of these ministers is described as having possessed great ability; and the story on the whole shows the undesirability of arriving at rash and hasty conclusions.

Beginning:

அளகாபுரி யென்று ஒரு பட்டணமுண்டு; அந்தப் பட்டணத்துக்கு அ[ழ](ள)கேந்திர னென்றொரு ராஜாவுண்டு; அந்த ராஜாவினுடைய கோட்டை எப்படியிருக்குமென்றால், ஒரு பனைப் பிரமாணம் இரும்புக்கோட்டையும், ஈயக கோட்டையும, செம்புக கோட்டையும், வெ[ங்](ண்)கலக கோட்டையும் இப்படி நாலு கோட்டையும் முப்பத்திரண்டு வாசலும் உண்டு.

End:

இந்தப்பாம்பும இரக்ஷிச்சபேரைப் பக்ஷிக்காமல பதிலுபகாரம பண்ணிறது. வாரும் பிள்ளாய்! உனனைக கெடுத்துப்போடவேணுமென்று நினைத்தேன். உனனைப்போலொத்த மந்திரி கிடைககுமோ வென்று ராஜாமிகுவும் சந்தோஷப்பட்டு வெகுமானஙகளும் பண்ணுவிச்சு நாலுபேர் மந்திரிகளுக்கும் உபசாரஙகளும் டண்ணச்சொலவி அன்று முதல் இவர்(க)ள சொன்ன வார்ததை தட்டாமல் தானொரு தகப்பனுகவும், போதவாதித்தன, போத[ெ]சந்திரன், போதவிபீ(ஷ)ஷணன, போதவியாகரணன, இவர்(க)ள் நாலுபேரும் நாலுபிள்ளைகளாகவும் மனது குளுநது சுகமாயிருந்தார்கள.

இந்த நாலுமநதிரிகதை முகிந்தது முற்றும்.

Colophon:

இந்தபபடிககுத் திருச்சி(ரா)பபளளிச சீமை(யைச்) சேர்ந்த கோநாடு தாலூககாவிலே, மேல(ச்) சிந்தாமணியிலேயிருக்கும் வாத்தியார் வீரப்பிளளைகிட்டவிருந்த நாலு மந்திரி கதைக்கு நகல்.

(கு-பு.)—

இது போதஆதித்தன், போதசந்திரன், போதவிபீஷணன், போதவியாகரணன என்னும் நாலுமந்திரிகளின புத்திநுட்பத்தைக் கூறுங்கதை; இந்தப்பிரதியில் பூர்த்தியாகவுள்ளது; அச்சிடப்பட்டிருக்கிறது.

No. 425. நாலுமந்திரி கதை.

NĀLUMANDIRI KADAI.

Pages, 32. Lines, 4 on a page.

Begins on fol. 15*a* of the MS. described under No. 403.

Complete.

Same story as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிக்கு மூலப்பிரதியாக இருந்ததென்று தோன்றுகிறது ; பூர்த்தியாகவுள்ளது.

No. 426. நாலுமந்திரி கதை.

NĀLUMANDIRI KADAI.

Substance, palm-leaf. Size, 15 × 1 inches. Pages, 106. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same story as the above.

(கு-பு.)—

இது பெரும்பாலும் முனபிரதிபோன்றது ; சில சில இடத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இநதப் பிரதியில நூல் பூர்தியாயிரு

No. 427. பஞ்சதந்திரம்.

PAÑCATANDIRAM.

Substance, paper. Size, 12⅜ × 8 inches. Pages, 161. Lines, 33 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

A Tamil rendering of the well-known Sanskrit work of the same name : by Tāṇḍavarāya Mudaliyār.

This translation has been printed.

Beginning :

முதலாவது மித்[துரு](திர)பேதம்.

பாயிரம்.

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனுந் தொழுங்
கணபதி யென்றிடக் கரும மாதலாற்
கணபதி யென்றிடக் கலக்க மில்லையே.

ஆயகலைகள் . . . இங்குவாராதிடர்.
இஃதிரண்டும் கடவுள் வாழ்த்து.

புத்திரு ? வென்றொரு பட்டினமுண்டு. அந்தப்பட்டினத்தையாளு கிற சுதரிசனனென்கிற இராசாவுக்கு இரண்டு குமாரர்களுண்டு. அவர்களிரண்டுபேரும் தாய் தகப்பனுடைய விசேஷங்களைக் கேளாமலும் (படி)ப்புச் சிலம்பங்கள் கற்காமலுந் துாசசனராய்த் திரியச்சே அந்த இராசனானவன் ஒருநாள் மிகுந்த விசாரத்துடனே தன்னுடைய சபையிலே இராநின்ற மந்திரிகளைப் பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறான்.

End :

மகாராசனுமானந்த பரவசத்தை யடைந்து அனேக ஆடை யாபரணங்களுடனே தான முன் சொன்னபடியே பாதிச் சீமைகளையும் அந்த மந்திரி விஷ்ணு [செ]சனமனுக்கு வெகுமானஞ்செய்து சமஸ்தமான பேருஞ் சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

Colophon :

